த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—428

# ஐரோப்பிய வரலாறு

(கி.பி. 476 முதல் கி.பி. 1453 வரை)

(பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

N. K. நாராயணன், எம்.ஏ. (வரலாறு), எம்.ஏ. (அரசியல்),
பேராசிரியர், வரலாற்றுத்துறை,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—428

# ஐரோப்பிய வரலாறு

## (கி.பி. 476 முதல் கி.பி. 1453 வரை)

(பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

N. K. நாராயணன், எம்.ஏ. (வரலாறு), எம்.ஏ. (அரசியல்),
பேராசிரியர், வரலாற்றுத்துறை,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—March, 1973

T.N.T.B.S. (C.P.) No. 428

© Tamil Nadu Text Book Society

**HISTORY OF EUROPE from 476 to 1453 A.D.**

N. K. NARAYANAN

Price Rs. 5-00

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

*Printed by*
The Darwin Printing Works,
5/5, Whannels Road,
Egmore, Madras-8.

# அணிந்துரை

## திரு. இரா. நெடுஞ்செழியன்
### (தமிழகக் கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1969ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றுன 'ஐரோப்பிய வரலாறு' என்ற இந் நூல் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 428ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 463 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனங் கலந்த நன்றி உரியதாகுக.

**இரா. நெடுஞ்செழியன்**

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| தோற்றுவாய் | ... | 1 |
| 1. | உரோமானியப் பேரரசின் வீழ்ச்சி ... | 4 |
| 2. | வெனிஸ் நிறுவப்படுதல் ... | 32 |
| 3. | ஐரோப்பாவில் கிறித்தவ மதம் பரவுதல் ... | 35 |
| 4. | கிழக்கு உரோமானியப் பேரரசும் ஜஸ்டினியனும் ... | 48 |
| 5. | ஷார்லமெய்ன் ... | 54 |
| 6. | இஸ்லாம் மதம் ... | 62 |
| 7. | நிலமானியத் திட்டம் ... | 69 |
| 8. | புனித உரோமானியப் பேரரசு ... | 78 |
| 9. | ஃபிரான்சில் காபெட் நிறுவிய முடியரசு ... | 85 |
| 10. | பேரரசர் நான்காம் ஹென்றி ... | 91 |
| 11. | திருச்சபைக்கும் பேரரசுக்கும் ஏற்பட்ட பதவிச்சின்னப் போராட்டம் ... | 94 |
| 12. | போப் ஏழாம் கிரிகரி ... | 107 |
| 13. | இடைக்காலப் பல்கலைக்கழகங்கள் ... | 110 |
| 14. | நகரங்களின் வளர்ச்சி ... | 118 |
| 15. | சிலுவைப் போர்கள் ... | 124 |
| 16. | பிரதிநிதித்துவச் சபைகளின் தோற்றமும் வளர்ச்சியும் ... | 136 |
| 17. | இடைக்காலத்தின் பிற்பகுதியில் திருச்சபை ... | 148 |
| 18. | அறிவு இயக்கமும் மறுமலர்ச்சியும் ... | 156 |
| 19. | கொள்ளை நோய் ... | 166 |
| 20. | நூற்றாண்டுப் போர் ... | 174 |
| 21. | கி.பி.14, 15 ஆம் நூற்றாண்டுகளில் ஜெர்மனியும் இத்தாலியும் ... | 194 |
| 22 | சுவிட்சர்லாந்துக் குடியரசின் தோற்றம் ... | 206 |

பக்கம்

## பிற்சேர்க்கை

படங்கள்
கி.பி. 526-ல் ஐரோப்பா ... 213
ஜஸ்டினியனின் பேரரசு—கி பி. 565 ... 214
ஷார்லமெய்னின் பேரரசு—கி.பி. 814 ... 215
நூற்றுண்டுப் போரின்போது ஃபிரான்சு ... 216
உரோமானியப் பேரரசர்கள் ... 217
புனித உரோமானியப் பேரரசர்கள் ... 218
கிழக்கு உரோமானியப் (பைசான்டைன்) பேரரசர்கள் ... 220
ஃபிராங்குப் பேரரசர்கள் ... 221
இங்கிலாந்து நாட்டு அரசர்கள் ... 222
ஃபிரான்சு நாட்டு அரசர்கள் ... 223
போப்புகள் ... 224
ஐரோப்பிய வரலாற்றில் சில முக்கிய ஆண்டுகள் ... 226
Bibliography ... 228
கலைச்சொற்கள் ... 230

# ஐரோப்பிய வரலாறு

(கி.பி. 476 முதல் கி.பி. 1453 வரை)

# தோற்றுவாய்

உலகத்திலுள்ள ஆறு கண்டங்களுள், ஆஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக ஐரோப்பாவே மிகச்சிறிய கண்டமாகும். அதில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் உலக வரலாற்றிலும், மனித சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சியிலும் மிகமுக்கியமான பங்கை வகித்துள்ளன. மேற்கத்திய நாகரிகம் என்பது ஐரோப்பாவில் தான் உருவாயிற்று. வரலாறு தவிர அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளிலும் பல அரிய கருத்துகள் ஐரோப்பியச் சிந்தனையாளர்களால் வெளியிடப்பட்டன. அத்தகைய ஐரோப்பாவின் வரலாற்றைப் பண்டைக்காலம், இடைக்காலம், நவீன காலம் என மூன்று பிரிவுகளாக வரலாற்று ஆசிரியர்கள் பிரித்திருக்கின்றனர்.

## (அ) பண்டைக்காலம்

மிகப் பழங்காலத்திலேயே கிரேக்கர்களும் உரோமானியர்களும் ஐரோப்பிய நாகரிகத்தை உருவாக்கினார்கள். இந்த கிரேக்க-உரோமானிய நாகரிகத்தின் சிறப்புக் கூறுகள் ஐரோப்பிய மக்களின் எல்லாத்துறைகளிலும் இன்றளவும் காணப்படுகின்றன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் உரோமானியப் பேரரசு இன்றுள்ள இத்தாலி, ஸ்பெயின், போர்ச்சுக்கல், பிரிட்டன், ஃபிரான்சு, பெல்ஜியம், ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, ருமேனியா, கிரீஸ், ஆசியா மைனர், சிரியா, எகிப்து மற்றும் வட ஆப்பிரிக்கா முதலான பகுதிகளில் பரவியிருந்தது. இப்பகுதிகளிலெல்லாம் உரோமானிய நாகரிகமும் பண்பாடும் பரவின. இப் பகுதிகளில் பேசப்படும் மொழிகளில் இலத்தீனின் சாயலை இன்றும் காணலாம். பண்டைக் காலத்தில் கிரேக்க உரோமானிய வரலாறே ஐரோப்பிய வரலாறாக அமைந்தது. ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள் தழைத்தோங்கி இருந்த உரோமானியப் பேரரசு கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பார்பேரிய இனத்தவரின் கடுந்தாக்குதல்களால்

வீழ்ச்சியுறத் தொடங்கியது. பார்பேரியப் படையெடுப்புகளின் விளைவாகவும் வேறுபல காரணங்களுக்காகவும் அப் பேரரசு கி.பி. 476ஆம் ஆண்டு இறுதியாக வீழ்ச்சியுற்றதெனக் கருதப்படு கிறது. அதன் பின்னரும் கான்ஸ்டான்டிநோபிளிலிருந்துகொண்டு உரோமானியப் பேரரசர்கள் ஆட்சி செய்தனர். அங்ஙனம் ஆட்சி செய்யப்பட்ட அரசு கிழக்கு உரோமானியப் பேரரசு என வழங்கப் பட்டது. இது உரோமானியச் சிறப்புக் கூறுகளையிழந்து கிரேக்க சிறப்புக் கூறுகளைப் பெற்றிருந்தது. எனவே, கி.பி. 476ஆம் ஆண்டு வரையிலான வரலாற்றுக் காலத்தைப் பண்டைக் காலம் என்கின்றனர்.

### (ஆ) இடைக்காலம்

கி.பி. 476ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1500ஆம் ஆண்டு வரையிலுள்ள காலத்தை 'இடைக்காலம்' என்கிறோம். இவ் விடைக் காலத்தையும் மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். முதலாவது கி.பி. 476ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 918ஆம் ஆண்டு வரையிலுள்ள காலம் 'இருண்ட காலம்' எனப்படு கின்றது. உரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைந்த பின்னர் கி.பி. 10ஆம் நூற்றுண்டு வரை ஐரோப்பா குழப்பமான நிலையில் இருந்தது. எனினும் இவ்விருண்ட காலத்தில்தான் ஐரோப்பாவில் பல மொழிகளும் நிறுவனங்களும் உருவாயின. கிறித்தவமதம் பார்பேரிய இனத்தவர்களிடையேயும் பரவியது; அந்த இனத் தவரும் நாகரிகமடைந்தனர். திருச்சபையிலும் போப் மிகமுக்கிய மான பணிகளைச் செய்யத் தொடங்கினுர். அதே நேரத்தில் மடாலய முறையும் வளர்ச்சியுற்றது. இது கிறித்தவ மத வளர்ச்சியில் அருந்தொண்டாற்றியது.

இரண்டாவதாக, கி.பி. 918ஆம் ஆண்டில் இருந்து கி.பி. 1300ஆம் ஆண்டு வரையிலுள்ள காலத்தில் இடைக்கால ஐரோப்பிய நாகரிகம் மிக உயர்ந்த நிலையை அடைந்தது. நிலையான அரசுகள் அமைக்கப்பட்டு ஆட்சி முறைகள் செம்மைப்படுத்தப் பட்டன. தனித்தனியாக ஐரோப்பிய நாடுகள் உருவாகவில்லை யென்றுலும் நிலமானியத் திட்டம், மடாலயமுறை, திருச்சபை மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்றவை ஐரோப்பிய மக்களின் பொதுவான நாகரிகத்தையும், பண்பாட்டையும் விளக்கின. இதே காலத்தில்தான் 'புனித உரோமானியப் பேரரசு' உருவாயிற்று. இப் பேரரசு திருச்சபையுடன் பதவிச்சின்னப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பின்னர் ஓரளவு தன் வலிமையையும் இழந்தது. இஸ்லாமிய மதம் ஐரோப்பாவில் பரவ முயன்று அதில் தோல்வி கண்டது. அதன் விளைவாகச் சிலுவைப் போர்கள் நடைபெற்றன.

இதனால் ஐரோப்பாவில் பல சமூக, பொருளாதார மாறுதல்கள் ஏற்பட்டன.

மூன்றாவதாக கி.பி. 1300ஆம் ஆண்டில் இருந்து கி.பி. 1500ஆம் ஆண்டு வரையிலுள்ள இரண்டு நூற்றாண்டுகளில் மேற்கத்திய நாகரிகம் புதிய வளர்ச்சியைப் பெறவில்லை. ஆயினும் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 'மறுமலர்ச்சி' மற்றும் புதிய கடல்வழிக் கண்டுபிடிப்புகளினால் ஐரோப்பா நவீன காலத்தை நோக்கி முன்னேறத் தொடங்கியது.

## (இ) நவீன காலம்

கி.பி. 1500ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை நவீன காலம் என்றழைக்கப்படுகின்றது. இக் காலத்தில் மனித சமுதாயம் அதற்கு முன் கண்டிராத புரட்சிகளையும், போர்களையும், கண்டு பிடிப்புகளையும், வியக்கத்தக்க முன்னேற்றங்களையும் கண்டு வருகின்றது.

பொதுவான இப் பாகுபாட்டின் அடிப்படையில் இடைக்கால ஐரோப்பாவைப் பற்றிய வரலாற்றை இந் நூல் விவரிக்க முயலுகின்றது.

# 1. உரோமானியப் பேரரசின் வீழ்ச்சி

**உரோமானியப் பேரரசின் தோற்றம்**

இத்தாலியத் தீபகற்பத்தின் மத்தியிலிருக்கும் உரோம், கி.மு. 753ஆம் ஆண்டுவாக்கில் உரோமுலஸ், இரீமஸ் (Romulus, Remus) என்ற சகோதரர்களால் நிறுவப்பட்டதென இத்தாலியப் பழங்கதைகள் கூறுகின்றன. இந் நகரில் கி.மு. 510 வரை முடியாட்சியே நிலவி வந்தது. அவ்வாண்டில் உரோமானியக் குடியரசு நிறுவப்பட்டது. ஓராண்டு பதவிக் காலத்துடன் 'கான்சல்கள்' (Consuls) என்று அழைக்கப்பட்ட அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் 'செனட்'டின் உதவியுடன் உரோமை ஆட்சி செய்தனர். காலப் போக்கில் குடியரசில் இருந்த பாட்ரிஷியன்கள் (Patricians) என்று அழைக்கப்பட்ட உயர்குல மக்களுக்கும், பிளிபியன்கள் (Plebians) என்று அழைக்கப்பட்ட தாழ்குல மக்களுக்குமிடையே வர்க்கப் போராட்டம் நடைபெற்றது. இதன் விளைவாக இவ்விரு பிரிவினரிடையே நிலவி வந்த ஏற்றத் தாழ்வுகள் மறைந்து கி.மு. 367ஆம் ஆண்டுமுதல் குடியரசில் வாழ்ந்த எல்லாக் குடிமக்களும் ஒரே விதமான உரிமைகளும் கடமைகளும் பெற்று வாழத் தலைப்பட்டனர்.

உரோமின் ஆதிக்கம் கி.மு. மூன்றும் நூற்றாண்டுக்குள்ளாக இத்தாலியத் தீபகற்பம் முழுவதும் பரவியது. தன் ஆதிக்கத்தை சந்தர்ப்பச் சூழ்நிலைகளினால் கடல் கடந்த நாடுகளிலும் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு, உரோம், கி.மு. 264ஆம் ஆண்டிலிருந்து கி.மு. 146ஆம் ஆண்டுவரை, கார்த்தேஜுடன் (Carthage) மூன்று பெரிய போர்களில் ஈடுபட்டது. அவை பியுனிக் போர்கள் (Punic wars) என்றழைக்கப்படுகின்றன. பின்னர் மத்தியத் தரைக்கடல் நாடுகள் முழுவதிலும் உரோம் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டியது. உரோம் குடியரசாக இருந்தபோது அதன் வலிமையை வளர்த்தவர்

களுள், மேரியஸ் (Marius), சல்லா (Sulla), பாம்பே (Pompey), கிராசஸ் (Crassus) போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்களாவர். இவர்களின் ஆட்சிக் காலங்களில் பல உள்நாட்டுக் கலகங்களும், அயலவர் தாக்குதல்களும், சமூகப் போர்களும் ஏற்பட்டன. அவை திறமையுடன் அடக்கப்பட்டுக் குடியரசு வலுப்படுத்தப்பட்டது. இவர்களுக்குப்பின் குடியரசை ஆட்சி செய்த ஜூலியஸ் சீசர் Julias Caesar) குடியரசின் அமைப்பை மாற்றியமைத்தார்.

உரோமானியக் குடியரசு பேரரசாக மாறுவதற்குக் காரணமாயிருந்தவர் ஜூலியஸ் சீசரே ஆவார். குடியரசில் இருந்த எல்லா மக்களுக்கும் குடியுரிமையைத் தரவும் எல்லா மாநிலங்களிலிருந்தும் பிரதிநிதிகள் செனெட்டில் அங்கம் வகிக்கவும், செனெட்டின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை உயர்த்தவும், அவர் திட்டமிட்டார். அவர் தன்னை அரசர் என்றோ சர்வாதிகாரி என்றோ அழைப்பதை விரும்பவில்லை, அவருடைய மிகக் குறுகிய ஆட்சிக் காலத்தில் மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். அவர் பெற்ற வலிமையையும் பெருமையையும் கண்டு பொறாமை கொண்ட அவருடைய நண்பர்களே சதி செய்து கி.மு. 44ஆம் ஆண்டில் அவரைக் கொலை செய்து விட்டனர். சாகா வரம் பெற்ற ஷேக்ஸ்பியர் இவ் வரலாற்று நிகழ்ச்சிகளையெல்லாம் 'ஜூலியஸ் சீசர்' என்ற நாடகத்தில் கற்பனை நயத்தோடு படிப்போர் உள்ளத்தைக் கவரும்படித் தெளிவாக விளக்குகின்றார்.

## இரண்டாவது மூவராட்சி (Second Triumvirate)

ஜூலியஸ் சீசர் இறந்தவுடன் அவருடைய வளர்ப்புப் பிள்ளை அக்டேவியஸ் சீசர், மார்க் அந்தோனி, லெபிடஸ் ஆகிய மூவரும் இணைந்த ஆட்சியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். குடியரசு மூன்றாகப் பிரிக்கப்பட்டு மேற்குப் பகுதியை அக்டேவியஸ் சீசரும், கிழக்குப் பகுதியை மார்க் அந்தோனியும், ஆப்பிரிக்காவை லெபிடசும் ஆட்சி செய்ய வேண்டுமென நிருணயிக்கப்பட்டது. அக்டேவியஸ் உரோமில் இருந்ததால் தன்னுடைய பதவியை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகள் இருந்தன. மார்க் அந்தோனிக்கு அத்தகைய வாய்ப்புகள் குறைவு. மேலும், எகிப்தில் ஆட்சிசெய்து வந்த கிளியோபாட்ராவின் அழகில் மயங்கி, தன் ஆட்சிக் கடமைகளை உதறித் தள்ளிவிட்டு, அவளுடனே இனிமையாக நாள்களைக் கழித்து வந்தார். இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு அக்டேவியஸ் அந்தோனியை வீழ்த்திவிட்டுப் பேரரசராக விரும்பினார். அதன் விளைவாக இவருடைய படைகளும் போருக்குப் புறப்பட்டன. பால்கன் தீபகற்பத்தின் மேற்கிலுள்ள ஆக்டியம் (Actium) என்ற இடத்தில் கி.மு. 31ஆம்

ஆண்டில் இப் படைகள் கடும் போரில் ஈடுபட்டன. அந்தோனியின் படைகள் கடுமையாகத் தாக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டன. அந்தோனி தப்பியோடினூர். அவர் பின்னர் அலெக்சாண்டிரியா வில் இறந்துவிட்டார். லெபிடஸ் முன்னரே அக்டேவியசின் ஆதரவாளராக ஆகிவிட்டிருந்தார். இப்பொழுது மூன்று கண்டங் களில் பரவியிருந்த பரந்த பேரரசுக்கு எதிர்ப்பவர் எவரும் இன்றி அக்டேவியசே ஆட்சியாளரானூர்.

## அக்டேவியசின் ஆட்சி

ஜூலியஸ் சீசரைப்போலப் பரந்த உள்ளத்தையும், கூரிய நுண்ணறிவையும், வீரர்களே வியக்கும் வீரத்தையும், துணிவையும் அக்டேவியஸ் சீசர் ஒருங்கே பெற்றிருந்தார். அவர் தன் பேரரசை அரசராகவோ சர்வாதிகாரியாகவோ ஆட்சி செய்யவில்லை. சாதாரண உரோமானியக் குடிமக்களுள் 'முதற் குடிமகன்' (Princeps) என்று தன்னை அழைக்கப்படுவதையே அக்டேவியஸ் விரும்பினூர். அதிகாரங்கள் ஒரே மனிதரிடம் குவிந்திருப்பதை அவர் விரும்பவில்லை. செனெட்டுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்தார். ஆனூல், மக்களோ அவருக்கே எல்லா அதிகாரங்களையும் தந்தனர். கி.மு. 27 முதல் கி.பி. 14 வரை அவருடைய ஆட்சி அனேகமாக அமைதியான ஆட்சி யாகவே இருந்தது. வேறு எவருடைய ஆட்சிக் காலத்திலும் உரோமானிய அரசு அத்தகைய அமைதியான ஆட்சியைக் கண்டதில்லை. எனவே, மக்கள் அவரைப் 'பேரரசர்' என்றும் 'அகஸ்டஸ்' என்றும் சிறப்பித்து அழைத்தனர். 'பேரரசர் அகஸ்டஸ் அக்டேவியஸ் சீசர்' என்றே அவர் அழைக்கப்பட்டார். பின்னர் அகஸ்டஸ் என்று மட்டுமே வரலாற்று ஆசிரியர்களாலும் அழைக்கப்படலானூர். அவருடைய ஆட்சிக்காலத்தில்தான் ஜெருசலத்தில் உத்தமர் இயேசு கிறித்து பிறந்தாரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. உரோமில் பல கம்பீரமான கட்டடங்கள் கட்டப்பட்டன; கலைஞர்களும் கவிஞர்களும் அவரால் ஆதரிக்கப் பட்டனர். உரோமானியப் பெருங் கவிஞர்கள் வெர்ஜில் (Virgil), ஹொரேஸ் (Horace), ஒவிட் (Ovid), லிவி (Livy) போன்றவர் அகஸ்டஸ் காலத்தில் வாழ்ந்தவர்களேயாவர். அகஸ்டசின் ஆட்சிக்காலம் உரோமானிய வரலாற்றில் பொற்காலம் ஆகும்.

## டைபீரியஸ் (கி.பி. 14–37)

அகஸ்டஸ் அவருடைய முதிர்ந்த எழுபத்தேழாம் ஆண்டில் இறந்துவிட்டபொழுது, அவருடைய மருமகன் டைபீரியஸ் (Tiberius) பேரரசரானூர். அகஸ்டஸ் நிறுவிய அரசியல்

அமைப்பின்படி செனெட், மற்றும் பொது மக்கள் சபைகளி லேயே முதற்குடிமகன் (Princips) என்று அழைக்கப்பட்ட உரோமானியப் பேரரசர் தேர்ந்தெடுக்கப்பட்டார். டைபீரியஸ் முதலில் பல போர்களில் ஈடுபட்டாலும் அவருடைய கடைசி பதினோர் ஆண்டுக் காலத்தைத் தலைநகரில் இல்லாமல் டிர்ரீனியன் கடலிலுள்ள காப்ரீயே என்ற தீவிலேயே கழித்து விட்டார். இவருடைய ஆட்சிக்காலத்தில்தான் அவருடைய பேரரசின் ஒரு பகுதியாக இருந்த பாலஸ்தீனத்தில் இயேசு கிறித்து சிலுவையில் அறையப்பட்டார்.

நீரோ (கி பி. 54–68)

அகஸ்டசுக்குப்பின் பல ஆண்டுகள் உரோமானியப் பேரரசு பண்புள்ள பேரரசரைப் பார்க்கவில்லை. அகஸ்டசுக்குப் பின்வந்த டைபீரியஸ் தன் இறுதிக்காலத்தில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டார். அவரை அடுத்துவந்த காலிகுலா (Caligula) என்பவர் பைத்தியக்காரராக இருந்தார். அவரை அவருடைய வேலைக்காரர்களே கொலை செய்துவிட்டனர். அவருக்குப்பின் கிளாடியஸ் (Claudius) என்பவர் பேரரசரானார். அவர் தன் மனைவி யாலேயே கொலை செய்யப்பட்டார். அவளுடைய மகன்தான் நீரோ. அவர் தாயைவிட மிகவும் கொடுமைக்காரராக இருந்தார். தன்னுடைய சொந்தத் தாயையும் மனைவியையும் கொலை செய்து விட்டார். உரோமில் பல கட்டடங்களைக் கட்டுவதற்காக மக்கள் மீது பல்வேறு விதமான கடும் வரிகளை விதித்தார். தன்னை ஒரு சிறந்த விளையாட்டு வீரர், கலைஞர், இசைமேதை என தற்பெரு மையுடன் கூறிக்கொண்டார். கிறித்தவர்களைக் கொடுமைப்படுத் தித் துன்புறுத்தினர். இவருடைய ஆட்சிக் காலத்தில்தான் கி.பி. 64ஆம் ஆண்டில் உரோமில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுப் பாதிக் கும் மேற்பட்ட நகரம் அழிந்துவிட்டது. உரோம் நகரம் எரிந்து கொண்டிருக்கும்போது நீரோ வீணை வாசித்துக்கொண்டிருந்தா ராம்.[1] தெற்கு இத்தாலியில் பெரியதொரு நில அதிர்ச்சி ஏற்பட் டுப் பெருத்த பொருள்சேதமும் ஆள் சேதமும் ஏற்பட்டன. மூட நம்பிக்கைகள் கொண்ட இத்தாலியர்கள், நீரோவின் கொடுமை களைச் சகித்துக்கொள்ளாமல் பொறுமையின் திருவுருவமாகிய நில மகளே குமுறினளென்று நம்பினர்கள்.

இத்தகைய கொடுமைக்காரனின் ஆட்சிக்காலத்தில் பேரரசின் பல இடங்களில் இராணுவக் கலகங்கள் ஏற்பட்டன; கால்பா (Galba) என்பவர் தலைமையில் தலை நகரிலேயே ஓர் இராணுவக்

1. "When Rome was burning, Nero was fiddling."

கலகம் ஏற்பட்டு ஆட்சி கைப்பற்றப்பட்டது. கி.பி. 68ஆம் ஆண்டில் நீரோ உரோமிலிருந்து தப்பி ஓடி தற்கொலை செய்து கொண்டார். அதன் பின்னர் உரோமிலேயே பல கலகங்கள் ஏற்பட்டன. இறுதியில் சிரியாவில் படைத் தளபதியாயிருந்த வெஸ்பாசியன் (Vespasian) ஆட்சியைக் கைப்பற்றினர்.

**வெஸ்பாசியன் (கி.பி. 69–79)**

இவர் இராணுவ பலத்தால் தன்னைப் பேரரசராக ஆக்கிக் கொண்டாலும், பின்னர் எல்லா மக்களின் நன்மதிப்பையும் பெற்றார். நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலை நாட்டினர்.

இவர் காலத்திற்கு முன்னரிருந்தே கிழக்கே யூதர்கள் (Jews) உரோமானியக் குடிகளுக்குப் பெருந்தொல்லைகளைக் கொடுத்து வந்தனர். இவர் கிழக்கே தளபதியாக இருந்தபோதே யூதர்களின் கலகங்களை அடக்க முயன்றார். ஆனால், உரோமில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அவரை உடனடியாகத் தலைநகருக்குத் திரும்பத் தூண்டின. வெஸ்பாசியன் ஆட்சிக்கு வந்த அடுத்த ஆண்டே தன்மகன் டைட்டசை (Titus) அனுப்பி யூதர்களின் கலகங்களை அடக்கினர். ஜெருசலம் கைப்பற்றப்பட்டு அதன் பெரும்பகுதி நாசமாக்கப்பட்டது. யூதர்களுக்கென ஒரு தனியரசு இனி உருவா வதற்கு வாய்ப்பில்லை என்ற அளவுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டது.

**அன்டோனைன்களின் ஆட்சிக்காலம் (கி.பி. 96-180)**

வெஸ்பாசியனுக்குப்பின், டைடஸ், டொமிஷியன் ஆகியவர் ஆட்சி செய்தனர். அதன் பின் கி.பி. 96ஆம் ஆண்டிற்கும் கி.பி. 180ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நெர்வா (Nerva), டிராஜன் (Trajan), ஹாட்ரியன் (Hadrian), அன்டோனைனஸ், (Antoninus) பையெஸ், (Pius) மார்கஸ், (Marcus), அரீலியஸ் (Aurelius) ஆகிய ஐவர் ஆட்சி செய்த காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் 'அன்டோனைன்களின் காலம்' (Age of Antonines) என்று கூறுகின்றனர். இக் காலத்தில் உரோமானியப் பேரரசு அதற்கு முன்னரும் பின்னரும் காணாத அமைதியான இன்ப வாழ்க்கையை நடத்தியது. இவ்வைவரிலும் டிராஜன், ஹாட்ரியன், மார்கஸ், அரீலியஸ் ஆகியோர் முக்கிய மானவர்கள்.

**டிராஜன் (கி.பி. 98–117)**

உரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாகிய ஸ்பெயினில் பிறந்த இவர் செனெட்டின் பெருமதிப்பைப் பெற்றுப் பேரரசரானர்,

உரோமை ஆட்சிசெய்த பேரரசர்களுள் இவர் மிகச்சிறந்தவராவார். ஏழை எளியவர்கள்பால் அன்பும் பாசமும் கொண்டார். உரோமில் சலவைக் கற்களாலேயே பல அழகுமிகு கட்டடங்களைக் கட்டுவித்தார். டான்யூப் நதியைக் கடந்து, அங்குக் குழப்பம் விளைவித்த பார்பேரியன்களை அடக்கி, டேசியா (Dacia) என்ற பகுதியை (ஏறத்தாழ இன்றைய ருமேனியா) பேரரசுடன் இணைத்தார். அதுபோலவே கிழக்கே பார்த்தியன்கள் என்று சொல்லப்பட்ட பாரசீகர்கள் உரோமானியக் குடிமக்களை அடிக்கடித் தாக்கிக் கொள்ளையடித்து வந்தனர். கி.மு. 115ஆம் ஆண்டில் ஒரு பெரும் படையை அனுப்பிப் பார்த்தியன்களின் படைகளைத் தோற்கடித்து யூப்ரடிஸ்-டைக்ரிஸ் நதிகளுக்கிடையே இருந்த மெசபடோமியா என்ற பகுதியையும், கருங்கடல் காஸ்பியன் கடல்களுக்கிடையே தெற்கே இருந்த அர்மேனியா (Armenia) என்ற பகுதியையும் உரோமானியப் பேரரசுடன் சேர்த்துக் கொண்டார். அவர் இறக்கும்போது, கி.பி. 117ஆம் ஆண்டில், உரோமானியப் பேரரசு மிகப்பெரிய நிலப்பரப்பைக் கொண்டிருந்தது.

ஹாட்ரியன் (கி.பி. 117—118)

இவர் டிராஜனின் வளர்ப்புப்பிள்ளையாவார். இவரும் பரந்த நோக்கும், ஆட்சித் துறையில்உண்மையான அக்கறையும் உடையவர். இவருடைய இருபத்தோர் ஆண்டு ஆட்சிக் காலத்தில் ஒரே ஒரு முறைகூட போர் நடைபெறவில்லை. இவர் தன் பேரரசு முழுவதும் சுற்றிப் பார்த்து ஆட்சி முறையைச் சீர்படுத்தினர். ஆட்சித் துறை அலுவலர்கள் (Civil Servants) அவர் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்டார்கள். பேரரசில் இருந்த எல்லாக் குடிமக்களும் எவ்வித ஏற்றத்தாழ்வுமின்றி உரிமைகளும் கடமைகளும் தரப்பட்டார்கள். அடிமைகளின் குறைகள் பரிவுடன் கவனிக்கப்பட்டன. இவருடைய தந்தை டிராஜன் வென்ற அர்மேனியா, மெசபடோமியா ஆகிய பகுதிகளில் உரிமைப் போராட்டங்கள் ஏற்படவே அவற்றை அம் மக்களிடமே திருப்பித் தந்துவிட்டார். ஆனால், டேசியாவைக் (Dacia) கைவிடவில்லை. அங்குத் தங்கச்சுரங்கங்கள் கண்டுபிடித்தமையே அதற்குக் காரணமாகும். பிரிட்டன் (Britain) பார்பேரியன்களின் படையெடுப்பைத் தடுக்கப் பெரியதொரு சுவரைக் கட்டுவித்தார். அது சீனாவிலுள்ள பெருஞ்சுவருடன் ஒப்புநோக்கற்பாலது. பெரிய நகரங்களில் நகராட்சி முறை ஏற்படுத்தப்பட்டது.

மார்கஸ் அரீலியஸ் (கி.மு. 161–180)

இவர் கடுமையான உழைப்பாளரும் நன்கு கற்றறிந்தவருமாவார்; 'வழிபாடுகள்' (Meditations) என்ற நூலின் ஆசிரியரு

மர்வார். அந் நூலில் ஸ்டாயிசிசம் (Stoicism) என்ற தத்துவத்தின் கொள்கைகளை அவருடைய கண்ணோட்டத்துடன் விளக்குகின்றார்.[1] அவருடைய ஆட்சிக் காலத்தில் பேரரசின் பல இடங்களில் வெள்ளமும், நில அதிர்ச்சியும்,கொள்ளை நோயும் ஏற்பட்டுப் பெரும் இழப்பு நேர்ந்தது. இது தவிர பார்பேரியன்கள் படையெடுப்புகளினால் பேரரசின் வடக்குப் பகுதியில் தொல்லைகள் ஏற்பட்டன. அவற்றைப் பேரரசர் திறமையுடன் முறியடித்தார். அவர் அத்தகைய போரில் ஈடுபட்டிருந்தபோதுதான் கி.பி. 180-ல் கொள்ளை நோயினால் தாக்கப்பட்டு இறந்துவிட்டார். இவருடைய ஆட்சிக் காலத்துடன் உரோமானியப் பேரரசு அமைதியையும், நல் வாழ்வையும் இழந்தது. உரோமானியப் பேரரசு கி.பி. 190ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 476ஆம் ஆண்டு வரை அழிவுப் பாதையில் விரைந்தோடத் துவங்கியது. இவ்விடைக்காலத்தில் உரோமை ஆட்சி செய்த அறுபதுக்கும் மேற்பட்ட பேரரசர்களுள் ஒருசிலரே திறமையுள்ளவர்களாக விளங்கினர். அவர்களுள் டையக்லீஷியன் (Diocletian), கான்ஸ்டன்டைன் (Constantine) ஆகியவர்களே முக்கியமானவர்கள்.

டையக்லீஷியன் (கி.பி. 284–305)

இவர் ஒரு சாதாரண அடிமையின் மகனாவார். இவருடைய தந்தை ஏட்ரியாடிக் கடலின் (Adriatic Sea) கிழக்குக் கடற்கரைப் பகுதியாகிய டால்மேஷியாவைச் (Dalmatia) சேர்ந்தவர். இராணுவத் தளபதியாக இருந்த டையக்லீஷியனை இராணுவம் பேரரசராக்கியது. கி.பி. 284ஆம் ஆண்டில் இவர் பேரரசரான போது அரசு பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியதாகயிருந்தது. நிதி நிலை மோசமாக இருந்தது; ஆட்சித் துறை சீர் கெட்டிருந்தது. எனவே, அவற்றைத் திருத்தியமைக்க அவர் முற்பட்டார்.

பேரரசு இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஏட்ரியாடிக் கடலுக்கு மேற்கேயுள்ள பகுதிக்கு ஒரு பேரரசரும், கிழக்கேயுள்ள பகுதிக்கு ஒரு பேரரசரும் நியமிக்கப்பட்டனர். அவர்கள் 'அகஸ்டஸ்' என்று அழைக்கப்பட்டனர். ஆனால், உண்மையில் எல்லா அதிகாரங்களும் உரோமில் இருக்கும் டையக்லீஷியனிடமே இருந்தன. இவ்விரு பேரரசர்களுக்கும் உதவி செய்ய '*சீசர்கள்*'

1. கி.மு. 308-ல் ஜெனோ (Zeno) என்பவர் கிரேக்க நகரமாகிய ஆதென்சில் ஒரு பள்ளியை நிறுவி ஸ்டாயிசிசம் என்ற தத்துவத்தை விளக்கினார். வாழ்க்கையின் நல்லொழுக்கத்தை இலட்சியமாகக் கருதுவதும் இன்ப துன்பங்களைப் பொருட்படுத்தாமல் இருக்கும் மனப்பாங்கினைப் பெற்றிருத்தலும் இத் தத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

என்ற துணைப் பேரரசர்கள் நியமிக்கப்பட்டனர். பேரரசு முழுவதும் பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவை மீண்டும் நூறு சிறு நிலப் பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டு, அவைகளுக்கேற்ற ஆட்சித் துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். வேறு பல துறைகளிலும் மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை உருவாக்கினார். எனவே, இவர் 'இரண்டாம் அகஸ்டஸ்' என்று அழைக்கப்படுகிறார்.

முதலில் டையக்லீஷியன் கிறித்தவர்கள்பால் சகிப்புத் தன்மையைக் காட்டினார். ஆனால், அவருடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில் அவர்களைத் துன்புறுத்தினார். அவர்களுடைய தேவாலயங்களும் புனித நூலும் அழிக்கப்பட்டன. கிறித்தவ மத குருமார்கள் சிறையிலடைக்கப்பட்டனர். எனினும், அம் மதக் கருத்துகளைப் பெரும்பாலானவர் பின்பற்றினர். தோல்வியை ஒப்புக்கொண்டு டையக்லீஷியன் தாமாகவே பதவியைவிட்டு விலகினார்.

**கான்ஸ்டன்டைன் (கி.பி. 311–337)**

பேரரசர் கான்ஸ்டன்டைனின் (Constantine) ஆட்சிக் காலத்தில் இரண்டு முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதலாவதாக, கி.பி. 313ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'மிலான் ஆணை' யின்படி (Edict of Milan) கிறித்தவ மதம் அரசரால் அனுமதிக்கப்பட்டது. பேரரசில் எல்லாப் பகுதிகளிலும் கிறித்தவர்கள் தங்கள் விருப்பப்படி மத வழிபாடு செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். இனி, கிறித்தவர்கள் எக் காரணம் கொண்டும் கொடுமைப் படுத்தப்படமாட்டார்களெனவும், அவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் அரசு பாதுகாப்பு அளிக்குமெனவும் பேரரசர் உறுதியளித்தார். இக் கண்ணியமான செயல் பேரரசின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் ஓரளவு உதவியது. இரண்டாவதாக, கி.பி. 330ஆம் ஆண்டில் பேரரசின் தலைநகரத்தை உரோமிலிருந்து கான்ஸ்டான்டிநோபிளுக்கு மாற்றிவிட்டார். இச் செயல் பின்னர் பேரரசு வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. ஆயினும், அதுவே கிழக்கு உரோமானியப் பேரரசு உருவாகிப் பெயரளவிலாவது கி.பி. 1453ஆம் ஆண்டு வரை நீடித்திருக்க உதவியது. இவருடைய ஆட்சிக் காலத்தில் வேறு எந்தக் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியும் நடைபெறவில்லை.

கான்ஸ்டன்டைனுக்குப்பின் வந்த பேரரசர்கள் உரோமானியப் பேரரசு வீழ்ச்சியடையத்தான் உதவினார்களே தவிர அது வலிமை பெற அவர்களால் ஏதையும் செய்ய முடியவில்லை.

### உரோமானியப் பேரரசின் அழிவும் வீழ்ச்சியும்

மார்கஸ் அரீலியஸ் இறந்தபிறகு உரோமானியப் பேரரசு புகழையும், பெருமையையும் சிறிது சிறிதாக இழக்கத் தொடங்கியது உரோமில் குறிப்பிட்ட 'வாரிசு உரிமைச் சட்டம்'(Law of Succession) இல்லையென்பது உண்மை. ஆயினும், அன்டோனைன்கள் என்றழைக்கப்பட்ட ஐந்து அரசர்களும் செனெட்டின் ஆதரவுடன் தங்களுடைய வாரிசைத் தாங்களே நியமித்துவிட்டு இறந்தார்கள். அந்த முறையிலிருந்து விலகி மார்கஸ் அரீலியஸ் தன்னுடைய பொறுப்பற்ற மகன் கம்மோடஸ் (Commodus) என்பவரைத் தன் வாரிசாக நியமித்தார். அவர் எல்லாத் தீய குணங்களின் மறு பிறவியாக இருந்தார். அவருடைய ஆதரவாளர்களாலேயே அவர் கி.பி. 192ஆம் ஆண்டில் கொலை செய்யப்பட்டார். பேரரசின் பல இடங்களில் எதிர்ப்புகளும் கலகங்களும் தோன்றலாயின. மாநிலங்களில் இருந்த இராணுவப் படைகளும் தலைநகருக்குப் பயந்து நடக்கவில்லை;

### செப்டிமியஸ் செவிரஸ் (Septimius Severus), செய்த தவறுகள் (கி.பி. 193-211)

கம்மோடஸ் கொலை செய்யப்பட்டவுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்க எவருமில்லை. பெர்டிநாக்ஸ் (Pertinax) என்பவரை செனெட் பேரரசராக நியமித்தது. ஆனால், தலைநகரிலிருந்த இராணுவப்படைகளும், மற்றும் பிரிட்டன், சிரியா, பன்னோனியா (Pannonia) (ஏறத்தாழ இன்றைய ஆஸ்ட்ரியா) ஆகிய இடங்களிலிருந்த இராணுவத் தலைவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதியாகப் பன்னோனியாவின் இராணுவத் தலைவர் செப்டிமியஸ் செவிரஸ் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய முன்னோர்கள் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்களாவர். அவர் இராணுவத்தில் பணிபுரிந்தவர்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்தார். அவர்களுடைய சம்பளங்களை உயர்த்தினர். வீரர்கள் திருமணம் செய்து கொள்வதை அனுமதித்தார். அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் நிலத்தையும் சொத்துகளையும் வைத்துக் கொள்வதற்கும், மனைவிமக்களுடன் வாழ்வதற்கும் அனுமதிக்கப் பட்டார்கள். தலைநகரில் இருந்த பெரும் படையைக் கலைத்து விட்டுச் சிறியதொரு படையை வைத்துக்கொண்டார். செவிரஸ் செய்த சீர்த்திருத்தங்களை இராணுவ வீரர்கள் மனமுவந்து வரவேற்றார்கள். எனினும், அவை பேரரசின் பாதுகாப்பைப் பாதித்தன. நெருக்கடி நேரங்களிலும், போர்க்காலங்களிலும் தங்கள் சொந்த இடத்தை விட்டுச்செல்ல வீரர்கள் மறுத்துவிட்டனர். அப்படி இடம்விட்டு இடம் சென்றாலும் விரைவிலேயே வீடுதிரும்ப

விரும்பினர். இராணுவக் கலகங்கள் அடிக்கடி நிகழத் தொடங்கின.

இத்தகைய சூழ்நிலையில் கி.பி. 211ஆம் ஆண்டு செவிரஸ் இறந்துவிட்டபொழுது திறமையுள்ள அரசர் எவரும் ஆட்சி செய்ய இல்லாமல் போயினர். அவருடைய மகன் **கரகல்லா** (Caracalla) எட்டாண்டுகள் கொடுங்கோலனாக ஆட்சி செய்தார். அவர் கி.பி. 217ஆம் ஆண்டில் கொலை செய்யப்பட்டார்.

கி.பி. 217ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 249ஆம் ஆண்டு வரை உரோமானியப் பேரரசு அவலநிலைக்குள்ளாகியது. இராணுவக் கலகங்கள் மலிந்தன. பொறுப்பும் திறமையும் இல்லாத கொடியவர்கள் கையில் ஆட்சி அடிக்கடி சிக்கியது. அதைத் தொடர்ந்து பார்பேரியன்களின் படையெடுப்புகளும் நிகழ்ந்தன. அப் படையெடுப்புகள் எங்ஙனம் உரோமானியப் பேரரசைப் பாதித்தன என்பதை இனிக் காண்போம்.

**'கோத்'களின் படையெடுப்புகள் (Invasion of the Goths)**

உரோமானியர்கள், இத்தாலிக்கு வடக்கே, உரோமானியப் பேரரசின் ஆட்சிக்குட்படாத மற்ற எல்லா மக்களையும் பார்பேரியன்கள் என்றே கருதினர்; கோத்களும் பார்பேரியன்களேயாவர். இவர்கள் உருசியாவின் தென்பகுதியிலும், கிரிமியாத் தீபகற்பத்திலும் வாழ்ந்து வந்த கொடிய இனத்தினராவர். இவர்கள் பால்கன் தீபகற்பத்தின் வட பகுதியையும், கருங்கடலின் மேற்குப் பகுதிகளையும் அடிக்கடித் தாக்கிப் பெருஞ்சேதத்தை உண்டாக்கி வந்தனர். டெசியஸ் (Decius) உரோமானியப் பேரரசராக இருந்த காலத்தில் (கி.பி. 249 முதல் 251 வரை) இவர்கள் பேரரசின் மீது படையெடுத்தனர். கி.பி. 251ஆம் ஆண்டில் பேரரசின் ஒரு பகுதியாகிய பால்கன் தீபகற்பத்தின் வடகிழக்குப் பகுதியின் மீது தாக்குதல் நடத்தப் பெரும் படையுடன் வந்தனர். பேரரசர் டெசியஸ் தானே படைத் தலைமையை ஏற்றுக் கோத்களை முறியடிக்கக் களம் நோக்கிச் சென்றார். இரு படைகளுக்கும் கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் உரோமானியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பேரரசர் டெசியஸ் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இத் தோல்வி பேரரசுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய அவமானமாகும். நல்ல வேளையாக கோத்கள் தொடர்ந்து முன்னேறித் தலைநகரை நோக்கிச் செல்லாமல் டான்யூப் நதிப்பகுதிக்குத் திரும்பிச் சென்று விட்டனர்.

கிளாடியஸ் (Claudius) உரோமானியப் பேரரசராக இருந்த காலத்தில் (கி.பி. 268-270) கோத்களின் தாக்குதல் மீண்டும் ஏற்பட்டது. டான்யூப் நதிப் பகுதியில் ஏற்பட்ட போரில் கிளாடியஸ் திறம்படப் போரிட்டு அவர்களை விரட்டியடித்தார். அடுத்த பேரரசர் ஆரீலியன் (Aurelian) காலத்திலும் (கி.பி. 270–275) கோத்களின் படையெடுப்புகள் நிகழ்ந்தன. இவரும் அவர்களை வெற்றிகரமாக விரட்டியடித்தார். கோத்களின் படையெடுப்புகளால் பேரரசுக்குப் பெருத்த பொருள் சேதமும் ஆள் சேதமும் ஏற்பட்டுக்கொண்டு வந்தன.

கோத்கள் டான்யூப் நதிப் பகுதியில் அவர்களுக்கென்று தனியரசை நிறுவிக் கொண்டனர். கருங்கடலிலிருந்து பால்டிக் கடல் வரை அவர்களுடைய அரசு பரவியிருந்தது. அவ்வினத் தினரும் காலப்போக்கில் கிறித்தவ மதத்தைப் பின்பற்றலாயினர். கோத்களின் தலைசிறந்த கிறித்தவ மதகுரு உல்ஃபிலாஸ் (Ulfilas) (கி.மு. 331–381) என்பவர் பெரும்பாலான கோத்களை கிறித்தவர் களாக மாற்றினார். அவர்களின் பழக்க வழக்கங்கள், மற்றும் பண் பாடுகள் பெருமளவு மாற்றப்பட்டன. உரோமானிய மக்களைப் போலவே பண்படைந்து, அரசியல் முதிர்ச்சிபெற்று அமைதியான அரசு நடத்துவார்கள் என்ற நிலை ஏற்பட்டது. இத்தருவாயில் அவர்களுக்கு ஒரு பேராபத்து நேர்ந்தது.

நான்காம் நூற்றாண்டின் இறுதியில் மத்திய ஆசியாவிலிருந்து ஹூணர்கள் (Huns) என்ற முரட்டு இனத்தினர் கோத்களின் மீது படையெடுத்தனர். அவர்கள் நாடோடிகளாகத் திரிந்து வந்த கொடுமையான கூட்டத்தினராவர். ஹூணர்களின் படைகளுக்கும் கோத்களின் படைகளுக்கும் கருங்கடலின் வடக்கே நீஸ்டர் (Dniester) நதிப் பகுதியில் கடுமையான போர் நடைபெற்றது. அப் போரில் கோத்கள் தோற்கடிக்கப்பட்டனர். கோத்களின் வளர்ந்து வந்த அரசு வீழ்ச்சியுற்றது. இத்தகைய பயங்கர நிகழ்ச்சிக்குப் பின்னர் ஹூணர்களைப் போலவே, கோத்களும் தெற்கே இருந்த உரோமானியப் பேரரசின்மீது மீண்டும் கடுமை யான தாக்குதல்களை நடத்தத் தொடங்கினர். அதன் விளைவுகள் வரலாற்றுச் சிறப்புடையவைகளாகும்.

பேரரசர் கான்ஸ்டன்டைன் பேரரசின் தலை நகரத்தை உரோமி லிருந்து கான்ஸ்டான்டிநோபிளுக்கு கி.பி. 330ஆம் ஆண்டு மாற்றினார்கள் என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். கி. பி. 376ஆம் ஆண்டு உரோமில் ஒரு பேரரசரும் கான்ஸ் டான்டிநோபிளில் ஒரு பேரரசரும் இருந்தனர். கிரேஷியன்

(Gratian) மேற்கிலும், வாலென்ஸ் (Valens) கிழக்கிலும் பேரரசர்களாக இருந்தனர். கோத்கள் கூட்டம் கூட்டமாக டான்யூப் நதியைக் கடந்து தெற்கு நோக்கி வந்தனர். காலாட் படையும், குதிரைப் படையும் அவர்களுக்கிருந்தன. இவர்கள் பேரரசின் பல பகுதிகளைத் தாக்கிச் சூறையாடினர். இவர்களை அடக்கி விரட்டியடிக்க உரோமிலிருந்தும், கான்ஸ்டான்டிநோபிளிலிருந்தும் பேரரசின் படைகள் திரண்டன. மேற்கேயிருந்து படைகள் வருவதற்குள்ளாக கான்ஸ்டான்டிநோபிளுக்கு மேற்கே ஏட்ரியா நோபிள் (Adrianople) என்ற இடத்தில் கி.பி. 378ஆம் ஆண்டில் கோத்களின் படைகளுக்கும் பேரரசின் (கிழக்குப்) படைகளுக்கும் பயங்கரமான போர் நடைபெற்றது. கோத்களின் குதிரைப் படைகள் மின்னல் வேகத்தில் பாய்ந்து பேரரசின் படைகளைத் தாக்கிச் சிதறடித்தன. பேரரசின் படைகள் பெருந்தோல்வியைக் கண்டன. பேரரசர் வாலென்ஸ் கைப்பற்றப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இப் போர் பல விதங்களில் வரலாற்றுச் சிறப்புடையது. இப் போருக்குப் பின்னர் உரோமானியப் பேரரசு மறு வாழ்வு பெற்று மலரும் என்ற நம்பிக்கையே இல்லாமற்போய் விட்டது. குதிரைப் படையின் சிறப்பு ஐரோப்பா முழுவதும் பரவியது. பிற்காலத்தில் இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் நடைபெற்ற நூறுண்டுப் போரிலும் இங்கிலாந்து குதிரைப் படையைப் பயன்படுத்தியதால்தான் கிரெசி போரிலும், புவாய்டியர்ஸ் போரிலும் (Battles of Crecy and Poitiers) பெரு வெற்றி பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

இப் போருக்குப்பின் பேரரசின் கிழக்குப் பகுதி முழுவதும் கோத்களால் கைப்பற்றப்படும் என்ற நிலை ஏற்பட்ட போதிலும், நல்ல வேளையாக உரோமானியப் பேரரசு அந்த நிலைக்குள்ளாகவில்லை. வாலென்சை அடுத்துப் பேரரசரான தியோடோசியஸ் (Theodosius, 379 – 395 A.D.) கோத்களுடன் உடன்பாடு செய்து கொண்டார். அதன்படி டான்யூப் நதிக்குத் தெற்கே ஆயிரக்கணக்கான கோத்கள் வந்து குடியேற அனுமதிக்கப்பட்டார்கள். உரோமானியக் குடிகளாகவே அவர்கள் கருதப்பட்டார்கள். ஏறக்குறைய ஐம்பதாயிரம் கோத்கள் பேரரசின் படையில் சேர்ந்து பணிபுரியத் தொடங்கினர். இது பயங்கரப் போக்கு என்பதைப் பேரரசர் உணராமலிருந்துவிட்டார். பின்னர் பேரரசு வீழ்ச்சியடைவதற்கு இப் பார்பேரியப் படையும் மிக முக்கியமான காரணமென்பதனை வரலாற்று நிகழ்ச்சிகள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

**விசிகோத்களின் படையெடுப்புகள் (Imasion of the Visigoths)**

கி.பி. 395ஆம் ஆண்டில் தியோடோசியஸ் இறந்தபின்னர் அவருடைய இரு புதல்வர்கள் கான்ஸ்டான்டிநோபிளில் அர்காடியஸூம் (Arcadius), உரோமில் ஹொனோரியஸூம் (Honorius) பேரரசர்களானார்கள். அதே ஆண்டு விசிகோத்களின் தலைவன் அலரிக் (Aloric) டான்யூபின் மேற்குப் பகுதியில் அரசரானார். இவர்கள் கோத்களின் ஒரு பிரிவினரேயாவர். எனவே, இவர்கள் மேற்குக் கோத்கள் (Western Goths) என்றும் அழைக்கப்படுகின்றனர். அலரிக் உண்மையிலேயே நல்ல பண்பாளன்; கிறித்தவ மதத்தைத் தழுவியவன். அவனைச் சார்ந்த விசிகோத்துகளும் கிறித்தவர்களேயாவர். வீரதீரச் செயல்களில் வல்லவராகிய அலரிக் ரோமில் இருந்த பெருஞ்செல்வத்தைக் கொள்ளையடிக்க உரோமியப் பேரரசின்மீது பலமுறை படையெடுத்தார்.

முதலில் கான்ஸ்டான்டிநோபிளிலிருந்த அரசரிடம் பெருஞ் செல்வத்தைக் கேட்டான். அவ்வரசர் கொடுக்க மறுக்கவே அலரிக் பெரும்படையுடன் கி.பி. 400ஆம் ஆண்டு ஃபால்கன் தீபகற்பத்தை நோக்கி வந்தான். பேரரசின் (கிழக்குப்) படைகள் ஸ்டிலிகோ (Stilicho) என்ற புகழ்வாய்ந்த தளபதியின் தலைமையின்கீழ் வந்தன. இரு படைகளுக்குமிடையே கிரீசின் வடக்கே பல பகுதிகளில் போர் நடைபெற்றது. அலரிக்கும் ஸ்டிலிகோவும், வீரத்திலும் திறமையிலும் ஒருவரையொருவர் மிஞ்சியவராவர். அவர்களுக்கிடையே போர் பல நாள்கள் நீடித்தது. இறுதியாக அலரிக் தன்னுடைய படைகளுடன் இல்லிரிகம் (Illyricum) பகுதியில் (ஏட்ரியாடிக் கடலின் கிழக்குப் பகுதி) தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டார். அலரிக் இத்தாலியின் மீது தாக்குதலை நடத்தக் காத்திருந்தார்.

அதற்குள் ஸ்டிலிகோ உரோமுக்கு மாற்றப்பட்டார். உரோமில் ஹொனோரியஸ் (Honorius) பேரரசராக இருந்தார். கி.பி. 401ஆம் ஆண்டு இத்தாலியின் வட பகுதியிலிருந்து அலரிக் தாக்கமுற்பட்டார். உரோமானியப் படைகள் ஸ்டிலிகோவின் தலைமையில் சென்றன. இரு படைகளுக்கும் போலென்ஷியா (Battle of Pollentia) (இன்றைய டூரின் நகரத்திற்குச் சுமார் இருபத்தைந்து மைல்கள் தென் கிழக்கே உள்ளது) என்ற இடத்தில் கடும் போர் நடைபெற்றது. அலரிக் இத்தாலியினுள் வரவொட்டாமல் தடுக்கப்பட்டார். இது ஸ்டிலிகோவின் மிகப் பெரிய சாதனையாகும். இவ் வெற்றியைக் கொண்டாடுவதற்கு உரோம் நகரில் மிகப் பெரும் விழாவொன்றிற்கு ஏற்பாடு செய்யப்பெற்றது.

பேரரசர் ஹொனேரியஸ், இத்தாலியின்மீது இத்தகைய தாக்குதல்கள் அடிக்கடி நிகழும் எனக் கருதித் தன் தலைநகரத்தை உரோமிலிருந்து இத்தாலியின் வடகிழக்கேயுள்ள ராவென்னவுக்கு (Ravenna) மாற்றிவிட்டார். பிற்காலத்தில் இந் நகரத்தில் அழகு மிகு அரண்மனைகளும், கட்டடங்களும் கட்டப்பட்டன. கிழக்கே கடலும், மேற்கே கடத்தற்கரிய மலைகளும், சதுப்பு நிலங்களும் இருந்ததால் இது அரசருக்கு மிகப் பாதுகாப்பான இடமாக இருந்தது. தன் படைத் தளபதி ஸ்டிலிகோவின் வளர்ந்துவந்த வலிமையையும் கண்டு பேரரசரே பொருமைப்பட்டார். தன்னுடைய பதவிக்கே ஆபத்து வரும் என்று அவர் கருதினர். அதனல் பல விதமான குற்றங்களைச் சாட்டி, பேரரசர் ஸ்டிலிகோவைக் கொன்று விட்டார்.

இச் செய்தியை அறிந்த அலரிக் அதே ஆண்டில் (கி. பி. 408) ஆல்ப் மலைகளைக் கடந்து மிகவேகமாக உரோம் நகரைநோக்கிச் சென்ருர். ஈடு இணையற்ற ஸ்டிலிகோவைக் கொன்றுவிட்ட பேரரசர், அலரிக்கின் படைகளைத் தடுத்து நிறுத்தக்கூடத் தகுந்த படைத் தலைவன் இல்லாமல் பரிதவித்தார். வழியில் பல நகரங்களைக் கொள்ளையடித்துக்கொண்டும், சூறையாடிக்கொண்டும் அலரிக்கின் படைகள் உரோம் நகருக்கே சென்றுவிட்டன. ரோம் நகரை அலரிக் முற்றுகையிட்டுவிட்டார். அவர் நினைத்திருந்தால் உரோம் முற்றிலும் அழிக்கப்பட்டிருக்கும். ஆனல் அலரிக் உண்மையான கிறித்தவன் என்ற முறையிலும், உரோமிலுள்ள கலைக் கருவூலங்களை அழிக்கக்கூடாதென்பதற்காகவும் பேரரசின் முடிவுக்காகக் காத்திருந்தார். பேரரசர் ஐந்தாயிரம் பவுண்டு எடையுள்ள தங்கக் கட்டிகள், முப்பதாயிரம் பவுண்டு எடையுள்ள வெள்ளிக் கட்டிகள், நான்காயிரம் பவுண்டு பட்டாடைகள்; மூவாயிரம் பவுண்டு பொன்னிறத் தோல் பொருள்கள், மூவாயிரம் பவுண்டு ஏலக்காய் ஆகியவற்றைக் கொடுத்தாலொழிய முற்றுகையை நீக்க முடியாதென அலரிக் நிபந்தனை விதித்தார். ஆனல் பாதுகாப்பான ராவென்ன நகரிலிருந்த பேரரசர் இந் நிபந்தனைக்கு உட்படவில்லை. பெருந்தன்மையுடன் அலரிக் பொறுத்துக்கொண்டிருந்தார்.

கி. பி. 409ஆம் ஆண்டில் அலரிக் உரோமின் முற்றுகையை வலுப்படுத்தினர். பேரரசர் உரோம் நகர மக்களின் பாதுகாப்பைச் சிறிதும் கவனிக்காமல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, உரோம் நகரம் கைப்பற்றப்பட்டதாக அலரிக் அறிவித்தார்; அட்டலஸ் (Attalus) என்பவரை உரோமில் போட்டிப் பேரரசராக நியமித்தார். இந் நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் பேரரசர் ஹொனேரியஸ் கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

போட்டிப் பேரரசருக்குப் பதவிக்கேற்றவாறு கண்ணியமாக நடந்துகொள்ளத் தெரியவில்லை. தீய பழக்க வழக்கங்களிலும், வழிமுறைகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். கி.பி. 410ஆம் ஆண்டு போட்டிப் பேரரசரை அலரிக் நீக்கிவிட்டார். ஹொனோரியஸ் வாளாயிருப்பது கண்டு பொறுமையிழந்த அலரிக் தன் படைகளுக்கு உரோமைச் சூறையாடும்படி ஆணையிட்டார். வரலாறு காணாத முறையில் உரோம் கொள்ளையடிக்கப்பட்டது. தெருக்களில் பிணக்குவியல்கள் நிரம்பின. தங்கம், வெள்ளி, விலையுயர்ந்த நவரத்தினங்கள், அணிகலன்கள், மூட்டை மூட்டைகளாகக் கட்டப்பட்டுக் குதிரைகளின்மீது எடுத்துச்செல்லப்பட்டன. அலரிக் ஆப்பிரிக்காவையும் வெல்லக் கருதினார். அதற்காகப் போர்க்களங்களை ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். டிர்ரீனியன் கடலில் ஏற்பட்ட புயல் அவருடைய பயணத்தைத் தடை செய்தது. அதற்குள்ளாக அவர் நோய்வாய்ப்பட்டு கி.பி. 410ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். ஆயினும், இவர் வழிவந்த விசிகோத்கள் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குள் ஐபீரிய தீபகற்பம் முழுவதையும் உள்ளடக்கிய 'விசிகோத் பேரரசை' நிறுவினார்கள்.

### வாண்டல்களின் படையெடுப்புகள் (Invasion of the Vandals)

வாண்டல்கள் என்பவர்களும் கொடுமையான ஒருவகை ஜெர்மானிய இனத்தவர் ஆவர். அவர்கள் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கூட்டம் கூட்டமாக ஜெர்மனியிலிருந்து கால் (Gaul) பகுதியின் வழியியாகவும் ஸ்பெயின் பகுதியின் வழியாகவும் உரோமானியப்பேரரசின் ஒரு மாநிலமாகவிளங்கிய ஆப்பிரிக்காவில் (கார்த்தேஜ்) குடியேறியிருந்தனர். ஆப்பிரிக்காவில் மற்ற உரோமானிய நிலப்பகுதிகளைவிட உரோமானிய நாகரிகம் பண்பாடு கலைகள் மற்றும் கிறித்தவ மதம் மிக அதிகமான அளவில் பரவியிருந்தன. பெரும்பாலான மக்கள் கிறித்தவர்களாகவே இருந்தார்கள்.

கி. பி. 429ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவின் ஆளுநர் போனிஃபேஸ் (Boniface) என்பவர் மத்திய அரசுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். வாண்டல்களின் தலைவர் ஜென்செரிக் (Genseric) என்பவனை போனிஃபேஸ் தன் உதவிக்கு வரும்படி வேண்டிக்கொண்டார். ஜென்செரிக் ஆப்பிரிக்காவின் பல நகரங்களைக் கொள்ளையடித்தார். இத்தாலியிலிருந்து பேரரசின் படைகள் அனுப்பப்பட்டு கார்த்தேஜ் நகரம் பாதுகாக்கப்பட்டது. பத்து ஆண்டுகள் ஆப்பிரிக்காவின் பலவிடங்களில் ஜென்செரிக் கொள்ளையடித்தான். இறுதியாக கி. பி. 439ஆம் ஆண்டில் கார்த்தேஜ் நகரமே வீழ்ந்தது. இவ் வாண்டல்கள் கார்த்தேஜ் நகரிலேயே தங்கியிருந்தனர்.

மீண்டும் கி. பி. 455ஆம் ஆண்டில் உரோம் நகரையே தாக்கு வதற்குத் தகுந்த வாய்ப்பு ஜென்செரிக்குக் கிடைத்தது. கார்த்தே ஜிலிருந்து டிர்ரீனியன் கடலைக் கடந்து கடற்படை மற்றும் போர்வீரர்களுடன் சென்று உரோமை முற்றுகையிட்டார். போப்லியோ உரோமைத் தாக்க வேண்டாமென அன்புடனும் பணிவுடனும் வேண்டிக்கொண்டார். ஆனால் ஜென்செரிக் அக் கிறித்தவப் பெரியாரின் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவில்லை. உரோமைக் கொள்ளையடிக்கும்படித் தன் படைகளுக்கு அவர் ஆணையிட்டார். பதினான்கு நாள்கள் உரோம் நகரை இரக்கமின்றி அப் படைகள் சூறையாடிக் கொள்ளையடித்தன. பெருஞ் செல்வக் குவியல்களைத் தங்கள் போர்க் கப்பல்களில் அடுக்கிக்கொண்டு கொள்ளைக்கார வாண்டல்கள் கார்த்தேஜ் திரும்பினர். மேலும், முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட குடிமக்களைப் பிடித்துச்சென்று அவர்களை அடிமைகளாகப் பயன்படுத்தினர்.

ஜென்செரிக் பிடித்துச் சென்றவர்களுள் இறந்த பேரரசர் வாலெண்டியனின் (Valentinian) விதவையும் அவருடைய இரண்டு பெண்களும் முக்கியமானவர்களாவர். அவர்களை விடு விக்க வேண்டுமாயின் உரோமானிய அரசு மிகப் பெரிய ஈட்டுத் தொகையைத் தரவேண்டுமென ஜென்செரிக் நிபந்தனை விதித் தார். புதிய பேரரசர் அவிடஸ் (Avitus) ஜென்செரிக்கைத் தாக்கு வதற்காகக் கிழக்கு உரோமானியப் பேரரசரின் உதவியை நாடினார். ஆனால் உதவி கிடைக்கவில்லை இரண்டு பேரரசர்களின் திறமை யின்மையை அறிந்த ஜென்செரிக் மத்தியத்தரைக் கடலில் உரோ மின் ஆட்சிக்குட்பட்டிருந்த பல தீவுகளையும், ஸ்பெயினின் ஒரு பகுதியையும் கடுமையாகத் தாக்கி அவற்றையும் கைப்பற்றிக் கொண்டார். அதுமட்டுமன்றி இத்தாலியின் தெற்குப் பகுதியை மீண்டும் தாக்கி தன் வலிமையை உலகறியச் செய்தார். இந்த நேரத்தில் இத்தாலியில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அப் பஞ்சத் தைப் போக்க எந்தவிதமான நிவாரண நடவடிக்கைகளையும் பேர ரசர் எடுக்கவில்லை. கொதித்தெழுந்த மக்கள் பேரரசரை விரட்டி யடித்தனர். ஜென்செரிக்கின் தாக்குதல்களால் இத்தாலிய மக்கள் பெருந் தொல்லைகளுக்குள்ளானார்கள்.

அடுத்த பேரரசர் மஜோரியனின் (Majorian), கிழக்கு உரோமா னியப் பேரரசின் உதவியுடன், பெரும் ஈட்டுத் தொகையை ஜென் செரிக்குக் கொடுத்து வாலென்டியனின் விதவையையும், அவ ருடைய இரண்டாவது பெண்ணையும் மீட்டு வந்தார். முதல் பெண்ணை முன்னரே ஜென்செரிக் தன் மகனுக்குத் திருமணம் செய்துவைத்து விட்டிருந்தார். ஜென்செரிக்கைத் தாக்குவதற்காக

மஜோரியன் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. அதன் பிறகும் இத்தாலியும், உரோமானியப் பேரரசின் பல பகுதிகளும் வாண்டல்களால் தாக்கப்பட்டன. ஆப்பிரிக்கா தொடர்ந்து வாண்டல்களின் ஆட்சிக்குட்பட்டே இருந்தது. கி.பி. 6ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் அவர்கள் தங்களுடைய ஆதிக்கத்தை சார்டீனியா, கார்சிகா, மற்றும் பாலியரிக் (Balearic) தீவுகள் முதலான பகுதிகளில் பரப்பினுர்கள்.

## ஹூணர்களின் படையெடுப்புகள் (Invasion of the Hunus)

இவர்கள் நான்காம் நூற்றுண்டின் இறுதியில் மத்திய ஆசியாப் பகுதியிலிருந்து வந்து கோத்களையே விரட்டியடித்தனர் என்பதை முன்னரே நாம் கண்டோம். இவர்கள் டான்யூப் நதியின் வடக்குப் பகுதியில் குடியேறியிருந்தனர். கி.பி. 445ஆம் ஆண்டில் ஹூணர்களின் பெருந்தலைவன் அட்டிலா (Attila) அரசனுனன். அவனுடைய அரசு டான்யூப் நதியிலிருந்து பால்டிக் கடல் வரையிலும், ரைன் நதியிலிருந்து ஓல்கா நதி வரையிலும் பரவியிருந்தது. முதலில் உரோமானியப் பேரரசுடன் நட்புறவுடன் இருந்தானென்றுலும் பின்னர் பேரரசில் ஏற்பட்டிருந்த குழப்பமான நிகழ்ச்சிகள் அதன்மீது தாக்குதல் நடத்தும்படி அவனை உந்தின.

கி.பி. 446ஆம் ஆண்டில் பேரரசின் கிழக்குப் பகுதியின்மீது படையெடுத்துப் பல இடங்களைத் தாக்கினுன். கான்ஸ்டாண்டிநோபிளுக்கு மிக அருகில் சென்றுவிட்டான். பேரரசர் இரண்டாம் தியோடிசியஸ், அட்டிலாவுக்கு ஆண்டுதோறும் பெருஞ் செல்வத்தைக் கப்பம்போல் கட்டுவதாக ஒப்புக்கொண்ட பின்னரே திரும்பிச் சென்றுன்.

மீண்டும் கி.பி. 450ஆம் ஆண்டு ரைன் நதியைக் கடந்து கால் (Gaul) பகுதியை அட்டிலா பெரும்படையுடன் தாக்க ஆரம்பித்தார். அவருடைய தாக்குதலுக்குப் பயந்து கோத்கள், ஃபிராங்குகள், விசிகோத்கள் உரோமானியர்கள் ஆகிய அனைவருடைய படைகளும் ஒன்று திரண்டு அட்டிலாவை எதிர்த்து ஷேலான்ஸ் (Battle of Chalons) என்ற இடத்தில் போரிட்டு அட்டிலாவைத் தோற்கடித்தன.

ஆனுல் அடிபட்ட புலி அமைதியாக இருந்துவிடவில்லை. மிக விரைவாகத் தன் படையை வலுப்படுத்திக்கொண்டு அட்டிலா இத்தாலியை வடக்கிலிருந்து தாக்க முற்பட்டார். வெரோனு மிலான் போன்ற நகரங்கள் அட்டிலாவால் கைப்பற்றப்பட்டன. உரோமையும் தாக்குவார் என்ற நிலை ஏற்பட்டது. அப்பொழுது

பேர்ப்பாக இருந்த லியோ கிறித்தவ மதக் கொள்கைகளை அட்டிலாவுக்கு உபதேசித்து, அவருடைய மனம் உருகும்படி உரோமைத் தாக்க வேண்டாமென அன்புடன் வேண்டிக்கொண்டார். லியோவின் பேச்சாற்றலும், உண்மையான மதப்பற்றும், மக்கள் மீதுள்ள அன்பும், பாசமும் அட்டிலாவைக் கவர்ந்தன. அவருடைய வேண்டுகோளுக்கிணங்கி, உரோமைத் தாக்குவதை நிறுத்தினார். கி.பி. 453ஆம் ஆண்டில் அவர் இறந்துவிட்டார்.

இங்ஙனம் கி. பி, மூன்று, நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில் பார்பேரியன்கள் தொடர்ந்து உரோமானியப் பேரரசின்மீது தாக்குதல்களை நடத்தி வந்ததால் அப் பேரரசு அழிவுற நேர்ந்தது. கி.பி. 251, 274, 378ஆம் ஆண்டுகளில் கோத்களாலும், கி.பி. 401, 408, 410ஆம் ஆண்டுகளில் விசிகோத்களாலும், கி.பி. 429, 439, 455ஆம் ஆண்டுகளில் வாண்டல்களாலும், கி.பி. 446, 450ஆம் ஆண்டுகளில் ஹூணர்களாலும் கடுந் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதை நாம் முன்னரே கண்டறிந்தோம். இத்தனை தாக்குதல்களுக்குப் பின்னும் பேரரசின் உயிர் கொஞ்சம் ஊசலாடிக்கொண்டிருந்தது.

கி.பி. 476ஆம் ஆண்டு உரோமுலஸ் அகஸ்டுலஸ் (Romulus Augustulas) இத்தாலியில் பேரரசரானார். இவர் இராணுவத்தின் கைப்பொம்மையாகவே இருந்தார். அப்பொழுது இராணுவத் தளபதியாக இருந்த ஒடோவாகர் (Odovakar)[1] என்ற ஜெர்மானியப் பெருவீரன் பேரரசை வீழ்த்தத் தகுந்த வாய்ப்பினை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். உரோமானிய இராணுவத்தில் பெரும்பாலும் பார்பேரிய இனத்தவரே வீரர்களாக இருந்தனர். இது பேரரசரை வீழ்த்தச் சாதகமான சூழ்நிலையாக அமைந்தது. ஒரு காலத்தில் ஹூணர்களின் பெருந்தலைவன் அட்டிலாவிடம் பணிபுரிந்த ஒடோவாகர் கி.பி. 476ஆம் ஆண்டிலேயே தக்க நேரத்தில் பேரரசரை வீழ்த்தி விட்டார். ஒடோவாகரின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த செனெட், அவருடைய ஆணைப்படி கான்ஸ்டான்டிநோபிளில் இருந்த கிழக்கு உரோமானியப் பேரரசர் ஜெனோவிடம் (Zeno : 474-491 A.D) ஒரு தூதுக் குழுவை அனுப்பியது. அக் குழு, ஒடோவாகர் அறிவுறுத்திய வண்ணமே, மேற்கே இனி ஒரு பேரரசர் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், ஒடோவாகரையே இத்தாலியின் ஆட்சியாளராக (Patrician) ஏற்றுக் கொள்ளலாமெனவும் பேரரசரிடம் பரிந்துரைத்தது. இதைப் பேரரசர் ஏற்றுக் கொண்டார்.

1. சில வரலாற்றாசிரியர்கள் இவரை ஒடோசெர் (Odoacer) என்றும் குறிப்பிடுகின்றனர்.

பின்னர் பேரரசருக்குரிய எல்லாச் சின்னங்களையும் (Insignia) ஓடோவாகர் கான்ஸ்டான்டிநோபிளுக்கு அனுப்பி விட்டார். பெருமை மிக்க ஜுலியஸ் சீசர், அகஸ்டஸ் போன்றோரைத் தொடர்ந்து ஆட்சி செய்த பேரரசர்களின் ஆட்சி கி. பி. 476ஆம் ஆண்டில் முடிவடைந்தது, எனவேதான் இவ்வாண்டில் உரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைந்ததாகக் கருதப்படுகிறது. எனினும், இந்த ஆண்டுக்கு அவ்வளவு சிறப்புக் கொடுக்கக் கூடாது என்று சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். ஏனெனில் இத்தாலி தொடர்ந்து கிழக்கு உரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. அதன் பார்பேரிய இனத்தைச் சேர்ந்த ஆட்சியாளர்களும் கான்ஸ்டான்டிநோபிளில் இருந்த பேரரசரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டே நடந்து கொண்டார்கள். செனெட்டும் அடிக்கடிக் கூடித் தன் பணியினைச் செய்து வந்தது. இருப்பினும் கடல் கடந்த நாடுகளிலெல்லாம் உரோமானிய நாகரிகத்தையும், பண்பாட்டையும், கலைச் செல்வங்களையும் பரப்பிய உரோம், நாகரிகமற்ற பார்பேரிய கொடுங் கூட்டத்தினரால் கைப்பற்றப்பட்டதென்பதே வருந்தத்தக்க வரலாற்று நிகழ்ச்சியாகும்.

### ஆஸ்ட்ரோ கோத்களின் படையெடுப்புகள்

உயிர் பிரிந்து விட்டாலும், பிணத்தைக் கொத்தித்தின்னவரும் கழுகுகளைப் போல், வீழ்ந்துவிட்ட பேரரசைத் தொடர்ந்து தாக்க முயன்றனர் ஆஸ்ட்ரோ கோத்கள் (Ostrogoths) என்ற பார்பேரியன்கள். இவர்கள் 'கிழக்குக் கோத்கள்' என்றும் அழைக்கப்படுகின்றனர்.

ஓடோவாகர் கான்ஸ்டான்டிநோபிளின் ஆட்சிக்குட்பட்ட ஆட்சியாளராக இத்தாலியை ஆண்டு வந்தார், அவருடைய ஆட்சியின் பதின்மூன்றும் ஆண்டு (கி. பி. 489) ஆஸ்ட்ரோ கோத்களின் அரசர் தியோடொரிக் (Theodoric) இத்தாலியின் மீது படையெடுத்தான் ; ஓடோசெரைப் பல இடங்களில் தோற்கடித்து இறுதியில் அவரைக் கொன்று விட்டார். ராவென்னுவைத் (Ravenna) தலைநகராகக் கொண்டு இத்தாலி முழுவதும் தன் ஆட்சியை நிறுவி, கி. பி. 526 வரை அமைதியான ஆட்சியை நடத்தினர். அவருடைய ஆட்சிக் காலத்திலும் இத்தாலி பல துறைகளில் முன்னேற்றம் கண்டது.

### மற்ற காரணங்கள்

உரோமானியப் பேரரசு வீழ்ச்சியடையப் பார்பேரியன்களின் படையெடுப்புகள் மட்டுமே காரணமல்ல. வேறு பல காரணங்களும் உள்ளன. முக்கியமாக **கொம்மோடஸ், காரகல்லா,**

ஹொனேரியஸ், போன்ற பேரரசர்கள் திறமையற்றவர்களாகவும், கொடுங்கோலர்களாகவும் இருந்தார்கள். பேரரசு விரிவடைய விரிவடைய அதன் இராணுவத்தில் பல நாட்டினரும் இனத்தவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். கி. பி. 4, 5ஆம் நூற்றுண்டுகளில் கோத்கள், டியூடன்கள் முதலானேர் உரோமானியப் படைகளில் பெரும் எண்ணிக்கையில் வீரர்களாகச் சேர்ந்திருந்தனர், அவர்கள் உண்மையான பற்றுடன் போரிடவில்லை. இராணுவ பலத்தின் அடிப்படையிலேயே பலர் பேரரசர்களாயினர். இராணுவத்தின் ஒற்றுமை குறைந்த போது பேரரசில் குழப்பங்கள் ஏற்பட்டன. உரோமானியச் சமுதாயத்தில் இருந்த கொடுமையான அடிமைத்தனம் உள்நாட்டுக்கலகங்களை அடிக்கடி ஏற்படுத்தியது. அவற்றுள் குறிப்பாக ஸ்பார்ட்டகசின் தலைமையில் ஏற்பட்ட அடிமைகளின் கலகம் புகழ்வாய்ந்தது. இத்தாலியில் தோன்றி வந்த பல்வேறு விதமான புதிய தத்துவங்கள், குறிப்பாக ஸ்டாயிசம் (Stoicism), பிதகோரியனிஸம் (Pythagoreanism) போன்றவை, மக்களிடத்திலே புதிய எழுச்சிகளை உண்டாக்கின. நீரோ, டிராஜன், ஹட்ரியன், மார்கஸ், டைக்லீஷியன் போன்ற பேரரசர்கள் உரோமானியப் பேரரசின் பல பகுதிகளில் பரவியிருந்த கிறித்தவர்களைக் கொடுமைப்படுத்தினர். பேரரசர் கான்ஸ்டன்டைன் தன் தலைநகரை உரோமிலிருந்து கான்ஸ்டான்டிநோபிளுக்கு மாற்றியது மிகப்பெரிய தவருகும். அதைவிடப் பெரிய தவறு பேரரசர் தியோடோசியஸ் பேரரசை இரண்டாகப் பிரித்துத் தன் இருபுதல்வர்களுக்கிடையே பகிர்ந்து கொடுத்தசாகும். இங்ஙனம் ஏறக்குறைய மூன்று நூற்றுண்டுக்கால உரோமானியப் பேரரசின் வரலாறு அது படிப்படியாக அழிவுற்றதையும், இறுதியாக வீழ்ச்சியடைந்ததையும் விளக்குகின்றது. எனவே தான் சாகா வரம் பெற்ற வரலாற்றுசிரியர் கிப்பன் (Gibbon) ரோமானியப் பேரரசின் வரலாற்றையும் வீழ்ச்சியையும் விளக்கும் தன் புத்தகத்திற்கு 'உரோமானியப் பேரரசின் அழிவும் வீழ்ச்சியும்'[1] என்று பெயர் சூட்டினர்.

## உரோம் உலக நாகரிகத்திற்கு அளித்த கொடை (Legacy of Rome)

உரோமானியப் பேரரசின் அரசியல் வரலாற்றை நாம் படிக்கும் போது போர்களைப் பற்றியும் படையெடுப்புகளைப் பற்றியுமே அறிந்து கொள்கிறோம். உரோமின் கலாச்சார வரலாற்றை நாம் அறிய முயலும் போது அரசியல், சட்டம், இலக்கியம், அறிவியல் மற்றும் பல்வேறு கலைகளின் வளர்ச்சிக்கு உரோம் ஆற்றிய பணி ஈடு இணையற்றதென்பதை நாம் உணருகின்றோம். மூன்று கண்டங்களில் பரவியிருந்த உரோமானியப் பேரரசு இன்று ஆறு கண்டங்

1 "The Decline and Fall of the Roman Empire"—Gibbon.

களில் வாழும் மனித சமுதாயத்திற்கு அரிய அரசியல் கருத்து களையும் நுண்ணிய கலைநுணுக்கங்களையும் கொடையாகக் கொடுத்துள்ளது. அவை பெரும்பாலும் அப் பேரரசுக்கு முன்னர் தழைத்தோங்கியிருந்த கிரீஸ், எகிப்து, கிரீட், சுமேரியா, மெசபடோமியா நாகரிகங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துகளே என்றாலும், அவற்றை உருவாக்கி, முறைப்படுத்தி, மனிதசமுதாயத்தின் வளர்ச்சிக்கு வழங்கிய பெருமை உரோமையையே சாரும்.

**அரசு**

வரலாற்றின் அடிப்படையில் உரோம் குடியரசாகவும் பேரரசாகவும் இருந்தது. அவ்வாறு இருக்கும் போது அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்திராமல் இருக்கும்படி அதன் அரசியல் அமைப்பு வகுக்கப்பட்டிருந்தது. சட்டமியற்றும் துறை, நிருவாகத் துறை, நீதித்துறை ஆகியவை தனித்தனியே பிரிந்திருந்து 'அதிகாரப் பிரிவினை'யில் அரசு செயல்படுவதை முதன் முதலில் எடுத்துக் காட்டி நடைமுறையில் பின்பற்றியது உரோமானியக் குடியரசேயாகும். ஒரு துறையின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்த மற்றொரு துறை ஒரு 'தடை'போல் செயல்பட்டு, இம் மூன்று துறைகளும் அதிகாரச் சம நிலையை ஏற்படுத்தின. இத்தகைய தடைகளும் சம நிலைகளும் வல்லாட்சி ஏற்படுவதைத் தடுத்தன. மேலும், எந்த ஒரு ஆட்சியாளரும் பல ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செய்யும் நிலை ஏற்பட்டால் அத்தகைய ஆட்சி கொடுங்கோலாட்சியாக மாறுமென்பதை உணர்ந்து கான்சல்களின் பதவிக்காலம் ஓர் ஆண்டாகவே நிருணயிக்கப்பட்டது. மேலும் நெருக்கடி நேரங்களில் ஒரு குறிப்பிட்டகாலத்திற்குச் சர்வாதிகாரி நியமிக்கப்பட்டார். இது இந்நாளில் நெருக்கடிக் காலங்களில் அடிப்படை உரிமைகளை நீக்கி ஆட்சியாளர்கள் எல்லா அதிகாரங்களையும் மேற்கொள்வதோடு ஒப்பு நோக்கற்பாலது. உரோமில் 'அதிகாரப் பிரிவினை' முறையும் அரசியல் அமைப்பும் எங்ஙனம் செயல்பட்டதென்பதை பாலிபியஸ் (Polybius), சிசரோ (Cicero) போன்ற எழுத்தாளர்கள் விளக்குகின்றனர்.

உரோமானியக் குடிமக்களுக்குச் சில தகுதிகளின் அடிப்படையில் குடியுரிமை வழங்கப்பட்டது. பேரரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு ஆளுநர்களால் ஆட்சி செய்யப்பட்டது. நகரங்கள் சில வரம்புடைய அதிகாரங்களைப் பெற்றுத் தலசுய ஆட்சி செய்தன.

உரோமில் காணப்பட்ட இத்தகைய ஆட்சித்துறைக் கருத்துகள் அனைத்தும் இன்று பல நாடுகளில் பின்பற்றப்படுகின்றன.

**சட்டம்**

உரோமில் முறைப்படுத்தப்பட்ட சட்டங்கள் உருவாக்கப்படுவதற்கு முன்னர், பல்வேறு இனத்தவரின் பழக்க வழக்கங்களும், அரசு வெளியிட்ட ஆணைகளும், மற்றும் மதகுருமார்களின் ஆலோசனைகள் மட்டுமே நீதி வழங்குவதற்குப் பயன்பட்டன. காலப் போக்கில் 'பன்னிரண்டு சட்டங்கள்' (Twelve Tables) என்ற சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. உரோமானியக் குடியரசில் நிறுவப் பட்ட பள்ளிகளில் சட்டங்களும் மாணவர்களுக்குக் கற்பிக்கப் பட்டன. சட்டங்களை விளக்கிக் கூறவும், வழக்குகளை வாதிடவும் வழக்கறிஞர்கள் உருவாக்கப்பட்டார்கள். பிற்காலத்தில் உரோமானியச் சட்டங்கள் நிறைவு பெறுவதற்கு 'பன்னிரண்டு சட்டங்கள்' வழிகோலின. 'செனெட்' (Senate) சபையும் பல சட்டங்களை இயற்றியது. வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்க நீதிபதிகள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் நடுநிலையிலிருந்து நீதி வழங்கினுர்கள்.

உரோமானியர்களின் 'இயற்கைச் சட்டங்கள்' (Natural Laws) என்பவை பெரும்பாலும் எழுதப்படாதவையாகும். அவை பழக்க வழக்கம், மரபு, ஒழுக்கம் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக மகன் தந்தைக்குக் கட்டுப் பட்டிருத்தல், கணவன் மனைவி ஒருவருக்கொருவர் உண்மையான வர்களாக இருத்தல் போன்றவையாகும். இவை தவிர அரசால் இயற்றப்பட்ட பொதுச் சட்டங்கள் (Civil Laws) பல இருந்தன. அவை உரோமானியக் குடிமக்களின் சொத்துரிமைகள், மற்றும் பொதுவிதிகளைப் பற்றியவையாகும். நீதி மன்றங்களில் இன்று போல் அன்றும் வாதி (Plaintiff,) பிரதிவாதிகளின் (Defendant) வழக்கறிஞர்கள் இருந்தார்கள்.

ரோமானியப் பேரரசு பரப்பினுல் விரிவடைந்து, பல நிலப் பகுதிகளும், பல நாட்டவரும் இனத்தவரும் பேரரசின் ஆட்சிக்குட் பட்ட போது, எல்லாக் குடிமக்களுக்கும் பொருந்துகின்ற வகையில் பல சட்டங்களும் இயற்றப்பட்டன. இன்று உலக நாடுகள் பின் பற்றுகின்ற 'பன்னுட்டுச் சட்டங்கள்' (International Laws) உரோமானியச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டவையே என்ற கருத்தை ஹாலந்து நாட்டைச் சேர்ந்த யுகோ குரோஷயஸ் (Hugo Grotius) என்ற அறிஞர் தெரிவிக்கின்ருர். பேரரசின் பல பகுதி களுக்குப் பொருந்துகின்ற சட்டங்களை நிருவகித்து நீதி வழங்கப் பிரீடர்கள் (Praetors) என்று சொல்லப்பட்ட நீதிபதிகள் நியமிக்கப் பட்டனர். உரோமானியச் சட்டங்கள் அனைத்தும் பின்னர் பேரரசர் ஜஸ்டினியனினுல் ஒழுங்குபடுத்தப்பட்டு வெளியிடப்பட்டன.

சட்டத்துறையில் பல புதிய கருத்துகளை இன்றுள்ள மனித சமுதாயத்திற்கு உரோம் கொடுத்திருக்கின்றது.

**உரோமின் அமைதியும் ஒருமைப்பாடும்**

உரோம் குடியரசாகவும், பேரரசாகவும் இருந்த காலத்தில் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய மூன்று கண்டங்களைக் கொண்ட மிகப் பெரிய நிலப்பரப்பைப் பெற்றிருந்தது. அதில் உரோமானியர்கள், இத்தாலியர்கள், கிரேக்கர்கள், எகிப்தியர்கள், டுனிசியர்கள், ஸ்பானியர்கள், சிரியாவைச் சேர்ந்தவர்கள் மற்றும் வேறு பல நாட்டவரும், இனத்தவரும் வாழ்ந்துவந்தனர். அவர் களுள் பலர் இலக்கிய மேதைகளாகவும், தத்துவ ஞானிகளாகவும், அறிவியல் அறிஞர்களாகவும், கலைஞர்களாகவும் இருந்தனர். அவர்கள் இனவெறி, மொழிவெறியற்றவர்கள்; பரந்த மனப்பான்மை யுடன் உரோமானியக் குடிமக்களாக வாழ்ந்தனர். உணவு விடுதி களிலும், விளையாட்டரங்கங்களிலும், தொழுகையிடங்களிலும் அனைவரும் எந்தவித வேறுபாடுமின்றித் தங்கள் கடமையைச் செய் தனர்; ஒருவரோடு ஒருவர் பழகினர். எவர் எங்கு வாழ்ந்தாலும் உரோம் நகரத்தையே தங்கள் தலையாய நகரமாகக் கருதினர். உரோமானியக் குடிமக்களின் அமைதியான ஒருங்கிணைந்த இந்த வாழ்க்கைக்கே **'உரோமின் அமைதியும் ஒருமைப்பாடும்'** (Roman Peace and Unity) என்று பெயர். மூன்று கண்டங்களில் பரவி யிருந்த பேரரசில் உரோம் நிலைநாட்டிய அமைதி **'உரோமானிய அமைதி'** (Pax Romana) என வழங்கப்படுகிறது. இன்றைய உலகில் போர்களைத் தடுத்து அமைதியை நிலைநாட்ட முற்படும் நமக்கெல்லாம் உரோமானிய அமைதி வழிகாட்டியாக விளங்கு கிறது.

**இலக்கியம்**

இலக்கியத்திற்கு உரோமானியர்கள் சிறப்பிடம் தந்தனர். கிரேக்க மொழி பேரரசில் செல்வாக்குப் பெற்றிருந்தாலும் இலத்தீன் மொழியே பேரரசு முழுவதும் மக்களால் பயிலும் மொழியாக மாறியது. பெரிய நகரங்களில் பள்ளிகள் திறக்கப்பட்டன. உரோமானியக்குடிமக்கள் கல்விகற்கும் வாய்ப்பினைப்பெற்றனர். உரோமானியப் பேரரசில் அலெக்சாண்டிரியா, ஆதென்ஸ், கார்த் தேஜ், லியோன்ஸ் போன்ற கல்வி நிறுவனங்கள் செயற்பட்டன. மொழி, இலக்கணம், கணக்கு, வரலாறு, தருக்கவியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. பேரரசில் இருந்த பல்வேறு பிராந் திய மொழிகளும் வளர்ச்சியுற்றனவென்றாலும், கவிஞர்களும், நாடகஆசியர்களும், அரசியல் மேதைகளும் இலத்தீன்மொழியி லேயே எழுதி இலக்கியத்தொண்டு செய்தனர்.

கி.மு. 272ஆம் ஆண்டுவாக்கில் லிவினஸ் அண்ட்ரோகனிஸ் (Livinus Andronicus) என்பவர் கிரேக்கப்பெருங்கவிஞர் ஹோமர் எழுதிய 'ஒடிசி' (Odyssey) என்ற இதிகாசத்தை இலத்தீனில் மொழிபெயர்த்துக் கிரேக்கர்களின் பெருமையை உரோமானியர்கள் அறிந்துகொள்ள அரும்பணி செய்தார். பின்னர் அவர் இன்பியல் துன்பியல் நாடகங்களை எழுதி வெளியிட்டார். இவரை அடுத்து நேயஸ் நேவியல் (Cnaeus Naevius) என்பவர் பல இன்பியல் நாடகங்களை எழுதினார். கி.மு. 2ஆம் நூற்றாண்டில் கியூண்டியஸ் என்னியஸ் (Qunitius Enneius), மேக்கியஸ் பிளாடஸ் (Maccius Plautus) போன்றவர்கள் பல நாடகங்களை இலத்தீன் மொழியில் எழுதினர். கி.மு. முதல் நூற்றாண்டில் லுக்ரெடியஸ் (Lucretius) என்ற கவிஞர் இயற்கைக்காட்சிகளை வருணனை செய்வதிலும், அரிய தத்துவங்களை விளக்குவதிலும் வல்லவராக விளங்கினார். இவர் காலத்திலேயே வாழ்ந்த கியுண்டஸ் வலெரியஸ் கேடுல்லஸ் (Quintus Valerius Catullus) என்ற கவிஞர் காதல் கவிதைகள் எழுதுவதில் புகழ் பெற்றவராவார். இவர்கள் அனைவரும் பிற்காலத்தில் பலமொழிகளைச் சார்ந்த கவிஞர்களுக்கு—குறிப்பாக ஆங்கிலக் கவிஞர்களுக்கு, வழிகாட்டிகளாக அமைந்தனர். இவர்களைப்போலவே மார்க்கஸ் டெரிண்டியஸ் வேர்ரோ (Macus Terentius Varro) என்ற கவிஞரும், கேயஸ் சாலுஸ்டஸ் கிரிஸ்பஸ் (Caius Salustus Crispus) என்ற வரலாற்று ஆசிரியரும் குறிப்பிடத்தகுந்தவர்களாவர்.

வெர்ஜில் (Virgil)

மேலே குறிப்பிட்ட இலத்தீன் இலக்கிய மேதைகளை விட வெர்ஜில் மிகவும் புகழ் வாய்ந்தவராவார். கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் இலத்தீன் இலக்கியத்தின் முடிசூடா மன்னராக விளங்குகிறார். காதல்கவிதைகள் எழுதுவதிலும் வீரச் செயல்கள் நிறைந்த இதிகாசம் எழுதுவதிலும் திறமை மிகுந்தவர். இவர் எழுதிய ஈனியட் (Aeneid) என்ற இதிகாசம் அதன் காவியத் தலைவன் ஈனியஸின் (Aneus) வீரச்செயல்கள் பற்றியும் அதற்கிடையில் அவன் நடத்தும் காதல் வாழ்க்கையைப் பற்றியும் விளக்குகின்றது. இது பிற்காலத்தில் பல இதிகாசங்கள் எழுதுவதற்கு இலக்கணமாக அமைந்தது. இவ்விதிகாசத்தில் மனித வாழ்க்கையில் கடவுளர்கள் ஆற்றும் தெய்விகப்பணி எவ்வளவு முக்கியமானதென்பதையும் விளக்குகின்றார். ஆங்கிலக்கவிஞர் மில்டன் (Milton) 'இழந்த சொர்க்கம்' (Paradaise Lost) என்ற நூலை எழுதும்போது ஈனியட்டில் உள்ள பல கருத்துகளை அதில் இணைத்துள்ளார். வெர்ஜில் எழுதிய 'ஜோர்ஜிக்ஸ்' (Georgics) என்ற மற்றொரு இலக்கியத்தில் வேளாண்மையின் உயர்வைப்

பற்றியும், நாட்டுப்புற வாழ்க்கையின் இனிய சூழ்நிலையைப்பற்றியும் விவரிக்கின்றார்.

## ஹொரேஸ் (Horace)

இவரும் நாட்டுப்புற வாழ்க்கையின் மேன்மையைப்பற்றியும் அங்கு வாழும் எளிய மக்களின் இனிய வாழ்க்கையைப்பற்றியும் தன்னுடைய கவிதைகளில் விளக்குகின்றார். ஐம்புலன்களால் பெறக்கூடிய இன்பங்களைப்பெற்று, இவ்வுலக வாழ்க்கையை அனுபவிப்பதே மனித வாழ்க்கையின் நோக்கம் என்கிற எபிகியுரியன் தத்துவத்தைத் (Epicureian Philosophy) தன் கவிதைகளில் சுவையாகத் தருகின்றார். அத்துடன் நகரத்தில் வாழும் மக்களிடமுள்ள கொடிய பழக்கவழக்கங்களையும் குறைபாடுகளையும் எள்ளி நகையாடுகின்றார். இவருடைய கவிதைகள் பிற்கால ஆங்கிலக் கவிஞர்கள் ஷெல்லி, கீட்ஸ் (Shelley and Keats) போன்றவர்களுக்கு அடிப்படைகளாக அமைந்தன. இவருடைய இலக்கியப்பணியைப் பாராட்டிப் பேரரசர் அகஸ்டஸ் ஒரு பெரும் பண்ணையை அவருக்கு அன்பளிப்பாக அளித்தார்.

## லிவி (Livy)

உரை நடை எழுத்தாளர்களுள் லிவி தலை சிறந்தவராக விளங்குகின்றார். சிறந்த வரலாற்று ஆசிரியரான இவர் உரோமின் வரலாற்றைத் தெளிவாக விவரிக்கின்றார். குறிப்பாக, இரண்டாவது பியுனிக் போரைப்பற்றி விவரிக்கும் போது இவருடைய இலத்தீன் உரைநடைப் பாணி படிப்போர் உள்ளத்தைக் கவருகின்றது. மற்ற வரலாற்று எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாக லிவி விளங்கினார் எனக்கூறின் மிகையாகாது. மேலே குறிப்பிடப்பட்ட வெர்ஜில், ஹொரேஸ், லிவி ஆகிய மூன்று தலைசிறந்த இலக்கிய மேதைகள் உரோமானியப் பேரரசர் அகஸ்டசின் காலத்தில் வாழ்ந்தவர்களாவர்.

இவர்களைத்தவிர டிபுலஸ், (Tibuls) புரோபெர்டியஸ், (Propertius) ஓவிட் (Ovid) முதலான கவிஞர்களும் அகஸ்டசின் காலத்திலேயே வாழ்ந்தவர்களாவர். இவர்களுள் ஓவிட் எழுதிய நூல்கள் இளைஞர்களையும் இளம் மங்கையரையும் பெரிதும் ஈர்த்தன.

இலத்தீன் இலக்கியத்திற்கு முழுநேர இலக்கிய அறிஞர்களைத் தவிர உரோமின் ஆட்சியாளர்கள் சிசரோவும் (Cicero) ஜூலியஸ் சீசரும் (Juluias Caesar) கூட தங்கள் பங்கினைச் செய்திருக்கின்றார்கள். கி. மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த 'சிசரோவின் எழுத்துப்பணியினால் இலத்தீன், பேசும் மொழியாகவும், எழுதும்

மொழியாகவும் முழு முதிர்ச்சியைப்பெற்றது.[1] ***சீசர்***, **'கம்மெண் டரீஸ்'** (Commentaries) என்ற நூலில் தன் அரசியல் அனுபவங் களை விளக்குகின்றார்.

கி.பி. முதல் நூற்றுண்டில் வாழ்ந்த **செனிகா** (Seneca) என்ற நாடக ஆசிரியர் ஒன்பது துன்பியல் நாடகங்களை எழுதினர். அவை பேரரசர் நீரோவையும் (Nero) மற்றும் பொது மக்களை யும் பெரிதும் கவர்ந்தன. இவை கி.பி. 16ஆம் நூற்றுண்டில் மார்லோ மற்றும் **ஷேக்ஸ்பியர்** போன்ற நாடகாசிரியர்களுக்குப் பெரிதும் பயன்பட்டன.

### அறிவியல் (Science)

அறிவியல் துறையில் உரோமானியர்கள் கிரேக்கர்களைப் போலப் பல உண்மைகளை அறிந்திருக்கவில்லை. எனினும் விண் மீன்களைப் பற்றியும் பல கோள்களைப் பற்றியும் உரோமனியர்கள் அறிந்திருந்தனர். நிலவியல் (Geography) எல்லாரும் விரும்பிப் படிக்கும் பாடமாக இருந்தது. **பிளினி** (Plini) என்ற அறிவியல் அறிஞர் **'இயற்கை வரலாறு'** (Natural History) என்ற நூலில் பல அரிய அறிவியல் கருத்துகளைக் கூறுகின்றார். செவ்வாய், குரு, சனி (Mars, Jupiter, Saturn) போன்ற கோள்களின் இயக்கங்களைப் பற்றி விளக்கியிருக்கின்றார். பூமி உருண்டை வடிவமுடைய தென்ற கருத்தை அன்றே அவர் தெரிவித்திருந்தார். மக்களுக்கு வரும் பலவிதமான நோய்களைத் தீர்க்கும் மூலிகைகளையும் செடி வகைகளையும் பிளினி குறிப்பிட்டிருக்கின்றார். இக் கருத்துகளும் உண்மைகளும் பிற்கால அறிவியல் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரி தும் பயன்பட்டன. **ஏஸ்கிளிபேடிஸ்** (Asclepiades) என்ற மருத்துவ நிபுணர் மனிதனின் இதயம் இரத்தத்தை உடல் முழுவதும் பரவச்செய்து, காற்றையும் உறிஞ்சுகிறது என்ற கருத்தை வெளி யிட்டார். கி.பி. முதல் நூற்றுண்டில் பல மருத்துவப் பள்ளிகள் நிறுவப்பட்டன. மருத்துவத் துறையின் ஒவ்வொரு பிரிவிலும், இன்றிருப்பதைப் போலவே, நிபுணர்கள் இருந்தனர். நோயாளிக்கு மயக்க மருந்து கொடுத்து அறுவைச் சிகிச்சை செய்யும்முறையை அவர்கள் அறிந்திருந்தனர். கந்தகம் (Sulphur) பல தோல் சம்மந்தப்பட்ட நோய்களை குணப்படுத்தப் பயன்படுத் தப்பட்டது. மருந்துகள் செய்வதற்கென்று பல மருந்தகங்கள் இருந்தன. மருத்துவத் துறையில் வேறு பல நுணுக்கங்களையும் உரோமானியர்கள் அறிந்திருந்தனர்.

1 'In the writings of Cicero Latin reached its highest perfection both as a written and as a spoken language.'

—H, A, Davies

பொறியியல் துறையிலும் உரோமானியர்கள் ஈடு இணையற்ற வர்களாக விளங்கினர். நெம்புகோல் தத்துவத்தை அவர்கள் அறிந்திருந்தனர். கப்பல்கள் கட்டுதல், துறைமுகங்களைக் கட்டு தல், ஆறுகளின் குறுக்கே பாலங்களைக் கட்டுதல், நகரங்களில் நிலத்தினடியில் தண்ணீர்க் குழாய்களை எடுத்துச் சென்று மக்க ளுக்கு விநியோகித்தல் போன்ற பல பொறியியல் நுணுக்கங்களை அவர்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தினர்.

போக்குவரத்துக்காகப் பல அகன்ற நீண்ட சாலைகளை உரோமானியப் பொறியியல் அறிஞர்கள் அமைத்தனர். உரோமா னியர்கள் அமைத்த சாலைகள் இன்றும் இங்கிலாந்தில் உள்ளன. பேரரசின் பல பகுதிகள் உரோமுடன் சாலைகளால் இணைக்கப் பட்டன. எனவேதான் 'எல்லாச் சாலைகளும் உரோமுக்குச் செல் கின்றன'[1] என்ற பழமொழியும் தோன்றியது.

**கலைகள்**

உரோமானியர்கள் கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, மற்றும் இசை, நாடகம் போன்ற அருங்கலைகளில் வல்லவர்களாக விளங்கினர்கள். உரோமானியக் கலைகள் கிரேக்கக் கலைகளின் சாயலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டு விரிவுபடுத் தப்பட்டவையாயினும் அவை சாகா வரம்பெற்று இன்றளவும் உலகக் கலைஞர்களுக்கு இலக்கணமாக அமைந்துள்ளன.

உரோமின் அமைப்பே கம்பீரமானது. ஏழு குன்றுகளின் தலைமை இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் உரோம் எழில் மிகுந்த தோற்றத்தைத் தருகின்றது. இந் நகரில் விண்ணை முட்டும் கட்ட டங்களும், கண்ணைக் கவரும் அரண்மனைகளும் அமைக்கப்பட் டுள்ளன. பேரரசர் நீரோ வாழ்ந்த 'தங்க வீடு' (Golden House) உரோமின் கட்டடக் கலை ஆற்றலையும், செல்வ வளத்தையும் பறை சாற்றுகின்றது. உரோமானியக் கோயில்கள் பேரரசின் பல இடங் களில் கட்டப்பட்டன. ஜீனோ, சாடர்ன், அப்பல்லோ (Juno, Saturn, Appollo) போன்ற கடவுளர்களுக்குக் கட்டப்பட்ட கோயில்கள் சலவைக்கற்களால் கட்டப்பட்டுள்ளன. உரோமானியர்கள் நீச்சல் குளங்களையும், விளையாட்டரங்கங்களையும், வளைவான அரங்குகளையும் (Baths, Stadia, Amphitheatres) கட்டுவதிலும் வல்லவர்கள். இருபதாயிரம் மக்களைக் கொள்ளக்கூடிய அரங்குகள் பல கட்டப் பட்டன. 1760 அடி நீளமும், 157 அடி உயரமும் உடைய கலோ சியம் (Colosseum) என்ற பிரம்மாண்டமான கட்டடம் உரோமானி யர்களின் கட்டடக் கலையின் மேன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

1 "All roads lead to Rome."

கட்டடக் கலை மட்டுமன்றிச் சிற்பக் கலையிலும் அவர்கள் வல்லுநர்களாக விளங்கினார்கள். உரோம் நகரத்தில் உள்ள கட்டடங்களிலும், கோயில்களிலும் சலவைக் கற்களாலான சிற்பங்கள் காணப்படுகின்றன. அதேபோல சாகா வரம் பெற்ற சுவரோவியங்கள் இன்றும் பல கட்டடங்களில் காணப்படுகின்றன. இசைக் கலையை உரோமானிய ஆட்சியாளர்கள் ஆதரித்தார்கள். இன்று உலக நாடுகளில் உருவாக்கப்படுகின்ற கட்டடங்களிலும், சிற்பங்களிலும் மற்ற கலைத் துறைகளிலும் உரோமானிய நுணுக்கங்களையும், சாயலையும் காண்கின்றோம்.

## மற்ற துறைகள்

மேலே குறிப்பிடப்பட்ட துறைகளில் மட்டுமன்றி வேறு பல துறைகளுக்கும் உரோம் கொடுத்திருப்பது கணக்கிலடங்காதவையாகும். குறிப்பாக விளையாட்டுத் துறையில் பலவற்றை நாம் இன்றும் பின்பற்றுகிறோம். உரோமானிய ஆட்சியாளர்களுக்கும், மக்களுக்கும் மிகச்சிறந்த பொழுதுபோக்குகளாக இருந்தவை விளையாட்டரங்கங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளேயாகும். தத்துவத் துறையிலும், எபிகியூரியன் மற்றும் ஸ்டாயிக் (Epicurean and Stoic) தத்துவங்களை உலகுக்கு அளித்தது உரோமே ஆகும்.[1] இன்று மனித சமுதாயம் வாழும் இடமெல்லாம் பின்பற்றப்படும் கிறித்தவ மதம் உரோமானியப் பேரரசில்தான் தோன்றியதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இங்ஙனம் எல்லாத் துறைகளிலும் ஈடு இணையற்ற முன்னேற்றம் பெற்றிருந்த உரோமானியர்கள் மனித சமுதாயத்திற்கு விட்டுச் சென்றுள்ள கலைக் கருவூலங்கள் விலைமதிக்க முடியாதனவாகும்.

1. ஸ்டாயிசிச தத்துவத்தைப் பற்றி முன்னரே விளக்கியுள்ளோம். இன்பத்தை நாடுவதே வாழ்க்கையின் இலட்சியமென கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதென்சு நகரத்துத் தத்துவ மேதை எபிகியூரஸ் (Epicurus) பறைசாற்றினார்.

# 2. வெனிஸ் நிருவப்படுதல்

ஏட்ரியாடிக் கடலின்(Adriatic Sea) வடமேற்கே அதன் கடற் கழியில் அமைந்திருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மணற்பாங்கான தீவுக் கூட்டங்களின் மேலே நிறுவப்பட்டிருக்கும் வெனிஸ் நகரம் ஏரிட்யாடிக்கின் எழில்மிகு அரசியாக (Queen of the Adriatic) விளங்கு கின்றது. இத்தாலியத் தீபகற்பத்தின் வடகிழக்கேயுள்ள விண்ணை முட்டும் ஆல்ப்ஸ் பனி மலைகளுக்கும் கண்ணைக் கவரும் ஏட்ரி யாடிக் கடல்பரப்புக்கும் இடையே பரந்து விரிந்திருக்கும் இந் நகரத்தின் அமைப்பைப் போன்று உலகத்தின் வேறு எந்த நகர மும் பெறவில்லை. கி.பி. 452ஆம் ஆண்டில் ஹூணர்களின் கொடுந்தலைவன் அட்டிலா இத்தாலியின் மீது படையெடுப்பதற்கு முன்னர், சாதாரண எளிய மீனவர்களே இத் தீவுக் கூட்டங்களில் வாழ்ந்துவந்தனர். மற்றும் வேறு பல நேரங்களில் இத்தாலியின் மீது பார்பேரியன்கள் படையெடுத்தபோதெல்லாம் இத்தாலியர் களும் லம்பார்டியர்களும் தங்கள் பாதுகாப்பிற்காக இத் தீவுகளில் சென்று குடியேறினர். அவர்களுள் பலர் ஆபத்து நீங்கியவுடன் தங்கள் பழைய இடங்களுக்கே திரும்பிவிட்டனர். எனினும் லம் பார்டியர்களுள் பெரும்பாலார் இத் தீவுகளிலேயே தங்கிவிட் டனர். இவர்கள் இங்கே நிலையாகத் தங்கி மரத்தாலான அழகிய மிதக்கும் வீடுகளை அமைத்துக்கொண்டார்கள். அவர்கள் மீன் பிடித்தல், உப்பு தயாரித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு அமைதியான வாழ்க்கை நடத்தினர்.

காலப்போக்கில் இத்தாலியத் தீபகற்பத்திலிருந்து மக்கள் இங்கு குடியேற ஆரம்பித்தார்கள். குறிப்பாக கி.பி 568ஆம் ஆண்டில் லம்பார்டியர்கள் இத்தாலியின் முக்கிய நகரங்கள் மீது படை யெடுத்தபோது இன்னும் அதிகமான மக்கள் இத் தீவுகளில் வந்து குடியேறினர். அவர்கள் ஒவ்வொரு தீவிலும் அழகிய சிறிய நகரங் களை அமைத்துக்கொண்டனர். இத் தீவுகளில் ரியால்டோ (Rialto) என்பதே மிக முக்கியமான தீவாகும். இங்கும் மற்ற தீவுகளிலும் வாழ்ந்த மக்கள் உரோமானியப் பேரரசின் அமைப்பை ஓரளவு

அறிந்தவர்களாவர். அரசியல் அமைப்புகளும், கருத்துகளும் அவர்களுக்குப் புதியவை அல்ல. எனவே கி.பி. 697ஆம் ஆண்டு தங்களை ஆட்சி செய்வதற்காக ஒரு தலைவரைத் தேர்ந் தெடுத்தனர். அவர் 'டோஜ்' (Doge) என்றழைக்கப்பட்டார். ஆட்சித் துறை, மதம் மற்றும் இராணுவம் முதலியவற்றைப் பற்றிய எல்லா அதிகாரங்களும் அவருக்குத் தரப்பட்டன. அங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் பேலே லுகா அனஃபெஸ்டா (Poalo Luca Anafesto) என்பவரே முதல் 'டோஜ்' ஆவார். அவருடைய பதவி ஏற்பு விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. தங்கத் தாலான கிரீடத்தை அவர் அணிந்துகொண்டு, தந்தத்தினலான செங்கோலைக் கையிலேந்தி ஆட்சி செய்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில் வெனிஸ் ஒரு குடியரசாக மாறிக்கொண்டு வந்தது. வெனிசின் கட்டடம் மற்றும் பல்வேறு விதமான அமைப்புகள் வளர்ச்சியுற்றன. இவர் வடமேற்கேயுள்ள லம்பார் டிய அரசனின் ஆட்சிக்குட்பட்டிருந்த தீபகற்பத்தின் ஒரு பகு தியை வெனிசோடு இணைத்துக்கொண்டார்.

இவரை அடுத்து வெனிசை ஆட்சி செய்தவர்கள் மூன்ருவது 'டோஜ்' ஆர்சோ (Orso) என்பவர் குறிப்பிடத்தகுந்தவர். இவர் கி.பி. 720ஆம் ஆண்டு முதல் 737 ஆம் ஆண்டு வரை நல்லாட்சி நடத்தினர். கி.பி. 735ஆம் ஆண்டில் கிழக்கு உரோமானியப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த ராவென்ன (Ravenna) நகரத்தை லம்பார்டிய மன்னர் தாக்கினர். அப்பொழுது ராவென்னவின் ஆளுநருக்கு (Exarch), ஆர்சோ, படை மற்றும் பொருளுதவியைக் கொடுத்தார். இவ்வுதவியைப் பெரிதாகக் கருதிய கிழக்கு உரோமானியப் பேரரசர் மூன்றும் லியோ Leo III: 717-741) ஆர்சோவுக்கு 'ஏகாதிபத்தியக் கான்சல்' (Imperial Consul) என்ற பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்தார்.

வெனிஸ் குடியரசாக மாறியது. 'டோஜ்' மக்களின் காப்பாள ராகவே ஆட்சி செய்தார். அவர் கொடுங்கோலனுக மாறினதால், உடனே அவர் ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டு, வேருெரு 'டோஜ்' தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்ஙனம் கொடுங்கோலர்களாக இருந்த சிலர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுக் குருடர்களாக ஆக்கப்பட் டார்கள்.

வெனிஸ் கி.பி. 9ஆம் நூற்றுண்டில் ஃபிராங்குப் பேரரசுட னும், கிழக்கு உரோமானியப் பேரரசுடனும் பல போர்களில் ஈடு பட வேண்டியிருந்தது. அப் போர்களிலே வெற்றி பெற்று வெனிஸ் சுதந்தரக் குடியரசாகவே இயங்கி வந்தது. எந்தக் காலத்திலும்

எந்த அயலவரின் ஆட்சிக்கும் வெனிஸ் உட்பட்டதில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இடைக் காலத்தின் இறுதிக்குள் வெனிஸ் அரசியல் துறையில் மட்டுமன்றி சமூக, பொருளாதாரத் துறையில், குறிப்பாக வணிகத் துறையிலும், கலைத் துறைகளிலும் வியத்தகு முன்னேற்றத்தைப் பெற்றிருந்தது. [1] மற்ற நகர அரசுகளுக்கே அமைதியான வழி காட்டியாக வெனிஸ் அமைந்தது.

1. மற்ற விவரங்களுக்கு 'நகரங்களின் வளர்ச்சி', மற்றும் "கி.பி, 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் ஜெர்மனியும், இத்தாலியும்" என்ற அத்தியாயங்களைப் பார்க்கவும்.

# 3. ஐரோப்பாவில் கிறித்தவ மதம் பரவுதல்

### இயேசு கிறித்து

இயேசு கிறித்துவின் வாழ்க்கை வரலாறும், போதனைகளும் படிக்கப் படிக்கத் தெவிட்டாதவை. அவர் பிறந்த இடம், ஆண்டு, போன்றவை உறுதியாகத் தெரியாவிட்டாலும், அவர், பெத்லஹேம் (Bethlehem) என்ற இடத்தில் கன்னி மேரியின் மகனாக அவதரித்தாரென்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டது. இயேசு என்ற சொல்லுக்கு (மக்களைப் பாவங்களிலிருந்து) 'மீட்பவர்' என்று பொருள். இயேசுவின் வரலாற்றை விவிலிய நூலின் சுவிசேடங்கள் (Gospels) விளக்குகின்றன.

கி. பி. 28ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு நாள் பாலஸ்தீனத்தில் ஜான் (John the Baptist) என்ற தூய்மையாளர் யூதர்களிடையே 'கடவுளுடைய அரசு' அவர்களை நோக்கி மிக விரைவாக வந்துகொண்டிருக்கிறதெனப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்தார். அவர் மக்கள் அறிவு ஒளி பெறவேண்டுமென போதனை செய்தார். அவருடைய சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுள் இயேசுவும் ஒருவராவார். இயேசு கி.பி. 30ஆம் ஆண்டு வாக்கில் தமது கலிலேயா மாகாணத்தின் மக்களிடையே அறிவு ஒளியைப் பரப்பத் தொடங்கினார்.

ஆண்டவனின் அரசு இவ்வுலகத்தில் தோன்ற அனைவரையும் அவர் கடவுளை வழிபடுமாறு கூறினார். தவறு செய்பவர்களை மன்னிக்கச் சொன்னார்; எதிரிகளை நேசிக்கச் சொன்னார்; உண்மையையே பேசி ஒழுக்க வாழ்வை வாழச் சொன்னார். இயேசு ஏழை எளியவர்களுக்கு உதவியும், நோயுள்ளவர்களுக்கு நோய்களைக் குணப்படுத்தியும் பல 'அற்புதச் செயல்களை' நிகழ்த்தினார்.

இயேசுவின் அருள் மொழிகளும், அற்புதச் செயல்களும் மக்களிடேயே பெருங் கிளர்ச்சியை உண்டாக்கின. இவர் தன்னுடைய பன்னிரண்டு சீடர்களை அனுப்பி உலகெங்கும் 'ஆண்டவனின் அரசு' (Kingdom of God) பற்றிப் பிரச்சாரம் செய்யச் சொன்னார். இவற்றைக் கேட்ட மக்கள் இயேசுவையே அரசராக்க முயன்றனர். இதை அறிந்த அரசாங்க அதிகாரிகளும், மதத் தலைவர்களும் கலக்கமடைந்தனர். நாட்டில் கலகங்கள் ஏற்படும் என்ற நிலை ஏற்பட்டது. அப்பொழுது இயேசு யூத நாட்டை விட்டுச் செசரியா நாட்டுக்குச் சென்றார். அங்கே இவருடைய சீடர்கள் இவரைத் தேவ தூதுவனாக ஏற்றுக் கொண்டனர்.

இயேசு கி.பி. 32ஆம் ஆண்டில் ஜெருசலத்திற்குச் சென்றார். அங்கு தேவாலயத்தில் மக்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். சமயத்தலைவர்கள் இயேசுவை வஞ்சகமாகச் சிறை செய்து யூதர் நீதி மன்றத்தில் நிறுத்தித் தெய்வ நிந்தனை செய்ததாகவும், தேவ தூதன் என்று தம்மைச் சொல்லிக் கொண்டதற்காகவும் குற்றஞ் சாட்டினர். பின்னர் அரசு நீதிமன்றமும் அவரைத் தேசத்துரோகி எனக் குற்றம் சாட்டியது. இறுதியாக அவர் மரண தண்டனை விதிக்கப்பட்டுச் சிலுவையில் அறையப்பட்டார். அவர் சிலுவையில் இறந்த, மூன்றாம் நாள் மீண்டும் தோன்றிய பின்னரே, அவருடைய தெய்விகத் தன்மையை உணர்ந்து அவர் பிரச்சாரம் செய்த கருத்துகளைப் பின்பற்றி, ஐரோப்பாவில் பெரும்பாலான மக்கள் கிறித்தவ மதத்தைத் தழுவினார்கள்.

**உரோமானியப் பேரரசில் கிறித்தவமதம் பரவுதல்**

கி.பி. முதல் நூற்றாண்டிலேயே உரோமானியப் பேரரசின் பல பகுதிகளுக்குச் சென்று பால் முனிவரும் பீடர் முனிவரும் (St. Paul and St. Peter) கிறித்தவமதத்தை மக்களிடையே பரப்பினார்கள். அவர்கள் பல ஆபத்துக்களுக்கிடையேதான் இப் பணியை மேற்கொள்ள வேண்டியதாயிருந்தது. ஏனெனில் அப்பொழுது பேரரசரே கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்பட்டார். அவரையே மக்கள் வணங்க வேண்டியிருந்தது. ஆனால் கிறித்தவர்கள் அங்ஙனம் செய்யாமல் கிறித்துவையே வணங்கினர். இது சட்ட விரோதச் செயலாகக் கருதப்பட்டது. உரோமானியப் பேரரசர்கள் கிறித்தவர்களின் இப் போக்கைப் பொறுத்துக் கொள்ளவில்லை. எனவே கிறித்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். தைரியமாக கிறித்தவர்கள் பொதுவிடங்களில் தங்கள் கடவுளை வணங்கமுடியவில்லை. இரகசியமான இடங்களிலும், மறைவான இடங்களிலுமே அவர்கள் வழிபாடு செய்தனர். உரோமானிய அரசர்கள், கிறித்தவர்கள் இங்ஙனம் இரகசியமான இடங்களில் கூடிப் பேரர

சருக்கு எதிராகச் சூழ்ச்சிகள் செய்கின்றனர் எனக் குற்றம் சாட்டி இன்னும் அதிகமாகக் கொடுமைப் படுத்தினர். எனினும் பேரரசின் பல இடங்களில் கிறித்தவமதம் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது.

பால் முனிவர் சிரியா, ஆசியா மைனர், சைப்ரஸ்தீவு, ரோட்ஸ் தீவு, கிரீட்தீவு, மாசிடோனியா, கிரீஸ், சிசிலித்தீவு மற்றும் இத்தாலி போன்ற பகுதிகளுக்குச் சென்று கிறித்தவமதக் கருத்து களைப் பரப்பினர். அப் பகுதிகளில் கிறித்தவமத நிறுவனங்களையும் அமைத்தார். இறுதியில் இவர் பேரரசுக்கு எதிராக மதப்பிரச்சாரம் செய்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சாகடிக்கப்பட்டார்.

இவரைப் போலவே பீடர் முனிவரும் பல இடங்களில் மதப் பிரச்சாரம் செய்தார். இவர் பேரரசின் தலைநகரமாகிய உரோமி லேயே கிறித்தவத் திருச்சபையை நிறுவி அதற்குத்தானே தலைமை மதகுருவாக இருந்து பணிபுரிந்தார். அவரும் நீரோவினால் கொலை செய்யப்பட்டார்.

முதல் நூற்றாண்டின் இறுதியில் உரோமில் பீடர் நிறுவிய திருச் சபையின் தலைவராயிருந்து கிளிமென்ட் முனிவர் மதத்தொண்டு செய்தார். உரோமானியப் பேரரசர்களின் எதிர்ப்புகளிலிருந்தும் துன் புறுத்தல்களிலிருந்தும், அப்பேரரசின் பல பகுதிகளில் கிறித்தவர் களின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே வந்தது. கிறித்தவர் களைத் துன்புறுத்திய பேரரசர்களுள் நீரோ, டிராஜன், ஹாட்ரியன், மார்க்ஸ், பையக்லீஷியன் போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவ ராவர். இத்தகைய துன்புறுத்தல்களுக்கிடையேயும் பாகனிஸம் (Paganism) என்று சொல்லப்பட்ட பேரரசர் வழிபாட்டுத் தத்துவத் துக்கும், 'மித்ரெய்ஸம்' (Mithraism) என்ற சொல்லப்பட்ட சூரியக் கடவுள் வழிபாட்டுத் தத்துவத்துக்கும், ஸ்டாயிசம் (Stoicism) என்றழைக்கப்பட்ட பொதுவாக நல்லொழுக்கத்தின் அடிப்படை யிலேயே மனித இயக்கம் நடைபெறுகிறது என்ற தத்துவத்துக்கும், மற்றும் யூத மதத்துக்கும் இடையேயும் கிறித்தவமதம் வளர்ச்சி பெற்றுக் கொண்டு வந்தது. மக்களிடையே இம் மதத்தின் செல் வாக்கைக் கண்டே பேரரசர் கான்ஸ்டன்டைன் கி.பி. 313ஆம் ஆண்டில் மிலான் ஆணையை (Edict of Milan) வெளியிட்டார். அதன்படி கிறித்தவ மதம் பேரரசரின் ஆதரவுபெற்ற மதமாக மாறியது.

பின்னர் நான்காம் நூற்றாண்டில் கோத்கள் (Goths) இடை யேயும் கிறித்தவமதம் பரவியது. உல்ஃபிலாஸ் (Ulfilas) என்ற

கிறித்தவமதப் பெரியார் அவர்களிடையே அம் மதத்தைப் பரப்பினர்.

**ஆங்கிலோ சாக்சன்களிடையே கிறித்தவ மதம் பரவுதல்**

கி.பி. ஐந்து, ஆறும் நூற்றுண்டுகளில் வட ஜெர்மன் பகுதி மற்றும் ஸ்காண்டிநேவிய தீபகற்பப் பகுதியில் வாழ்ந்து வந்த டியுடோனிக் (Teutonic) இனத்தினர், பிரிட்டனில் குடியேறினர். இவர்கள் ஆங்கிலோ–சாக்சன்கள் (Anglo-Saxons) என்றழைக்கப் பட்டனர். இவர்கள் குடியேறிய பகுதிகளே பின்னர், இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து என்று பலவாறு அழைக்கப்படலாயின.

பிரிட்டன் உரோமானியப் பேரரசின் ஒரு பகுதி என்ற முறையில், பேரரசர் கான்ஸ்டன்டைன் கிறித்தவ மதத்தைப் பேரரசால் ஆதரிக்கப்பட்ட மதமாக ஆக்கியபோதே, அம் மதம் அந் நாட்டில் வேகமாகப் பரவியிருக்க வேண்டும். இருப்பினும் அந் நாடு கிறித்தவத் திருச்சபையினுல் அனுப்பப்பட்ட மதகுருக் களால்தான் மதமாற்றம் செய்யப்பட்டது. பல மதகுருமார்கள் அத்தீவுக்குச் சென்று அப் பணியில் ஈடுபட்டாலும், கி. பி. 6, 7ஆம் நூற்றுண்டுகளில்தான் அப் பணி தீவிரப்படுத்தப் பட்டது.

பிரிட்டனின் கிழக்குப்பகுதியிலுள்ள கென்ட் (Kent) நிலப் பகுதியின் அரசன், ஃபிரான்சைச் சேர்ந்த ஒரு கிறித்தவ இள வரசியை மணந்திருந்தார். இந்த நல்ல வாய்ப்பிணைப் பயன் படுத்திக்கொண்டு, உரோம் திருச்சபையின் போப் கிரிகரி (Pope Gregory கி.பி. 590-604) அகஸ்டைன் (St. Augustine) என்ற முனிவரையும், அவருடன் நாற்பது மதகுருக்களையும் கி.பி. 597ஆம் ஆண்டில் கெண்டுக்கு அனுப்பினர். அவர்கள் அரசனுக்குக் கிறித்தவமதக் கோட்பாடுகளைத் தொடர்ந்து விளக்கி வந்தனர். விரைவிலேயே அரசரும் அவருடைய குடிமக்களும்கிறித் தவமதத்திற்கு மாற்றப்பட்டனர். அரசர் கிறித்தவத் திருச்சபையை அமைப்பதற்காகக் காண்டர்பரி என்ற நகரத்தில் ஒரு கட்டடத் தைக் கொடுத்தார். அகஸ்டைன் அங்கே 'இயேசு கிறித்துவின் திருச் சபையை' (Christ Church) நிறுவினர். இது காலப்போக்கில் நன்கு வளர்ச்சியுற்றது. புகழ்வாய்ந்த காண்டர்பரி தேவாலயம் (Cathedral of Canterbury) இங்கேதான் உள்ளது. இன்று அதன் தலைமை மதகுருவே, இங்கிலாந்து திருச்சபையின் தலைமை மதகுருவாக விளங்குகிருர்.

கென்ட் அரசரின் மகளை இங்கிலாந்தின் வடபகுதியிலுள்ள நார்த்தம்பிரியாவின் (Northumbria) அரசர் திருமணம் செய்து

கொண்டார். இளவரசியுடன் பாலினஸ் (Paulinus) என்ற மதகுரு அனுப்பப்பட்டார். அவருடைய போதனையால் அரசரும் அவருடைய ஆயிரக்கணக்கான குடிமக்களும் கிறித்தவ மதத்திற்கு மாற்றப்பட்டார்கள். பின்னர் இங்கிலாந்தின் மத்தியில் இருந்த மெர்சியா (Mercia) என்ற பகுதியிலும், இம் மதம் பரப்பப்பட்டது. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்குள்ளாக இங்கிலாந்து முழுவதிலும் கிறித்தவ மதம் பரப்பப்பட்டு விட்டது.

**போப்பின் ஆட்சி (Papacy)**

இயேசு கிறித்துவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான பீடர் முனிவர் கி.பி. 60 ஆம் ஆண்டுவாக்கில் அம் மதத்தைப் பரப்புவதற்காக உரோமில் இருந்த நிறுவனம் பிற்காலத்தில் கிறித்துவ உலகம் முழுவதையும் ஆட்சிசெய்யும் போப்பின் தலைமைத் திருச்சபையாக மாறியது. பீடர் முனிவரே அத் திருச்சபையின் முதல் போப்பாவார். போப் ஏழாம் கிரிகரியின் (Pope Gregory VII: 1073-1085. A.D.) காலத்திலிருந்துதான் உரோம் திருச்சபையின் தலைமை மதகுரு,'போப்' என்றழைக்கப்படுகின்றார். அதற்கு முன்னிருந்தவர்கள் 'பிஷப்' என்றே அழைக்கப்பட்டனர். எனினும், பீடர் முதல் அனைவருமே போப்புகளாகவே கருதப்படுகின்றனர். ஏனெனில் உரோமிலுள்ள திருச்சபையைத் தலைமைத் திருச்சபையாகக் கிறித்தவ உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

திருச்சபையின் அமைப்பு முதலிலேயே செம்மைப்படுத்தப்பட்டது மக்களைக் கிறித்தவ மதத்துக்கு மாற்றுதல், கிறித்தவக் குழந்தைகளுக்குப் பெயர்சூட்டித் திருச்சபையில் சேர்த்து வைத்தல், வேறுபல சடங்குகளைச் செய்தல் ஆகிய செயல்களைச் செய்பவர்கள் குருமார்கள் என்றழைக்கப்பட்டனர். கிறித்துவின் பன்னிரண்டு சீடர்களே முதலில் இருந்த குருமார்கள் ஆவர். அத்தகைய வேலைகளையும் மற்றும் ஒரு குறிப்பிட்ட சமயவட்டத்தை நிருவாகம் செய்பவர் சமயவட்டத்தலைவர், (Bishop) என்றழைக்கப்பட்டார். ஒவ்வொரு வட்டமும் பல சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது, அச் சிறு பகுதி பாரிஷ் (Parish) என்றழைக்கப்பட்டது. ஒவ்வொரு பாரிஷிலும் உள்ள தேவாலயத்தையும் அங்குள்ள கிறித்தவர்களின் நலன்களையும் நிருவாகம் செய்பவர் பிரீஸ்ட் (Priest) என்றழைக்கப்பட்டார். மற்றும் மடாலயங்களின் தலைவர்கள் 'ஆப்பட்கள்' (Abbots) என்றழைக்கப்பட்டனர். இவை அனைத்துக்கும் தலைமையகம் உரோமிலுள்ள திருச்சபையேயாகும். அதன் தலைவர் 'போப்பே' தலைமை நிருவாகியும் ஆவார். அந்த போப்பின் நிர்வாகமே 'போப்பின் ஆட்சி' (Papacy) என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. இடைக்காலத்தில் அவருடைய ஆட்சித்

குட்பட்ட இத்தாலியில் உள்ள நிலப்பகுதிகளை (Papul States) ஆட்சி செய்யப் படையைக்கூட வைத்துக் கொண்டிருந்தார்

கி.பி. 325 ஆம் ஆண்டு ஆசியா மைனரின் வடமேற்கே யுள்ள நைசியேயில் நடைபெற்ற மாநாட்டில் (Council of Nicaea) இறைவனும், இறைவனின் மகனும் (Father and Son) ஒன்றே என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. போப் முதலாம் லியோ (கி.பி. 440-461) கி.பி. 451 ஆம் ஆண்டில் வெளியிட்ட அறிக்கை யின் வாயிலாக இயேசு கிறித்து தெய்வத்தன்மையும், மனிதத்தன் மையும் பெற்ற தெய்வமகன் என்ற உண்மையைத் தெளிவுபடுத்தி னர். உரோமிலுள்ள 'போப்' எல்லாக் கருத்துகளையும் விளக்குபவ ராகவும் பிரச்சினைகளைத் தீர்ப்பவராகவும் வலிமையான ஆட்சி யாளராகவும் மாறிவந்தார். அவருடைய செல்வாக்கை விளக்க இங்கு முன்னரே குறிப்பிட்டுள்ள ஒரு வரலாற்று நிகழ்ச்சியை நினைவு கூர்தல் வேண்டும். ஹூணர்களின் கொடுந்தலைவன் அட்டில்லா உரோமைத் தாக்க வந்த போது, போப் லியோவின் மனங்கவர் பேச்சினாலும் மதப்பற்றினாலும் உந்தப்பட்டு அந் நகரைச் சிறிதும் பாழ்படுத்தாமல் அட்டில்லா திரும்பிச் சென்று ரென்பது குறிப்பிடத்தக்கது. பேரரசர்களால் முடியாததை போப் முடித்துக்காட்டினார்.

மேலும், இங்கிலாந்தில் கிறித்தவ மதத்தைப் பரப்பச்சென்ற அகஸ்டைன் முனிவருக்கும் (St. Augustine) அவரைச்சார்ந்த சீடர் களுக்கும், செல்டிக் கிறித்தவத் துறவிகளுக்கும் (Celtic Monks) பூசல்கள் வளர்ந்தபோது திருச்சபை தலையிட்டு ஒற்றுமையை ஏற்படுத்தியது. கி.பி. 664 ஆம் ஆண்டில் விட்பியில் கூடிய கிறித்தவமாநாடு (Synod of Whitby) உரோமிலுள்ள திருச்சபை யைத் தலைமைத் திருச்சபையாக ஏற்றுக்கொண்டது. உரோமா னியப் பேரரசின் தலைநகரம் மாற்றப்பட்ட பின்னர் கான்ஸ்டான்டி நோபிளிலும் ஒரு போப் நியமிக்கப்பட்டாரென்றாலும், கி. பி. 445 ஆம் ஆண்டு பேரரசரால் வெளியிடப்பட்ட ஓர் ஆணையின்படி உரோமிலுள்ள திருச்சபையே தலைமைத் திருச்சபையாக ஆகி விட்டது. திருச்சபை வலிமை பெருவ தற்குக் காரணமாய் இருந்த போப்புகளுள் முதலாம் லியோ (கி.பி. 440-461), முதலாம் கிரிகரி, (கி.பி. 590-604) ஏழாம் கிரிகரி (கி.பி 1073-1085) முதலானோர் மிக முக்கியமான வர்களாவர். இன்னும் இடைக்காலத்தில் ஏற்பட்ட பேரரசுக்கும் திருச்சபைக்கும் ஏற்பட்ட பதவிச் சின்னப் போராட்டத்தின் விளைவாகத் திருச்சபையின் உயர்வு நிலைநாட்டப்பட்டது.

## மடாலயங்களின் வளர்ச்சி

மடாலய முறை என்பது கீழ் நாடுகளில் மட்டுமே நடைமுறையில் இருந்து வந்தது. இது கி.பி. 3ஆம் நூற்றுண்டுக்குப் பிறகு சிறிது சிறிதாகக் கிறித்தவ உலகத்திலும் மேற்கொள்ளப் பட்டது. கிறித்தவ மதம் பல பகுதிகளிலும் பரவப் பரவ அதன் கோட்பாடுகளை விளக்குவதற்கும், கிறித்தவத்துறவிகள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்யவும், தங்கள் ஆன்மாக்களைத் தூய்மைப் படுத்திக்கொள்ளவும் பல பெரியார்களால் மடாலயங்கள் நிறுவப்பட்டன. இப் பிறவியின் பாவங்களுக்கு மன்னிப்பு பெறத் தவம் செய்யவும், மறு பிறவியில் நல்வாழ்க்கையைப் பெற இப்பிறவியில் மக்கள் சமுதாயத்திற்குத் தொண்டு செய்யவும், இம் மடாலயங்கள் பயன்பட்டன. மறுபிறவியில் நம்பிக்கை கொண்ட கிறித்தவர்கள் பலர் முதலில் மிகக் கடுமையான துறவற வாழ்க்கையை மேற்கொண்டனர். அங்ஙனம் மிகக்கடுமையான துறவற முறையில் ஈடுபட்டுத் தங்கள் ஆன்மாக்களைத் தூய்மைப் படுத்த முயன்ற பெரியார்களுள் தீபீசைச் சேர்ந்த பால் முனிவர் (St. Paul of Thebes 251–356.A.D.), மற்றும் அந்தோணி முனிவரும் (St. Anthony – 251 – 356-A.D.) குறிப்பிடத் தகுந்தவர்களாவர். அவர்கள் தங்கள் உடைமைகளையும் உறவினர்களையும் துறந்து தனிமையை நாடிச்சென்று தவம் இருந்தனர். பாவங்களில் இருந்து விடுதலை பெறவும் ஆன்மிக வாழ்வு பெறவும் உணர்ச்சிகளை அடக்கி, உடலை வறுத்தித் தவமிருப்பதுதான் ஒரே வழி என அவர்கள் கருதினுர்கள். அதுவே கிறித்தவ நெறி என்றும் அவர்கள் நம்பினுர்கள். ஆனுல் காலப் போக்கில் அக் கருத்து மாறுபட்டது.

கி.பி. 4ஆம் நூற்றுண்டில் எகிப்தில் வாழ்ந்த பச்சோமியஸ் முனிவர் (St. Pachomius) 'மனிதன் ஒரு சமூகப் பிராணி' அவன் சமூகத்தில் வாழவேண்டும்; தனிமையில் வாழக்கூடாது என்ற கருத்தை வெளியிட்டார். அதற்கேற்ப நைல்நதியில் ஒரு தீவில் நூற்றுக்கணக்கான துறவிகள் ஒன்ருக வாழ்ந்து தங்கள் கடமைகளில் ஈடுபட வழி வகுத்தார்.

இவரை அடுத்துப் பாசில் என்ற முனிவர் (St. Basil 329–379 A.D.) குறிப்பிடத் தகுந்தவராவார். இவர் கப்படோசியாவில் (Cappadocia) பெரிய செல்வந்தர் குடும்பமொன்றில் பிறந்தார். இவருடைய முன்னேர்கள் அனைவரும் தூய்மையான தியாக வாழ்க்கை நடத்திய கிறித்தவர்களாவார்கள். ஆதன்ஸ் மற்றும் கான்ஸ்டான்டிநோபிளில் கல்வி கற்ற பாசில் பல கிறித்தவ நாடுகளுக்குச் சென்று அங்கெல்லாம் கிறித்தவர்கள் மேற்கொண்

டிருந்த வாழ்க்கை முறையையும் மற்ற நிலைமைகளையும் அறிந்தார். மடாலய முறையின் வளர்ச்சியில் மேலே குறிப்பிடப்பட்ட பால் முனிவர் மற்றும் அந்தோனி முனிவர் போன்றோரின் கருத்துகளைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். பச்சோமியஸ் முனிவரின் கருத்துகளோடு உடன்பட்டுத் துறவிகள் தனிமையில் தவம் செய்து உடலை வறுத்தக்கூடாது என்றார். மேலும், 'துறவிகள் சமுதாயத்தோடு இணைந்து கூட்டம் கூட்டமாக வாழவேண்டும்; சமுதாயத்தின் உயர்வுக்கு அவர்கள் உழைக்க வேண்டும்; உடல் உழைப்பினால் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருள் களையும் உற்பத்தி செய்ய வேண்டும்; அவர்கள் தங்களுக்கென எந்த உடமையையும் சேர்த்து வைக்கக்கூடாது. அவர்கள் உடுக்கும் ஆடை மட்டுமே அவர்களுக்கு உரிமையானதாகும்; ஏழ்மை, எளிமை, தன்டைக்கம்-இவை துறவிகளிடம் காணப் பட வேண்டிய சின்னங்களாகும்; எந்த ஒரு பணியினையும் புன் முறுவலுடன் செய்யவேண்டும்' என்ற கருத்துகளை வெளி யிட்டார். இக் கருத்துகளுக்கு ஏற்ப நகரங்களுக்கு அருகே துறவி களின் குடியிருப்புகளை அமைத்துப் பாசில் முனிவர் மக்கள்தொண் டையும், மதத் தொண்டையும் செய்தார். இவருடைய கருத்து களும் கிறித்தவத் தொண்டும் கிழக்கு உரோமானியப் பேரரசில் வெகுவாகப் பரவின. கி.பி. 451ஆம் ஆண்டில் நடைபெற்ற 'சால்சிடன் பெருஞ்சபையும்' (Council of Chalcedon) பாசில் முனிவரின் கொள்கைகளை ஆதரித்தது. கிறித்தவ மடாலயங்கள் தோன்றி வளருவதற்கு பாசில் முனிவரின் பணி மிகமுக்கியமான அடிப்படையாக அமைந்தது.

**பெனிடித்ட் முனிவர் (St. Benedict : 480 – 543 A.D.)**

கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை கிழக்கு உரோமானியப் பேரரசில் சில இடங்களிலும், மேற்கே கால் (Gaul) பகுதியில் மட்டுமே மடாலய முறை பரவியிருந்தது. இம் முறை மேற்கேயுள்ள கிறித்தவ நாடுகளில் பரவுவதற்குக் காரணமாய் இருந்தவர்களுள் காசியன் முனிவர் (St. Cassian,) மார்ட்டின் முனிவர் (St. Martin), சீசர் முனிவர் (St. Caeser), பெனிடிக்ட் முனிவர் (St. Benedict) போன்றவர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவர். இவர்களுள் பெனிடிக்ட் முனிவரே மிகவும் முக்கியமானவர். இவர் கி.பி. 480ஆம் ஆண்டில் இத்தாலியிலுள்ள உம்பிரியா (Umbria) என்ற நகரில் பணக்காரக் குடும்பமொன்றில் பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் அவரைக் கல்விகற்க உரோமுக்கு அனுப்பினார்கள். உரோமில் மக்கள் நெறிதவறிய ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட் டிருப்பதைக் கண்டு பெனிடிக்ட் வேதனைப்பட்டார். மிகவிரைவி லேயே தனிமை வாழ்க்கையை நாடி சபைன் மலைப்பகுதிக்கு

(Sabine Hills) ஓடி விட்டார். அங்கு தூய்மையான துறவி ஒருவரின் நட்பைப் பெற்ருர்; அழகான, அமைதியான குகை ஒன்றில் வாழ்ந்து வந்தார். அங்ஙனம் வாழ்ந்து வரும்போது அவரிடம் பல மாறுதல்கள் காணப்பட்டன. கனவுகளிலும், தனிமையிலும் தேவனின் தூதர்கள் அவருடன் பேசுவதை உணர்ந்தார். அவருடைய கடவுள் தன்மை மற்றவர்களுக்கும் தெளிவாகத் தெரியத் தொடங்கியது. அவரைச் சுற்றிச் சீடர்களின் கூட்டமும் பெருகியது. தான் இருந்த இடத்தை மாற்றவேண்டிய அவசியத்தை பெனிடிக்ட் அறிந்தார். அவருடைய சீடர்கள் உரோமுக்கும் நேபிள்சுக்கும் இடையே உள்ள மாண்டிகாசினோ (Montecassino) என்ற இடத்தைத் தேர்ந்தெடுத்தனர். இங்குதான் பெனிடிக்டைன் அமைப்பின் (Benedictine order) கருத்துக்ஙளச் செயல்படுத்தும் மடாலயம் நிறுவப்பட்டது. குறுகிய காலத்தில் துறவிகள் பெரும் எண்ணிக்கையில் சேர்ந்தனர். அத் துறவிகளின் கடமைகள் எவை என்பதையும், அவர்கள் ஒழுக வேண்டிய முறைகளைப் பற்றியும் விளக்க பெனிடிக்டைன் கி.பி. 529ஆம் ஆண்டில் ஒரு விதிமுறையை வெளியிட்டார். அதுவே பெனிடிக்டைன் 'விதி' (Rule) என்று புகழ்பெற்றது. அவ்'விதி'யின் படி 'துறவிகள் அம் மடத்தில் சேரும்போது வாழ்நாள் முழுவதும் அதே மடத்தில் பணிபுரிவதாக உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும்; ஏழ்மை, ஒழுக்கம், கீழ்ப்படிதல் ஆகியவை அம் மடத்தில் சேருபவர்களின் முக்கியத் தகுதிகளாகும். உழைப்பும் மக்கள் தொண்டும் அவர்களின் கடமைகளாகும்; மடாலயத்திற்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் கூடுமானவரை அவர்களே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும்; ஏழைகளுக்கும் வழிப்பயணிகளுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும்; மடத்தில் வாழும் துறவிகளுக்கு உரிமையுடையதென இவ்வுலகத்தில் எதுவுமே இல்லை; மடத்தின் தலைவருக்கும், மற்ற கட்டுதிட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்' என்று துறவிகள் அறிவுறுத்தப்பட்டார்கள். மேலும் மடத்திலுள்ளோர் உடலுழைப்பு செய்யவேண்டிய நேரம், தூங்கும் நேரம், இறைவனை வழிபட வேண்டிய நேரம், முதலானவையும் முறைப்படுத்தப்பட்டன. ஒரு மடாலயம் எங்ஙனம் இயங்க வேண்டுமென்பதற்கு இம் மடாலயம் ஓர் இலக்கணமாக அமைந்தது. இதன் அடிப்படையிலேயே ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் மடாலயங்கள் நிறுவப்பட்டன. பிற்காலத்தில் கிறித்தவ உலகத்தில் பல முக்கியப் பதவிகளை வகித்தவர்கள் பெனிடிக்டைன் மடாலயங்களைச் சேர்ந்தவர்களே என்பது குறிப்பிடத்தகுந்தது.

### குளினியக் மடாலயம் (Clunic Monastery)

பெனிடிக்டைன் அமைப்புக்குப் பின் புதிய மடாலயங்கள் ஏற்படுத்தப் பலர் முயன்றனரென்றாலும் அவை வரலாற்றுச் சிறப்புப்பெறவில்லை. குளினியக் மடாலயம். கி.பி. 910ஆம் ஆண்டில் ஃபிரான்சின் மேற்குப் பகுதியிலுள்ள அக்விடெய்ன் (Aquitaine) என்னும் கோமகனாட்சிப் பகுதியின் கோமகன் வில்லியமின் (William) ஆதரவால் குளினி (Cluny) என்ற இடத்தில் நிறுவப்பட்டது. முதலில் அம் மடாலயம் பெர்னோ முனிவரின் (St. Berno) தலைமையில் இயங்கியது. அவருடைய தன்னலமற்ற சேவையினால் இம் மடாலயம் புகழ்பெற்றது. பெரும் எண்ணிக் கையில் துறவிகள் இம் மடாலயத்தில் சேர்ந்தனர். பெனிடிக்ட் முனிவர் தன் மடாலயத்திற்கு வெளியிட்ட 'விதி'யின் படியே இம் மடாலயமும் செயல்பட்டதென்றாலும், அக் கருத்துகளோடு வேறு பல நெறிமுறைகளும் மடாலயத் துறவிகளுக்கு வகுத்துத் தரப் பட்டன. ஐரோப்பாவில் பல இடங்களில் நிறுவப்பட்ட 'குளினியக் மடாலயங்கள்' ஒன்றோடொன்று தொடர்பு வைத்துக் கொண்டன. கொள்கையளவில் இவ்வனைத்து மடாலயங்களின் துறவிகளே குளினியில் இருந்த தலைமை மடாலயத் தலைவரைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால் நடைமுறையில் ஒவ்வொரு தலைவரும் தான் இருக்கும் காலத்திலேயே தன்னுடைய வாரிசு யார் என்பதை நியமித்து அவருக்குச் சிறந்த முறையில் பயிற்சி யளித்து அவரைப் பின்னர் முறைப்படித் தலைவராக நியமிப்பார். இத்தகைய முறை, நிருவாகம் சிறப்பான முறையில் அமைய வழி வகுத்தது. மேலும் இம் மடாலயங்கள் அரசர்களின் அதிகாரங் களுக்கு உட்படாமல் தனித்தியங்கின. அவைகளில் இருந்த துறவிகளுக்குக் குளினியில் இருந்த மடாலயத் தலைவரும், உரோமில் இருந்த போப்பும் மட்டுமே உயர் அதிகாரிகள் ஆவர். மடாலயங் களில் பணிபுரிவோர் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்ற விதி (Celibacy) தவறாமல் பின்பற்றப்பட்டது. அதனால் துறவிகள் இவ்வுலக உறவுகளிலிருந்து விடுபட்டுச் சுயநலமின்றிப் பணிபுரி வார்கள் என்று கருதப்பட்டது. பெனிடிக்டைன் அமைப்புக்குப் பின் குளினியக் மடாலயம் கிறித்தவ உலகத்தில் பல்வேறு விதமான மாற்றங்களை ஏற்படுத்தியது.

### பெர்னார்ட் முனிவரும் சிஸ்டெர்சியன் முறையும் (St. Bernard and Cistercian Order)

ஸ்டீஃபென் ஹார்டிங் (Stephen Harding) என்பவரே சிஸ்டெர் சியன் முறையைத் தொடங்கி வைத்தார். எனினும் இவ்வமைப்பின் கொள்கைகள் பரவுவதற்குக் காரணமாய் இருந்தவர் பெர்னார்ட் முனிவரே (கி.பி. 1090—1153) ஆவார். கி.பி. 12ஆம் நூற்

ருண்டில் பெனிடிக்டைன் கருத்துகளும் குளினியக் கொள்கைகளும் சிறிது சிறிதாக மறைந்துகொண்டு வந்தன. அவற்றை மீண்டும் புதுப்பித்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு பெர்ஞர்ட் முனிவர் அரும் பாடுபட்டார். கிறித்தவ மதத்தை அழிக்க முற்பட்ட முகமதியர்களின் தாக்குதல்களை முறியடித்து அம் மதத்தைக் காக்க வேண்டியதன் அவசியத்தைக் கிறித்தவர்களிடையே விளக்கினர். கிறித்தவர்கள் துறவிகளாக மட்டும் இருந்தால் போதாது இவர்கள் சிறந்த போர் வீரர்களாகவும் இருக்க வேண்டுமென பிரச்சாரம் செய்தார். பெர்ஞர்ட் முனிவரின் முயற்சியினுலும், தூண்டுதலினுலும் தான் இரண்டாம் சிலுவைப் போர் மேற்கொள்ளப் பட்டது. புறச் சமயவாதிகளை எதிர்த்துக் கிறித்தவ மதப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர். அவர் வாழ்ந்த காலத்தில் அவரைவிட மதப் பற்றும் கொள்கைப் பிடிப்பும் உடையவர் எவரும் இலர். அவருடைய கருத்துகளும், சுயநலமற்ற தொண்டும் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. உரோமில் இருந்த போப்புக்கும், ஃபிரான்சு நாட்டு அரசருக்கும் பலமுறை மதத் துறை ஆலோசனைகளை வழங்கினர். பெர்ஞர்ட் முனிவரின் புகழ் கிறித்தவ உலகம் முழுவதும் பரவியது. எனவேதான் அவர் வாழ்ந்த காலத்தை **'பெர்ஞர்ட் முனிவரின் காலம்'** (The Age of St. Bernard) என்று வரலாற்று ஆசிரியர்கள் சிறப்பித்துக் கூறுகின்றனர். அவர் எழுதிய பல இறை வழிபாட்டுப் பாடல்கள் இன்றும் கிறித்தவர்களால் மனம் உருகிப் பாடப்படுகின்றன. பெர்ஞர்ட் முனிவரால் சிஸ்டெர்சியன் முறை புகழ் அடைந்தது மட்டுமல்லாமல், மடாலய முறையில் ஒரு புதிய மறுமலர்ச்சியும் தோற்றுவிக்கப்பட்டது.

**கார்த்தூசியன் முறை** (Carthusian Order)

இவ்வியக்கம் பெர்ஞர்ட் முனிவர் வாழ்ந்த கி.பி. 12ஆம் நூற்ருண்டிலேயே **புருனே முனிவரால்** (St. Bruno) தொடங்கப்பட்டது. மடாலயங்களில் வாழ்பவர்கள் தனியறைகளில் வாழ வேண்டுமென்றும், அதிகமாகப் பேசக்கூடாதென்றும் அறிவுறுத்தப்பட்டார்கள். இவ்வியக்கம் மிகுதியான செல்வாக்கைப் பெறவில்லை.

மடாலயங்களைத் தவிர ஃப்ரைர்கள் (Friars) என்று சொல்லப்பட்ட தனிப்பட்ட கிறித்தவ மதத்தின் வளர்ச்சிக்கும், கிறித்தவர்களிடையே அம் மதத்தைப் பற்றிய புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் அருந்தொண்டு ஆற்றியுள்ளார். மடாலயத் துறவிகளுக்கும் இந்தப் ஃப்ரைர்களுக்கும் வேறுபாடுகள் உண்டு. மடாலயத் துறவிகள் பெரும்பாலும் மக்கள் சமுதாயத்தின் தொல்லைகளினின்று வீடுபட்டு, அமைதியான மடாலயங்களில் இறை வழி

பாடு செய்து, தங்கள் ஆன்மாக்களைத் தூய்மை செய்துகொள்ள முயன்றனர். ஆனால் ஃப்ரைரர்கள் தங்களுக்கிருந்த உடமைகளை முற்றும் துறந்து–ஏழ்மை என்னும் பெண்ணை மணந்து–அன்றாட உணவுக்குப் பிச்சை எடுத்து, ஊர் ஊராகச் சுற்றித் திரிந்து கிறித்தவ மதக் கருத்துகளை மக்களிடையே பரப்பிப் பிற மதக் கருத்துகளை முறியடித்துப் பிரச்சாரம் செய்தனர். இவர்கள் திருச்சபைக்கும் பக்கபலமாக இருந்தனர். கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் மடாலயங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன; கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இந்த ஃப்ரைரர்களே சமுதாயத்தில் பெரும் செல்வாக்கு பெற்றிருந்தனர். இங்ஙனம் பெரும்தொண்டு புரிந்த பெரியார்களுள் ஃபிரான்சிஸ் முனிவரும் (St. Francis), டாமினிக் முனிவரும் (St. Daminic) குறிப்பிடத்தகுந்தவர்களாவர்.

**ஃபிரான்சிஸ் முனிவர் (கி.பி. 1181–1226)**

இவர் இத்தாலியிலுள்ள அசிசி என்ற நகரத்தில் பிறந்தார். 'அசிசியின் ஃபிரான்சிஸ் முனிவர்' (St. Francis of Assisi) என்றே புகழ் பெற்றவர். பெருஞ் செல்வந்தர் குடும்பமொன்றில் பிறந்தாரென்றாலும் இளமையிலேயே ஏழ்மைக்கோலம் பூண்டுக் கிறித்தவ மதத் தொண்டு செய்யப் புறப்பட்டுவிட்டார். இயேசுவைப் போலவும், அவருடைய சீடர்களைப் போலவும் இவ்வுலகத்துத் துன்பங்களையும் இடர்ப்பாடுகளையும் அடைந்து, ஏழை எளியவர்களுடன் வாழ்ந்து மதத் தொண்டு செய்யவேண்டுமென்பது அவருடைய கொள்கையாகும். அங்ஙனம் அவர் நகரங்களில் கிறித்தவ மதக் கொள்கைகளை விளக்கிக்கொண்டும், பிற மதக் கொள்கைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்துகொண்டும் சென்றபொழுது அவருடைய அமைப்பில் பலர் சேர்ந்தனர். அவர்கள் 'ஃபிரான்சிஸ்கன் ஃபிரைரர்கள்' என்றழைக்கப்பட்டனர். இவ்வமைப்பைப் போப் மூன்றும் இன்னொசெண்டும் (Pope Innocent III: 1198—1216 A.D.) அங்கீகரித்தார். இவ்வியக்கத்தைச் சேர்ந்த பல பெரியார்கள் கடல் கடந்த நாடுகளுக்கும் சென்று மக்கள் தொண்டு செய்தனர். கல்வித் துறையில் புரட்சிக் கருத்துகளை வெளியிட்ட ராஜெர் பேக்கன் (Roger Becon) இவ்வமைப்பைச் சேர்ந்தவரே என்பது குறிப்பிடத்தக்கது. கிறித்தவ மதத்திற்கு ஃபிரான்சிஸ் முனிவர் செய்த தொண்டு ஈடு இணையற்றதாகும்.

**டாமினிக் முனிவர் (கி.பி. 1170–1221)**

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த இவர் சிறந்த கற்றறிந்த மேதையாகவும், மதத் துறை அறிஞராகவும், பேச்சாளராகவும் விளங்கினார். ஃபிரான்சில் பிற மதக் கருத்துகள் வலுவடைந்து வருவதைக் கண்டு அஞ்சினார். எனவே நுண்ணறிவும் மதப் பற்றும்

உடைய இளைஞர்களுக்கு விவிலிய நூல், மதம் மற்றும் சட்டத் துறைகளில் சிறந்த பயிற்சி அளித்துப் புற மதவாதிகளின் கருத்துகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்ய அவர்களை அனுப்பினர். ஃபிரான்சிஸ்கன் அமைப்பும், டாமினிகன் அமைப்பும் ஒரே காலத்தில் செயல்பட்டன. டாமினிகன் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மக்களிடையே புதிய விழிப்புணர்ச்சியையும், சிந்தனை ஆற்றலையும் ஏற்படுத்தினர்கள். போப் மூன்றும் ஹொனெரியசும் (Pope Honorius III: 1216—1227 A.D.) கி.பி. 1217ஆம் ஆண்டில் இவ்வமைப்பை அங்கீகரித்து ஆதரித்தார். டாமினிக் மற்றும் அவருடைய சீடர்களின் சுவை மிக்க கிறித்தவமத விளக்க உரைகளைக் கேட்பதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டினர். கிறித்தவ மதத்தில் நம்பிக்கை இழந்த பலரும் தங்கள் தவறுகளை உணர்ந்து அம் மதத்தின் மேன்மையை உணர்ந்தனர்.

இங்ஙனம் மடாலயங்களும் ஃப்ரைர்களின் அமைப்புகளும் கிறித்தவ மதத்தைப் பரப்புவதிலும், மக்கள் தொண்டு செய்வதிலும் மற்றும் கல்வியைப் பரப்புவதிலும் பெருந் தொண்டு புரிந்திருக்கின்றன. இவை உரோம் திருச்சபைக்கும் பல வழிகளில் பக்கபலமாக இருந்தன.

# 4. கிழக்கு உரோமானியப் பேரரசும் ஜஸ்டினியனும்

## தோற்றம்

கிழக்கு உரோமானியப்பேரரசு, பைசான்டைன் பேரரசு என்றும், பிற்கால உரோமானியப் பேரரசு என்றும் அழைக்கப்படுகின்றது. உரோமானிப் பேரரசை ஆட்சி செய்துகொண்டிருந்த பேரரசர் கான்ஸ்டன்டைன்கி.பி. 330ஆம் ஆண்டில் பைசாண்டியம்(Byzandium) என்ற நகரம் இருந்த இடத்தில், தன் பெயராலே கான்ஸ்டாண்டிநோபிள் (Constantinople) என்ற மிகப் பெரிய நகரத்தை நிறுவி, தன் தலைநகரை உரோமிலிருந்து அந் நகருக்கு மாற்றினார். அவரும் அவருக்குப் பின் வந்த அரசர்களும் அந் நகரையே தலைநகரமாகக் கொண்டு கிழக்கு உரோமானியப் பேரரசை ஆட்சி செய்தார்கள். எனினும், கிழக்கு உரோமானியப் பேரரசின் வரலாறு கி.பி. 395ஆம் ஆண்டிலிருந்துதான் தொடங்குவதாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் அந்த ஆண்டில்தான் பேரரசர் தியோடிசியஸ் (Theodosius) தன்னுடைய பேரரசை இரு பிரிவுகளாகப் பிரித்துத் தன் இரு புதல்வர்களாகிய அர்காடியசுக்கும், ஹொனேரியசுக்கும் (Archadius and Honorius) பங்கிட்டுக் கொடுத்தார். அந்த ஆண்டிலிருந்து இப் பேரரசு பல்வேறு காலங்களில் உயர்ந்தும், தாழ்ந்தும் கி.பி. 1453ஆம் ஆண்டு வரை நிலவியிருந்தது. இக் காலத்தில் பன்னிரண்டு வமிசங்களைச் சேர்ந்த அரசர்கள் கான்ஸ்டான்டிநோபிளைத் தலைநகராகக் கொண்டு கிழக்கு உரோமானியப் பேரரசை ஆட்சி செய்திருக்கிறார்கள். அவர்களுள் முதல் அரசர் என்ற முறையிலும், கிறித்தவ மதத்தைத் தன் பேரரசு முழுவதும் பரப்ப எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டவர் என்ற முறையிலும் கான்ஸ்டன்டைன் முக்கியமானவர். மேலும் கி.பி. 325ஆம் ஆண்டில் முதல் அனைத்துலக கிறித்துவ மதச் சபையை (First Ecumenical Council) ஆசியா மைனரில் இருந்த நைசியே (Nicaea)

என்ற இடத்தில் கூட்டி, இயேசு கிறித்து ஆண்டவனின் திருவுருவம் என்றும், எனவே கிறித்தவ மதத்தை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்றும் அறிவித்தார்.

இவருக்குப் பின்னர் ஆட்சி செய்த அரசர்களுள் ஜஸ்டினியன் (Justinian) என்பவரே மிகவும் முக்கியமான அரசராவார். அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் கிழக்கு உரோமானியப் பேரரசின் எல்லைகள் பரந்து விரிவடைந்தன. எனவே அவரைப் பற்றிய விவரங்களைக் கவனிப்போம்.

**பேரரசர் ஜஸ்டினியன்–அவருடைய வெற்றிகளும் சிறப்புகளும்**

கிழக்கு உரோமானியப் பேரரசை ஆட்சி செய்த அரசர்களுள் பேரரசர் ஜஸ்டினியன் (கி.பி. 527-565) மிகவும் புகழ் வாய்ந்தவர். ஓர் அரசனுக்கு வேண்டிய எல்லாச் சிறப்பான குணங்களும் அவரிடம் இருந்தன. கூர்மையான நுண்ணறிவும், கடுமையான உழைப்பும், நாட்டுப்பற்றும், ஆட்சித் திறமையும் அவரைப் பேரரசராக மாற்றின. மற்றவர்களும் அங்ஙனம் இருக்க வேண்டுமென்று விரும்பினர்; அருங்கலைகளைப் போற்றி வளர்த்தார். அவருடைய ஆட்சிக்காலத்தில் கான்ஸ்டான்டிநோபிளில் பல தேவாலயங்கள் கட்டப்பட்டன. அவற்றுள் சாந்த சோபியா (Santa Sophia) என்பது மிகவும் புகழ் வாய்ந்ததாகும். ஜஸ்டினியன் மதப்பற்றும், இலக்கிய அறிவும் உடையவராகவும் இலத்தீன் மொழியில் சிறந்த கவிஞராகவும் விளங்கினர்.

ஜஸ்டினியன் சிறந்த பேரரசரெனப் போற்றப்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவருடைய மனைவியும் ஒரு முக்கியமான காரணம். தியோடோரா (Theodora) என்ற பெயருடைய அந்த அம்மையார் அரசனுக்கேற்ற அருங்குணங்கள் நிறைந்த அரசியாக விளங்கினர். அவர் அஞ்சா நெஞ்சும் அரசனுக்கு அறிவுரை வழங்கும் ஆற்றலும் பெற்றிருந்தார். நிகாவில் கலகங்கள் (Riots of Nika) ஏற்பட்டபொழுது அரசனின் உயிருக்கு ஆபத்தும், பதவியைத் துறக்க வேண்டிய சூழ்நிலையும் உருவாயின. அத்தகைய பயங்கரமான நிலையில் அரசனுக்குப் பக்கபலமாக இருந்து, நெஞ்சுரத்துடன் கலகங்களை அடக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தார். ஜஸ்டினியனின் ஆட்சிக் காலம் முழுவதும் அந்த அம்மையாரின் அருந்தொண்டு அவருக்குக் கிடைத்தது.

பழம்பெரும் உரோமானியப் பேரரசின் பெருமையை நிலைநாட்டவும், கத்தோலிக்க மதத்தை உலகம் முழுவதும் பரப்பவும், ஜஸ்டினியன் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். அவருடைய முயற்சியினலேயே கிரேக்க-உரோமானியப் பண்பாடு இணைந்து

பைசான்டைன் பண்பாடாக (Byzantine Culture) பேரரசு முழுவதும் பரவியது. உரோமானியச் சட்டங்களின் தொகுப்பு (Codification of Laws) அவருடைய மிகப் பெரிய சாதனையாகக் கருதப்படுகிறது. கான்ஸ்டான்டிநோபிளுக்கு மேற்கே பல நிலப் பகுதிகளை வென்று தன் பேரரசோடு இணைத்தது அவருடைய மற்றொரு பெரிய வெற்றியாகும்.

கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முன் உரோமானியச் சட்டங்கள் குழப்பமான நிலையிலிருந்தன. உரோம் குடியரசாகவும், பேரரசாகவும் இருந்த காலத்தில் செனட் (Senate) சபையினாலும், நீதிபதிகளினாலும் இயற்றப்பட்ட சட்டங்கள், மற்றும் பல்வேறு சூழ்நிலைகளில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் முதலானவை அனைத்தும் இணைந்து ஒரு குழப்பமான நிலையில் இருந்தன. எனவே, ஜஸ்டினியன், புகழ்வாய்ந்த நீதிபதி டிரிபோனியன் (Tribonian) என்பவரை நியமித்து எல்லாச் சட்டங்களையும் தொகுத்து முறைப்படுத்தும்படி ஆணையிட்டார். அதன் விளைவு, பத்து பெரிய புத்தகங்களாக 'ஜஸ்டினியன் சட்டங்கள்' (Codex Justinianus) வெளியிடப்பட்டன. இந்த உரோமானியச் சட்டங்களும், கருத்துகளும் ஐரோப்பாவின் சட்டத் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. ஐரோப்பியச் சட்ட நிபுணர்கள் ஜஸ்டினியனுக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கான்ஸ்டான்டிநோபிளைத் தலைநகராகக் கொண்டு வளர்ந்து வந்த கிழக்கு உரோமானியப் பேரரசில் உரோம் இணைந்தில்லாவிட்டால் அப் பேரரசை அங்ஙனம் அழைப்பதில் பொருளில்லையென அவர் கருதினார். எனவே மேற்குப் பகுதிகளை வெல்லும் முயற்சியில் அடுத்து ஈடுபட்டார்.

முதல் முயற்சியாகத் தன்னுடைய புகழ்மிக்க படைத் தளபதி பெலிசாரியஸ் (Belisarius) என்பவரை ஆப்பிரிக்காவின் வட பகுதியை வெல்லும்படிப் பெரும் படையுடன் அனுப்பினார். அங்கு ஆட்சி புரிந்து வந்த வாண்டல்களைத் தோற்கடித்து, உரோமானிய ஆட்சி முறையை பெலிசாரியஸ் ஏற்படுத்தினார். மற்றொரு இனமாகிய மூர்களையும் (Moors) அடக்கினார். சிசிலி நோபிள்ஸ் உரோம் மற்றும் டால்மேஷியா (Dalmatia) போன்ற பகுதிகளும் கைப்பற்றப்பட்டன. ஆயினும், அப் பகுதிகளில் இருந்த காத்களின் எதிர்ப்பு தொடர்ந்து பல ஆண்டுகள் நீடித்தது. பெலிசாரியசுக்குப் பின்னர் படைத் தளபதியான நார்ஸஸ் (Narses) தொடர்ந்து போரிட்டு அவர்களை அடக்கினார். அப் பகுதிகளில் அயலவர்களின் பண்பாடும் நாகரிகமும் அகற்றப்பட்டு உரோமானியக் கருத்துகளும், கலையம்சங்களும் புகுத்தப்பட்டன.

தொடர்ந்து நடைபெற்ற போர்களினால் உரோமுக்கும் மற்ற பகுதிகளுக்கும் பெருத்த பொருள் சேதமும், மக்கள் சேதமும் ஏற்பட்டன. உரோம் நகரம் பழம் பெருமையை இழந்தது. ஜஸ்டினியன் அந் நகரைப் புதுப்பிப்பது கடினம் எனக் கருதினார். எனவே இத்தாலியின் வட பகுதியில் ராவென்னா (Ravenna) நகரைப் புதுப்பித்து அப் பகுதியில் ஒரு ஆளுநரை (Exarch) நியமித்து ஆட்சியைச் சீர்படுத்தினார்.

ஜஸ்டினியன் இதோடு நிற்கவில்லை. மத்தியதரைக் கடலில் இருக்கும் சார்டினியா, கார்சிகா, பேலிரியக்ஸ் (Balearics) முதலிய தீவுகளையும் கைப்பற்றினார். ஸ்பெயினின் தென் பகுதியையும் வென்றார்.

தொடர்ந்து நடத்திய பல போர்களில் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய ஜஸ்டினியன் தன் குடிமக்கள் மீது பல்வேறு விதமான வரிகளை விதித்தார். அதனால் மக்கள் அதிருப்தி கொண்டனர். இருப்பினும், வேறு வழியின்றி மக்கள் வரிப்பளுவைத் தாங்கிக் கொண்டனர். ஜஸ்டினியனின் முழுக் கவனம் மேற்குப் பகுதிகளை வெல்லுவதில் செலுத்தப்பட்டதால் அவர் பேரரசின் கிழக்குப்பகுதியில் குழப்பங்கள் ஏற்பட்டன. என்றாலும், கிழக்கு உரோமானியப் பேரரசின் பண்பாடும், நாகரிகமும் அப் பேரரசு முழுவதும் அழிவுறாமல் காக்கப்பட்டு, பரப்பப்பட்டது. ஜஸ்டினியனுக்குப் பிறகு ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்கு இத்தாலியில் இப் பண்பாடு தழைத்திருந்தது. குறிப்பாக இத்தாலியப் பகுதியிலும், ஜஸ்டினியனால் புதியதாக உருவாக்கப்பட்ட ராவென்னா (Ravenna) நகரம் முழுவதிலும், மற்றும் வெனிஸ் நகரத்திலும் இந்த 'பைசான்டைன் நாகரிகம்' (Byzantine Civilization) பரவியது.

கிறித்தவ மதத்தை அவருடைய பேரரசனைத்தும் பரப்புவதற்கு ஜஸ்டினியன் அரும்பாடுபட்டார். கிறித்தவர்களிடையே ஒற்றுமையும், நல்லெண்ணமும் நிலவவேண்டுமென்பது அவருடைய பெருவிருப்பமாகும். கிறித்தவ மதத்தைப் பரப்புவதைத் தன்னுடைய தலையாய கடமையாகவும், அதே நேரத்தில் திருச்சபை தன்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்டதென்றும் அவர் கருதினார். பல்வேறு நிலையிலுள்ள குருமார்களை அவர் நியமித்தார். அரசர் திருச்சபையின் மதத்துறை விவகாரங்களில் ஈடுபடுவதைத் திருச்சபை விரும்பவில்லை. மேலும் கிறித்தவ மதத்தில் நம்பிக்கை இல்லாத தத்துவமேதைகள் (Pagan Philosophers) அப்பொழுது இருந்தனர். அவர்களை ஒழிக்க வேண்டுமெனத் திட்டமிட்டு, அத்தகையவர்களின் குழுக்களையும், கூட்டங்களையும் கலைத்தார்.

மேலும் திருச்சபையின் அதிகாரங்களிலும் அரசனின் ஆணைகளிலும் நம்பிக்கையில்லாத 'கிறித்துவின் ஒருடல் கோட்பாடுடையோர்' (Monophysites) சிரியாவிலும், பாலஸ்தீனத்திலும், எகிப்திலும் அரசனின் மதக் கொள்கைகளைக் குறை கூறினர். உரோம் திருச்சபையின் உதவியோடு அவர்களை அடக்க அரசர் முயன்றார். இருப்பினும் அவர்களை முற்றிலும் அடக்க முடியவில்லை. எனவே ஜஸ்டினியன் தன்னுடைய மதத்துறைக் கொள்கைகளை ஓரளவே செயல்படுத்த முடிந்தது.

### கிழக்கு உரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைதல்

பேரரசர் ஜஸ்டினியன் ஆட்சிக் காலத்தில் பேரரசு மூன்று கண்டங்களில் பரவியிருந்தது. பால்கன் தீபகற்பம், இத்தாலியத் தீபகற்பம், ஸ்பெயினின் தென் பகுதி, எகிப்து மற்றும் வட பகுதி, சிரியா, பாலஸ்தீனம், மற்றும் ஆசியா மைனர் முழுவதும் அவர் பேரரசில் அடங்கியிருந்தன. ஆனல் அவருடைய ஆட்சியின் இறுதிக் காலத்திலேயே பேரரசின் கிழக்குப் பகுதியிலிருந்தும், வடக்குப் பகுதியிலிருந்தும் தொல்லைகள் வரத் தொடங்கின.

மேலும் ஜஸ்டினியன் ஆட்சிக் காலத்தில் இலத்தீன் மொழியே ஆட்சி மொழியாகவும், இணைப்பு மொழியாகவும் இருந்தது. அவருக்குப் பின் கிரேக்க மொழி மேன்மை அடைந்தது. எனவே இத்தாலியோடும், உரோம் திருச்சபையோடும் கொண்டிருந்த தொடர்பு அறுபட்டது.

பேரரசின் வடக்குப் பகுதியில் ஸ்லாவ்கள் (Slavs) என்ற பயங்கரமான இனத்தினர் இருந்தனர். இவர்கள் கருங்கடலுக்கு மேற்குப் பகுதியிலிருந்து பின்னர் பல்வேறு இடங்களில் குடியேறினர்கள். இவர்கள் ஜஸ்டினியனின் ஆட்சிக்கால இறுதியில் பேரரசுக்குள் ஊடுறுவி அதனை அழிக்க முற்பட்டார்கள்.

இது தவிர கி.பி. 620ஆம் ஆண்டில், பேரரசர் ஹெராக்ளியஸ் (Emperor Heraclius) காலத்தில் கருங்கடலின் வடமேற்குப் பகுதியிலிருந்த 'ஆவர்கள்' (Avars) என்பவர்களால் துரத்தப்பட்ட யுகோஸ்லாவ்கள் (Yugoslavs) நாட்டுக்குள் பெருமளவு வந்து பைசான்டைன் பேரரசு வீழ்ச்சியடையக் காரணமாயினர். அதற்கடுத்துப் பலமுறை 'ஆவர்கள்' பேரரசின் மீது படையெடுத்தனர். அதனல் பெருத்த இழப்பு ஏற்பட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக பாரசீகர்களோடு பைசான்டைன் பேரரசு தொடர்ந்து போரிட வேண்டியதாக இருந்தது. பேரரசர்

ஹெராக்ளியஸின் (Emperor Heraclius) ஆட்சிக் காலத்தில் கி.பி. 614ஆம் ஆண்டு பாரசீக அரசன் ஷோஸ்ரோஸ் (King Chosroes) என்பவர் அர்மேனியா, சிரியா பகுதிகள் வழியாக பாலஸ் தீனத்திற்குள் புகுந்து தாக்குதல்களை நடத்தினர். பின்னர் ஜெருசலத்தைக் (Jerusalem) கைப்பற்றிக் கொண்டு, எந்தச் சிலுவையில் இயேசு கிறித்துவை அறைந்தார்களோ, அதே புனிதச் சிலுவையின் ஒரு பகுதியைக் கவர்ந்து சென்றனர். பைசான்டைன் பேரரசர் ஹெராக்ளியஸினால் அதனைத் தடுக்க முடியவில்லை. அவருடைய படைகளுக்குப் பாரசீகப் படைகளை எதிர்த்துப் போரிடப் போதிய தீரமும் உறுதியும் இல்லை. இருப்பினும் அடுத்த சில ஆண்டுகளுக்குள் ஹெராக்ளியஸ் தன் நிலையை வலுப்படுத்திக் கொண்டு கி.பி. 627ஆம் ஆண்டில் நினேவே (Nineveh) என்ற இடத்தில் பாரசீகர்களைத் தோற்கடித்துப் 'புனிதச் சிலுவையை' மீட்டார். அதனால் அவர் கிறித்தவ மதத்தையும், பேரரசையும் காத்தவர் எனப் புகழப்படுகின்றனர்.

# 5. ஷார்லமெய்ன்
## (CHARLEMAGNE)

**ஃபிராங்குகள் (Franks)**

கி.பி. 4ஆம் நூற்றுண்டிலேயே ஃபிரரங்குகள் என்ற சொல் வரலாற்று ஆசிரியர்களால் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. ஐரோப்பாக் கண்டத்திலுள்ள செய்ன் (Seine) நதிப் பகுதியில் வாழ்ந்து வந்த ஒரு வகையான ஜெர்மானிய இனத்தினரே ஃபிராங்குகள் என்று அழைக்கப்படுகின்றனர். இந்த ஃபிராங்குகள் தான் பிற்காலத்தில் ஃபிரான்சு (France) என்ற நாடு உருவான தற்குக் காரணமானவர்கள். இந்த இனத்தைச் சார்ந்த பல அரசர்கள் அப் பகுதியை ஆட்சி செய்திருக்கிருர்கள். அவ்வரசர்கள் பல வமிசங்களைச் சார்ந்தவர்களாவர். அவற்றுள் மெரோவின்ஜியன் (Merovingian) என்பது முதல் வமிசம் ஆகும். இவ் வமிசத்தைச் சார்ந்த அரசர்களுள் க்ளேவிஸ் (Clovis – 481–511A.D.) என்பவர் ஃபிராங்குகளுக்கான ஒரு அரசை (Frankish Kingdom) நிறுவினுர். அவர் கத்தோலிக்க மதத்தைத் தழுவித் தான் வென்ற நிலப் பகுதிகளிலெல்லாம், அம் மதத்தைப் பரப்பி தன் செல்வாக்கை வளர்த்துக் கொண்டார். அவர் உரோம் உட்படப் பல பகுதிகளை வென்ருர். அப் பகுதிகளில் எல்லாம் ஃபிராங்குகள் குடியேறி எல்லா இனத்தினரும் இணைந்து ஒரு புதிய பண்பாட்டினை உருவாக்கினுர்கள். க்ளேவிசுக்குப் பின்வந்த அரசர்களும் இத் தகைய இணைப்புக்கும், அரசின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவினர்.

ஃபிராங்கு அரசை ஆட்சி செய்த இரண்டாவது வமிசம் கரேலிஞ்சியன் (Carolingian Dynasty) வமிசம் என்று அழைக்கப் படுகின்றது. இவ் வமிசத்தை நிறுவியவர் சார்லஸ் மார்டெல் (Charles Martel) என்பவராவார். கரோலிஞ்சியன் வமிசத்து அரசர்களுள், சார்லஸ் மார்டெலின் பேரன் ஷார்லமெய்ன் என்பவரே மிகவும் புகழ்வாய்ந்தவராவார். இவருடைய தந்தை

பெபின் (Pepin) என்பவர் வட இத்தாலியின் பெரும் பகுதியை லம்பார்ட் அரசன் ஐஸ்டஃப் (Lombard King Aistulf) இடமிருந்து கைப்பற்றி உரோமிலிருந்த போப்பின் ஆட்சிக்குட்படுத்தினுர். எனவே திருச்சபைக்கும் அரசுக்கும் நெருங்கிய உறவுகள் வளர லாயின. இந்த நல்லுறவைப் பயன்படுத்திக் கொண்டு ஷார்ல மெய்ன் ஒரு பெரும் பேரரசை நிறுவுவதில் வெற்றி கண்டார்.

## ஷார்லமெய்னின் வெற்றிகளும், சிறப்புகளும்

ஷார்லமெய்ன் வரலாற்றில் மகா சார்லஸ் என்றும், முதலாம் சார்லஸ் என்றும் அழைக்கப்படுகின்ருர். இவர் அரசர் பெபினின் மகனுக கி.பி. 742ஆம் ஆண்டில் பவேரியாவில் பிறந்தார். அரசப் பரம்பரையில் பிறந்தாலும் இளமையில் கல்விகற்கும் வாய்ப்பினை அவர் பெறவில்லை. ஆயினும் பின்னர் கிரேக்க, இலத்தீன் மொழி களைப் படிக்கத் தெரிந்து கொண்டார். எழுதுவதை அவர் விரும்பியதில்லை என்ருலும், எப்பொழுதும் அறிஞர்கள் தன்னைச் சூழ்ந்திருப்பதைப் பெரிதும் விரும்பினுர். நுண்ணறிவும் சிந்தனை ஆற்றலும் மிக்கவராக இருந்தார். கி.பி. 768ஆம் ஆண்டில் அவருடைய தந்தை இறந்த பொழுது, ஷார்லமெய்ன் மட்டும் அரச ராகவில்லை. இவருடைய இளவல் கார்லோமன் (Carloman) என்பவருடைய உரிமைகளும் பரிசீலிக்கப்பட்டன. ஷார்லமெய்ன், கார்லோமன் ஆகிய இருவரும் இணை அரசர்களாக முடிசூட்டப் பட்டார்கள். ஆனுல் மூன்ருண்டுகளுக்குள் கார்லோமன் இறந்து விட்டார். கி.பி. 771ஆம் ஆண்டு முதல் ஷார்லமெய்ன், ஃபிராங்குப் பேரரசின் முழு அதிகாரங்களைப் பெற்ற மன்னரானுர்.

ஃபிராங்கு இனத்தவரையெல்லாம் ஒன்ருக இணைத்து ஒரு பெரும் கிறித்தவப் பேரரசை நிறுவ வேண்டுமென்பது ஷார்ல மெய்னின் கொள்கையாகும். உரோமிலிருந்த திருச்சபைக்குக் கட்டுப்பட்டு மக்கள் நடக்க வேண்டுமென்றும், அரசனை மக்கள் இறைவனின் தூதுவனுகக் கருத வேண்டுமென்றும் அவர் விரும்பினுர்.

தன்னுடைய ஆட்சிக் காலத்தில் ஏறக்குறைய முப்பது ஆண்டுகள்தொடர்ந்து பல போர்களில் ஈடுபட்டுச் சாக்சானியர்கள் (Saxons), லம்பார்டுகள் (Lombards), ஆவர்கள் (Avars), ஸ்லாவ்கள் (Slavs) முதலிய பல இனத்தவரை அடக்கி அவர்களின் ஆட்சிக் குட்பட்டிருந்த நிலப் பகுதிகளை வென்று ஒரு பெரும் பேரரசை நிறுவினுர்.

### சாக்சானியர்களுடன் போர்

கி.பி. 772ஆம் ஆண்டில் சாக்சானியர்கள் மீது படையெடுத்தார். சாக்சானியர் என்பவர்கள் எம்ஸ், வீசர். எல்ப் (Ems, Weser and Elb) ஆகிய நதிகளின் முகத்துவாரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த கொடூரமான இனத்தினர் ஆவர். கிறித்தவ மதத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அங்கு அனுப்பப்பட்ட கிறித்தவக் குருமார்கள் தாக்கப்பட்டார்கள். சாக்சானியர்கள் ஃபிராங்கு அரசுக்குத் தீராத் தொல்லைகளைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வந்தார்கள். ஷார்லமெய்னும் தொடர்ந்து பல ஆண்டுகள் போராடி அவர்களை அடக்கி, அவர்களின் தலைவன் விடுகிண்ட் (Widu Kind) என்பவனையும் தோற்கடித்துக் கிறித்தவ மதத்தை ஏற்கும்படிச் செய்தார். சாக்சானியர்களின் வாழ்க்கை முறைகளில் பல மாறுதல்கள் புகுத்தப்பட்டன. அவர்கள் நாகரிகமான மக்களாக வாழ்வதற்கேற்ற எல்லா வசதிகளையும் ஷார்லமெய்ன் செய்து கொடுத்தார்.

### லம்பார்டுகளுடன் போர்

கி.பி. 774ஆம் ஆண்டில் இத்தாலியின் வட பகுதியில் இருந்த லம்பார்டுகளைத் (Lombards) தோற்கடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. லம்பார்டு அரசன் டெசிடேரியஸ் (Desiderius) என்பவன், போப்ஆட்ரியனுக்கு (Pope Hadrian) அடிக்கடித் தொல்லைகள் கொடுத்து வந்தான். எனவே போப், ஷார்லமெய்னின் உதவியை நாடினார். ஷார்லமெய்ன் வட இத்தாலியின் மீது படையெடுத்து, லம்பார்டிய அரசரைத் தோற்கடித்து, அப்பகுதியைத் தன்னுடைய பேரரசோடு இணைத்துக் கொண்டார். அதில் ஒரு சிறு பகுதியை மட்டும் போப்பினுடைய ஆட்சிக்குட்படுத்தினார். சில ஆண்டுகள் கழித்து லம்பார்டுகள் மீண்டும் கலகம் செய்தனர். அக் கலகத்தையும் ஷார்லமெய்ன் ஒடுக்கினார்.

கி.பி. 778ஆம் ஆண்டில் தன் திறமையைக் கண்டு அஞ்சும் வண்ணம் ஸ்பெயினின் (Spain) ஒரு பகுதியை முகம்மதியர்களிடமிருந்து ஷார்லமெய்ன் வென்றார். ஸ்லாவ்கள், ஆவர்கள், பல்கேரியர்கள் போன்ற இனத்தவரையும் வென்று மிகப் பெரிய பேரரசை உருவாக்கினார். தான் வென்ற பகுதிகளிலெல்லாம் கிறித்தவ மதத்தைப் பரப்ப எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டார்.

### உரோமானியப் பேரரசர் முடிசூட்டப்படுதல்

இவ் வெற்றிகளுக்குப் பிறகு கி.பி. 800ஆம் ஆண்டு அவருடைய ஆட்சிக் காலத்தில் மிக முக்கியமான நிகழ்ச்சி ஒன்று நடை

பெற்றது. உரோமில் **போப் மூன்றும் லியோ** (Pope Leo III) திருச் சபையின் தலைவராக இருந்தார். அவருக்கு முன்னர் இருந்த **போப் ஆட்ரியனின்** (Pope Hadrian) உறவினர்களும் ஆதரவாளர் களும், மூன்றும் லியோவைக் கடுமையாகத் தாக்கிப்பேசி, அவரு டைய தலைமையைக் குறைகூறினார்கள். ஒருமுறை அவரைக் கைது செய்து சிறையிலடைத்தார்கள். எப்படியோ தப்பித்துக்கொண்டு போப் லியோ, ஷார்லமெய்னின் உதவியை நாடினார். ஷார்ல மெய்ன், உரோமுக்கு விரைந்து சென்று, எதிர்ப்புகளை முறியடித்து, மூன்றும் லியோவை உரோமின் தலைமைப் போப்பாக அமர்த்தினார். நன்றிமறவா போப் மூன்றும் லியோ அரசனைச் சிறப்பிக்கத் தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

அதே ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று ஷார்லமெயின் உரோமிலிருந்த **புனித பீட்டர் ஆலயத்தில்** (St. Peter's Church) இறைவழிபாடு செய்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில் போப் மூன்றும் லியோ ஷார்லமெய்ன் தலையின் மீது கிரீடத்தை அணி வித்து அவரை 'உரோமானியப் பேரரசர்' எனப் பிரகடனப் படுத்தி னார். இந்த நிகழ்ச்சி குறிப்பாக உரோமானியப் பேரரசின் வரலாற் றிலும், பொதுவாக ஐரோப்பிய வரலாற்றிலும் மிக முக்கியமான நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் பழைய உரோமா னியப் பேரரசு ஃபிராங்கு அரசரின் தலைமையின் கீழ் மீண்டும் செயல் படத்துவங்கியது. பேரரசர் ஷார்லமெயின் அகஸ்டஸ், என்றும் கூடச் சிறப்பிக்கப் பட்டார். பழைய உரோமானியப் பேரரசு அழியவில்லை என்ற கருத்து வலுவடைந்தது. மேலும் அப் பேரரசின் மீது படையெடுத்து வந்த ஜெர்மானிய இனத்தவர் அதனை அழிக்க முற்படாமல், வளர்க்கவே வந்தார்கள் என்றும் கருதப்பட்டது. போப், அரசருக்கு முடி சூட்டியதால் அரசுக்கும் திருச்சபைக்கும் நல்லுறவுகள் வளர்ந்தன. பேரரசைப் போலவே திருச்சபையும் சிறிது சிறிதாக வலுவடைந்து வந்தது. ஜெர்மானிய இனத்தவருள், ஃபிராங்கு இனத்தவர் மட்டுமே பெருமளவில் கிறித்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டார்கள். போப்பினால் பேரரசர் முடி சூட்டப்பட்டதால் மற்ற ஐரோப்பிய அரசர்களும் ஷார்லமெய்னைத் தெய்விகமானவராக மதித்துத் தங்கள் மரியாதை யைத் தெரிவித்துக் கொண்டனர். மற்றும், பொது மக்கள் கிறிஸ்துமஸ் நன்னாளில் இந் நிகழ்ச்சி நடைபெற்றதால் இதனை இனி நடக்கப்போகும் நல்ல நிகழ்ச்சிகளுக்கு அறிகுறியாகவே கருதினர்.

இந்த நேரத்தில் மற்றொரு கருத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். ஷார்லமெய்ன் தன்னை உரோமானியப் பேரரசராக

முடி சூட்டிக் கொள்ள வேண்டுமென முன்னரே திட்டமிட்டிருந்தார். அதனை அறிந்தோ, அறியாமலோ போப் முந்திக்கொண்டு கி.பி. 800ஆம் ஆண்டில் முடிசூட்டி விட்டார். இது கடவுள் செயலாகவே கருதப்பட்டது. அதனால் ஷார்லமெய்னின் ஆட்சிக் காலத்திலிருந்தே, இறைவழி அரசுரிமைக் கோட்பாட்டினை ஐரோப்பிய அரசர்கள் பொதுவாகக் கடைப்பிடிக்க முற்பட்டார்கள். மக்களும் தம்மைக் காப்பாற்றக் கடவுளால் அனுப்பப்பட்ட தேவ தூதுவனுகவே (Vicegerent) மன்னனைக் கருதினார்கள். எனவே நாட்டிற்குள் அமைதியும் ஒருமைப்பாடும் நிலவின.

**கரோலிஞ்சியன் மறுமலர்ச்சி (Carolingian Renaissance)**

ஷார்லமெய்னின் ஆட்சிக்காலத்தில் அரசியல், மதம், சட்டம், கல்வி மற்றும் பல்வேறு கலைத்துறைகளில் அவர் செய்த மாறுதல்களையும் சீர்த்திருத்தங்களையும் 'கரோலிஞ்சியன் மறுமலர்ச்சி' என்று பொதுவாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

ஷார்லமெய்னின் பரந்த பேரரசின் எல்லைகள் பிரனீஸ் மலைகளிலிருந்து எல்ப் நதிவரையிலும், ஏட்ரியாடிக் கடலின் வடகரை வரையலும், இத்தாலியின் பெரும்பகுதியைக் கொண்டதாகவும் விரிந்திருந்தன. ஆகென் (Aachen) அவருடைய தலைநகரமாகும். அது பேரரசின் வடக்கே இன்று ஐக்ஸ்-லா-ஷாபெல் (Aix-la-Chapelle) என வழங்கும் பகுதியில் இருந்தது. தன்னுடைய பேரரசைப் பல சிறு நிலப்பகுதிகளாகப் பிரித்து அப் பகுதிகளில் கவுண்ட்கள் (Counts) எனும் ஆட்சியாளர்களை நியமித்தார். வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற்றிருந்த அவர்கள் நீதி, அமைதி, நாட்டு வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தினார்கள். இவர்களுடைய ஆட்சி செவ்வனே நடைபெறுகிறதா இல்லையா என்பதைக் கண்காணிக்க அடிக்கடி மத்திய அரசு அலுவலர்கள் மாவட்டங்களைப் பார்வையிட்டு மக்களின் குறைகளை அறிந்து அவற்றைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். எல்லைப் பகுதிகளிலும் வரம்புடைய அதிகாரங்களைப் பெற்ற மார்க்ரேவ் (Margraves) என்ற அலுவலர்களை நியமித்துப் பார்பேரியர்களின் கலகங்களை அடக்கினர்.

அவர் காலத்தில் பண்ணைச் சொந்தக்காரர்கள் பெருமளவில் இருந்தார்கள். அவர்கள் காலாள் படையையும் குதிரைப்படையையும் வைத்துக் கொண்டிருப்பது வழக்கம். போர்க்காலங்களில் அரசனுக்குப் படையைக் கொடுத்து அவர்கள் உதவினார்கள். இருப்பினும் அவர்களுடைய உதவியையே நம்பியிராமல் அரசர் தனியே பெரும்படையை வைத்திருந்தார். ஷார்லமெய்னின் ஆட்சிக்

காலத்தில் முகமதியர்களின் படையெடுப்புகள் அடிக்கடி ஏற்பட்ட தால் வன்மை மிக்க படையை ஆயத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியதாக இருந்தது.

பண்ணைகளிலிருந்து வசூலிக்கப்பட்ட வரிப்பணம் மிக முக்கிய மான வருவாய் ஆகும். நாட்டிலிருந்த பெரும்பாலான பண்ணை களுக்கு அரசரே உரிமையாளராக இருந்தார். இப் பண்ணைகளில் வேளாண்மை வளர்ச்சிக்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் எடுக் கப்பட்டன. ஒவ்வொரு பண்ணையும் 'வில்லா' அல்லது 'மேனர்' (Villa or Manor) என்றழைக்கப்பட்டது. ஒவ்வொரு மேனரும் ஒரு 'ஸ்டீவார்டின்' (Steward) பொறுப்பில் இருந்தது. இந்த வில்லாக்கள் அல்லது மேனர்களை நிருவகிக்கும் முறைகள் பற்றிப் பல ஆணைகள் (Capitularede Villis) விடுக்கப்பட்டன. அரச ருக்குப் பண்ணை முறை பற்றிய எல்லாத் தகவல்களும் தெரிந் திருந்தன.

ஷார்லமெய்ன் ஒவ்வொரு ஆண்டும் நாட்டிலுள்ள எல்லாப் பிரபுக்களையும், பண்ணைச் சொந்தக்காரர்களையும் மற்றும் குருமார் களையும் தலை நகரில் கூட்டி ஆட்சித் துறைத் தொடர்புடைய பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி உரையாடல் நிகழ்த்துவது வழக்கம். அங்ஙனம் சில ஆண்டுகள் செய்தபின் பல சட்டங்களைத் தொகுத்து வெளியிட்டார். (Capitulavies of Charlemagne) அவை நாட்டின் ஆட்சிமுறைக்குப் பெரிதும் பயன்பட்டன. இத் துறையில் மன்னர் தன் நுண்ணறிவைப் பயன்படுத்தி நாட்டின் ஒழுங்கையும், அமைதி யையும், நீதியையும் நிலை நாட்டினார். கிழக்கு உரோமானியப் பேரரசின் மன்னர் ஜஸ்டினியனைப் போல் அவ்வளவு சிறந்த சட்ட நிபுணர் அல்லர் என்றாலும் ஷார்லமெய்ன் தன் நாட்டின் அமைதி யான வளர்ச்சிக்கு இச் சட்டங்களைப் பயன்படுத்தினார்.

மதத் துறையில் மிகுந்த செல்வாக்கும் மதிப்பும் ஷார்ல மெய்னுக்கு இருந்ததென்பதை முன்னரே கண்டோம். திருச் சபையின் குருமார்கள் அரசனின், அதிகாரங்களுக்குக் கட்டுப் பட்டே நடந்து கொண்டார்கள். அவர்கள் மதத்துறையில் மட்டுமன்றி, அரசியல், மற்றும் ஆட்சித்துறையிலும் பணியாற்றி னார்கள். போப்புகள், பிஷப்புகள் ஆகியோரை நியமிப்பதிலும், தேர்ந்தெடுப்பதிலும் அரசனின் மேற்பார்வையிலேயே நடவடிக் கைகள் எடுக்கப்பட்டன. மதத்துறையில் கூட உரோமில் இருந்த தலைமைப்போப்பை விட அரசரே உயர்ந்தவர் என்றும், 'கடவுளின் மதகுரு' (God's vicar) என்றும் கருதப்பட்டார். ஷார்லமெய்ன் உருவாக்கிய சட்டங்கள் மதத் துறை விவகாரங் களையும் ஒழுங்குபடுத்தின.

ஷார்லமெய்ன் நுண்ணறிவு படைத்தவராயினும், அதிகமாக கல்வி கற்றவர் அல்லர் என்பதை முன்னரே கண்டோம். கல்வியின் மேன்மையை உணர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் பள்ளிகளைத் திறந்தார். தலைநகரான ஆகென்னிலேயே ஒரு பெரும்பள்ளியை நிறுவி, செல்வந்தர்களின் குழந்தைகள், மதத் துறையில் ஈடு பட்டிருப்பவர்கள் கல்வி கற்க வகை செய்தார். தலைநகரில் பெரியதொரு நூலகத்தை ஏற்படுத்தினார். கற்றறிந்தவர் தன்னை எப்பொழுதும் சூழ்ந்திருப்பதையும், அவர்களுடன் உரையாடுவதையும் மன்னர் விரும்பினார். கற்றறிந்த மேதைகளின் குழுவொன்று அரண்மனையில் இருந்தது. அவர்களுக்கெல்லாம் தலைவராக **அல்க்வின்** (Alcuin of york) என்பவர் இருந்தார்.

கலைச்சிறப்புகள் மிகுந்த அரண்மனையொன்றையும் தேவாலயம் ஒன்றினையும் தன் நகரில் அவர் கட்டுவித்தார். இசைக் கலையின் வளர்ச்சிக்கு ஆவன செய்தார்.

இங்ஙனம் பல்வேறு துறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டதால் அந்த மாறுதல்களை, கரோலிஞ்சியன் மறுமலர்ச்சி என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

வரலாற்றில் ஷார்லமெய்னின் பெயர் மங்காப் புகழ் பெற்றதாகும். அவருடைய பெயரும், ஆட்சிக்கால நிகழ்ச்சிகளும், பல்வேறு ஐரோப்பிய இலக்கியங்களுக்கு அடிப்படைக் கருத்துகளாக அமைந்திருக்கின்றன. இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில் அவரை விட ஒரு சிறந்த பேரரசைக் காண்பது அரிது. ஷார்லமெய்னின் பெருமைகளைப் பற்றியெல்லாம் அவருடைய செயலர் ஐன்ஹார்ட் (Eignhard) என்பவர் 'ஷார்லமெய்னின் வாழ்க்கை வரலாறு' (Life of Charlemagne) என்ற நூலில் தெளிவாகக் கூறியுள்ளார்,

**ஃபிராங்குப் பேரரசு வீழ்ச்சியடைதல்**

ஷார்லமெய்ன் தன் நாற்பத்தாறு ஆண்டு ஆட்சிக்காலத்தில் ஃபிராங்குப் பேரரசை வலிமை மிக்கதாகவும் வளம் பொருந்தியதாகவும் உருவாக்கினார். எனினும் அவ்வரசு தொடர்ந்து பல ஆண்டுகள் நீடிக்கவில்லை. கி. பி. 814 ஆம் ஆண்டில் ஷார்லமெய்ன் இறந்தபொழுது அவருடைய ஒரே மகன் லூயி (Louis the Pious 814-840. A.D.) என்பவர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். ஆனால் அவருடைய ஆட்சிக்காலத்தில், உள் நாட்டுக் கலகங்களாலும், பேரரசின் வடக்கிலும் தெற்கிலும் ஏற்பட்ட

அயலவர்களின் தாக்குதல்களாலும், மற்றும் அவருடைய மூன்று மகன்களாகிய லொதைர் லூயி, சார்லஸ் (Lothair, Louis, Charles) ஆகியோருக்கிடையே தொடர்ந்து ஏற்பட்ட சச்சரவுகளாலும் உள் நாட்டு அமைதியும் ஆட்சிமுறையும் சீர்குலைந்தன. இள வரசர்கள் மூவரும் தங்கள் தந்தையைச் சூழ்ச்சி செய்து கொலை செய்யவும் முயன்றனர்கள். அமைதியில்லா அரசராக லூயி கி. பி. 840ஆம் ஆண்டில் மாண்டார்' லூயிக்குப்பின் அவ ருடைய மகன்களுக்கிடையே பதவிப் போட்டி ஏற்பட்டது; உள் நாட்டு அமைதி கெட்டது.

இப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண கி.பி. 843ஆம் ஆண்டில் பிரபுக்கள் சிலர் கூடி, இளவரசர்களின் ஒப்புதலோடு வெர்டன் உடன்படிக்கை (Treaty of Verdun) செய்து முடிக்கப்பட்டது. அதன்படிப் பேரரசு மூன்று இளவரசர்களுக்கிடையே பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது' மூத்த மகன் லொதைர் ரைன் நதியின் முகத்துவாரத்திலிருந்து டைபர் நதி முகத்துவாரம் வரையிலுள்ள வரையறுக்கப்பட்ட ஒரு பகுதியைப் பெற்றார்; இப் பகுதிக்குக் கிழக்கே இருந்த மற்ற பகுதிகளை இரண்டாம் மகன் லூயி பெற்றார். மேற்குப் பகுதிகளை மூன்றும் மகன் சார்லஸ் பெற்றார். அப்படி இருந்தும் இம் மூவருக்கும் இடையே தொடர்ந்து சச்சரவுகள் இருந்து வந்தன. கி பி. 9 ஆம் நூற்றாண்டு முடிவடைவதற்குள் ஃபிராங்குப் பேரரசு வீழ்ச்சியுற்று அப் பகுதிகளில் ஃபிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகள் தோன்றலாயின.

# 6. இஸ்லாம் மதம்

## (அ) முகமது நபியினுல் இஸ்லாம் மதம் நிறுவப்படுதல்

ஆசியாக் கண்டத்தின் தென் மேற்கிலுள்ள அரா்பியத் தீபகற்பத்தில் பெரும்பாலும் நாடோடிக் கூட்டத்தினரே இடைக்காலத்திற்கு முன்னர் வாழ்ந்து வந்தனர். அப் பகுதி எந்தக் காலத்திலும் நிலையான ஒரு அரசனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததில்லை. அது பல்வேறு காலங்களில் எகிப்து, பாரசீகம்; மாசிடோனியா அல்லது சிரியாவின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இப் பகுதியின் பெரும் பரப்பு பாலைவனமாக உள்ளது; வேளாண்மைக்கு ஏற்றதல்ல எனவே மக்கள் தொகையும் குறைவு. இப் பகுதியில் மெக்கா, மெதினு என்று இரண்டு நகரங்கள் உள்ளன. அவற்றுள் மெக்கா என்ற நகரம் புகழ் வாய்ந்தது. இந் நகரத்தில் காபா (Kaaba) என்ற புகழ்பெற்ற கோயில் உள்ளது. அக் கோயிலின் ஓரிடத்தில் 'கருமையான வால்நட்சத்திரக் கல்' (Biock Meteoric Stone) ஒன்று உள்ளது. இக் கல்லை அராபியர்கள் புனிதமானதாகக் கருதினுர்கள். இவர்கள் வணங்கிவந்த பல கடவுளர்களின் தலைமைச் சின்னமாக அக் கல்லை அவர்கள் கருதினுர்கள். பல்வேறு கருத்துகளையும் எண்ணங்களையும் கொண்ட அராபியர்கள், சில குறிப்பிட்ட காலங்களில் இக் கோயிலில் கூடி, மதச் சடங்குகளைச் செய்து முடித்துக் கலைந்து செல்வார்கள். எனவே, மெக்கா நகரம் இஸ்லாம் மதம் தோன்றுவதற்கு முன்னரே புனிதமான, புகழ்பெற்ற நகரமாக இருந்தது.

இந்த நகரத்தில்தான் முகமது நபி கி.பி. 570ஆம் ஆண்டில் ஏழைக் குடும்பமொன்றில் பிறந்தார். முறையான கல்வியறிவைப் பெறக்கூட அக் குடும்பத்தில் வசதியில்லை. இளைஞராக இருக்கும் போதே கதிஜா (Khadija) என்ற பெண்ணிடம் வேலைக்காரராக அமர்ந்தார். அந்த அம்மையார் ஒரு விதவை; பெரிய பணக்கார வியாபாரி. அவரிடம் முகமது உண்மையுள்ளவராகவும், நம்பிக்

கைக்குப் பாத்திரமானவராகவும். கடுமையான உழைப்பாளியாகவும் இருந்தார். கதிஜா அம்மையார் இவரை வாணிகம் செய்ய சிரியா, பாலஸ்தீனம் போன்ற இடங்களுக்கு அனுப்புவதுண்டு. அப் பகுதிகளில் யூதர்களும், கிறித்தவர்களும் பெருமளவில் இருந்தனர். யூதர்கள் 'ஜெஹோவா' (Jehovah) என்ற கடவுளையும், கிறித்தவர்கள் இயேசு கிறிஸ்துவையும் வணங்கிவந்தார்கள். அவர்களின் 'ஒரே கடவுள் கொள்கை' முகமதுவை வெகுவாகக் கவர்ந்தது. இருப்பினும் உடனுக்குடன் அவருடைய மனதில் மாறுதல்கள் ஏற்படவில்லை. தொடர்ந்து தன்னுடைய தலைவி கதிஜாவின் வாணிக வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டு பெருஞ்செல்வத்தைச் சேர்த்தார். பின்னர் அந்த அம்மையாரையே திருமணமும் செய்து கொண்டார்.

முகமதுவின் நாற்பதாவது வயதில் அவர் மனத்தில் புதிய கருத்துகளும் கிளர்ச்சிகளும் தோன்றலாயின. அக் கருத்துகளை மக்களிடையே கூறினர். கேப்ரீயல் (Gabriel) என்ற தேவதூதுவன் தனக்கு அறிவொளி ஊட்டியதாகவும், கடவுள் ஒருவரே என்ற கருத்தை மக்களிடம் பரப்பும்படித் தனக்குக் கூறியதாகவும், முகமது மக்களிடையே கூறினர். முதலில் மக்கள் அவருடைய கருத்துகளை ஏற்க மறுத்தனர். முகமதுவின் மனைவி கதிஜா, வளர்ப்பு மகன் அலி (Ali), அவருடைய நண்பர் அபுபேகர் (Abu Baker) வேலைக்காரர் செய்ட் (Zeid) மட்டுமே அவருடைய புதிய கருத்துகளை ஏற்றுக்கொண்டார்கள். நாளடைவில் அவருடைய கருத்துகளை ஏற்றுக்கொண்டவர் எண்ணிக்கை வளரலாயிற்று. அதே நேரத்தில் பல கடவுளர்களையும், பல நம்பிக்கைகளையும் கொண்ட அராபியர் முகம்மதுவை வெறுக்க ஆரம்பித்தனர். அவருடைய உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து ஏற்படும் சூழ்நிலையும் உருவாயிற்று. எனவே, அவர் கி.பி. 622ஆம் ஆண்டில் மெக்காவிலிருந்து மெதினவிற்குத் தப்பிச் சென்றார். இந் நிகழ்ச்சியை 'ஹிஜிரா' (Hijira) என்று முகமதியர் கூறுகின்றார்கள். இவ்வாண்டிலிருந்தே 'ஹிஜிரா சகாப்தம்' தொடங்குகின்றது.

மெதினவில் முகமது நபி கூறிய கருத்துகளை மக்கள் ஏற்றுக்கொண்டனர். கடவுள் ஒருவரே; அவரே அல்லா; அவரைத் தினமும் ஐந்து முறை வணங்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார். பெரும்பாலான மக்கள் அவருடைய புதிய தத்துவத்தை ஏற்றுக்கொண்டு அவரைக் கடவுள்போல் மதித்தார்கள். அவர் விரைவில் பெரும் புகழடைந்தார். ஏழாண்டுகள் கழித்து மீண்டும் மெக்காவிற்கு வந்தார். படையுடன் வந்து அந் நகரைக் கைப்பற்றித் தன் மதக் கருத்துகளைப் பரப்பினர். அவர் கூறிய புதிய கருத்து

களின் தொகுப்பே 'கொரான்'(Koran) என்று சொல்லப்படுகின்றது. இது முகம்மதியர்களின் புனித நூலாகும். முகம்மதியர்களின் வாழ்க்கை நெறிகள் இந் நூலில் கூறப்பட்டுள்ளன. இம் மதத்தை உலகத்தின் பல்வேறு பகுதிகளில் பரப்புவதற்கான முயற்சிகள், முகம்மதுவிற்குப் பின் வந்த கலிபாக்களால் (Caliphs) எடுத்துக் கொள்ளப்பட்டன.

### (ஆ) இஸ்லாம் மதம் ஆசியா, ஆப்பிரிக்காக் கண்டங்களில் பரவுதல்

முகமது கி.பி. 632ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். அவருடைய மறைவுக்குப் பின்னர் இஸ்லாம் மதத்தைப் பரப்பும் பொறுப்பை அவருடைய நண்பர் அபுபேகர் மேற்கொண்டார். அவர் மெக்காவில் அரசர்போல் வாழ்ந்தார்; பெரும் படையை வைத்திருந்தார். கலிபா என்ற பட்டப்பெயரையும் அவர் ஏற்ருர். அவர் அரசியல் தலைவராகவும், மதத் தலைவராகவும் விளங்கினுர். பல நாடுகளை வென்று, அங்கெல்லாம் இஸ்லாம் மதத்தைப் பரப்ப எண்ணங் கொண்டார்.

அம் முயற்சியின் முதல் படியாகச் சிரியாவின் ஒரு பகுதியை வென்று அங்கு அம் மதத்தைப் பரப்பினுர், ஆனல் அதற்குள் கி.பி. 634ஆம் ஆண்டில் அவர் இறந்துவிட்டார். அவரை அடுத்து ஓமர் (Omar) என்பவர் கலிபா ஆனுர்.

இஸ்லாம் மதத்தை உலகம் முழுவதும் பரப்ப ஓமர் எண்ணினுர். கி.பி. 637ஆம் ஆண்டில் ஜெருசலத்தில் ஒரு பள்ளிவாசலைக் கட்டுவித்தார். பின்னர் பாரசீகத்தின்மீது படையெடுத்து அப் பகுதி முழுவதையும் வென்ருர். கிழக்கு உரோமானியப் பேரரசின் படைகளைப் பல இடங்களில் தோற்கடித்துச் சிரியா முழுவதையும் கைப்பற்றினுர். கி.பி. 639ஆம் ஆண்டில் எகிப்தின் மீது படையெடுத்து அதனை வென்று தன் நாட்டோடு இணைத்துக் கொண்டார். மற்றும்ஆப்பிரிக்காவின் வடபகுதியையும் கைப்பற்றித் தான் வென்ற எல்லாப் பகுதிகளிலும் இஸ்லாம் மதத்தைப் பரப்பப் பல்வேறு முயற்சிகளையும் எடுத்துக்கொண்டார். இம் மதத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்குக் கடும் தண்டனைகளைக் கொடுத்தார். ஆனல் ஜெருசலத்தில் வாழ்ந்த கிறித்தவர்களுக்கு மட்டும் அவர்களுடைய கடவுளை வணங்குவதற்கு உரிமை வழங்கப்பட்டது. வளர்ந்துவரும் முகமதியர்களின் செல்வாக்கையும், வலிமையையும் கண்டு ஐரோப்பிய அரசுகள் அஞ்சின. அந்த அச்சத்திற்கு ஏற்றவாறு ஐரோப்பிய நிலப்பகுதிகளிலும் முகமதியர்களின் தாக்குதல் நடைபெற்றது.

ஓமர் கி. பி. 643ஆம் ஆண்டில் இறந்தார். அவரை அடுத்து ஆத்மன் (Ohthman) என்பவர் கலிபா ஆனார். ஆனால் அவர் அவ்வளவு திறமை வாய்ந்தவர் அல்லர். அவருடைய ஆட்சிக் காலத்தில் (கி.பி. 643 – 656) முக்கியமான நிகழ்ச்சிகள் எவையும் நடைபெறவில்லை.

அவருக்குப்பின் முகமதுவின் வளர்ப்பு மகன் அலி கலிபா ஆனார். அவர் ஆறு ஆண்டுகள் கலிபாவாக இருந்தார். இவருக்குப் பின் பதவிப் போட்டியும் பூசல்களும் ஏற்பட்டன.

அலிக்குப் பின்னர் ஆத்மனின் வழிவந்தவர்கள் கலிபாக்களாக கி.பி. 750ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தார்கள். அவர்கள் உமாய்யத் (Umayyads) குடும்பத்தினர் என்று அழைக்கப்படுகின்றனர். இக் கலிபாக்களின் ஆட்சிக் காலத்தில் தான் வடமேற்கு ஆப்பிரிக்காவின் பெரும்பகுதியில் இஸ்லாம் மதம் பரவியது.

**(இ) ஐரோப்பாக் கண்டத்தின் மீது முகமதியர்களின் தாக்குதல்களும், அதன் விளைவுகளும்**

கி.பி. 711ஆம் ஆண்டில் முகமதியப் படைகள் ஐபீரியத் தீபகற்பத்தை (ஸ்பெயின்) வெல்லத் திட்டமிட்டன. எனவே ஜிப்ரால்டர் நீர்ச்சந்தியைக் (Straits of Gibralter) கடந்து ஸ்பெயினுக்குப் படைகள் சென்றன. அப் பகுதியில் அப்பொழுது விசிகோத்களின் ஆட்சி நடைபெற்று வந்தது. அவர்கள் அங்கிருந்த யூதர்களைத் துன்புறுத்தி வந்தார்கள். எனவே, யூதர்கள் முகமதியப் படைகளுக்கு உதவி செய்தார்கள். விசிகோத்களின் ஆட்சி வீழ்த்தப்பட்டு ஸ்பெயின் முழுவதும் கைப்பற்றப்பட்டது. பின்னர் ஸ்பெயினுக்குத் தென்கிழக்கே மத்தியத்தரைக் கடலிலுள்ள பாலியாரிக் தீவுகளும் (Balearic Islands) கைப்பற்றப்பட்டன.

இவ் வெற்றிகளால் ஊக்கம் கொண்ட முகமதியப் படைகள் சில ஆண்டுகள் கழித்து ஃபிராங்கு அரசர் சார்லஸ் மார்டெலின் ஆட்சிக்குட்பட்டிருந்த கால் பகுதியை(Gaul-i.e. Modern France) வெல்லத் திட்டமிட்டன. கி.பி. 732ஆம் ஆண்டில் முகமதியப் படைகள் பிரனீஸ் மலைப் பகுதிகளிலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டன. சார்லஸ் மார்டெல் திறமை வாய்ந்த அரசர். அவருடைய பெரும் படைகளுக்கும் முகமதியப் படைகளுக்கும் கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் சார்லஸ் மார்டெலின் படைகள், முகமதியப் படைகளை லொய்ர் (Loire) நதியின் தெற்குக் கரையில் உள்ள டியூர்ஸ் (Tours) என்ற

இடத்தில் தோற்கடித்துச் சிதறியோடச் செய்தன. இப் போர் ஐரோப்பிய வரலாற்றில் மிக முக்கியமான ஒன்ருகும். இப் போரில் முகமதியர்கள் வெற்றிபெற்றிருந்தால் ஐரோப்பாவின் வரலாறு வேறு விதமாக அமைந்திருக்கும்.

இதற்கிடையில் முகமதியக் கொள்ளைக்காரர்கள் கிழக்கு உரோமானியப் பேரரசின் தலை நகரமான கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றிக் கொள்ளையடிக்க முயன்றனர். ஆனுல் அவர்களை அரசர் மூன்ரும் லியோ கடுமையாகத்தாக்கிப் பறந்தோடச் செய்தார். மேலும் பல முகமதியப் படைகளை ஆசியாமைனரின் தென் கிழக்குப் பகுதியிலுள்ள டாரஸ் மலைப் பகுதிகளில் லியோ தோற்கடித்து, அத் தோல்வியை முகம்மதியருலகம் உணரும்படிச் செய்தார். அடுத்த மூன்று நூற்ருண்டுகளுக்கு ஆசியா மைனர் கிழக்கு உரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. அதனை முகமதியர்களால் கைப்பற்ற முடியவில்லை.

மேற்கு உரோமானியப் பேரரசு வளரவும், கிழக்கு உரோமானியப் பேரரசு அழியாமல் இருக்கவும் முறையே சார்லஸ் மார்டெலும், மூன்ரும் லியோவும் எங்ஙனம் வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்களாக இருக்கிருர்கள் என்பதை நாம் அறிகின்ருேம்.

இருப்பினும், முகமதியர்களின் தாக்குதல் ஐரோப்பிய நாடு களின் மீது அடிக்கடி நிகழ்ந்த வண்ணமிருந்தது. ஒருமுறை கார்தேக்ஜுகுத் தெற்கில் கெய்ரவான் (Kairawan) என்ற நகரத்தில் வலிமையாக இருந்த முகமதியப் படைகள் ஒன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் சிசிலி, கார்டினியா மற்றும் கார்சிகா போன்ற தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டன. மேலும் இத்தாலி, ஃபிரான்சு ஆகிய நாடுகளின் தென் பகுதிகளை அடிக்கடித் தாக்கி வந்தன. கி.பி. 846ஆம் ஆண்டில் உரோம் நகரத்தின் மீது பெரும் படையெடுப்பை நிகழ்த்தி அந் நகரைக் கொள்ளையடித்து நாசப்படுத்திஞர்கள். இங்ஙனம் முகமதியர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குத் தீராத தொல்லைகளைத் தந்து வந்தனர்.

பொருளாதாரத் துறையில் பல இழப்புகள் ஐரோப்பிய நாடு களுக்கு ஏற்பட்டன. குறிப்பாக, மத்தியத்தரைக் கடலிலுள்ள பெரும்பான்மையான தீவுகளை முகமதியர்கள் கைப்பற்றிக் கொண்டதால் ஐரோப்பிய வணிகர்கள் சுதந்தரமாகவும் அச்சமின்றியும் வாணிகம் செய்ய முடியவில்லை. அவர்களுடைய கப்பல்கள் முகமதியர்களால் தாக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப் பட்டன. எனவே ஐரோப்பாக் கண்டத்திற்கும் ஆசியாக்

கண்டத்திற்குமிடையே நடைபெற்று வந்த வாணிகம் பெருமளவு தடைப்பட்டது.

மதத் துறையில் முகமதியர்களின் ஆட்சிக்குட்படுத்தப்பட்ட பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்கள் இஸ்லாம் மதத்தை ஏற்றுக் கொள்ளும்படித் துன்புறுத்தப்பட்டார்கள். ஆனால் ஐரோப்பியர் இம் மதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவேதான் இன்றும் ஐரோப்பாவில் ஒரு நாடுகூட இஸ்லாமிய நாடாக இல்லை. ஐரோப்பிய அரசர்களும் முகமதியர்களின் கருணையற்ற தாக்குதல் களுக்குப் பழி வாங்கத் தக்கவாய்ப்புகளை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். அதன் விளைவாகவே பிற்காலத்தில் சிலுவைப் போர்கள் நடத்தப்பட்டன. அப் போர்களின்போதும் ஐரோப்பியர் பெரும் படையையும் பொருளையும் இழந்தனர்.

ஆனால் கல்வி, மற்றும் கலைத்துறைகளில் முகம்மதியர்களிட மிருந்து ஐரோப்பியர்கள் பல நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டார் கள். ஸ்பெயினில் முகம்மதியர்களின் ஆட்சி ஏற்பட்டதும் அப் பகுதியின் பல்துறை வளர்ச்சிக்கும், கலைகளின் மேம்பாட்டுக்கும் அவர்கள் உழைத்தார்கள். கலையழகு மிக்க பல பள்ளி வாசல் களைக் கட்டினார்கள். அவற்றுள் கார்டோவா (Cordova) என்ற நகரத்தில் கட்டப்பட்ட பள்ளிவாசல் பிரம்மாண்டமான ஆசிய ஐரோப்பியக்கலை வனப்பு மிக்கக் கட்டடம் ஆகும். அது இன்றும் கத்தோலிக்கக் கிறித்தவர்களின் தேவாலயமாகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. இத்தகைய கலையம்சங்கள் மிக்க பல அரண்மனை களும் கட்டப்பட்டன. அவற்றுள் கிரனடா (Granada) நகரத்தில் கட்டப்பட்ட அல்ஹம்ப்ரா (Alhambra) என்ற அரண்மனை சிற்பக் கலையின் மேன்மையை உலகுக்கு விளக்கும் ஈடு இணையற்ற கருவூலமாக விளங்குகிறது. மேலும், கண்ணைக் கவரும், மணம் வீசும் மலர்கள் மிகுந்த பரந்த பூந்தோட்டங்கள் பல ஏற்படுத்தப் பட்டன.

இவை தவிர முகமதியர்கள் ஸ்பெயினில் கார்டோவாப் பல்கலைக் கழகத்தினை (University of Cardova) நிறுவினார்கள். இப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கிறித்தவ மாணவர்கள் கல்வி கற்றார்கள். அவர்கள் ஆசிய, ஐரோப்பிய நாக ரிகத்தையும் பண்பாட்டையும் இணைக்கும் பாலங்களாகவும், மதப் பூசல்களைத் தவிர்க்கும் சமாதானப் புறாக்களாகவும் பயன்பட்டார் கள். பல ஆண்டுகளுக்குப் பின்னர் தோற்றுவிக்கப்பட்ட பாரிஸ், ஆக்ஸ்போர்ட் போன்ற பல கலைக்கழகங்கள், கார்டோவாப் பல்கலைக் கழகத்தின் பாணியிலேயே அமைக்கப்பட்டனவென்று

வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். கார்டோவாப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ற, புகழ்வாய்ந்த கிறித்தவ மாணவர்களுள் ஜெர்பெர்ட் (Gerbert) என்பவர் குறிப்பிடத் தகுந்தவர். இவரே பிற்காலத்தில் போப் இரண்டாம் சில்வெஸ்டர் (Pope Silvaster II) என்ற பெயரால் உலகுக்கு அறிமுகமானவர். இவர் கணக்கியலைப் பற்றிய பல நுணுக்கங்களை ஐரோப்பாவில் பரப்பியவர். இப் பல்கலைக் கழகத்தோடு ஒரு பெரும் நூல்நிலையமும் அமைக்கப் பட்டது.

அராபிய எண்களை ஐரோப்பியருக்கு அறிமுகப்படுத்தியவர் களும் முகம்மதியர்களே. மற்றும் எழுத்தியல், கோணயியல், வானயியல் போன்ற கணக்கியல் பிரிவுகளை ஐரோப்பாவில் பரவச் செய்தவர்கள் அராபியர்களே என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறு கின்றனர். இடைக்காலத்தில் திருச்சபை மக்களிடத்திலே பலவித மான மூடநம்பிக்கைகளை வளர்த்திருந்தது. முக்கியமாக நோய் களினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவச் சிகிச்சை கொடுக்கப் படவில்லை. அது அவர்களின் செய்வினை என்றும், எனவே சிகிச்சை தரக்கூடாது என்றும் திருச்சபை தடுத்தது. அத்தகைய சூழ்நிலை யில் அராபிய மருத்துவர்கள் நோய்க்கேற்ற மருந்தினை நோயாளி களுக்குக் கொடுத்தார்கள். நோயாளிகளும் குணம் அடைந்தார் கள். அவிசென்னு (Avicenna) என்பவர் கி.பி. 11ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த மிகவும் புகழ் மிக்க அராபிய மருத்துவர் ஆவார். ஐரோப்பிய உலகம் முகம்மதியர்களிடமிருந்து இத்தகைய அருங்கலைகளைக் கற்றுக் கொண்டது.

இங்ஙனம் இஸ்லாம் மதம் அரேபியாவில் நிறுவப்பட்டதாலும், அம் மதத்தை வேறு நாடுகளில் பரப்புவதற்கான முயற்சிகளில் கலிபாக்கள் ஈடுபட்டதாலும் ஐரோப்பாவின் பொருளாதார, சமூக, அரசியல், மற்றும் வேறு பல துறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

# 7. நிலமானியத் திட்டம்

## தோற்றம்

ஐரோப்பாவில் ஃபிராங்குப் பேரரசை ஆட்சி செய்த ஷார்ல மெய்ன் கி.பி. 814 ஆம் ஆண்டில் இறந்து விட்டார். அவருடைய பெரிய பேரரசைக் கட்டிக் காக்கத் தகுதியும் திறமையும் உடைய அரசர் அவருக்குப்பின், எவரும் இல்லை. அதன் விளைவாக உள் நாட்டுக் குழப்பங்கள் மலிந்தன; அயலவர் படையெடுப்புகளும் நிகழ்ந்தன; குறிப்பாக, பார்பேரியன்கள் என்று சொல்லப்படும் முரட்டு இனத்தினர் ஃபிராங்குப் பேரரசைப் பல திசைகளிலிருந்தும் தாக்கத்தொடங்கினார்கள். ஸ்காண்டிநேவியத் தீபகற்பத்திலிருந்து வந்த நார்த்மென்கள் வடக்கே தாக்கினர்; கிழக்கே ஹங்கேரியர்களும், ஸ்லாவ்களும் தாக்கினர். தெற்குப் பகுதிகளில் சாராசென்கள் அல்லது அராபியர்கள் தாக்குதல்கள் நடத்தினர். இத் தாக்குதல்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற கி.பி. 9 ஆம் நூற்றுண்டில் ஆட்சி செய்த அரசர்களால் முடியவில்லை. மக்கள் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது. இத்தகைய சூழ்நிலையில்தான் நிலமானியத்திட்டம் உருவாயிற்று.

கி.பி. 9 ஆம் நூற்றுண்டில் உருவாகிய இந்த நிலமானியத் திட்டம், பழங்காலத்திய உரோமானியர்கள் ஜெர்மானியர்கள் மற்றும் செல்டிக் இனத்தவரிடையே இருந்து வந்த சமூக, பொருளாதாரப் பழக்க வழக்கங்களின் தொகுதியேயாகும். உரோமானியப் பேரரசில், கி.பி. 4, 5 ஆம் நூற்றுண்டுகளில் பெருநிலப் பிரபுக்கள் தோன்றலாயினர். தலைநகரமாகிய உரோமில் இருந்த மத்திய அரசு வலிமை இழந்தபோது இப் பெருநிலப் பிரபுக்கள் வலிமை பெற்றனர். அப்பொழுது அரசரால் மக்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க முடியவில்லை. மக்களின் பொருளாதார நிலை சீர் கெட்டிருந்தது. சமூகத்தில் ஏழை எளியவர்கள் பல

துன்பங்களுக்கு ஆளானார்கள். இத்தகைய நிலையில் சிறு சிறு நிலச் சொந்தக்காரர்கள் பல தொல்லைகளிலிருந்து தங்களைக் காத்துக்கொள்வதற்காகத் தங்கள் நிலங்களைப் பெருநிலக்கிழார்கள் பொறுப்பில் விட்டுவிட்டு, அதேநேரத்தில் சாதாரணக் குடியானவர்களாக உழுது பயிர் செய்து வந்தனர். பெருநிலக்கிழார் விரும்பவில்லையென்றால் உடனடியாகக் குடியானவர்கள் நிலத்தைவிட்டுச் செல்லவேண்டியிருந்தது. எனினும், அங்ஙனம் பொதுவாக நடைபெறவில்லை. அரசுக்குச் செலுத்தவேண்டிய பல வரிகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகப் பல குடியானவர்கள் பெருநிலக்கிழார்களிடம் தஞ்சம் புகுந்து அங்கேயே நிலையாக வாழ்ந்தார்கள். பெருநிலக்கிழார்கள் குதிரைப்படை, காலாள்படை முதலியவற்றை வைத்துக்கொண்டு சிற்றரசர்களைப்போல் வாழ்ந்துவந்தனர். இந்த முறையைத் தவிர வேறொரு முறையும் உரோமானியப் பேரரசில் நடைமுறையில் இருந்தது. நிலமில்லாக் குடிமக்கள் கடன் தொல்லைகளிலிருந்து தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றவும் பெருநிலக்கிழாரிடம் சென்று அடிமை ஊழியராகப் பணி புரிந்தார்கள். இத்தகைய ஊழியர்கள் பலர் பெருநிலக்கிழாரின் கோட்டைக்கு அப்பால் சிறிது தூரத்தில் குடிசைகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். இவர்களும் வாழ்நாள் முழுவதும் பெருநிலக்கிழாரின் அடிமைகளாகவே இருந்தனர்.

ஜெர்மானிய இனத்தவருள் பல பெருவீரர்கள் அல்லது நைட் வீரர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களிடம் வேறுபல வீரர்களும் இருந்தனர். இவ் வீரர்கள் வாழ்நாள் முழுவதும் தம் பெருவீரனிடம் உழைத்து, போரிட்டு அவரிடமே, அவருக்காக உயிரிழந்தனர். இத்தகைய முறை ஜெர்மானிய இனத்தவரிடையே பரவலாகக் காணப்பட்டது.

செல்டிக் இனத்தவரிடையேயும் பல பெருந் தலைவர்கள் இருந்தனர். பல ஊழியர்கள் அவர்களைச் சூழ்ந்திருந்து பணிவிடை செய்து வந்தனர். இவர்கள் தங்கள் பெருந்தலைவர்களுக்கு உண்மையான ஊழியர்களாக உழைத்து வந்தனர்.

கி. மு. 6 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் உரோமானியர், ஜெர்மானியர் மற்றும் செல்டிக் இனத்தவரிடையே நிலவிவந்த இத்தகையச் சமூக, பொருளாதாரப் பழக்க வழக்கங்களெல்லாம் இணைந்து பின்னர் நிலமானியத் திட்டமாக உருவாயிற்று.

**நிலமானியத் திட்டம் விளக்கம்**

இடைக்கால ஐரோப்பாவில் நில உடைமையை அடிப்படையாகக் கொண்டு நிலவி வந்த ஒரு வகையான சமூக, பொருளா

தார அரசியல் அமைப்பு நிலமானியத் திட்டம் என வழங்கப் பட்டது. சமுதாயத்தின் பல மட்டங்களில் இருந்த மக்களின் உறவு களும் தொடர்புகளும் நிலவுடைமையின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. இது ஒருவிதமான 'பிரமிடு' (Pyramid) அமைப் பைப்போல் இருந்தது. நாட்டிலுள்ள எல்லா நிலப் பகுதிக்கும் அரசரே உரிமையாளரெனக் கருதப்பட்டது. அரசர் அந் நிலத் தைப் பல பெருநிலப் பிரபுக்களுக்கு மானியமாகப் பகிர்ந்து கொடுத் தார். பெருநிலப் பிரபுக்கள் தங்கள் உரிமையின் கீழ் இருந்த நிலத் தைப் பல பிரபுக்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள். இப் பிரபுக் கள் தங்கள் நிலத்தைப் பல 'கீழாள்களுக்கு' விட்டனர். கீழாள்கள் தங்கள் நிலத்தில் பல 'உள்குடிகளையும்' வைத்துக்கொண்டு வேளாண்மை செய்தனர். இத்தகைய அமைப்பில் ஒவ்வொரு தரப்பினரும் தன் தலைவருக்குப் பல ஊழியங்களைச் செய்தனர். ஒவ்வொரு நிலையிலும் நிலத்தை மானியமாகப் பெற்ற ஊழியர் தம் தலைவருக்குத் தாம் உண்மையுள்ளவரென்றும் நன்றியறிதல் உள்ள கீழாள்கள் என்பதையும் விளக்கும் வகையில் ஊழிய முறை நடை முறையில் இருந்தது. இத்தகைய முறை ஒரு பழக்கமாக இருந் ததே தவிர சட்டத்தின் அடிப்படையில் செயல்படவில்லை. எனி னும் இந்த ஊழிய முறையே இத் திட்டத்தின் முதுகெலும்பாக அமைந்தது.

அரசன் பெருநிலப் பிரபுக்களுக்கு நிலமானியத்தை வழங்கும் நேரத்தில் அதற்கென ஒரு பெரிய விழா ஏற்பாடு செய்யப்பட்டது. அவ் விழாவின்போது பெருநிலப் பிரபுக்கள், அரசருக்கு எல்லாவித மான ஊழியங்களையும் செய்வதாக உறுதிமொழி எடுத்துக்கொண் டனர்; அரசரோ பெருநிலப் பிரபுக்களின் பாதுகாப்புக்குப் பொறுப் பேற்பதாக உறுதிமொழி தந்தார். அதுபோலவே பெருநிலப் பிரபுக் களுக்கும் பிரபுக்களுக்கிடையேயும், பிரபுக்களுக்கும் கிழார்களுக் கிடையேயும், கீழாள்களுக்கும் உள்குடிகளுக்கிடையேயும் ஒப்பந் தங்கள் செய்துகொள்ளப்பட்டன. இத்தகைய அமைப்பில் பெரு நிலப் பிரபுக்கள் மற்றும் மக்களின் வாழ்க்கை நிலை எங்ஙனம் இருந் ததென்பதை இனிக் காண்போம்.

### பெருநிலப் பிரபுக்கள்

அரசனிடமிருந்த நிலங்களைப் பெற்ற இவர்கள் பெருஞ் செல் வந்தர்களாகவும், வலிமை மிக்கவர்களாகவும் விளங்கினர்கள். அவர்களில் பெரும்பாலார் மிகப் பெரிய கோட்டைகளில் வாழ்ந்து வந்தனர். அக் கோட்டைகள் ஒரு பிரபுவின் வலிமையை விளக் கவும், போர்க் காலங்களில் அவருடைய அதிகாரத்திற்கு உட்பட்ட மக்களின் பாதுகாப்புக்கும் பயன்பட்டன. காலாள்படை, குதிரைப் படை போன்றவற்றைப் பெருமளவில் பிரபுக்கள் வைத்துக்கொண்

டிருந்தனர். நைட்வீரர்கள் என்பவர்கள் பலர் பிரபுக்களிடம் பணி புரிந்தனர். அவர்களின் வீரச் செயல்களைப்பற்றி ஐரோப்பாக் கண்டத்தில் பலர் வியந்தனர்; அவைகளைப்பற்றிப் பல கதைகளும் எழுதப்பட்டிருந்தன. அவற்றை ஐரோப்பிய மக்கள் விரும்பிப் படித்துக் கடமையுணர்வும். நாட்டுப்பற்றும் பெற்றுர்கள். இப் பிரபுக்கள் ஏறக்குறைய சிற்றரசர்கள்போலவே வாழ்ந்தார்கள். பெருநிலப் பிரபுக்கள் பலவிதமான பணிகளையும் அரசருக்குச் செய்யவேண்டியிருந்தது. இத்தகைய பணிகள் ஐரோப்பாவில் நாட்டுக்கு நாடு மாறுபட்டிருந்தபோதிலும் பொதுவாகச் சில பணிகள் எல்லா நாடுகளிலும் வழக்கத்தில் இருந்தன. நிலத்தை மானியமாகப் பெறும் ஒவ்வொரு பிரபுவும் அரசனின் முன் மண்டியிட்டு, முழங்காலினுல் நின்று, அரசனின் இரு உள்ளங்கைகளுக்கிடையே தன் கைகளை வைத்து, என்றும் அரசனின் உண்மையான ஊழியராக இருப்பதாக உறுதிமொழி எடுத்துக்கொள்ளவேண்டும். அரண் மனையில் நடக்கும் கூட்டங்களுக்குப் பிரபுக்கள் வந்திருந்து, அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

நில மானியத் திட்டத்தின்படி அரசர் சில குறிப்பிட்ட சிறப்புரிமைகளைப் பெற்றிருந்தார். நில மானியம் பெற்றவர் ஒருவர் இறக்கும்போது, அவருடைய சொத்துக்களுக்கு உரிமையாளராகும் வாரிசு, அரசருக்கு ஒரு குறிப்பிட்ட பணத் தொகையைக் கொடுக்கவேண்டும். வாரிசு வயது அடையாத இளைஞராக இருந்தால், அவர் வயது அடையும் வரை இறந்தவரின் சொத்துக்களைப் பராமரிக்கும் உரிமை அரசருக்கு உண்டு. வயதடையாத வாரிசுவின் திருமண விவகாரங்களிலும் தலையிட அரசருக்கு உரிமை இருந்தது. வாரிசு எவருமின்றிக் கீழாள் இறந்துவிட்டால், அவருடைய சொத்துக்களை அரசரே திரும்பப் பெற்றுக்கொள்ளவும் உரிமை இருந்தது. அதைப்போலவே கீழாள் அரசருக்கு அடங்கி நடக்காதவராகவும், அரசரை இழிவுபடுத்துபவராகவும் இருந்தால் அவருடைய சொத்துக்களையும் பறிமுதல் செய்துகொள்ள அரசர் உரிமை பெற்றிருந்தார்.

பிரபுக்கள் அரசருக்குப் பலவிதமான பண உதவிகளையும் செய்தனர். அவை 'நில மானிய உதவிகள்' என்றழைக்கப்படுகின்றன. அரசருக்குப் பண உதவி தேவைப்படும்போதும், போர்க் காலங்களிலும், பொருளாதார நெருக்கடிக் காலங்களிலும் பிரபுக்கள் பண உதவி செய்தனர். இவை தவிர அரசருக்கு முடிசூட்டு விழா நடைபெறும்போதும், அரசனின் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டு விழா நடைபெறும்போதும், மூத்த பெண்ணுக்குத் திருமணம்

நடைபெறும்போதும், அரசனின் மூத்த மகனை நைட்வீரனுக ஆக்கும்போதும் பிரபுக்களும் மற்ற கீழாள்களும் விலையுயர்ந்த பல விதமான பரிசுப் பொருள்களை அரசருக்கு அன்பளிப்பாக அளித்தல் வேண்டும். சில நேரங்களில் அரசரோ அல்லது பிரபுவோ வேற்று நாட்டவரால் அரசியல் கைதியாக எடுத்துச் செல்லப் பட்டால் அவரை மீட்பதற்காக வேண்டிய மீட்புத் தொகையைப் பிரபுக்கள் தரவேண்டிருந்தது.

பிரபுக்கள் செய்த இராணுவப்பணி மிகமுக்கியமானதாகும். போர்க்காலங்களில் பிரபுக்கள் குதிரைப்படையையும், காலாள் படையையும் அரசனுக்குக் கொடுத்து உதவினுர்கள். பிரபுக்களே கூட போர்க்களம் சென்று போரிடவேண்டியதாக இருந்தது. சில பிரபுக்கள் சிறந்த போர் வீரர்களாகவும் திகழ்ந்தார்கள்.

பிரபுக்களில் பெரும்பாலோர் மிகப்பெரிய கோட்டைகளில் வாழ்ந்தனர் என்பதை முன்னரே கண்டோம். புதிய பல கோட்டைகளையும் அவர்கள் கட்டுவித்தனர். பல கோட்டைகளைச் சுற்றிலும் உயரமான மதிற்சுவர்கள் கட்டப்பட்டன. மதிற்சுவர்களின் மேல் வீரர்கள் மறைந்திருந்து எதிரிகளைத் தாக்குவதற்காக ஆங்காங்கு வளைவுகள் கட்டப்பட்டிருந்தன. மதிற்சுவர்களைச் சுற்றி ஆழமான அகழிகளும் அமைக்கப்பட்டிருந்தன. ஒரு சில கோட்டைகள் பதினைந்து ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டிருந்தன. அத்தகைய கோட்டைகள் பிரபுக்களின் வலிமையையும் செல்வத்தையும் பறை சாற்றின. பிரபுக்கள் பலவிதமான பொழுதுபோக்குகளில் ஈடுபட்டிருந்தனர். வேட்டையாடுதல் மிகமுக்கியான பொழுதுபோக்காக இருந்தது. பல நைட் வீரர்கள் கலந்துகொள்ளும் போட்டிப் பந்தயங்களும் நடத்தப்பட்டன. இவற்றைப் பொது மக்களும் கண்டு களித்தனர்.

### நிலமானியத்திட்டத்தில் மக்களின் நிலை

பிரபுக்களின் வாழ்க்கைத்தரம் மிக உயர்ந்த நிலையில் இருந்த தென்பதை முன்னரே கண்டோம். இவர்களைத்தவிர வேறு பல பிரிவுகளைச் சார்ந்த மக்களின் நிலைகளில் ஏற்றத் தாழ்வுகள் அதிகம் இருந்தன.

கிறித்துவ மதக் குருமார்கள் முறையாகக் கல்வி கற்ற சமுதாயத்தினர் ஆவர். எனவே அவர்கள் அரசராலும், பிரபுக்களாலும் நன்கு மதிக்கப்பட்டார்கள். சில குருமார்களை அரசரும் பிரபுக்களும் அரசாங்க வேலைகளில் ஈடுபடுத்தி ஆலோசனைகளைப் பெற்றுர்கள். மக்களும் மதப்பற்று மிக்கவர்களாக மாறிக் கொண்டு வந்ததால்

திருச்சபையோடு தொடர்புடைய இந்த மதகுருமார்களை மிக அதிகமாக மதித்துமரியாதை செலுத்தினர்கள். கிறித்துவ மதத்தைப் பரப்பப் பல இடங்களில் மடாலயங்கள் நிறுவப்பட்டன. அதற்கான நிலமும், வேறு செலவுகளுக்கான பணமும் அரசனுல் தரப்பட்டன. எனவே அம் மடாலயங்களில் இருந்த குருமார்கள் அரசனின் அதிகாரத்திற்குட்பட்டு நடந்துகொண்டார்கள். ஆனுலும், இவர்கள் பொருளாதாரத் துறையில் குறைவற்ற நிலையிலேயே இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறுவிதமான வரிகளைச் செலுத்தாமலிருக்கும் விலக்குரிமையையும் அவர்கள் பெற்றிருந்தார்கள்.

மற்ற மக்களில் பெரும்பாலார் பிரபுக்களிடம் வேலை செய்யும் கீழாள்களும், உட்குடிகளும் ஆவர். பொதுவாக இவர்கள் வயல்களில் உழைத்து வேலை செய்பவர்கள் ஆவார்கள். குறிப்பாக உட்குடிகள் அடிமைகளைப்போலவே இருந்தார்கள். அவர்கள் வயல்களைவிட்டுச் செல்லவும் முடியவில்லை. இவர்களைத் தவிர வேறு அடிமைகளை வைத்துப் பிரபுக்கள் வேளாண்மை செய்தார்கள். அதற்குப் பண்ணை முறை என்று பெயர். சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்த இந்த உட்குடிகள் உரிமைகள் பல இழந்த அடிமைகளாகவே வாழ்ந்து வந்தனர். இவர்களின் நிலை பல நூற்றுண்டுகள் வரை இரக்கத்திற்குரியதாகவே இருந்தது.

பண்ணைமுறை என்பது நிலமானியத்திட்டத்தின் ஒரு அங்கமேயாகும். ஒரு 'பண்ணை' என்பது ஒரு குறிப்பிட்ட அளவுடைய கிராமத்தையும் அங்கு வாழ்ந்த குடிமக்களையும் குறிக்கும். ஒரு பண்ணையில் பலவகையான குடிமக்கள் வாழ்ந்தார்கள். பொதுவாக ஒவ்வொரு பண்ணையிலும் ஒரு பண்ணை வீடு இருந்தது. இதில் பண்ணைக்குரிய பிரபு வாழ்ந்து வந்தார். அதைச் சார்ந்து தானியச்சேமிப்புக் கிடங்கு இருந்தது. ஒரு தேவாலயமும், குருமார் வாழ்வதற்கர்ன வீடும், தானியங்களை மாவாக்குவதற்கு ஆலையும் இருந்தன. மற்றும் வேளாண்மைக்குரிய நிலங்கள், ஆடுமாடுகளுக்குப் புல்தரைகள் போன்றவையும் இருந்தன.

நிலமானியத் திட்டத்தின்கீழ் மக்களின் வாழ்க்கைமுறை பெரும்பாலும் கிராம வாழ்க்கையாகவே இருந்தது. பெருமளவு உள் நாட்டு வாணிகமே நடைபெற்றது. வேளாண்மை உற்பத்திப்பொருள்களே வணிகப்பொருள்களாக இருந்தன. எனினும், கீழ்நாடுகளுடன் வாணிகம் செய்த சில வணிகர்கள் நறுமணப்பொருள்கள், பட்டு, தந்தம் போன்ற ஆடம்பரப் பொருள்களை மேலை நாடுகளுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்தார்கள். அவற்றை அச் செல்வந்தர்கள் வாங்கிப் பயன்படுத்தினர்.

### நிலமானியத் திட்டத்தால் ஏற்பட்ட நன்மைகள்

இத் திட்டம் அயலவரின் தாக்குதல்களிலிருந்து மக்களைப் பாதுகாத்தது. பிரபுக்கள் பெரும்படைகளை வைத்துக் கொண்டிருந்ததால் அரசனை மட்டும் நம்பியிராமல் தங்களைத் தாங்களே காத்துக்கொண்டனர். அவர்கள் வைத்திருந்த 'நைட்வீரர்'கள் எதிரிகளைத் தாக்கித் தங்கள் வீரத்தை வெளிப்படுத்தினார்கள். ஆங்காங்கு கட்டப்பட்ட வலிமைமிக்கக் கோட்டைகள் மக்களின் பாதுகாப்புக்கு உதவின. மேலும், மக்களிடையே நாட்டுப்பற்றை நைட்வீரர்கள் வளர்த்தார்கள். பிரபுக்கள் வலிமையுள்ளவர்களாக இருந்ததால் அரசன் கொடுங்கோலனாக மாறமுடியவில்லை. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில் பிரபுக்கள் வலிமையுள்ளவர்களாக இருந்ததால்தான் கி.பி. 1215ஆம் ஆண்டில் ஜான் அரசர் எல்லா நிலையிலுள்ள மக்களின் உரிமைகளைக் காக்கும் பொருட்டு மகர்சாசனத்தை (Magna Carta) வழங்கினார். மற்றும் அரசனுக்குண்டாகும் பல செலவுகள் குறைக்கப்பட்டன. குறிப்பாக, பெரிய படையை அவர் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இத் திட்டத்தின் பல சிறப்புக் கூறுகளைப் பற்றிப் பிற் காலத்தில் பல இலக்கியங்கள், குறிப்பாக நைட்வீரர்களைப்பற்றி வீரக்கதைகள் எழுதப்பட்டன. நைட்வீரர்கள் தங்களுக்கென ஒரு வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தார்கள். அதற்கேற்ப இன்னல்களில் இருந்த பெண்களைக் காப்பாற்றுவதையும் தங்கள் கடமையாகக் கருதினார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக நிலமானியத்திட்டம் அடிமைத்தனம் வளரவிடாமல் தடுத்தது. அதற்குக் காரணம் ஒவ்வொரு நிலையில் இருந்தவர்கள் உரிமைகளை மட்டுமே அல்லாமல் கடமைகளையும் பெற்றிருந்ததே ஆகும்.

### இத் திட்டத்தின் முறைகள்

ஒருங்கிணைந்து ஒரு பெரும்பேரரசு உருவாவதற்கு இத்திட்டம் மிகப்பெரிய தடையாக இருந்தது. அரசன் பிரபுக்களின் கைப்பொம்மையாகவே இருக்க வேண்டியிருந்தது. அரசனைக் கவிழ்க்கவும் பிரபுக்களால் பல நேரங்களில் சூழ்ச்சிகள் செய்யப்பட்டன இது தவிர பிரபுக்களிடையே போட்டியும், பொறாமையும் ஏற்பட்டுப் போர்களும் பூசல்களும் நடைபெற்றன. இப் பிரபுக்களின் அதிகார வளர்ச்சியினால் ஃபிரான்சு, ஜெர்மனி, ஸ்பெயின் போன்ற நாடுகள் நூற்றுக்கணக்கான பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. கி.பி. 10ஆம் நூற்றாண்டில் ஃபிரான்சு நாடு நூற்றுஐம்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதனால் நாடுகளை ஒன்றாக இணைக்கும் முயற்சிகள் ஐரோப்பிய அரசர்களால் எடுத்துக்கொள்ளப்பட்ட போது அவ்வரசர்கள் பிரபுக்க

ளோடு நீண்ட முடிவில்லாப் போராட்டங்களை நடத்த வேண்டியதாக இருந்தது. இதனால் உள் நாட்டுக்குழப்பங்கள் மலிந்தன; பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டது. பிரபுக்கள் கீழாள்களையும், கீழாள்கள் உட்குடிகளையும் துன்புறுத்தினர். குறிப்பாகக் கீழ்நிலை நில ஊழியர்களின் வாழ்க்கைத்தரம் பரிதாபத்திற்குரியதாக இருந்தது. அவர்கள் முன்னேற வாய்ப்புகள் இல்லாமல் அவதியுற்றிருந்தார்கள். இத் திட்டத்தினால் ஏற்றத் தாழ்வுகள் சமுதாயத்தில் அதிகமாக வளர்ந்தன. அதனால் பிற்காலத்தில் கலகங்களும் புரட்சிகளும் ஏற்பட்டன.

## நிலமானியத்திட்டத்தின் வீழ்ச்சி

கி.பி. 13, 14ஆம் நூற்றாண்டுகளில் நிலமானியத்திட்டம் வீழ்ச்சியுறத்தொடங்கியது. அதற்குக் காரணங்கள் பலவாகும். காலப்போக்கில் பிரபுக்களின் அதிகாரங்கள் ஒடுக்கப்பட்டு அரசர்கள் எல்லா அதிகாரங்களையும் பெற்றார்கள். பொதுமக்களும் அரசனின் ஆதரவாளர்களாகவும் பிரபுக்களை வெறுப்பவர்களாகவும் மாறி வந்தார்கள். அதேபோல திருச்சபையும் அரசனுக்கு ஆதரவு தந்தது. அரசனுக்கும் திருச்சபைக்கும் இடையே நல்லுறவுகள் வளர்ந்தன. அரசனின் படைபலம் வளர வளர பிரபுக்களின் படைகளுக்கு அவசியம் இல்லாமல் போயிற்று. மேலும், வெடிமருந்தும், கனல் கக்கும் போர்க்கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் நைட் வீரர்களின் பணி அதிக அளவில் தேவைப்படவில்லை. காலப்போக்கினால் அரசர்கள், மானியங்கள் வழங்குகின்ற பழக்கத்தினை விட்டு விட்டனர். திருச்சபையும் அரசனோடு ஒத்துழைத்துப் பிரபுக்களின் வலிமையை வீழ்த்தியது. இது தவிர, கி.பி. 11ஆம் நூற்றாண்டில் இருந்து நடைபெற்ற சிலுவைப் போர்களில் பங்கு கொள்ள வேண்டிப் பல பிரபுக்கள் தங்கள் நிலங்களையும் படைகளையும் அரசர்களிடம் ஒப்புவித்து விட்டனர். பிரபுக்கள் மட்டுமல்லாமல் கீழ்நிலை நில ஊழியர்கள் பலர் சிலுவைப்போர்களில் ஈடுபட்டு அவ்வண்ணம் விடுதலைபெற முயன்றார்கள். பல நகரங்களும் பணத்தைச் செலுத்தி நிலமானியத்திட்டத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற்றன. நிலமானியத்திட்டத்தின் தொடக்கக் காலத்தில் ஐரோப்பிய வாழ்க்கை முழுக்க முழுக்கக் கிராம வாழ்க்கையாகவே இருந்தது. ஆனால் கி.பி. 13, 14 ஆம் நூற்றாண்டுகளில் பெரிய நகரங்கள் தோன்றி ஐரோப்பியர்களின் வாழ்க்கை முறைகளிலும், எண்ணங்களிலும், கொள்கைகளிலும் புரட்சிகரமான பல மாறுதல்கள் ஏற்பட்டன. இவை இத் திட்டம் வீழ்ச்சியுறுவதற்குத் துணைபுரிந்தன. ஃபிரான்சு, ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வலிமை வாய்ந்த அரசர்கள் தோன்றி இத் திட்டத்தை ஒழிக்க

முற்பட்டு அதில் வெற்றி கண்டார்கள். குறிப்பாக இங்கிலாந்தில் நிலமானியத்திட்டம் விரைவில் வீழ்ச்சியுற்றது. முதலாம் வில்லியம் போன்ற அந் நாட்டு மன்னர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் இதற்குக் காரணமாகும். ஆனால் ஃபிரான்சு நாட்டில் நிலமானியத்திட்டத்தின் குறைபாடுகளில் சில கி.பி. 18 ஆம் நூற்றுண்டுவரை நீடித்து வந்தன என்பதும் அவை 1789 ஆம் ஆண்டு நடைபெற்ற ஃபிரென்ஞ்சுப் புரட்சிக்குக் காரணமாக அமைந்தன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

# 8. புனித உரோமானியப் பேரரசு

பேரரசர் ஷார்லமெய்னினுல் உரோமானியப் பேரரசு புத்துயிர் பெற்றது. அவர் மறைந்த பின் அதன் பெருமைகள் மங்கத்தொடங்கின. பேரரசும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு விட்டது. எனினும், பெயரளவுக்காவது அப் பேரரசு இருந்துவந்தது. கி.பி. 918 ஆம் ஆண்டு அதை ஆட்சி செய்து வந்த முதலாம் கான்ராட் (Conrad I) இறந்து விட்டார். அப்பொழுது ஆட்சிப் பொறுப்பை ஏற்கத் தகுதியும், திறமையும் உடையவர் எவரும் இல்லை. அரியணை ஏறுவது யார் என்ற பிரச்சனை எழுந்தது.

இத்தகைய சூழ்நிலையில் நிலமானியத் திட்டத்தின் அடிப்படையில், ஜெர்மனி பல நிலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கோமகனுட்சிக்குட்பட்ட நிலப் பகுதிகளாக இருந்தன. அவை வலிமை வாய்ந்த கோமகன்களால் ஆளப்பட்டு வந்தன. குறிப்பாக சாக்சனி (Saxony), பிராங்க்கானியா (Franconia), லொரெய்ன் (Lorraine), சுவாபியா (Swabia), பவேரியா (Bavaria) போன்ற கோமகன் ஆட்சிப் பகுதிகள் மிகவும் வலிமை வாய்ந்தவைகளாக இருந்தன. இவை பேரரசிலிருந்து விடுபட்டுச் சுதந்தர நாடுகளாகவே இயங்க முற்பட்டிருக்கும். ஆனுல், பார்பேரியன் மற்றும் முகமதியர்களின் படையெப்புகளுக்கு அஞ்சிப் பேரரசரோடு இணைந்திருந்தன. இறந்த அரசருக்கு வாரிசு இல்லாத ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்டபோது, புதிய அரசரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை கோமகன்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தது. அவர்கள் சாக்சனியின் கோமகன் முதலாம் ஹென்றியை (Henry, the fowler) அரசராகத் தேர்ந்தெடுத்தனர். அவரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுப்பேரரசின் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் உழைக்கலானுர்.

## முதலாம் ஹென்றியின் ஆட்சி

முதலாம் ஹென்றி நற்குணங்களும், நுண்ணிய அறிவும் உடையவர். பல்வேறு விதமான பொழுது போக்குகளில்

தன்னை ஈடுபடுத்திக் கொள்வார். கோழிச்சண்டையைப் பார்த்து மகிழ்வதில் அவருக்கு ஈடுபாடு அதிகம். எனவேதான் அவர் 'Henry the Fowler' என்று அழைக்கப்பட்டார். சாக்சனின் கோமகனக அவர் இருந்த போது அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர். அரச பதவியை அவர் நாடிச் செல்லவில்லை; அது அவரைத் தேடி வந்தது. வந்த பொறுப்பை ஏற்று அதன் பெருமையை நிலை நாட்டினர். முதலில் பேரரசின் கிழக்குப் பகுதியில் இருந்த கோமன்களுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்து மாக்யார் (Magyar) என்று சொல்லப்பட்ட ஹங்கேரிய இனத்தவர் மற்றும் ஸ்லாவ்கள் ஆகியோரின் தாக்குதல்களை முறியடித்தார். பல வலிமையான கோட்டைகளையும் கட்டினர். படை பலத்தைப் பெருக்கினர். காலப்போக்கில் கோமகன்களின் அதிகாரங்களையும் குறைத்தார். ஜெர்மானியர்கள் பேரரசின் கிழக்கில் பல பகுதிகளில் குடியேறி வாழ்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார்.

**மகா ஆட்டோவின் சாதனைகளும் சிறப்புகளும்**

முதலாம் ஹென்றி இறந்தவுடன் அவருடைய மகன் முதலாம் ஆட்டோ (Otto 1 or Otto the Great) பேரரசரானர். அவருடைய 'முடிசூட்டு விழா' மிக ஆடம்பரமான முறையில் நடத்தப்பட்டது. ஆகென்னில் நடைபெற்ற அவ் விழாவுக்கு ஃபிராங்கோனியா, சுவாபியா, பவேரியா, லொரெய்ன் ஆகியவற்றின் கோமகன்கள் வந்திருந்து பேரரசருக்குப் பணிவிடை செய்தனர். இது நிலமானியத் திட்டம் எந்த அளவுக்கு வேரூன்றி இருந்ததென்பதையே விளக்குகின்றது. வலிமை மிகுந்த ஒரு ஜெர்மானியப் பேரரசை நிறுவவேண்டுமென்பதே ஆட்டோவின் கொள்கையாகும். அதனுல் அவர் தன் தந்தையைப் போலவே பேரரசின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார். பிரபுக்களின் அதிகாரங்களை மேலும் குறைத்தார். பேரரசின் கிழக்குப் பகுதியில் மேலும் பல கோட்டைகளைக் கட்டினர். வடக்கே டேனியர்களை (Danes) வென்று அப் பகுதியையும் பேரரசோடு இணைத்தார். அதேபோல் ஹங்கேரிப்பகுதியில் குடியேறியிருந்த மாக்யார்களை கி.பி. 955ஆம் ஆண்டில் தோற்கடித்து மீண்டும் அவர்களின் படையெடுப்புகள் நிகழாவண்ணம் பார்த்துக் கொண்டார்.

ஆட்சித்துறையில் பல மாறுதல்களைச் செய்தார். உண்மையில் பேரரசர் ஷார்லமெய்னைப் போல் வலிமையும் புகழும் பெற்ற அரசராக வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர் செய்ததைப் போன்ற பல சீர்திருத்தங்களை இவரும் செய்ய முயன்ருர். பேரரசின் மேற்குப் பகுதியில் பாலடைன் கவுண்ட்கள்

(Counts Palatine) என்பவர்களை நியமித்து அயலவர்களின் தாக்குதல்களைத் தடுத்தார். கிழக்கிலும், தெற்கிலும் எல்லை அரசுகளை ஸ்லாவ்கள், மாக்யர்கள் மற்றும் இத்தாலியர்களின் கலகங்களையும் குழப்பங்களையும் அடக்கினர். அதே நேரத்தில் கோமகன்களின் அதிகாரங்களைக் குறைத்தார். தன்னுடைய அரசாங்கத்தில் மதத்துறைத் தொடர்புடைய கற்றறிந்த அறிஞர்களை ஈடுபடுத்தினர். அவர்களே அக் காலத்தில் மதிக்கப்பட்டு போற்றப்படுபவர்களாக இருந்தார்கள். அவர்கள் பிரபுக்களைப் போல் அல்லாது அரசருக்கு உண்மையுள்ளவர்களாகவும், நன்றியறிதல் உள்ளவர்களாவும் விளங்கினர்கள். திருச்சபைக்கும் அரசருக்குமிடையே மிக நெருங்கிய நல்லுறவுகள் வளரலாயின. அரசரும் திருச்சபையும் நட்புறவுடன் இருந்ததால் தான் பிரபுக்களின் அதிகாரங்களை அடக்க முடியுமென ஆட்டோ கருதினர். எனவே திருச்சபையின் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் பெருமளவு நன்கொடையைக் கொடுத்தார். உண்மையில் திருச்சபை அரசாங்கத்தின் ஒரு துறையாகவே இருந்து செயல்பட்டதெனக் கூறலாம். குருமார்கள் திருச்சபையிலும் அரண்மனையிலும் அவ்வுறவுகளை வளர்த்தார்கள். ஆயினும் ஷார்லமெய்ன் காலத்தில் இருந்ததைப் போலக் குருமார்களும் உரோமில் இருந்த போப்பும் எல்லாச் சுதந்தரங்களையும் பெற்றவர்களாக இல்லை அவர்கள் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே நடந்து கொண்டார்கள். மடாலயங்களில் இருந்த குருமார்களுக்கும் கூட நிலங்களும் வேறுபல சலுகைகளும் கொடுக்கப்பட்டன.

இத்தாலியின் வட பகுதி ஒரு அரசரால் ஆட்சி செய்யப்பட்டது. இடைப் பகுதி போப்பின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளாக (Papal States) இருந்தன. தெற்குப்பகுதிகள் சாராசென்கள் (Saracens) என்று சொல்லப்பட்ட இனத்தவர்களாலும் வேறு பலராலும் ஆட்சி செய்யப்பட்டு வந்தன. கி.பி. 951 ஆம் ஆண்டில் வட இத்தாலியில் குழப்பங்களும் கலகங்களும் ஏற்பட்டன. அப் பகுதியின் மறைந்த மன்னரின் விதவை ராணி அடிலெய்ட் (Adelaide) என்பவர் ஆட்டோவை உதவிக்கு அழைத்தார். ஆட்டோ உடனே சென்று கலகங்களை அடக்கி வட இத்தாலியில் அமைதியை நிலை நாட்டினர். பின்னர் அந்த விதவை ராணியைத் திருமணம் செய்து கொண்டு தன்னை இத்தாலியின் அரசராகவும் அறிவித்து முடிசூட்டிக் கொண்டார்.

அதற்குள் மீண்டும் ஜெர்மனியில் சில பிரபுக்களால் குழப்பங்கள் விளைவிக்கப்பட்டன. குறிப்பாகச் சுவாபியா, லொரெய்ன், மெய்ன்ஸ் (Mainz) ஆகியவற்றின் கோமகன்கள் ஆட்டோவின்

ஆட்சியைக் குறைகூறிக் கலகங்கள் விளைவித்தார்கள். ஆட்டோ இத்தாலியிலிருந்து விரைந்து வந்து அக் கலகங்களை முறியடித்தார். லொரெய்னை இரண்டாகப் பிரித்து இரண்டு கோமகன்களிடம் ஆட்சியை ஒப்படைத்து அதன் வலிமையை ஒடுக்கினார். இவ்வுள்நாட்டுக் கலகங்களைப் பயன்படுத்திக் கொண்டு கி.பி. 955 ஆம் ஆண்டில் ஹங்கேரியர்கள் பேரரசின் மீது படையெடுத்தார்கள். அவர்கள் டான்யூப் நதிப்பகுதியில் பெரும் சேதம் விளைவித்தார்கள். ஆட்டோ பெரும் படையுடன் சென்று ஹங்கேரியர்களை எதிர்த்துப் போரிட்டார். லெச்ஃபெல்ட் (Lechfeld) என்ற இடத்தில் நடைபெற்ற கடும் போரில் ஹங் கேரியர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட் டார்கள். இனி ஜெர்மனிக்கு எந்தக்காலத்திலும் ஹங்கேரியர் களால் ஆபத்து இல்லை என்று சொல்லும் அளவுக்கு அவர்க ளுடைய வலிமை ஒடுக்கப்பட்டது.

கி.பி. 956 ஆம் ஆண்டில் ஆட்டோ ஒரு பெரிய தவறுசெய்து விட்டாரென்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். அவருடைய சொந்த கோமகனாட்சிப் பகுதியாகிய சாக்சனியை ஈஸ்ட் ஃபேலியா (வீசெர், எல்ப் நதிகளுக்கிடைப்பட்ட பகுதி), வெஸ்ட் ஃபேலியா என இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, ஈஸ்ட்ஃபேலி யாவை ஹெர்மன்பில்லுங்க் (Hermann Billung) என்பவருக்குக் கொடுத்துக் கோமகனுக்குரிய அதிகாரங்களுடன் ஆட்சி செய்ய அனுமதித்தார். இது காலப் போக்கில் 'பில்லுங்கர் கோமகன்கள்' (Billunger Dukes) என்பவர்கள் உருவாவதற்கு வழி வகுத்தது. இவர்கள் பின்னர் ஜெர்மனியின் இணைப்புக்கும் ஒருமைப்பாட்டுக் கும் பெருந்தடையாக இருந்தார்கள் என்பதைப் பிற்கால வரலாற்று நிகழ்ச்சிகள் விளக்குகின்றன.

ஆட்டோவின் ஆட்சிக்காலத்தில் வேறொரு முக்கியமான நிகழ்ச்சி நடைபெற்றது. கி.பி. 961ஆம் ஆட்டில் ஆட்டோ வின் ஏழுவயது மகன் இரண்டாம் ஆட்டோ, இணை அரசனாக முடிசூட்டப்பட்டார். தந்தைக்குப் பின் அவரே வாரிசு என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டை ஆட்டோ மகிழ்ச்சியுடன் செய்து முடித்தார். ஏனெனில் மீண்டும் இத்தாலிக்குச் செல்வதற் காகத் தகுந்த நேரத்தை அவர் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார். அவர் இத்தாலிக்குச் சென்றுவிட்டால் ஜெர்மனியில் ஓர் இணை அரசர் இருப்பதே நல்லது என அவர் கருதினார்.

### புனித உரோமானியப் பேரரசராக முடி சூட்டப்படுதல்

ஆட்டோ எதிர் பார்த்த வண்ணமே கி.பி.962 ஆம் ஆண் டில் உரோம் திருச்சபையில் உட்பூசல்கள் மலிந்தன. நகரத்தின்

உள்ளேயும் வெளியேயும் சண்டைகள் நடந்து வந்தன. அப்பொழுது திருச்சபையின் தலைமைப் போப்பாக இருந்த பன்னிரண்டாம் ஜான் ஆட்டோவின் உதவியை நாடினர். ஆட்டோ உடனே வந்து கலகங்களை அடக்கிப் போப்புக்கு உதவி செய்தார். இவ்வுதவியைப் போப் மிகமுக்கியமானதாகக் கருதினர். எனவே அதே ஆண்டில் போப் பன்னிரண்டாம் ஜான் ஆட்டோவுக்கு முடிசூட்டி அவரை ஜெர்மனி நாட்டின் 'புனித உரோமானியப் பேரரசர்' என அறிவித்தார். கி.பி.800ஆம் ஆண்டு ஷார்லமெய்னின் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி மீண்டும் கி.பி.962ஆம் ஆண்டில் நடைபெற்றது. எனினும் இவ்விரு நிகழ்ச்சிகளுக்கும் வேறுபாடு உண்டு. ஆட்டோவுக்கு முடிசூட்டும்போது எந்தவிதமான ஆடம்பரமும் மகிழ்ச்சியும் மக்களிடம் காணப்படவில்லை. அவர்களிடம் ஒரு வகையான அச்சமும் வெறுப்புமே காணப்பட்டன. இத்தாலி தனித்தியங்குவதையே அவர்கள் விரும்பினர்கள். ஆனல் இனி இத்தாலி ஜெர்மனியின் அதிகாரத்திற்கு உட்பட்டே நடக்க வேண்டும். இத்தகைய அடிமை வாழ்க்கையை அவர்கள் விரும்பவில்லை. இருப்பினும், இவ்வாண்டிலிருந்து புனித உரோமானியப் பேரரசு கி.பி.1806ஆம் ஆண்டு மாவீரன் நெப்போலியனினல் வீழ்த்தப்படும் வரை பல்வேறு காலங்களில் உயர்ந்தும் தாழ்ந்தும் இருந்து வந்தது.

போப் அரசருக்கு முடி சூட்டினரென்றாலும் அரசரின் அதிகாரங்களுக்கு அடங்கியே போப் நடந்து கொண்டார். திருச்சபையில் நடைபெற்ற எல்லா விவகாரங்களும் அரசரின் அனுமதியுடன் நடைபெற்றன. மதகுருமார்கள் தேர்ந்தெடுக்கப்படுவதிலும் அரசனின் ஆலோசனைக்கேற்பவே எல்லாத் தேர்தல்களும் நடைபெற்றன. அரசனைச் சேர்ந்த ஆள்களே அவருடைய பிரதிநிதிகளின் மேற்பார்வையில் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

இருப்பினும் ஓராண்டுக்குள் பேரரசர் ஆட்டோவுக்கும் போப் பன்னிரண்டாம் ஜானுக்குமிடையே கருத்து வேறுபாடுகளும், பூசல்களும் ஏற்பட்டன. அரசனின் ஆணைகளை ஏற்கப் போப் மறுத்தார். எனவே ஆட்டோ உரோமுக்குப் படையுடன் சென்று போப்பைப் பதவியினின்று நீக்கி எட்டாம் லியோ என்பவரைத் தலைமைப் போப்பாக நியமித்தார். இந் நிகழ்ச்சியும் புனித உரோமானியப் பேரரசின் வரலாற்றில் மிக முக்கியமானதாகும். போப் அரசரின் அதிகாரங்களுக்கு உட்பட்டவரே என்ற கருத்து நிலையாக இல்லாவிட்டாலும் தற்காலிகமாக நிரூபிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிகளால் பிற்கால புனித உரோமானியப் பேரரசின் வரலாற்றில் போப்புக்கும் அரசருக்கும் இடையே அதிகாரப் போட்டியும் போர்களும் நடைபெற்றன. அவற்றைப் பின்னர் காண்போம்.

இந் நிலையில் கிழக்கு உரோமானியப் பேரரசின் அரசர் ஆட்டோவைப் புனித உரோமானியப் பேரரசின் அரசராக ஏற்றுக் கொள்ள மறுத்தார். அத்தகைய பெருமைக்கு அவர் தகுதியில்லாதவர் எனக் குறைகூறினர். ஆகவே ஆட்டோ கிழக்கு உரோமானியப் பேரரசின் மீது படையெடுத்துக் கிரீசில் எதிரியின் படைகளைத் தோற்கடித்துத் தன் பெருமையை நிலை நாட்டினர். கிழக்கு உரோமானியப் பேரரசின் அரசர் தன் மகள் தியோஃபகனுவை (Theophano) ஆட்டோவின் மகன் இரண்டாம் ஆட்டோவிற்குத் திருமணம் செய்வித்து, ஆட்டோவைப் புனித ரோமானியப் பேரரசராக ஏற்றுக்கொண்டார். இவ்விரண்டு அரசுகளுக்கிடையே இனிய உறவுகள் தொடர்ந்தன. இங்ஙனம் ஆட்டோ புனிதப் பேரரசின் வலிமை வாய்ந்த பேரரசராக விளங்கி முப்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி செய்து தன் பெருமைகளை உலகறியச் செய்தார்.

### ஆட்டோவுக்குப் பின் வந்தோர்

முதலாம் ஆட்டோவுக்குப் பின்னர் அவருடைய மகன் இரண்டாம் ஆட்டோ (Otto II) கி.பி. 973ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தார். இவர் ஆட்சிக்கு வந்தவுடன் பவேரியா மற்றும் சுவாபியா முதலிய கோமகனுட்சிப் பகுதிகளில் வாரிசு உரிமைப் பிரச்சனைகளும் குழப்பங்களும் ஏற்பட்டன. அவற்றை அமைதியான முறையில் தீர்த்து வைத்தார். பவேரியாவின் நிலப்பரப்பைக் குறைத்து அதன் வலிமையை ஓரளவு ஒடுக்கினர். ஜெர்மனியில் ஏற்பட்ட இந்தக் குழப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஃபிரெஞ்சு அரசர் லொதைர் (Lothaire) லொரெய்ன் கோமகனுட்சிப் பகுதியின் மீது படையெடுத்தார். தலைநகர் ஆகென்னில் இருந்த இரண்டாம் ஆட்டோ பெரும் படையுடன் விரைந்து சென்று ஃபிரெஞ்சுப் படைகளை விரட்டியடித்தார். லொரெய்ன் பாதுகாக்கப்பட்டது.

கி.பி.980 ஆம் ஆண்டு இரண்டாம் ஆட்டோ இத்தாலிக்குச் சென்றுர். இரண்டாண்டுகள் அவர் அங்கேயே தங்கியிருந்தார். அப்பொழுது தெற்கு இத்தாலியில் சிசிலித் தீவிலிருந்து சென்ற சாரசென்களால் (Saracens) கலகங்கள் விளைவிக்கப்பட்டன. அவற்றை அடக்க இரண்டாம் ஆட்டோ சென்ற போது அவருடைய படை பெருந்தோல்வியைக் கண்டது. இத் தோல்வி அவருக்குப் பெரும் இழுக்கைத் தேடித் தந்தது.

அதற்குள்ளாக எல்ப் நதிப் பகுதியில் ஸ்லாவ்கள் ஜெர்மனியின் அடக்குமுறை ஆட்சியை எதிர்த்து உரிமைக் குரலெழுப்பிக்

கலகங்களை விளைவித்தார்கள். அங்கே அனுப்பப்பட்ட ஜெர்மானியப் படைகளும் பெருந்தோல்வியைக் கண்டன. இத் தோல்விகளினால் மனமுடைந்த இரண்டாம் ஆட்டோ கி.பி. 983 ஆம் ஆண்டில் இறந்து விட்டார்.

இரண்டாம் ஆட்டோவுக்குப் பின் அவருடைய நான்கு வயது மகன் மூன்றாம் ஆட்டோ (Otto III) அரியணை ஏறினார். அவருடைய தாய் தியோஃபானோ அவருக்குக் காப்பாளராக இருந்து ஆட்சி செய்தார். இளம் வயதில் கலை, மற்றும் அறிவியல்துறை வல்லுநர்களிடம் கல்வி கற்றார். அதனால் அவரிடம் நுண்ணறிவும் பறந்த நோக்கும் காணப்பட்டன. கி.பி. 996ஆம் ஆண்டில் இருந்து தன் விருப்பப்படிச் செயல்படத் தொடங்கினார்.

இவர் ஜெர்பர்ட் (Gerburt) என்ற கணக்கியல் மேதையை போப்பாக நியமித்தார். ஜெர்பர்ட், இரண்டாம் சில்வெஸ்டர் என்ற பெயரை ஏற்றுப் போப்பானார். இவர் கார்டோவா பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றவர் என்பதை முன்னரே கண்டோம். ஆட்டோ பெரும்பாலும் உரோம் நகரத்திலேயே வாழ்ந்து வந்தார். அதனால் ஜெர்மனியிலும் பின்னர் இத்தாலியிலும் கலகங்கள் ஏற்படத் தொடங்கின. கி.பி. 1002ஆம் ஆண்டு அவர் உரோமில் இருந்தபோது உரோமானியர்கள் அவரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அவரைத் தங்களுடைய பேரரசராக ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அவர்களின் போக்கைக்கண்டு மூன்றாம் ஆட்டோ வேதனைப்பட்டார். அதே ஆண்டு உரோமிலேயே அவர் தன்னுடைய இருபத்து மூன்றாவது இளம் வயதிலேயே இறந்து விட்டார்.

புனித உரோமானியப் பேரரசின் ஏறக்குறைய பத்து நூற்றாண்டுக்கால வாழ்வில் ஒரு சில அரசர்களே சிறந்தவர்களாக இருந்தார்கள். அந்த அரசர்களில் சிலரின் ஆட்சிக் காலங்களிலும் அரசருக்கும் போப்புக்கும் தீராத பூசல்கள் நடைபெற்று வந்தன. இவை தவிர வேறு பல குறைபாடுகளும் இப் பேரரசில் இருந்ததால் ஃபிரான்சு நாட்டுத் தத்துவமேதை வால்டேர் 'புனித உரோமனியப் பேரரசு, புனிதமானதுமல்ல, உரோமானிய அரசும் அல்ல, பேரரசும் அல்ல' என்று குறிப்பிட்டார்.[1]

1. 'The Holy Roman Empire was neither Holy, nor Roman, nor an Empire,' —Valtarie

# 9. ஃபிரான்சில் காபெட் நிறுவிய முடியரசு

**காபெட், ஃபிரான்சு நாட்டின் அரசராகத் தேர்ந்தெடுக்கப் படுதல்**

ஷார்லமெய்ன் நிறுவிய ஃபிராங்குப் பேரரசு அவருக்குப் பின் அவருடைய பேரன்கள் மூவருக்குமிடையே வெர்டன் உடன் பாட்டின்படி (Treaty of Verdun – 843 A.D.) பிரித்துக் கொடுக்கப் பட்டதென்பதை நாம் அறிவோம். அவற்றுள் சார்லஸின் பங்காகக் கிடைத்த மேற்குப் பகுதியே ஃபிரான்சு அரசு (Kingdom of France) என்று அழைக்கப்பட்டது. அப் பகுதி அடிக்கடி நார்த்மென் (Northmen) என்பவர்களால் தாக்கப்பட்டு வந்தது. குறிப்பாகக் கி.பி. 885ஆம் ஆண்டில் அவர்கள் பாரிஸ் நகரத்தை முற்றுகையிட்டார்கள். அந்த நகரம் அவர்களால் கைப்பற்றிக் கொள்ளப்படும் என்ற ஆபத்தான நிலை ஏற்பட்டது. நல்ல வேளை யாக பாரிசின் கோமகன் ஓடோ (Odo, Count of Paris) என்பவரின் திறமையினாலும், வீரத்தாலும் முற்றுகையாளர்கள் விரட்டியடிக்கப் பட்டுப் பாரிஸ் காப்பாற்றப் பட்டது. எனினும், இந் நிகழ்ச்சிக்குப் பின் செய்ன் (Seien) நதி முகத்துவாரத்தின் வட பகுதியிலும், தென் பகுதியிலும் அவர்கள் குடியேறி அப் பகுதியை நார்மண்டி (Normandy) என்ற பெயரால் அழைக்கலாயினர். அப்பொழுது அரசராக இருந்த ஷார்லமெய்னின் கரோலிஞ்சியன் வமிசத்தைச் சேர்ந்த மூன்றும் சார்லஸ் (Charles III the Fat 881–887 ஓடோவை மேற்குப் ஃபிரான்சின் கோமகனாக நியமித்தார். சார்லஸின் மறைவுக்குப் பின்னர் ஓடோவின் வழி வந்தவர்களே ஃபிரான்சின் அரசர்களாக ஆட்சி செய்தனர். இறுதியாக ஃபிரான்சின் பிரபுக்களால் யூ காபெட் (Hugh Capet) என்பவர் கி.பி. 987 ஆம் ஆண்டில் ஃபிரான்சின் அரசராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவர் வழி வந்த காபெட் வமிச அரசர்கள் (Capetian Monarchs in France) ஃபிரான்சை கி.பி. 1328ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்தார்கள்.

யூ காபெட் வாழ்ந்த காலத்தில் பிரபுக்கள், கோமகன்கள், குறிப்பாக நார்மண்டி, பிளாண்டர்ஸ் ஆகியவற்றின் கோமகன்கள் (Dukes of Normandy and Flanders) மிகவும் வலிமையுள்ளவர்களாக இருந்தார்கள். காபெட், திருச்சபையோடு மிக நெருங்கிய நல்லுறவுகளை வைத்துக்கொண்டு, எல்லாக் கோமகன்களின் அதிகாரங்களையும் ஒடுக்கினார். தன் தலைநகரமாகிய பாரிசை வலுப்படுத்தினார். கி.பி. 996ஆம் ஆண்டுவரை ஃபிரான்சின் அரசராக இருந்தார். அவரைப் பின் தொடர்ந்த சில முக்கியமான அரசர்களின் ஆட்சிக்காலச் சிறப்புகளை இனிக் காண்போம்.

### முதலாம் ஃபிலிப் (கி.பி. 1060-1108)

இவர் காலத்தில் மேற்கே நார்மானியர்களின் தொல்லைகள் குறைந்தன. மேலும் நார்மண்டியின் கோமகனாக இருந்த வில்லியம், இங்கிலாந்தின் அரசராகப் பதவி ஏற்றார். எனவே வில்லியமினால் ஏற்பட்டு வந்த தொல்லைகள் பெருமளவு குறைந்தன. இவை தவிர இவர் ஃபிரான்சில் ஆட்சி செய்யும்போது தான் சிலுவைப் போர்களை நடத்துவதற்கான முதல் முயற்சிகள், ஆமியன்ஸ் நகரத்தைச் சேர்ந்த பீடர் முனிவராலும், உரோம் திருச்சபையின் தலைமைப் போப் இரண்டாம் அர்பனினாலும் மேற்கொள்ளப்பட்டன. அப்பொழுது முதல் சிலுவைப் போரில் (1096–1099) கலந்து கொள்வதற்காக பெரும்பாலான பிரபுக்கள் ஃபிரான்சை விட்டுச் சென்றுவிட்டதால் தன் அரசை வலுப்படுத்துவது ஃபிலிப்புக்கு மிக எளிதாக இருந்தது.

### ஆறாம் லூயி (கி.பி. 1108–1137)

இடைக்கால ஐரோப்பிய அரசர்களுள் மிகச் சிறந்தவர்களில் இவரும் ஒருவராவார். தன்னுடைய ஆட்சிக்குட்பட்டிருந்த இடங்களில் வர்ணிக வளர்ச்சிக்கு வேண்டிய முயற்சிகளை எடுத்தார். நகரங்கள் விரிவடைவதற்கும் ஆவன செய்தார் தன் மகன் ஏழாம் லூயிக்கு அக்விடெய்ன் (Luchy of Aquitaine) எனும் கோமகனாட்சிப் பகுதியின் இளவரசி எலினோவைத் (Eleanor) திருமணம் செய்து வைத்தார். இத் திருமண உறவினால் அரசின் தென்மேற்குப் பகுதியிலிருந்த அக்விடெய்ன் முழுவதும் தன் அரசோடு சேரும் என்றெண்ணினார்.

### ஏழாம் லூயி (கி.பி. 1137–1180)

இவருடைய பொறுப்பற்ற போக்கினால் இவருடைய தந்தையின் எண்ணம் ஈடேறவில்லை. தன் மனைவி எலினோவை இவர் விரும்பவில்லை. கி.பி. 1151ஆம் ஆண்டில் அவளை 'மணவிலக்கு,

செய்து கொண்டார். எலினே இங்கிலாந்து அரசர் இரண்டாம் ஹென்றியைத் திருமணம் செய்து கொண்டார். அவளுக்குச் சொந்தமான அக்விடெய்ன் கோமகளுட்சிப்பகுதி, இங்கிலாந்து அரசரின் ஆட்சிக்குட்பட்டது. முன்னரே ஃபிரான்சின் மேற்கில் பெரும் பகுதி இங்கிலாந்து அரசரின் ஆட்சிக்குட்பட்டே இருந்தது. இப்பொழுது லூயி, அக்விடெய்ன் பகுதியையும் இழந்து விட்டார்.

**இரண்டாம் ஃபிலிப் (கி.பி. 1180–1223)**

இவர் ஃபிலிப் அகஸ்டஸ் என்றும் அழைக்கப்படுகின்றார். காபெட் வமிச அரசர்களுள் இவரே மிகச் சிறந்தவராவார். இவர் காலத்தில்தான் பேரரசு விரிவடைந்தது. வடக்கேயுள்ள ஆர்டாய், வெர்மாண்டாய் (Artois and Vermandois) ஆகிய பகுதிகளை முதலில் கைப்பற்றினர். இங்கிலாந்து அரசர் ஹென்றி இறந்தவுடன் ஃபிரான்சின் தெற்குப் பகுதியிலிருந்த பெர்ரி, ஆவென் (Berry and Auvergne) ஆகிய பகுதிகளையும் தன் அரசோடு இணைத்துக் கொண்டார். ஃபிரான்சிலிருந்த ஒரு பிரபுவின் திருமண விவகாரத்தில் அவசியமில்லாமல் இங்கிலாந்து அரசர் ஜான் ஈடுபட்டார் என்று அவர் மீது குற்றம் சாட்டி நேரிலே வந்து விளக்கம் தரும்படி ஃபிலிப் ஆணையிட்டார். ஜான் இந்த ஆணையை மதிக்கவில்லை. எனவே ஃபிரான்சில் ஜானுக்குச் சொந்தமாயிருந்த நார்மண்டி (Normandy), பிரிட்டனி (Brittany), ஆஞ்சோ (Anjou), மெய்ன் (Maine), டூரெய்ன் (Touraine), மற்றும் பாய்டோ (Poitou) ஆகிய பகுதிகளை ஃபிலிப் கைப்பற்றிக்கொண்டார். இதனைக் கண்டு வெகுண்ட ஜான் ஃபிலிப்போடு போர் தொடுத்தார். ஜானின் படைகளையும் அவருக்கு உதவி செய்ய வந்த மற்றவர்களுடைய படைகளையும் புவைன் போரில் (Battle of Bouvines–1214) ஃபிலிப் தோற்கடித்தார். இவற்றைக் கைப்பற்றியதால் அரசு மும்மடங்காக விரிவடைந்தது. புவைன் போரின் வெற்றியால் ஃபிலிப்பின் பெருமையும் ஃபிரான்சின் வளர்ச்சியும் ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பரவ ஆரம்பித்தது. இங்கிலாந்து அரசர் ஜான் அடைந்த தோல்வியினால் அடுத்த ஆண்டு (1215) மன்னர் மகாசாசனத்தை (Magha Carta) வழங்க நேர்ந்தது.

ஃபிலிப் அகஸ்டஸின் ஆட்சிக் காலத்தில் ஃபிரான்சு பல துறைகளில் முன்னேறியது. ஆட்சித்துறையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. பாரிஸ் பல்கலைக்கழகம் விரிவு படுத்தப்பட்டது. உரோமானியச் சட்டங்கள் பற்றிய அறிவை மக்களிடையே பரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஒன்பதாம் லூயி (கி.பி. 1216–1270)**

இளம் வயதிலேயே ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஒன்பதாம் லூயியிக்கு அவருடைய தாய் எட்டாண்டு காலம் அவர் சார்பில் அரசுப் பொறுப்பினை ஏற்றிருந்தார். அவ்வம்மையார் தன் மகனுக்குக் கிறித்துவ மதப்பற்றையும், நாட்டுப் பற்றையும் ஊட்டினார். லூயியின் உள்ளத்தில் தாயின் அன்பான அறிவுரைகள் ஆழப் பதிந்தன. எதிர் காலத்தில் கிறித்தவ மதக் கோட்பாடுகளைத் தவருமல் கடைப்பிடித்தார். மதவெறியும், அதிகார ஆணவமும், மிகுந்த இடைக் காலத்தில் அன்பும், அமைதியும், பண்பும் பாசமும் ஈகைக் குணமும் நேர்மையும் உடைய ஓர் அரசராக அவர் விளங்கினார். அவரால் நாற்பத்து நான்கு ஆண்டுகள் ஒரு நாட்டைக் கொந்தளிப்பு மிகுந்த இடைக்கால ஐரோப்பாவில், ஆட்சி செய்ய முடிந்ததென்பதை மிகப் பெரிய சாதனையாகக் கருத வேண்டும். மக்களின் நன்மதிப்பைப் பெற்ற இவ்வரசர் 'லூயி முனிவர்' (St. Louis) என்றே அன்புடன் அழைக்கப் பட்டார்.

இம் 'முடிசூட்டப்பட்ட முனிவர்' ('Crowned Saint') வலுச் சண்டைக்குப் போகவில்லையாயினும் வந்த சண்டையை விட வில்லை. மன்னரின் இளகிய, பரந்த மனப்பான்மையைப் பயன் படுத்திக் கொண்டு அடக்கப்பட்டிருந்த சில பிரபுக்கள் ஒன்று கூடிப் படை திரட்டி மன்னரை வீழ்த்தப் பார்த்தனர். ஆனால் அவர்கள் செய்ன்டிஸ் போர்க்களத்தில் (Battle of Saintes–1242) கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டார்கள்.

லூயி ஆட்சித் துறையிலும் பல சீர்திருத்தங்களைச் செய்தார். நிதி, நீதி, சட்டம் அயல்நாட்டு விவகாரங்கள் போன்றவற்றைக் கவனித்துக் கொள்வதற்காகத் தனித்தனி குழுக்கள் நியமிக்கப் பட்டன. 'பாரிஸ் நீதிக் குழு'வில் (Parliament of Paris) கற்றறிந்த சட்ட நிபுணர்களும் நீதிபதிகளும் அங்கம் வகித்தனர். அவர்கள் குறிப்பாக வழக்குகளை ஆராய்ந்து நீதி வழங்குவதையே முக்கியமான கடமையாகக் கருதினார்கள். இருப்பினும் எல்லா நடவடிக்கைகளும் அரசரின் பெயரிலேயே எடுக்கப்பட்டன. நீதி வழங்கும் உரிமை சில பிரபுக்களிடம் இருந்தது. அதனை லூயி பறித்து விட்டார். ஆகையால் பிரபுக்கள் எல்லா விதத்திலும் வலிமை குன்றியவர்களானார்கள்.

மக்களின் நண்பனாகவும், நாட்டின் தந்தையாகவுமிருந்து லூயி ஆட்சி செய்தார். ஆயினும் கிறித்தவ மதத்திற்கு அவர் செய்யக் கருதிய பணியை அவரால் செய்ய முடியாமல் போய் விட்டது.

அதாவது புனித இடம் ஜெருசலத்தைத் துருக்கியர்களிடமிருந்து கைப்பற்றுவதற்காக இரண்டு சிலுவைப் போர்களில் ஈடுபட்டு அதில் வெற்றி பெருமலேயே உயிர் துறந்தார்.

**நான்காம் ஃபிலிப் (கி.பி. 1285–1314)**

இவர் அதிகார ஆணவமும், செருக்கும், முன்கோபமும் உடையவர். பல பிரபுக்களின் வெறுப்புக்கும் ஆளானுர். இங்கிலாந்து நாட்டு மன்னர் முதலாம் எட்வர்ட்டை பகைத்துக் கொண்டார். ஃபிரான்சின் வடக்கே ஃபிளாண்டர்ஸ் பகுதியில் கி.பி. 1302ஆம் ஆண்டில் நடந்த கோட்ராய் போரில் (Baltle of Courtrai) இவருடைய படைகள் சில பிரபுக்களால் தோற்கடிக்கப்பட்டன. போப் எட்டாம் போனிஃபேசையும், (Pope Boniface VIII) பகைத்துக் கொண்டு அவருடன் நீண்டதொரு போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்ருர்.

**காபிஷியன் அரசர்களின் தொண்டு**

காபிஷியன் அரயர்களின் ஆட்சிக் காலத்தில் ஃபிரான்சில் நிலமானியத் திட்டம் உறுதியாக வேறூன்றியிருந்தது. சில கோமகன்களும், பிரபுக்களும் தங்கள் அதிகாரத்தின் கீழிருந்த குடியானவர்களையும், தொழிலாளர்களையும் துன்புறுத்தி வந்தனர். அவர்களின் மீது கடுமையான வரிகளையும் விதித்தனர். காபிஷியன் அரசர்கள் இப் பிரச்சினைகளில் தலையிட்டு மக்களின் குறைகளைப் போக்கினுர்கள். புனித உரோமானியப் பேரரசர் ஐந்தாம் ஹென்றி ஃபிரான்சை வென்று அதனைத் தன்னுடைய பேரரசோடு சேர்த்துக் கொள்ள முயன்ருர். ஆனுல் காபிஷியன் அரசர் ஆரும் லூயி அம் முயற்சியை முறியடித்தார். அதனுல் ஃபிரான்சு அடிமை நாடாக மாருமல் சுதந்தர நாடாக இயங்கியது. அதுமட்டுமன்றி ஃபிரான்சு அரசருக்குப் பல தொல்லைகளைக் கொடுத்து வந்த இங்கிலாந்தின் ஜான் மன்னரை இரண்டாம் ஃபிலிப் பூவென் (Battle of Bouvines) போரில் தோற்கடித்து ஃபிரான்சின் வலிமையை நிலை நாட்டினுர். அவர் நார்மண்டி, ஆன்சோ பேன்ற பகுதிகளையும் இணைத்துக் கொண்டு அரசின் எல்லைகளை விரிவுபடுத்தினுர். உயர் அதிகாரிகளைக்கொண்ட அரசரின் ஆலோசனைச் சபை ஒன்றையும் நியமித்தார். இச் சபை அரசனுக்கு வேண்டிய உதவியையும் ஆலோசனையையும் வழங்கியது. கோமகனுட்சிப் பகுதிகளிலும் வரி வசூலிக்கவும், நீதி வழங்கவும் அரசு அலுவலர்களை இரண்டாம் ஃபிலிப் நியமித்தார். நாட்டைக் காக்கவும், வேறு நாடுகளின் மீது படையெடுக்கவும் பிரபுக்களின் உதவியையே நம்பியிராமல் பெரும் படையை உருவாக்கினுர். இவர் காலத்திலிருந்தே ஃபிரான்சில் நிலமானியத் திட்டம் வலுவிழக்கத் தொடங்கியது.

கி.பி. 13 ஆம் நூற்றுண்டில் ஒன்பதாம் லூயி நீதி வழுவா மன்னராக ஃபிரான்சை ஆட்சி செய்தார். தானே எல்லா வழக்கு களையும் விசாரித்து நீதி வழங்கினுர். எல்லா மக்களும் ஒரே விதமான சட்டத்தின் கீழ் நீதி வழங்கப்பட்டார்கள். பாரிஸ் 'நீதிக்குழு' இவரால் நியமிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஃபிரான்சு நாடு முழுவதிலும் ஒரே சீரான நாணயமுறை இவர் காலத்தில்தான் புகுத்தப்பட்டது. கிறித்துவ மதத்தை நாடு முழு வதும் பரப்பப் பல முயற்சிகளை மேற்கொண்டார். மக்களின் துன்பங்களைப்போக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தார். பொதுவாக இவர் காலத்தில் மக்கள் இனிய வாழ்கை நடத்தினுர் கள்.

காபிஷியன் அரசர் நான்காம் ஃபிலிப்பின் காலத்தில்தான் ஸ்டேட்ஸ் ஜெனரல் என்றழைக்கப்பட்ட ஃபிரெஞ்சுப் பாராளு மன்றம் முதன் முறையாகக் கூட்டப்பட்டது. இதில் குருமார், பிரபுக்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர். ஆட்சித் துறையில் மன்னனேயன்றி மக்களும்பங்கு கொள்வதற்கு ஓரளவு வாய்ப்பளிக்கப்பட்டது.

இங்ஙனம் யூகாபெட் நிறுவிய வமிசத்து அரசர்கள் ஃபிரான்சு நாட்டில் உரோமானியப் பேரரசுக்கு அடுத்த மிகப்பெரிய பேரரசை நிறுவி, அங்கு கல்வி மற்றும் மக்களாட்சிக் கருத்துகள் வளரு வதற்குப் பெருந்தொண்டாற்றினுர்கள்.

# 10. பேரரசர் நான்காம் ஹென்றி

## (கி.பி.-1050—1106)

### ஆட்சிப் பொறுப்பை ஏற்றல்

மூன்றும் ஹென்றியின் மகன் நான்காம் ஹென்றி கி.பி. 1056ஆம் ஆண்டில் புனித உரோமானியப் பேரரசராக முடி சூட்டப்பட்டார். அப்பொழுது அவருக்கு வயது ஆறு. அடுத்த இரண்டு ஆண்டுகளில் அவருடைய தந்தை இறந்துவிட்டார். ஜெர்மனி, இத்தாலியின் பெரும்பகுதி, பர்கண்டி போன்றவை அவருடைய பேரரசில் அடங்கியிருந்தன. தன் தாய் அக்னெஸின் (Agnes) உதவியோடு அவருடைய பேரரசை அவர் ஆட்சி செய்ய வேண்டியிருந்தது.

இவ்விளவரசரைக் கொலைசெய்ய முயற்சிகள் பல செய்யப் பட்டன. ஆனுல் அவை வெற்றி பெறவில்லை. அரசருக்கு இன்னல்கள் ஏற்பட்டபோது அன்னே, ஆடல்பெர்ட் (Anno and Adal-bert) என்பவர்கள் அரசருக்கு உறுதுணையாக இருந்தார்கள். கி.பி. 1069ஆம் ஆண்டில் எல்லா அரசாங்கப் பொறுப்புகளையும் அரசரே கவனிக்கத் தொடங்கினுர்.

### ஹென்றியின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட உள்நாட்டு நிகழ்ச்சிகள்

பவேரியா, சுவாபியா, காரிந்தியா போன்றவற்றின் கோமகன் களோடு அவர் போரிடவேண்டியதாக இருந்தது. இவர்கள் பேரரசரின் மேலதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். குறிப்பாக பவேரியாவின் கோமகன், பேரரசரைக் கொலை செய்யச் சூழ்ச்சி செய்தாரென்று குற்றம் சாட்டப்பட்டார். அவருடைய அதிகாரம் ஒடுக்கப்பட்டு, அவருடைய நிலப்பகுதி கைப்பற்றப்பட்டது.

சாக்சானியர்களும், துரிஞ்சியன்களும் (Saxons and Thuringians) கலகங்கள் செய்தனர். ஹென்றி சாக்சனி பகுதியில் பல கோட்டைகள் கட்டுவதை எதிர்த்தனர். அரசர் மற்றும் அரசரின்

அலுவலர்கள் ஆடம்பர வாழ்க்கை நடத்துவதற்காகச் சாக்சனி கொள்ளையடிக்கப்படுவதாகச் சாக்சானியர்கள் அரசர்மீது குற்றம் சாட்டினர். சாக்சானியர்களையும், துரிஞ்சியர்களையும் அடக்கு வதற்குப் பல ஆண்டுகள் ஆயின. அவருடைய கருவூலத்தின் பெரும்பகுதி இதற்காகச் செலவிடப்பட்டது.

இத்தகைய இக்கட்டான நேரத்தில்தான் போப் ஏழாம் கிரிகரி யுடன் பதவிச் சின்னப் போராட்டம் (Investiture Struggle) நடத்த வேண்டியிருந்தது.[1]

## ருடால்ஃபுடன் போர்

நான்காம் ஹென்றி, போப் ஏழாம் கிரிகரி மன்னிப்பைப் பெறு வதற்காக கி.பி. 1077ஆம் ஆண்டில் கனோசா (Canossa) நகரத் திற்குச் சென்றிருந்தபோது, சில ஜெர்மன் பிரபுக்கள், சுவாபியாவின் கோமகன் ருடால்ஃபை (Rudolph, Duke of Swabia) ஜெர்மனியின் அரசராகத் தேர்ந்தெடுத்துவிட்டனர். ஹென்றி தலைநகருக்கு விரைந்தோடினார். பெரும்படை கொண்டு போட்டி அரசரையும், சாக்சானியர்களின் கலகங்களையும் அடக்க முற்பட்டார். ஆனால் ஹென்றி இரண்டு இடங்களில்—அதாவது கி.பி. 1078ஆம் ஆண்டில் மெல்ரிக்ஸ்டாட்டிலும் (Mellrichstadt), கி.பி. 1080ஆம் ஆண்டில் ஃபிளார்க்கையிலும் (Flarchheim) தோற்கடிப்பட்டார். கி.பி. 1080ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். ஹென்றிக்கு இருந்த பெருத்த இடையூறு தானாகவே அகன்றுவிட்டது.

## ஹென்றியின் அயல்நாட்டுக் கொள்கை

கி.பி. 1081ஆம் ஆண்டில் இத்தாலியின் வடபகுதியின்மீது ஹென்றி படையெடுத்தார். டஸ்கனியின் ஆட்சியாளர் மாடில் டாவைத் தோற்கடித்துத் தன் மேலதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும் படிச் செய்தார். லம்பார்டிப் பகுதியையும் தன் பேரரசரோடு இணைத்துக்கொண்டார்.

கிழக்கு உரோமானியப் பேரரசர் முதலாம் அலெக்சியசுடன் (Alexius I) நட்புறவு கொண்டார்; அவரிடமிருந்து பல உதவிகளை யும் பெற்றார்.

முதலில் இரண்டு முறை உரோமின்மீது எடுத்த படையெடுப்பு கள் தோல்வியுற்றன. மூன்றும் முறை படையெடுத்து அந் நகரைக் கைப்பற்றி, போப் ஏழாம் கிரிகரியை விரட்டியடித்தார். புதிதாக அரசரால் நியமிக்கப்பட்ட போப் கிளிமெண்ட், அரசருக்கு கி.பி. 1084ஆம் ஆண்டில் உரோமானியப் பேரரசராக முடிசூட்டினார்.

1. 'பதவிச்சின்னப் போராட்டம்' என்ற அத்தியாயத்தைப் பார்க்கவும்.

### ஹெர்மனுடன்போர்

ஹென்றி இத்தாலியில் இருந்தபோது ஜெர்மன் பிரபுக்கள் மீண்டுமொரு முறை போட்டி அரசரைத் தேர்ந்தெடுத்தனர். அப் போட்டி அரசர் லக்சம்பர்க்கின் கோமகன், ஹெர்மன் (Hermann, Duke of Luxemburg) என்பவராவார். ஹென்றி ஜெர்மனிக்கு விரைந்தோடி ஹெர்மனின் படைகளை முறியடிக்க ஒரு படை யுடன் புறப்பட்டார். ஆனால் அரசரின் படைகள் உர்ஸ்பர்க் (Wurxburg) என்ற இடத்திற்கருகில் கி.பி. 1088ஆம் ஆண்டில் தோற்கடிக்கப்பட்டன. இருப்பினும், தொடர்ந்து போரிட்டு கி.பி. 1088ஆம் ஆண்டில் ஹெர்மனை விரட்டியடித்தார். பின்னர் சாக்சனிலும் ஹென்றி தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினார்.

### நான்காம் ஹென்றியின் இறுதிக் காலம்

ஹென்றியின் இறுதிக் காலத்தில் அவருடைய மகனும் மனைவியும் பல தொல்லைகளை அவருக்குக் கொடுத்தனர். அவ ருடைய முதல் மனைவி இறந்துவிட்டதால் உருசிய இளவரசி ஒரு வரை இரண்டாவது மனைவியாக மணந்தார். அவள் பெயர் அடிலெய்ட் (Adelaide) என்பதாகும். அவளுக்கும் ஹென்றிக்கும் ஒத்துவரவில்லை. அதனால் அந்த அம்மையார் அரண்மனையை விட்டுச் சென்று, ஹென்றியின் பகைவர்களுடன் சேர்ந்துகொண்டு அரசர்மீது பல்வேறு விதமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார். முதல் மனைவியின் மகன் கான்ராக்கம் (Conrad) இவருக்கு ஆதர வாக இல்லை. கி.பி. 1098ஆம் ஆண்டில் மெய்ன்ஸ் (Mainz) நக ரத்தில் கூடிய பிரபுக்கள் சபை (Diet) ஹென்றியின் இரண்டாவது மகன் ஐந்தாம் ஹென்றியை அரசராகத் தேர்ந்தெடுத்தது. அதன் காரணமாக நாட்டில் குழப்பங்கள் மலிந்தன. மத குருக்கள் பேச் சினையும், பிரபுக்களின் ஆணையையும் ஏற்று ஐந்தாம் ஹென்றி தன் தந்தையைக் கைது செய்து கி.பி. 1105ஆம் ஆண்டில் சிறை யிலடைத்தார். சில மாதங்கள் கழித்து அரசர் சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு கலோன் (Cologne) நகரத்திற்குச் சென்றார். அங்கிருந்து இங்கிலாந்து, ஃபிரான்சு, டென்மார்க்கு ஆகிய நாடு களின் அரசர்களோடு தொடர்புகொண்டு தன் மகன்மீது போர் தொடுக்க முயன்றுகொண்டிருந்தார். அதற்குள்ளாக கி.பி. 1106ஆம் ஆண்டில் அவர் அங்கேயே இறந்துவிட்டார்.

ஹென்றி வாழ்நாள் முழுவதும் போப்புகளோடும், பிரபுக் களோடும், தன் சொந்த மனைவி மக்களுடனும் போராடி இறுதியில் அமைதியில்லா அரசராக மாண்டார்.

# 11. திருச்சபைக்கும் பேரரசுக்கும் ஏற்பட்ட பதவிச்சின்னப் போராட்டம்

## (THE INVESTITURE STRUGGLE)

**விளக்கம்**

ஐரோப்பாவில், இடைக்காலத்தின் பிற்பகுதியில், அதாவது கி.பி. 11, 12, 13ஆம் நூற்றுண்டுகளில் புனித உரோமானியப் பேரரசருக்கும், போப்புக்கும் இடையே அதிகாரப் போட்டி ஏற்பட்டது. பேரரசர் உயர்ந்தவரா, போப் உயர்ந்தவரா என்ற வினு இருவராலும் எழுப்பப்பட்டது. அரசரே உயர்ந்தவர் என்று அரசரும், ஆண்டவன் பிரதிநிதி என்ற முறையில் போப்பே உயர்ந்தவர் என்று போப்பும் கூறினர். ஆனுல் ஒருவர் கருத்தை மற்றவர் ஏற்றுக்கொள்வதாக இல்லை.

ஷார்லமெய்னின் ஆட்சிக் காலத்தில் எங்ஙனம் போப் மூன்ரும் லியோ, பேரரசரின் உதவியை நாடினுர் என்பதையும், பின்னர் அவர் எங்ஙனம் கி.பி. 800ஆம் ஆண்டில் போப்பினுல் முடிசூட்டப்பட்டார் என்பதையும் முன்னரே கண்டோம். அவர் காலத்தில், போப் அரசரின் அதிகாரத்திற்கு உட்பட்டவராக இருந்தார். அரசர் நாட்டையும், மக்களையும் காப்பாற்றுபவர் என்ற முறையில், அவரே போப்பைவிட உயர்ந்தவர் என்றும் தெய்விகமானவர் என்றும் கருதப்பட்டார்.

இதே போலப் பேரரசர் ஆட்டோவின் ஆட்சிக் காலத்திலும், போப் பன்னிரண்டாம் ஜான் பேரரசின் உதவியைப் பல முறை பெற்றுப் பின்னர் கி.பி. 962ஆம் ஆண்டில் ஆட்டோவுக்குப் புனித உரோமானியப் பேரரசரென முடிசூட்டினுர். இவ்விரு நிகழ்ச்சிகளும் பேரரசுக்கும், திருச்சபைக்குமிடையே பல போராட்டங்கள் இடைக்காலத்தின் பிற்பகுதியில் நடக்கக் காரணமாயிருந்தன. நிலமானியத் திட்டத்தின் அடிப்படையில் கிறித்தவக் குருமார்கள்

அரசரிடமிருந்து நிலமானியங்களைப் பெற்று வந்தனர். எனவே அவர்கள் அரசரின் அதிகாரத்திற்குட்பட்டவர்களாகவே நடந்து வந்தனர். போப்பையும் பேரரசரே நியமித்து வந்தார். நியமிக்கப் பட்ட பின்னர் அரசர் போப்புக்குக் கணையாழியையும் புனிதச் செங் கோலையும் கொடுத்துப் பதவி ஏற்பு வைபவத்தை நடத்தி வைத்தார். அரசரின் அதிகாரத்திற்கு உட்பட்ட போப்புகள் இங்ஙனம் போப்பை நியமிப்பதையும், பதவி ஏற்பு வைபவத்தை நடத்தி வைப்பதையும் ஏற்றுக் கொண்டனர். அரசரைவிட போப்பே உயர்ந்தவர் என்ற கொள்கையுடைய பல போப்புகள் இம் முறைகளை எதிர்த்தனர். எனவே அரசர்களுக்கும் போப்பு களுக்கும் தீராத பகைமை வளர்ந்து அது நீண்ட போராட்டமாக நடைபெற்றது. இதுவே பதவிச்சின்னப் போராட்டம் என அழைக்கப்படுகின்றது.

2. போப் இரண்டாம் நிகலஸின் ஆணை

கி.பி. 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே போப் அரசரால் நியமிக்கப்படக்கூடாது என்ற கருத்து வலுப்பெற்று வந்தது. போப் இரண்டாம் நிகலஸ் (Pope Nicholas II) கி.பி. 1059ஆம் ஆண்டில் ஓர் ஆணையை வெளியிட்டார். அவ் வாணையில், போப்பை நியமிக்கும் உரிமை பேரரசருக்கு இல்லை என்றும், கிறித்தவ மதத்தைச் சார்ந்த 'கார்டினல்களின் குழுவே' (College of Cardinals) போப்பை இனித் தேர்ந்தெடுக்கும் உரிமை யுடையதென்றும் போப் கூறியிருந்தார். இவ்வாணையைப் பயன் படுத்திக்கொண்டு பிற்காலத்தில் போப் ஏழாம் கிரிகரி போன்ற வர்கள் அரசரின் அதிகாரங்களைக் குறைக்க முயன்றனர். எனவே போப்புக்கும் பேரரசருக்கும் அதிகாரப் போராட்டம் ஏற்பட்டது.

அதேநேரத்தில் திருச்சபையைச் சார்ந்தவர்களிடையே சில குறைபாடுகள் இருந்தன. பணத்தைக் கொடுத்துப் பதவியை வாங்குதலும், குருமார்களாயிருந்தும் திருமணம் செய்து கொள் வதும், முறைகேடானவையாகக் கருதப்பட்டன. இக் குறைகளைப் போக்கக் கிரிகரி போன்றவர்கள் முயன்றார்கள்.

3. (அ) பேரரசர் நான்காம் ஹென்றியும் போப் ஏழாம்கிரிகரியும்

நான்காம் ஹென்றி கி.பி. 1056ஆம் ஆண்டில் ஜெர்மன் நாட்டின் (புனித உரோமானியப் பேரரசு) பேரரசராக ஐக்ஸ்லா ஷாபெல் (Aix – la – Chapelle) என்ற தலை நகரத்தில் முடிசூட்டப் பட்டார். அவருக்கு அப்பொழுது வயது ஆறு. இந்த இளைஞனை ஆட்சிப் பீடத்திலிருந்து அகற்றி அரியணையைக் கைப்பற்றுவதற்கு

ஜெர்மன் பிரபுக்கள் சூழ்ச்சிகள் பல செய்தனர். ஆனால் அவை வெற்றி பெறவில்லை. தன் மதிநுட்பத்தாலும் திறமையினாலும் பேரரசைக் கட்டிக் காத்துத் தன் வலிமையை நிலை நாட்டினார். அரசியல் கொந்தளிப்புகளை வெற்றியுடன் அடக்கிய ஹென்றி மத விவகாரங்களில் பெருந் தொல்லைகளுக்குட்பட வேண்டியிருந்தது.

கி.பி. 1073ஆம் ஆண்டில் ஏழாம் கிரிகரி போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ஹில்டே பிராண்ட் (Hilde Brand) என்றும் அழைக்கப்பட்டார். ஆண்டவனின் தெய்விகச் சின்னம் திருச்சபை என்றும், அது எந்த அதிகாரத்திற்கும் உட்பட்டது அல்ல, அரசர்களுக்குக் கிறித்தவ மதத்தைச் சார்ந்த மத குருக்களை நியமிக்கும் உரிமையும், அவர்களுக்குக் கணையாழியையும் புனிதச் செங்கோலைக் கொடுத்துப் பதவி ஏற்பு வைபவத்தை நடத்தி வைக்கும் உரிமையும் இல்லை என்பதை கி.பி. 1075ஆம் ஆண்டில் தன் ஆணையின் வாயிலாக அறிவித்தார். மேலும், அவ்வாணையில் குருமார்கள் அனைவரும் திருச்சபையின் ஊழியர்களேயன்றி, அரசின் ஊழியர்கள் அல்லர் என்பதைத் தெளிவுபடுத்தினார். இவ்வாணையை மதித்து நடக்காதவர் எவராயிருப்பினும் அவர் 'மதவிலக்கு' செய்யப்படுவார் என்றும் கிரிகரி உறுதியோடு தெரிவித்திருந்தார்.

ஆனால் ஹென்றி இவ்வாணையை மதித்து நடக்கவில்லை. அத்தகைய ஆணையை வெளியிடுவதற்கே போப்புக்கு அதிகாரமில்லையெனக் கருதினார். தொடர்ந்து குருமார்களை நியமித்துக் கொண்டு வந்தார். முதலில் ஜெர்மனியில் இருந்த எல்லாக் கிறித்தவ நிறுவனங்களின் குருமார்கள் அரசரையே ஆதரித்தனர். எனவே, ஹென்றி திருச்சபையின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்காதவர் என்றும், திருச்சபையை இழிவுபடுத்துகிறார் என்றும் போப் குற்றம் சாட்டினார். தொடர்ந்து இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டால் ஹென்றி மதவிலக்கு செய்யப்படுவார் என்றும் போப் பயமுறுத்தினார்.

ஹென்றி இவ்வச்சுறுத்தல்களுக்கு அஞ்சவில்லை. வோம்ஸ் (Worms) நகரத்தில் ஜெர்மானியக் குருமார்களின் மாநாட்டைக் கூட்டினார். அம் மாநாட்டிற்கு ஜெர்மானியக் குருமார்கள் பெரும்பாலார் வந்திருந்து, தங்கள் முழு ஆதரவையும் அரசருக்குத் தருவதாக உறுதி கூறினர். ஆனால் அத்தகைய ஆதரவை ஜெர்மானியப் பிரபுக்கள் தர மறுத்துவிட்டனர். மாறாக ஹென்றியைக் கவிழ்க்க முயன்றனர். குறிப்பாகச் சாக்சனி பகுதியைச் சேர்ந்த

வர்கள் கலகம் செய்தார்கள். அப் பிரபுக்கள் போப் ஏழாம் கிரிகரியை ஆக்ஸ்பர்க் (Augsburg) நகரத்திற்கு வரும்படி அழைத்தார்கள். அங்கு போப்பைக் கலந்து ஆலோசித்து ஹென்றியைக் கவிழ்க்க வேண்டுமென்பது அவர்களின் திட்டமாகும்.

3. (ஆ) கனோசாவில் ஹென்றியின் கடுந்தவம் கி.பி. 1077 (Penitence of Henry at Canossa)

பிரபுக்களின் அழைப்பை ஏற்றுப் போப் கிரிகரியும் ஆக்ஸ்பர்க் நகரத்திற்குப் புறப்பட்டு விட்டார். இத்தாலியில் போப்புக்கு ஆதரவு இருந்தது. ஜெர்மனியில் அரசருக்கு எதிர்ப்பு இருந்தது. தான் மதவிலக்கு செய்யப்பட்டு, ஆட்சி பீடத்திலிருந்து அகற்றப் படுவது உறுதியென்பதை ஹென்றி புரிந்து கொண்டார். இந்த நிலையில் போப்பிடம் சரணடைவதே சரியான வழியென ஹென்றி கருதினார். எனவே போப் ஆக்ஸ்பர்க் நகருக்கு வருவதற்கு முன்னர் அவரைக் கண்டு மன்னிப்புப் பெற ஹென்றி ஓடினார். போப் அந்த நேரத்தில் இத்தாலியின் வட பகுதியில் உள்ள கனோசா என்ற நகரின் கோட்டையில் தங்கியிருந்தார். அது கடும் குளிர் காலம்; பனிமழை பெய்து கொண்டிருந்தது. அவற்றைப் பொருட்படுத்தாது ஹென்றி ஆல்ப்ஸ் பனிமலைகளைக் கடந்து சென்று போப்பைப் பார்க்க முயன்றார். கோட்டையினுள் இருந்த போப், மன்னரைப் பார்க்க மறுத்துவிட்டார். எவ்வளவோ மன்றாடிக் கேட்டும் கோட்டையினுள் செல்லவும் மன்னர் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் மன்னர் மனந்தளரவில்லை. இருக்கின்ற சூழ் நிலையில் மன்னர் போப்பிடம் மன்னிப்புப் பெறா விட்டால் அவர் தன் பதவியை இழப்பது உறுதி. எனவே, கோட்டை வாயிலில் கடும்பனியையும் பொருட்படுத்தாது உணவும் உறக்கமும் இன்றிக் கடுந்தவம் இருந்தார். ஒரு பேரரசின் ஆட்சியாளர் துறவுக் கோலம் பூண்டு காலணி எதுவுமின்றி மண்டி யிட்டு மன்னிப்புக் கோரினார் என்றாலும் போப் மனமிறங்கவில்லை. அப் பகுதியின் சீமாட்டி மாடில்டா (Countess Matilda) இப் பிரச்சினையில் தலையிட்டு, மன்னரை மன்னிக்கும்படிப் போப்பை வேண்டினார். இறுதியாகப் போப் மன்னரைப் பார்த்து 'மன்னிப்பு' வழங்கினார்.

போப் கிரிகரி, எத்தகைய சூழ்நிலையில் மன்னர் மன்னிக்கப் பட்டார் என்பது பற்றி விளக்கமாக ஜெர்மானியப் பிரபுக்களுக்குக் கடிதம் எழுதிவிட்டு உரோம் திரும்பினார். இந்நிகழ்ச்சி ஐரோப்பிய வரலாற்றில் – குறிப்பாக திருச்சபைக்கும் பேரரசுக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் மிகமுக்கியமான நிகழ்ச்சியாகக் கருதப்படு கின்றது. அரசியல் அதிகாரங்களை விட ஆன்மிக அதிகாரங்களே உயர்ந்தவை என நிரூபிக்கப்பட்டதாக மற்ற ஐரோப்பிய அரசர்

களும், மக்களும் கருதினார்கள். ஆனால் இப் போராட்டம் இத்துடன் முடிவடையவில்லை.

### 3. (இ) கிரிகரி ஹென்றியினால் வீழ்த்தப்படுதல்

ஹென்றி போப்பினால் மன்னிக்கப்பட்டாரென்றாலும், ஜெர்மானியப் பிரபுக்கள் அவரை மன்னராக ஏற்றுக் கொள்ளாமல் வேறொருவரை மன்னராகத் தேர்ந்தெடுத்தனர். ஆனால் ஹென்றி அக் கலகக்காரர்களைத் தன் படைபலம் கொண்டு அடக்கினார். இவ் விவகாரங்களில் போப் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் நடுநிலை வகித்தார். எனினும், அவரைப் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் ஹென்றியிடம் புகைந்து கொண்டு இருந்தது. மன்னர் இப்பொழுது ஓரளவு சில பிரபுக்கள் மற்றும் குருமார்கள் ஆகியோரின் ஆதரவையும் பெற்றுவிட்டார். ஹென்றி உரோமின் மீது படையெடுத்து போப்பைத் தோற்கடித்து அவரைப் பதவி நீக்கம் செய்தார். போப், ஆதரிப்பவர் எவருமின்றி அனாதையாக விடப்பட்டார். பின்னர் அவர் கைது செய்யப்பட்டு சாலர்னோவுக்கு (Salerno) அனுப்பப்பட்டார். அங்கே கி.பி. 1085ஆம் ஆண்டில் பரிதாபகரமான நிலையில் இறந்தார். மன்னருக்கு ஆதரவாக இருந்த குருமார்கள் மூன்றாம் கிளிமெண்ட் (Clement III) என்பவரைப் போப்பாகத் தேர்ந்தெடுத்தனர். மூன்றாம் கிளிமெண்ட் ஹென்றிக்கு முடிசூட்டிப் புனித உரோமானியப் பேரரசரென அறிவித்தார். எனினும் இப் போராட்டம் இத்துடன் நிற்கவில்லை.

### 4. (அ) ஐந்தாம் ஹென்றி ஆட்சிக்கால நிகழ்ச்சிகள்

நான்காம் ஹென்றிக்குப் பின்னர் ஐந்தாம் ஹென்றி கி.பி. 1106ஆம் ஆண்டில் அரசரானார். சில ஆண்டுகள் கழித்து இப் போராட்டத்திற்கு ஒரு தீர்வுகாண முயன்றார். அப்பொழுது போப்பாக இருந்த பாஸ்கெல் (Pope Paschal) என்பவரும் கிரிகரியைப் போல் அல்லாது விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடையவர். எனவே அரசர் போப்புடன் ஓர் உடன்பாட்டுக்கு வரலாம் எனக் கருதி கி.பி. 1111ஆம் ஆண்டில் உரோமுக்கு வந்தார். இதை விரும்பாத சில உரோமானியர்கள் கலகம் விளைவித்து, அரசருடன் வந்த பல ஜெர்மானியர்களைக் கொன்று குவித்தனர். அதனால் அந்த ஆண்டில் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

### 4. (ஆ) வோம்ஸ் ஒற்றுமைப் பத்திரம் (The Concordat of Worms – 1122)

ஐந்தாம் ஹென்றி காலத்திலேயே, போப் இரண்டாம் காலிக்ஸ்டஸ் (Pope Calixtus II) வோம்ஸ் நகரத்தில் ஒற்றுமைப்

பத்திரத்தில் கையெழுத்திட்டார். அதன்படி குருமார்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு திருச்சபையினிடம் ஒப்படைக்கப் பட்டது. போப்பினிடமிருந்தே அவர்கள் கணையாழியையும் புனிதச் செங்கோலையும் பெற்றுப் பதவி ஏற்க வேண்டும் என்றும் அதே நேரத்தில் நிலமானிய அடிப்படையில் அவர்களுக்கு அரசர் நில மானியங்களை வழங்குவதால் அரசரின் அதிகாரத்திற்கு உட் பட்டு நடக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. போப்புக்கும் பேரரசருக்கும் ஏற்பட்ட அதிகாரப் போராட்டத்தில், வோம்ஸ் ஒற்றுமைப் பத்திரம் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி யாயினும், அதைக் கடைப்பிடித்து நடக்கப் பின்னர் வந்த போப்பு களும் அரசர்களும் ஆயத்தமாக இல்லையென்பதை, இனிவரும் நிகழ்ச்சிகள் விளக்குகின்றன.

### 5. (அ) இங்கிலாந்தில் 'பதவிச்சின்னப்' போராட்டம்

நார்மானிய அரசர் முதலாம் வில்லியம் (William the Conqueror – 1066 – 87) இங்கிலாந்து நாட்டின் அரசராக இருந்த பொழுது, லான்ஃபிராங்க் (Lanfranc) என்பவர் காண்டர் பரியின் தலைமை மதகுருவாக (Archbishop of Canterbury) இருந் தார். இங்கிலாந்தில் உள்ள குருமார்களை நியமித்து, அவர் களுக்குப் பதவி ஏற்பு வைபவத்தை நடத்தி வைப்பது தனக்கே உரிய கடமையென அரசர் வாதாடினார். அரசு திருச்சபையின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டதல்ல என அரசர் உறுதியாக நம்பினார். நல்ல வேளையாக லான்ஃபிராங்கின் பரந்த மனப்பான் மையால் கசப்பான நிகழ்ச்சிகள் நடப்பது தவிர்க்கப்பட்டது.

### 5. (ஆ) இரண்டாம் வில்லியம் (William II, 1087 – 1100)

இவர் காலத்தில் ஆன்ஸெல்ம் (Anselm) என்பவர் காண்டர் பரியின் தலைமை மதகுருவானார். இவர் அரசரிடமிருந்து கணை யாழியையும் புனிதச் செங்கோலையும் பெற்றுப் பதவி ஏற்க உறுதியாக மறுத்து விட்டார். மேலும் காண்டர்பரி திருச்சபையின் கணக்குகளும் சொத்துக்கள் பற்றிய விளக்கங்களும் அரசரிடம் இருந்தன. அவற்றை ஆன்ஸெல்ம் கேட்டபோது கொடுக்க அரசர் மறுத்து விட்டார். எனவே ஆன்ஸெல்ம் இங்கிலாந்தை விட்டு உரோம் நகருக்குச் சென்றார்.

### 5. (இ) முதலாம் ஹென்றி (கி.பி.1100 – 1135)

உரோமுக்குச் சென்றுவிட்டிருந்த ஆன்ஸெல்மை, முதலாம் ஹென்றி இங்கிலாந்துக்கு அழைத்து காண்டர்பரியின் தலைமை மதகுருவாக இருக்கும்படி வேண்டினார். ஆன்ஸெல்ம் அழைப்பை

ஏற்றுத் தம் பணியில் ஈடுபட்டார். ஓரிரு ஆண்டுகள் அரசருக்கும் தலைமை மதகுருவுக்குமிடையே நல்லுறவுகள் இருந்தன. ஆன்ஸெல்முக்கு இரண்டாம் பாஸ்கலின் (Pope Pascal II) ஆதரவு இருந்தது. எனவே அரசருக்கெதிரான நடவடிக்கைகளில் ஆன்ஸெல்ம் ஈடுபட்டார். குருமார்களுக்குப் 'பதவி ஏற்பு' வைபவத்தை நடத்தி வைக்கவும், அவர்களை நியமிக்கவும் அரசருக்கு அதிகாரமில்லையென அறிவித்தார். அரசர் படைகொண்டு தலைமைக் குருவைத் தாக்குவார் போல் தோன்றியது. ஆகையால் ஆன்ஸெல்ம் இரண்டாம் முறையாக இங்கிலாந்தை விட்டு ஓடிப் போப்பிடம் புகலிடம் தேடினார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது கி.பி. 1107ஆம் ஆண்டில் முதலாம் ஹென்றிக்கும் ஆன்ஸெல்முக்குமிடையே ஓர் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது. அதன்படிக் குருமார்கள் தேவாலயத்தைச் சேர்ந்தவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் அரசரிடமிருந்து மானியங்களைப் பெறுவதால் அரசரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்றும், கணையாழியை அரசரிடமிருந்தும், புனிதச் செங்கோலை திருச்சபையிடமிருந்தும் பெறவேண்டுமெனவும் உடன்பாடு ஏற்பட்டது. இதே அடிப்படையில்தான் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் **'வோம்ஸ் ஒற்றுமைப் பத்திரம்'** (1122) புனித உரோமானியப் பேரரசர் ஐந்தாம் ஹென்றிக்கும், போப் இரண்டாம் காலிக்ஸ்டஸ்சுக்குமிடையே செய்து வைக்கப்பட்டது.

### 5. (ஈ) இரண்டாம் ஹென்றியும் (கி.பி.1154 – 1189) பெக்கெட்டின் படுகொலையும்

இரண்டாம் ஹென்றிக்கு முன் அரசராக இருந்த ஸ்டீபன் (Stephen) காலத்தில் திருச்சபை வலிமை பெற்றுவிட்டது. திருச்சபையைச் சேர்ந்தவர்கள் பல உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று விட்டார்கள். மத நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் செய்யும் குற்றங்களை திருச்சபை நீதி மன்றங்களே விசாரித்து எளியதண்டனைகளைக் கொடுக்கும். ஆனால் குறிப்பாக மதகுருமார்கள் கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்களானாலும் திருச்சபையின் சட்டங்களின்படி (Canon laws) அவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கப்பட மாட்டாது. ஆனால் மதகுருமார்கள் அல்லாதவர்கள் அதேபோன்ற கொலைக்குற்றத்திற்கு மரணதண்டனை விதிக்கப்பட்டார்கள். ஆனால் சமநீதியை நிலைநாட்ட விரும்பிய ஹென்றி இத்தகைய முறையை வெறுத்தார். நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் ஒரே விதமான சட்டத்திற்கு உட்பட்டு ஒரே வகையான நீதி மன்றங்களாலேயே குற்றவாளிகளை

விசாரிக்க வேண்டுமென விரும்பினுர். ஆனுல் இவருடைய கருத்துகளுக்கு காண்டர்பரி தலைமை மதகுரு பெக்கெட் (Becket) ஒப்புக்கொள்ளவில்லை. வேறு பல கருத்துகளிலும் ஹென்றியும் பெக்கெட்டும் முரண்பட்டார்கள். கி.பி. 1170 ஆம் ஆண்டில் ஒருநாள் அரசரின் போர் வீரர்கள் பெக்கெட்டைக் கொலை செய்து விட்டார்கள். இதற்காக ஹென்றி மனம் வருந்தி உண்மையிலேயே ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்டாரென்ருலும், இக் கொலைச் செய்தியைக் கேள்விப்பட்ட இங்கிலாந்து மக்கள் வேதனைக் குரல் எழுப்பினுர்கள்; பெக்கெட்டைப் பெரும் தியாகியர்கக் கருதினுர்கள். அது ஐரோப்பாக் கண்டம் முழுவதும் எதிரொலித்தது. இங்கிலாந்திலும் வேறுபல ஐரோப்பிய நாடுகளிலும் 'பின்னர் நிகழப்போகின்ற கோர நிகழ்ச்சிகளுக்கு இது ஒரு முன்னேடியாக இருந்தது.

### 6. (அ) புனித உரோமானியப் பேரரசர் ஃபிரெடிரிக் பார்பரோசாவும் திருச்சபையும்

ஐந்தாம் ஹென்றிக்குப் பின்னர், லொதெய்ர், மூன்ரும் கான்ராட் (Lothair and Conrad III) ஆகியவர்கள் பேரரசர்கள் ஆனுர்கள். அவர்களுக்குப்பின் ஃபிரெடிரிக் பார்பரோசா (Frederick Barbarossa) ஆட்சிப்பொறுப்பை ஏற்ருர். அவர் ஷார்லமெய்னைப் போலவும், ஆட்டோவைப் போலவும் மிகத்திறமை வாய்ந்த அரசராவார். ஜெர்மானியப்பேரரசின் இழந்த பெருமையை மீண்டும் நிலைநாட்டப் பேராவல் கொண்டார். தன் பேரரசோடு இத்தாலியையும் இணைத்துப் பேரரசை விரிவுபடுத்த விரும்பினுர். ஆனுல் அவருக்கும் அவர் காலத்தில் போப்பாக இருந்த நான்காம் ஆட்ரியனுக்கும் (Adrian IV) கருத்து வேறுபாடுகள் தோன்றின. போப் நாட்டுக்கு விடுத்த அறிக்கையொன்றில் அரசருக்கு போப் முடிசூட்டுவதாலும், பேரரசு முழுவதையும் போப்பே அரசருக்கு முறைப்படி கொடுக்கிருர் என்ற தெய்விகக் கருத்தினுலும் போப்பே எல்லாத்துறையிலும் உயர்ந்தவர் என்றும், எனவே போப்பின் ஆணைக்கு ஏற்பவே அரசர் நடந்து கொள்ள வேண்டுமென்றும் உறுதியாகக் கூறினுர். ஆனுல் பார்பரோசா இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

கி.பி. 1159 ஆண்டில் போப் நான்காம் ஆட்ரியன் ஒய்வு பெற்ருர். அவருடைய ஆதரவுடன் மூன்ரும் அலெக்சாண்டர் (Alexander III) போப்பானுர். ஆனுல் பேரரசர் பார்பரோசாவை ஆதரித்த பெரும்பாலான கார்டினல்கள் அவர் போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது முறையற்றதென்றும், செல்லுபடியாகாதென்றும் அறிக்கை விட்டனர். அது மட்டுமின்றி விக்டர் (Victor) என்ற வேறுஒருவரைப் போட்டிப் போப்பாகத் தேர்ந்

தெடுத்தனர். பார்பரோசாவும் இந்த போப்பையே ஆதரித்தார். பார்பரோசா உரோமை முற்றுகையிட்டுக் கைப்பற்றத் திட்ட மிட்டார். போப் மூன்றும் அலெக்சாண்டரை ஆதரித்த வட இத்தாலியச் சிற்றரசர்கள் 'லம்பார்ட் சங்கம்' (Lombard League) என்ற கூட்டமைப்பை ஏற்படுத்திப் பார்பரோசாவை எதிர்த்தனர். ஆனுல் அப் படைகள் மிக எளிதாக பார்பரோசாவினுல் தோற் கடிக்கப்பட்டன. பின்னர் உரோம் நகரை முற்றுகையிட்டார். அதுவும் மிக எளிதாகக் கைப்பற்றப்பட்டது. போப் மூன்றும் அலெக்சாண்டர் தப்பித்துக்கொண்டு உரோமிலிருந்து ஓடிவிட் டார். பார்பரோசா வெற்றிப் பெருமிதத்துடன் தலைநகர் திரும் பினுர். ஆனுல் இவ்வெற்றியின் பெருமை நீண்ட நாள் நிலைக்க வில்லை.

கி.பி. 1177ஆம் ஆண்டில் பார்பரோசாவின் பெரும் படைகள் வட இத்தாலிய அரசர்களின் படைகளால் மிலான் நகரத்திற்கு அருகில் லெக்னுனே (Legnano) என்ற இடத்தில் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டன. பேரரசருக்கு இது பெருத்த அவமானத்தை ஏற்படுத்தியது. தன் பதவியையும் துறக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுது அதே போப் மூன்றும் அலெக்சாண்டர் வெனிஸ் நகரத்தில் தங்கியிருந்தார். அவரிடம் பேரரசர் ஓடிச்சென்று அவர் காலிலே விழுந்து மன்னிக்கும்படி வேண்டினுர். எந்தபோப்பை பதினெட்டு ஆண்டுகளுக்குமுன் உரோமை விட்டுத் துறத்தினுரோ அதே போப்பின் காலிலே விழுந்து மாமன்னர் மன்னிப்புக்கேட்ட போது, போப் பெருந்தன்மையுடன் மன்னித்தார். (போப் மூன்றும் அலெக்சான்டர் கி.பி. 1159 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1181 வரை தொடர்ந்து பதவியில் இருந்தார்.)

சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் (கி.பி. 1077ஆம் ஆண்டில்) போப் ஏழாம் கிரிகரியிடம் மன்னிப்பு வேண்டி கனே சாவில் நான்காம் ஹென்றி கடுந்தவமிருந்ததும், கி.பி. 1177ஆம் ஆண்டில் போப் மூன்றும் அலெக்சாண்டரிடம் மன்னிப்புப் பெற வெனிஸ் நகரத்தில் பார்பரோசா போப்பின் காலில் விழுந்து சர ணடைந்ததும், திருச்சபைக்கும் பேரரசுக்கும் ஏற்பட்ட போராட் டத்தில் முக்கியமான கட்டங்களாகும்.

அதேபோல நான்காம் ஹென்றி ஏழாம் கிரிகரியை கி.பி. 1085ஆம் ஆண்டில் விரட்டியடித்ததும், பார்பரோசா கி.பி. 1159ஆம் ஆண்டில் போப் மூன்றும் அலெக்சாண்டரைப் பறந் தோடச் செய்ததும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளாகும்.

6. (ஆ) ஆறும் ஹென்றியின் திருமணம்

வெனிஸில் ஏற்பட்ட நிகழ்ச்சியைத் தனக்கு ஏற்பட்ட பெருத்த அவமானமாகப் பிரெடிரிக் பார்பரோசா கருதினர். தன்னுடைய ஆட்சிக் காலத்திலே இல்லாவிட்டாலும் தன் மகனின் ஆட்சிக் காலத்திலாவது போப்பின் செல்வாக்கைக் குறைக்க அவர் திட்டமிட்டார். அப்பொழுது இரு சிசிலிகளின் அரசுக்கு (Kingdom of Two Sicilies) ஆட்சியாளராக இருந்தவர் இளவரசி கான்ஸ்டன்ஸ் (Constance) என்பவராவார். போப்புக்கு மிக அதிகமான ஆதரவு நல்கிய அரசுகளில் இவ்வரசு முக்கியமானதாகும். இங்கு வாழ்ந்த மக்களில் பெரும்பாலார் நார்மானியர்கள் ஆவர். ஃபிரெடிரிக் பார்பரோசா, இவ்விளவரசியைத் தன் மகன் ஆறும் ஹென்றிக்குத் திருமணம் செய்துவைக்க முயன்று அம் முயற்சியில் வெற்றியும் பெற்றுர். இத் திருமணத்தினுல், இரு சிசிலிகளின் அரசின் ஆதரவு போப்புக்கு இல்லாமல் போகும் என்றும் அதன் பயனுகப் போப் ஜெர்மானியப் பேரரசின் அதிகாரத்திற்குட்பட்டவராகவே இருப்பார் என்றும் ஃபிரெடிரிக் பார்பரோசா கருதினர்.

கி.பி. 1170ஆம் ஆண்டிலிருந்து 1197ஆம் ஆண்டு வரை ஆறும் ஹென்றி அரசராக இருந்தார். உரோமானியப் பேரரசை ஈடு இணையற்ற வல்லரசாக மாற்ற விரும்பினர். போப்புக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடுகள் ஓரளவு இருந்தனவென்றுலும் அவை வரலாற்றுச் சிறப்புடையவை அல்ல.

7. நான்காம் ஆட்டோவின் ஆட்சிக்கால நிகழ்ச்சிகள்

ஜெர்மனியில் நீண்ட காலமாகவே அரசர்கள் பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்களேயன்றிப் பரம்பரை வழியாக வந்தவர்கள் அல்லர். ஆறும் ஹென்றி தன் ஆட்சிக் காலத்தில் இத்தகைய முறையைவிடுத்துப்பரம்பரையாக அரசராகும் முறையைக்கொண்டு வர முயன்றுர். ஆனுல் இம் முயற்சியில் அவர் வெற்றி பெறவில்லை. எனவே, அவர் கி.பி. 1197ஆம் ஆண்டில் இறந்தபோது அவருடைய மகன் ஃபிரெடிரிக் அரசராக முடியவில்லை. மேலும் அப்பொழுது போப்பாக இருந்த மூன்றும் இன்னொசண்ட் ஃபிரெடிரிக்கை ஆதரிக்கவில்லை. அவர் நான்காம் ஆட்டோ (Otto IV) என்பவரை ஆதரித்ததால் ஆட்டோவே அரசராக முடிந்தது. 'போப்பின் ஆதரவு எனக்கில்லாமல் போயிருந்தால் நான் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது 'என்று ஆட்டோவே கூறினர். இருப்பினும் விரைவிலேயே ஆட்டோவுக்கும் போப்புக்கும் கருத்து வேறுபாடுகளும் மனக் கசப்பும் ஏற்பட்டன. ஆட்டோ இத்தாலியை முற்றுகையிட ஆரம்பித்தார். இரு சிசிலிகளின் அரசைக் கைப்பற்ற வேண்டுமெனத் திட்டமிட்டார். அந்த நேரத்தில் போப்,

ஆட்டோவை 'மதவிலக்கு' செய்தார். அந்த நேரத்தில் ஜெர்மானியப் பிரபுக்கள் ஆரும் ஹென்றியின் மகன் ஃபிரெடிரிக்கையே மன்னராகத் தேர்ந்தெடுத்தனர். ஃபிரெடிரிக், ஆட்டோவை கி.பி. 1214ஆம் ஆண்டில் புவைன் போரில் (Battle of Bouvines) தோற்கடித்துத் தன் நிலையை உறுதிப்படுத்திக்கொண்டார். போப் மூன்றும் இன்னொசண்ட் கி.பி. 1216ஆம் ஆண்டில் இறந்துவிட்டார்.

8. இரண்டாம் ஃபிரெடிரிக்கும் திருச்சபையுடன் போராட்டமும்

ஆரும் ஹென்றியின் மகன் இரண்டாம் ஃபிரெடிரிக் (கி.பி. 1211–1250) இடைக்காலத்தில் மிகச் சிறந்த அரசர்களுள் ஒருவராவார். மக்களிடையே கல்வியைப் பரப்புவதற்காக இத்தாலியில் நேபிள்ஸ் பல்கலைக் கழகத்தை நிறுவினார். சாலர்னோ (Salerno) நகரத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்தார். பிரபுக்களின் அதிகாரங்களையும் குருமார்களின் உரிமைகளையும் குறைத்தார்.

இவர் பேரரசராக இருந்தபோது ஒன்பதாம் கிரிகரி (Gregory IX) உரோம் திருச்சபையின் போப்பாக இருந்தார். புனித இடம் ஜெருசலத்தைக் கைப்பற்றுவதற்காக சிலுவைப் போர் ஒன்றை நடத்தும்படிப் போப், பேரரசருக்கு ஆணையிட்டார். பேரரசர் தனக்கு உடல்நிலை சரியில்லாததால் உடனடியாகச் சிலுவைப் போரில் ஈடுபட முடியவில்லை எனக் கூறினார். ஆனால் போப் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. பேரரசர் தன் ஆணையை மீறுகின்றாரென்றும், அவர் இத்தாலியின் மீது அடிக்கடி படையெடுக்கிறாரென்றும் குற்றம் சாட்டிப் போப் பேரரசரை 'மதவிலக்கு' செய்தார். ஆனால் ஃபிரெடிரிக் உடனே ஒரு சிலுவைப் போரை (ஆரும் சிலுவைப் போர்) நடத்தி அதில் வெற்றி பெற்றுத் தன் பெருமையை நிலைநாட்டினார். அப்படியிருந்தும் போப் பேரரசரை ஆட்சிப் பீடத்திலிருந்து இறக்குவதற்குச் சூழ்ச்சி செய்தார். மக்களுக்கு அவருக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்யும்படி அறிவுறுத்தினார். மன்னர் மன்னிப்புக் கேட்ட பிறகே அவரைப் போப் மன்னித்தார்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஃபிரெடிரிக் வடஇத்தாலி முழுவதையும் கைப்பற்றினார். கார்டெனுவாவில் (Cortenuova) நடைபெற்ற போரில் (1237) 'லம்பார்ட் கழகம்' படைகளைத் தோற்கடித்து, வெல்லப்பட்ட பகுதிகளில் தன்னுடைய அலுவலர்களை நியமித்து, ஆட்சியை முறைப்படுத்தினார். மேலும் போப்பின் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்கள் மீது (Papal States) படையெடுத்தார். இந்த நேரத்தில் (1241) போப் ஒன்பதாம் கிரிகரி இறந்துவிட்டார்.

ஒன்பதாம் கிரிகரிக்குப் பின் செலஸ்டைன் என்பவர் போப் ஆனார். அவர் பேரரசரின் நெருங்கிய நண்பராவார். அவர் காலத்தில் எந்தப் பிரச்சனையும் எழவில்லை. கி.பி. 1224ஆம் ஆண்டில் **நான்காம் இன்னொசண்ட் (Innocent IV)** போப்பானார். பதவி ஏற்றவுடனே ஃபிரெடிரிக்கின் அதிகாரத்தைக் குறை கூறினார். ஆத்திரம் கொண்ட ஃபிரெடிரிக் நான்காம் இன்னொசண்டை உரோமிலிருந்து விரட்டியடித்தார். போப், ஃபிரான்சிலுள்ள லியோன் (Lyons) நகரத்திற்கு ஓடினார். அங்கே திருச்சபையைச் சார்ந்த குருமார்கள் கூட்டமொன்றைக் கூட்டி, ஃபிரெடிரிக்கை 'மத விலக்கு' செய்து, அவர் தொடர்ந்து பேரரசராக இருக்க உரிமை இல்லாதவரென அறிவித்தார். படையைக் கொண்டே போர்க்களத்தில் மன்னரைத் தோற்கடிக்கத் திட்டம் தீட்டினார். ஆனால் அதற்குள்ளாக கி.பி. 1250ஆம் ஆண்டில் இரண்டாம் ஃபிரெடிரிக் இறந்துவிட்டார். மன்னர் இறந்தாலும், போப் இறந்தாலும், பேரரசுக்கும் திருச்சபைக்கும் ஏற்பட்ட போராட்டம் மட்டும் தீர்வதாக இல்லை. அது இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்து இருந்தது.

### 9. இரண்டாம் ஃபிரெடிரிக்குக்குப் பின் வந்தோர்

ஃபிரெடிரிக்குக்குப் பின் வந்த மூன்று அரசர்கள் திருச்சபையோடு தொடர்ந்து போராட வேண்டியதாக இருந்தது. ஃபிரெடிரிக்கின் மகன் **நான்காம் கான்ராட் (Conrad IV)** ஜெர்மனியை விட்டு நேபிள்ஸ் நகரத்திற்கு விரட்டப்பட்டார். அவர் பின்னர் இறந்தார். கான்ராடின் இளவல் **மான்ஃபிரெட் (Manfred)** ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அப்பொழுது போப்பாக இருந்த **நான்காம் அர்பன் (Urban IV)** கான்ராடின் ஆட்சியை வெறுத்தார். அதனால் அவர் ஃபிரான்சு நாட்டு அரசரான **ஒன்பதாம் லூயியின் (Louis IX)** உதவியை நாடினார். லூயி தன் தம்பியும், ஆஞ்சோவின் ஆட்சியாளருமான **சார்லஸை (Charles of Anjou)** போப்பின் உதவிக்கு அனுப்பினார். சார்லஸ், மான்ஃபிரெட்டை இத்தாலியில் உள்ள பெனவெண்டோவுக்கு (Benevento) அருகில் தோற்கடித்து அப்பகுதியைத் தானே வைத்துக்கொண்டார். மான்ஃபிரெட்டுக்குப் பின்னர் **கான்ராட்டினோ (Conraddino)** அரசரானார். அவர் சார்லஸைத் தோற்கடிக்கக் கருதி இத்தாலியின் மீது படையெடுத்தார். ஆனால் அப் போரில் கான்ராட்டினோ பெருந் தோல்வி கண்டார். சார்லஸ் கைது செய்யப்பட்டு, நேபிள்ஸ் நகரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்குப் பொது இடமொன்றில் நூற்றுக்கணக்கான மக்களுக்கெதிரில் சிரச்சேதம் செய்யப்பட்டார். இக் கொடுமைக்கு திருச்சபையே காரணம் என்பது தெளிவாகின்றது.

நீண்ட இப்போராட்டத்தின் இறுதியில் திருச்சபையே வெற்றி பெற்றது என்று பொதுவாகக் கருதப்பட்டாலும், ஃபிரான்சு போன்ற வேறு நாடுகளில் இப் போராட்டம் தொடர்ந்து நீடித்த தோடல்லாமல், இழிநிலைக்கு உட்படுத்தப்பட்டது என்பதைப் பின்னர் வரும் பகுதிகளில் காண்போம்.

# 12. போப் ஏழாம் கிரிகரி

## (GREGORY VII)

### இளமை

ஏழாம் கிரிகரியின் இயற்பெயர் ஹில்டேபிராண்ட் (Hildebrand) என்பதாகும். அவர் கி.பி. 1021ஆம் ஆண்டில் இத்தாலியின் வடபகுதியில் உள்ள டஸ்கனியில் ஏழைக் குடும்பமொன்றில் பிறந்தார். பின்னர் உரோம் நகரில் இருந்த சாண்டமாரியா (Santamaria) மடாலயத்தில் கல்வி கற்றார். அங்கு அவருடைய சிற்றப்பா மடத்தின் முதல்வராக இருந்தார். அவர் ஹில்டேபிராண்டை ஒழுக்கமுடனும் கட்டுப்பாட்டுடனும் கிறித்தவக் கொள்கைகளை ஆராய்ந்து அறியும்படிப் பயிற்றுவித்தார். பின்னர் ஹில்டேபிராண்டே பெனிடிக்டைன் (St. Benedictine 480–553 A.D.) என்ற கிறித்தவ மதத் துறவியின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு அந்த அமைப்பைச் சார்ந்த துறவியாகவே இருந்து கிறித்தவ மதத் தொண்டு செய்தார். பிற்காலத்தில் அவர் உரோம் திருச்சபையின் போப்பாகப் பணியாற்றிய போதும் அக் கருத்துகளையும் கொள்கைகளையும் கடைப்பிடிப்பதற்கான முயற்சிகளை எடுத்தார்.

### பல மத குருக்களிடம் பயிற்சி

முதலில் ஜான் கிரேஷியன் (John Gratian) என்பவரின் செயலராக ஹில்டேபிராண்டே நியமிக்கப்பட்டார். பின்னர் போப் ஒன்பதாம் லியோ (கி.பி. 1049–1054) இவரைக் கார்டினலாக நியமித்து பீடர் முனிவர் விட்டுச் சென்ற சொத்துக்களை நிருவகிக்கும் பொறுப்பைக் கொடுத்தார். அங்ஙனம் ஆட்சியாளராக இருந்த காலத்தில்தான் சுயநலம் சிறிதுமின்றித் திருச்சபையின் உயர்வுக்காகவும் அதன் நிதிநிலையைச் சீர்திருத்தவும் அரும் பாடுபட்டார்.

கி.பி. 1054ஆம் ஆண்டில் ஒன்பதாம் லியோவும் ஹில்டேபிராண்டும் ஃபிரான்சு நாட்டிற்குக் கிறித்தவ மத மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காகச் சென்றார்கள். திடீரென்று ஒன்பதாம்

லியோ வழியில் இறந்துவிட்டார். திருச்சபையைச் சார்ந்த எல்லா கார்டினல்களும் ஹில்டேபிராண்டை உரோம் திருச்சபையின் போப்பாகப் பதவி ஏற்கும்படி வற்புறுத்தினர். ஹில்டேபிராண்டின் நேர்மையும், அருங்குணங்களும், கிறித்தவ மதத்தின் வளர்ச்சிக்கு இடைவிடாது கடுமையாக உழைக்கும் மனப்பான்மையுமே கார்டினல்களைக் கவர்ந்தன. ஆனால், ஹில்டேபிராண்ட் பதவியையோ புகழ்ச்சியையோ விரும்பியவர் அல்லர். எனவே அவர் போப்பாக இருப்பதற்கு மறுத்துவிட்டார். ஒன்பதாம் லியோவுக்குப் பின் வேறு பல போப்புகள் பதவி வகித்தனர்.

அடுத்து இருபத்து நான்கு ஆண்டுகளில் நான்கு போப்புகள் உரோம் திருச்சபையில் பணியாற்றினர். அந்த இருபத்து நான்கு ஆண்டுக் காலத்தில் ஹில்டேபிராண்ட் உரோமிலேயே இருந்து திருச்சபைக்கு அருந்தொண்டு புரிந்தார். அவருடைய திறமையும், தொண்டும் கிறித்தவ உலகம் முழுவதும் பரவின. அக் காலத்தில் திருச்சபையின் விவகாரங்களில் முழு அனுபவமும் பயிற்சியும் பெற்றார்.

### கிரிகரி உரோம் திருச்சபையின் போப் ஆதல் (கி.பி. 1073–1085)

கி.பி 1073ஆம் ஆண்டில் போப் இரண்டாம் அலெக்சாண்டர் இறந்துவிட்டபொழுது திருச்சபையைச் சேர்ந்த கார்டினல்களும் மத குருக்களும் மட்டுமன்றி உரோம் நகரத்தின் மக்களெல்லாம் ஒன்றுதிரண்டு 'ஹில்டேபிராண்டே போப்பாக வேண்டும்' (Let Hildebrand be Pope) என்று ஒருமித்த குரலில் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர். எனவே, வேறு வழியின்றி ஹில்டேபிராண்ட் போப்பாகப் பதவி ஏற்றார்.

### திருச்சபையில் அவர் செய்த சீர்த்திருத்தங்கள்

ஹில்டேபிராண்ட் போப்பாகப் பதவி ஏற்றதும் தன்னை, ஏழாம் கிரிகரி என்று அறிவித்தார். உடனே திருச்சபையிலும், மத குருமார்களிடமும் இருந்த பல குறைகளை நீக்க முயன்றார். கிறித்தவக் குருமார்கள் கட்டாயம் திருமணம் செய்து கொள்ளக் கூடாதெனவும், குருமார்கள் தங்களை முற்றிலும் கிறித்தவ மதத்தைப் பரப்பும் தொண்டர்களாகவே கருத வேண்டுமென்றும் கி.பி. 1074ஆம் ஆண்டில் ஆணையிட்டார். குருமார்கள் அரசர்களின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லர் என்றும் அறிக்கை விட்டார். எனவேதான் ஃபிரான்சு அரசர், இங்கிலாந்து அரசர், மற்றும் ஜெர்மனியின் அரசர் (புனித உரோமானியப் பேரரசர்) ஆகியவர்களோடு ஹில்டேபிராண்ட் பதவிச் சின்னப்

போராட்டம் நடத்த வேண்டியதாக இருந்தது. அப் போராட்டத்தின் இறுதியில் வெற்றி பெற்றுத் திருச்சபையின் அதிகாரத்தையும் பெருமையையும் எங்ஙனம் அவர் நிலைநாட்டினர் என்பதை முன்னரே கண்டோம். திருச் சபைக்குக் கிரிகரி செய்த தொண்டு பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவையாகும்.

# 13. இடைக்காலப் பல்கலைக்கழகங்கள்

இடைக்கால ஐரோப்பாவில் அரசியல், பொருளாதாரம், சமூகம், மற்றும் மதம் ஆகிய துறைகளில் மக்களிடையே பல புதிய எண்ணங்களும் கருத்துகளும் தோன்றிச் சமுதாயம் பண்பட்ட முதிர்ந்த நிலையை அடைந்து கொண்டு வந்தது. அதே நேரத்தில் கல்வித் துறையைச் சார்ந்த பல கலைகளைப் போற்றி வளர்க்கும் அறிவு முதிர்ச்சியையும் இடைக்கால ஐரோப்பிய மக்கள் பெற்றுர்கள். இடைக்காலத்தின் முற்பகுதியில் கல்வியைப் பரப்பும் பணியை மடாலயப் பள்ளிகளே மேற்கொண்டிருந்தன. காலப் போக்கில் நகரங்கள் தோன்றி விரிவடைந்ததால் அந் நகரங்களில் கிறித்தவ மதத்தைப் பரப்பும் நோக்கோடு கல்வி கற்பிக்கும் தேவாலயப் பள்ளிகள் நிறுவப்பட்டன.

இப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வோராண்டும் வளர்ந்து கொண்டே வந்தது. சமயப் படிப்பைத் தவிரச் சட்டம், மருத்துவம், தருக்கம், தத்துவம், இலக்கணம், சொல்லாற்றல், போன்ற பாடங்களும் கற்பிக்கப்பட்டன. பள்ளிகளாக இருந்த நிலையிலிருந்து, பல கலைகளைக் கற்பிக்கும் உயர் கல்விக் கூடங்களாக அவை மாறியதால் 'பல்கலைக் கழகங்கள்' என்று அப் பள்ளிகள் அழைக்கப்பட்டன. மேலும், இடைக்காலப் பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் தாமாகத் தோன்றியவையே யன்றிக் குறிப்பிட்ட ஆண்டில் குறிப்பிட்டவரால் நிறுவப்பட்டவை யென்று உறுதியாகச் சொல்ல முடியாது. இங்ஙனம் தோன்றிய இடைக்காலப் பல்கலைக்கழகங்களுள் ஃபிரான்சில் பாரிஸ் பல்கலைக் கழகமும், இத்தாலியில் பொலொஞ (Bologna), பாத்வா (Padua) பல்கலைக்கழகங்களும், பொஹிமியாவில் பிராக் (Prague) பல்கலைக் கழகமும், இங்கிலாந்தில் ஆக்ஸ்ஃபோர்ட் (Oxford), கேம்பிரிட்ஜ் (Cambridge) பல்கலைக்கழகங்களும் குறிப்பிடத் தகுந்தவை. இவற்றுள் பாரிஸ் பல்கலைக்கழகமே முதற்கண் தோன்றி, வளர்ச்சியுற்று ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு முன்னோடியாக விளங்கியது.

**பாரிஸ் பல்கலைக்கழகம்**

கி.பி. 11ஆம் நூற்றுண்டில் செய்ன் (Seine) நதியிலிருந்த ஒரு தீவில் அமைக்கப்பட்டிருந்த நாட்டெர் டேம் தேவாலயப் பள்ளி (Cathedral School of Notre Dame), அந் நூற்றுண்டின் இறுதிப் பகுதியிலும் கி.பி. 12ஆம் நூற்றுண்டிலும் மிகப்பெரிய பள்ளியாக வளர்ந்து விட்டது. ஐரோப்பாவின் பல பகுதிகளிலிருந்து மாணவர்கள் அங்கு கல்விகற்க வந்தார்கள். அத் தீவில் இட நெருக்கடி ஏற்பட்டதால் செய்ன் நதியின் இடது கரையில் பள்ளிக்காகப் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. இதுவே பின்னர் பாரிஸ் பல்கலைக்கழகமாக உருவாயிற்று. இக் கல்விக்கோயில் வளருவதற்குக் காரணமாயிருந்தவர்களுள் பீடர் அபிலார்ட் (Peter Abelard) என்ற அறிஞர் குறிப்பிடத் தகுந்தவராவார். மற்ற பல்கலைக்கழங்கள் தோன்றி இயங்குவதற்கு இப் பல்கலைக்கழகம் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது. தலைமை மதகுருவிடமிருந்து கல்வியைக் கற்பிக்கும் தகுதியுடையவரென்று தகுதிச் சான்றிதழ் பெற்றவர்களே இங்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டார்கள். இப் பல்கலைக்கழகம் நாளடைவில் தனித்தியங்கும் நிறுவனமாகச் செயற்பட்டது. நகரங்களில் இயங்கிவந்த பல்வேறுவிதமான சங்கங்கள் (Guilds) போன்று இங்கும் ஆசிரியர் சங்கங்கள் அமைக்கப்பட்டன, பல்கலைக்கழகத்தின் அமைப்பு, செயல்முறை, பாடத்திட்டம், மற்றும் பல்கலைக்கழகத்தோடு தொடர்புடைய எல்லா விவகாரங்களையும் அச்சங்கங்களே கவனித்து வந்தன.

பல்வேறு கல்வித் துறைகளைப் போற்றி வளர்ப்பது ஆசிரியர்களின் கடமை எனக் கருதப்பட்டது. ஆசிரியராகப் பணியாற்றியவர் 'கலை வல்லுநர்' (Master of Arts) என்றழைக்கப்பட்டார். ஒரு குறிப்பிட்ட பாடத் திட்டத்தைப் படித்து முடித்த மாணவருக்கு 'இளங்கலைஞர்' (Bachelor Baccalaureus) என்ற பட்டம் வழங்கப்பட்டது.

இதற்குப்பின் பல தேர்வுகளில் தேர்ச்சி பெற்று முதுகலைப் படிப்பு (Post Graduate Course) பயிலும் தகுதி பெற்றுர்.

இப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக வளர்ந்து விட்டதால் இது நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டது. கி.பி. 13ஆம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் பல்கலைக்கழகத்தின் நிருவாகத்தைக் கவனிக்க மூகவர் (Rector) என்ற அலுவலர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்கு சமயப் படிப்பு, திருச்சபைச் சட்டம், பொதுச் சட்டங்கள் மற்றும் மருத்துவம் போன்றவை சிறப்பாகக் கற்பிக்கப்பட்டன. ஆசிரியர்

களிலும் திறமைமிக்க பல அறிஞர்கள் இங்கு பணியாற்றினர். காலப்போக்கில் பேராசிரியர், டாக்டர் போன்ற பட்டங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. முன்னரே குறிப்பிட்டது போல இப் பல்கலைக்கழகம் அரசியல் அதிகாரங்களுக்கு அப்பாற் பட்டு இயங்கியது. சில நேரங்களில் மாணவர்களுக்கிடையே பூசல்களும், போராட்டங்களும் கூட ஏற்பட்டன. அச் சமயங் களில் அரசின் காவற்படை பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்து மாணவர்களைத் தாக்கின. இதற்கு மாணவர்கள் எதிர்ப்பு தெரி வித்தனர். இதைத் தொடர்ந்து ஃபிரான்சின் அரசர் இரண்டாம் ஃபிலிப் அகஸ்டஸ் (கி.பி. 1180 – 1223) கி.பி. 1200ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்குப் பல சலுகைகளைக் கொடுத்தார். குறிப்பாகப் பல்கலைக்கழகத்தின் அனுமதியின்றிக் காவற்படை பல்கலைக்கழகத்திற்குள் நுழையக் கூடாதென ஆணையிட்டார். அதேபோல போப் மூன்றும் இன்னொசெண்ட், போப் ஒன்பதாம் கிரிகரி போன்றோர் காலத்திலிருந்து திருச்சபையின் அதிகாரத்தி லிருந்தும் பாரிஸ் பல்கலைக்கழகம் பெருமளவு விடுபட்டுச் செயல் படத் தொடங்கியது.

பாரிஸ் போன்ற இடைக்காலப் பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களையே மாணவர்கள் கேட்டறிய வேண்டியதாக இருந்தது. அச்சிடப்பட்ட புத்தகங்கள் அக் காலத்தில் இல்லையென்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒருசில எழுத்துப் பிரதிகள் கிடைத்தனவெனினும் அவை கிடைத்தற்கரிய பொருள்களாக மதிக்கப்பட்டுப் பாதுகாக்கப் பட்டன. மாணவர்களின் தேர்ச்சியையும் திறமையையும் அறிய வாய்மூலத் தேர்வுகளே நடத்தப்பட்டன. இப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பட்டங்களும் தரப்பட்டன.

கி.பி. 1258ஆம் ஆண்டு ராபர்ட் – டி – சார்போன் (Robert – de – Sorbon) என்ற பெரியார் சமயப் பாடங்கள் பயிலும் மாணவர் களுக்கெனத் தனியாக ஒரு கட்டடத்தைக் கட்டிக் கொடுத்தார். உணவகமாகவும், உறைவிடமாகவும் அது பயன்படுத்தப்பட்டது. அது அப்பொழுது கல்லூரி என்றே அழைக்கப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டே பின்னர் இப் பல்கலைக்கழகத்தில் பல கல்லூரிகள் தோன்றின. பாரிஸ் பல்கலைக்கழகத்தின் பாணி யிலேயே ஐரோப்பாவில் பல பல்கலைக்கழகங்கள் வளரலாயின. அவை அனைத்தும் மதம், மருத்துவம் மற்றும் சட்டம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதில் புகழ்வாய்ந்தவைகளாக விளங்கின.

**பீடர் அபிலார்ட் (கி.பி. 1079–1142)**

ஃபிரான்சு நாட்டைச் சேர்ந்த பீடர் அபிலார்ட் (Peter Abelard) கிறித்தவ மதத்தைப் பற்றி விளக்கிக் கூறும் வல்லுநராகவும்

கற்றறிந்த மேதையாகவும் விளங்கினூர். அவர் பாரிஸ் பல்கலைக் கழகத்தை நிறுவியவர்களுள் ஒருவராவார். கல்விக்கலையில் அவர் பேராவல் கொண்டு கணக்கியல், இசை, சட்டம் மற்றும் சமயம் முதலான பிரிவுகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு தன் அறிவைப் பெருக்கிக் கொண்டார். மதத்துறை பற்றிய கருத்து களில் வாதிடுவதில் வல்லவராக விளங்கினூர்.

இடைக்காலத்தில் சமயத்தைப் பற்றி ஆய்ந்து படிப்பதே சிறந்த கல்வி என்ற கருத்து நிலவி வந்தது. அக் காலத்தில் பிளேடோவைப் (Plato) பின்பற்றிய 'புறவாய்மையாளர்கள்' (Realists) நம்மைச்சுற்றியுள்ள பொருள்கள் அனைத்தும் தற்காலிக மானவையே எனக் கருதினர். அரிஸ்டாடலைப் (Aristotle) பின் பற்றிப் 'பெயர்ப்போலிமைக் கோட்பாடுடையோர்' (Nominalists) நாம் பொருள்களுக்குச் சூட்டும் பெயர்கள் திடமான பொருள் களையே குறிக்கின்றன என்று கருதினர். இக் கருத்துகளுக்கு மாருகத் திருச்சபையைச் சார்ந்த கடவுள் நம்பிக்கை என்பது பகுத்தறிவுடன் ஆய்ந்து பார்க்கும் பிரச்சினையோ அல்லது விவா தத்திற்குரிய பிரச்சினையோ அல்ல என்று குருமார்கள் கருதினூர் கள். ஆனூல் அபிலார்ட் பகுத்தறிவைப் பயன்படுத்தித் தருக்க ரீதியாக உண்மைகளை உணரவேண்டுமெனப் பிரச்சாரம் செய்தார். குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டும், கடவுள் நம்பிக்கையுடன் ஒழுக்கமுள்ள வாழ்க்கை நடத்தலாமென அவர் கூறினூர்.[1] அவருடைய கொள்கைகளும் தத்துவங்களும் பெரும்பாலான இளைஞர் உள்ளங்களைக் கவர்ந்தன. அதனூல்தான் கிறித்தவமதத் துறைபற்றிய, ஆராய்ச்சிக் கருத்துகளில் ஈடுபட பாரிஸ் பல்கலைக் கழத்தை நிறுவினூர். அங்கு அவர் கி.பி. 1110 ஆம் ஆண்டி லிருந்து கி.பி. 1140 வரை ஆசிரியராகப் பணியாற்றினூர்.

**பொலொஞ பல்கலைக்கழகம்**

இத்தாலியில் பொலொஞ என்னும் நகரத்தில் நிறுவப்பட்ட இப் பல்கலைக்கழகம் இடைக்கால ஐரோப்பாவில் மிகவும் புகழ் வாய்ந்ததாகத் திகழ்ந்தது. உரோமானியப் பேரரசர்களின் ஆட்சிக்காலத்திலேயே இந் நகரத்தில் புகழ்மிக்க சட்டப் பள்ளி யொன்று இருந்தது. அப் பள்ளியே கி.பி. 1088 ஆம் ஆண்டு பொலொஞ பல்கலைக்கழகமாக (University of Bologna) உயர்த்தப் பட்டது. மிகவிரைவில் இது சட்டம், மற்றும் மருத்

1 அபிலார்ட், ஹெலொய்ஸ் (Heioise) என்ற பெண்ணைக் காதலித்தார். ஆனூல், அவளைத் திருமணம் செய்துகொண்டு இனிய இல்லற வாழ்க்கையை நடத்த முடியவில்லை. இவ்விருவரும் ஒருவருக்கொருவர் எழுதிக்கொண்ட காதல் கடிதங்கள் மிகவும் புகழ்வாய்ந்தவையாகும்.

துவப்படிப்புக்குப் புகழ்வாய்ந்த பல்கலைக் கழகமாக விளங்கியது. இங்கு படித்த மாணவர்களும், பணியாற்றிய பேராசிரியர்களும் ஐரோப்பா முழுவதும் பெருமையுடன் மதிக்கப்பட்டார்கள். காலப்போக்கில் சட்டம், மருத்துவம் மட்டுமே அல்லாது, கிறித்தவ மதத்துறைப் படிப்பு மற்றும் கலைத்துறைப் பாடங்களும் இங்கு கற்பிக்கப்பட்டன. மருத்துவத் துறையில் மனிதனின் உடல் உறுப்புகளை அறுத்து அறியும் கலை முதன் முதலில் இங்கு கற்பிக்கப்பட்டது.

இப் பல்கலைக்கழகத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரேநேரத்தில் (கி.பி. 1262) படித்திருக்கின்றனர்! புகழ்வாய்ந்த இத்தாலியக் கவிஞர்கள் தாந்தேயும், (Dante) பெட்ரார்க்கும் (Petrarch) இப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களாவர்.

இங்கு பணியாற்றிய பேராசிரியர்களுள் பீட்ரோ பாம்பொனாஸ்ஸி (Pietro Pomponazzi) என்ற தத்துவ ஞானியும், மார்செல்லோ மால்ஃபிஜி (Marcellomalphigi), லூயுகி, கால்வனி (Luigi Galvani) என்ற மருத்துவ மேதைகளும், லாரா பாஸ்ஸி (Laura Bassi) என்ற கணக்கியல் அறிஞரும், ஜியோசூ கார்டுயுச்சி (Giosue Carducci), ஜியோவன்னி பாஸ்கொலி (Giovanni Pascoli) என்ற கவிஞர்களும் மிகவும் புகழ் வாய்ந்தவர்களாவர்.

இப் பல்கலைக்கழகம் இத்தாலியில் மிக முக்கியமான கலை வளர்க்கும் கோயிலாக விளங்குகிறது. இங்குள்ள நூலகத்தில் பத்து இலக்கத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட அறிஞர்களைத் தவிர திருச்சபைச் சட்டங்களைத் தொகுத்து வெளியிட்ட கிரேஷியன் (Gratian), மற்றும் பல்துறைச் சட்டமேதை இர்னெரியஸ் (Irnerius) என்பவர்கள் இங்கு வாழ்ந்தவர்களேயாவர்.

பாரிஸ் பல்கலைக்கழகத்தைப் போலவே இங்கும் பேராசிரியர்களின் சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவை பாடத்திட்டங்களைப் பற்றியும், அவற்றை மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறைகளைப் பற்றியும் மாணவர்களின் பிரச்சினைகளை எங்ஙனம் தீர்ப்பது என்பது பற்றியும் ஆய்ந்தறிந்து முடிவுகளை எடுத்தன. பேராசிரியர்களின் சங்கங்களைப்போலவே மாணவர் சங்கங்களும் செயற்பட்டன. இடைக்கால ஐரோப்பாவில் இப் பல்கலைக்கழ

கத்தைப் போன்று வேறு பல பல்கலைக்கழகங்கள் ஐரோப்பிய நாடுகளில் தோன்றலாயின.

## பாத்வா பல்கலைக்கழகம் (University of Padua)

இத்தாலியில் உள்ள பாத்வா என்ற நகரத்தில் அமைந்திருக்கும் இப் பல்கலைக்கழகம் பதின்மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்திலேயே நிறுவப்பட்டது. பேரரசர் இரண்டாம் ஃபிரெடிரிக்கின் பெருமுயற்சியால் இப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. இதுவும், சட்டம் மற்றும் மருத்துவத் துறைகளில் பல புகழ்வாய்ந்த பேராசிரியர்களையும் வல்லுநர்களையும் தன்னகத்தே கொண்டிருந்தது. இங்கு பணியாற்றிய பேராசிரியர்களுள் காலிலியோ காலிலே (Golileo Galilei), கியுக்லீல்மினி (Guglielmini), ஃபல்லோபியஸ் (Fallopius) போன்றவர்கள் குறிப்பிடத்தகுந்தவராவர்; இங்கு படித்த மாணவர்களுள் தாந்தே (Dante), பெட்ரார்க் (Petrarch) மற்றும் டெஸ்ஸோ (Tasso) போன்றவர்கள் புகழ் வாய்ந்தவராவர். இப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறைக்கு வேண்டிய மூலிகைகளுக்காகவும் மற்ற தேவைகளுக்காகவும் மிகப்பெரிய மூலிகைத் தோட்டம் பழங்காலந் தொட்டு இருந்து வருகின்றது. இடைக்கால ஐரோப்பாவில் இது மிகப்புகழ் வாய்ந்த தோட்டமாக விளங்கியது.

## பிராக் பல்கலைக்கழகம் (University of Prague)

பேரரசர் நான்காம் சார்லசினால் பிராக்[1] என்ற நகரத்தில் கி.பி. 1348 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களிடமும் மாணவர்களிடமும் புரட்சிக்கருத்துகள் பரவின. இங்கிலாந்தில் வாழ்ந்த ஜான் விக்ளிம்பின் (John Wycliffe) கிறித்தவமதச் சீர்திருத்தக் கருத்துகள் இங்கு வேகமாகப் பரவின. குறிப்பாக ஜான் ஹஸ் (John Huss) என்ற பேராசிரியர் பொஹிமியாவில் மதச்சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பினார். பின் அப் பல்கலைக்கழகத்திற்கே தலைவராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இடைக்கால ஐரோப்பாவில் பல்கலைக்கழகங்கள், கல்விக்கலைகளை மட்டுமேயன்றி அறிவுப் பிரச்சாரத்தையும் மேற்கொண்டன என்பதற்கு இப் பல்கலைக்கழகம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம்

இலண்டனுக்கு வடமேற்கே ஐம்பது மைல்களுக்கப்பால் அமைந்துள்ள ஆக்ஸ்ஃபோர்ட் என்ற நகரத்திலிருக்கும் இப் புகழ்மிக்க பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு சரியாகத் தெரிய

1 இது இன்றைய செக்கோஸ்லோவாகியாவின் தலைநகரமாகும்.

வில்லையாயினும் கி.பி. 12 ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் இது நிறுவப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது. இரண்டாம் ஹென்றி இங்கிலாந்தை ஆட்சி செய்தபோது ஒரு சிறிய பள்ளியாகத் தொடங்கி கி.பி.13ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஒரு பல்கலைக்கழகமாக வளர்ந்து விட்டது. மற்ற இடைக்கால ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களைப் போலவே சமயப்பாடம், சட்டம், மருத்துவம் போன்ற துறைகளுக்கு இப் பல்கலைக்கழகத்திலும் சிறப்பிடம் தரப்பட்டது. கி.பி.13ஆம் நூற்றுண்டில் ‘கணக்கியல் பாடம் கற்பிப்பதில் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம் மிகவும் சிறந்தது’ என்ற பெயரை இது பெற்றது. அதே நூற்றுண்டில் பாரிஸ் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த பேராசிரியர்கள் இப் பல்கலைக்கழத்திற்குச் சென்று இதன் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டார்கள்.

**கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம்**

கேம்பிரிட்ஜ் நகரத்தில் அமைந்திருக்கும் இப் பல்கலைக்கழகம் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைப்போலவே ஒரு சிறிய பள்ளியாகவே முதலில் தொடங்கப்பட்டது. கி.பி. 12ஆம் நூற்றுண்டுக்கு முன்பிருந்தே கிறித்தவ மதக் கருத்துகளை மடாலயங்களில் வாழ்வோருக்கு விளக்குவதற்காக இக் கல்வி நிறுவனம் அமைக்கப்பட்டது. காலப்போக்கில் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தைப் போலவே மாணவர்கள் தங்கிப் படிக்கும் பல்கலைக் கழகமாக (Residential University) இது மாறியது.

**மற்ற பல்கலைக் கழகங்கள்**

இவற்றைத் தவிர ஸ்பெயினில் சாலமான்கா (Salamanca) பல்கலைக்கழகமும், போர்ச்சுகலில் கோய்ம்ப்ரா (Coimbra) பல்கலைக் கழகமும், ஃபிரான்சில் டூலூஸ் (Toulouse) பல்கலைக்கழகமும், இத்தாலியில் உரோம் மற்றும் நேபிள்ஸ் பல்கலைக் கழகங்களும் இடைக் காலத்திலேயே தோன்றின. கி.பி. 14ஆம் நூற்றுண்டுக்குப் பிறகு போலந்தில் கிராகோ (Cracow) பல்கலைக் கழகமும், ஆஸ்திரேலியாவில் வியன்ஞ பல்கலைக் கழகமும், ஜெர்மனியில் ஹெய்டல்பர்க் (Heidelberg) பல்கலைக் கழகமும் தோற்றுவிக்கப்பட்டன. இவை பெரும்பாலும் பாரிஸ் அல்லது பொலொஞ பல்கலைக் கழகத்தின் பாணியிலேயே அமைக்கப்பட்டனவென்பது குறிப்பிடத்தக்கது. கி.பி. 15ஆம் நூற்றுண்டுக்குப் பிறகு மேலும் பல பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன.

இங்ஙனம் இடைக்காலப் பல்கலைக் கழகங்கள் கல்வித் துறையில் பல புதிய கருத்துகளையும், மக்களின் அன்றுட வாழ்க்கைக்குப்

பயன்படக்கூடிய கலைகளையும் பரப்பி வந்தன. ஒவ்வொரு பல்கலைக்கழகமும் ஒரு குறிப்பிட்ட துறையில் சிறப்பும் புகழும் பெற்றிருந்ததால் பல நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றுகூடி பண்பாட்டுப் பரிவர்த்தனை செய்துகொள்வதற்கும், குறுகிய தேசிய உணர்வுகள் மறைவதற்கும் இப் பல்கலைக் கழகங்கள் உதவின. எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட துறைகளைத் தவிர, இலக்கியப் படிப்புக்குக் காலப்போக்கில் சிறப்பிடம் தரப்பட்டது. குறிப்பாக வெர்ஜில் (Virgil), சிசரோ (Cicero), லிவி (Livy) போன்ற உரோமானிய எழுத்தாளர்களின் இலக்கியங்கள் ஊன்றிப் படிக்கப்பட்டன. அதேபோல ஹோமர் (Homer), பிளேடோ, அரிஸ்டாடில் போன்ற கிரேக்க எழுத்தாளர்களின் இலக்கியங்களும் படிக்கப்பட்டன. ஐரோப்பிய நாடுகளின் இலக்கியங்கள், கலைகள் மற்றும் நாகரிகம் பரவுவதற்கும், இடைக்காலத்திற்குப் பிறகு மறுமலர்ச்சி இயக்கமும், சமயச் சீர்திருத்த இயக்கமும் தோன்றுவதற்கு இடைக்காலத்தில் தோன்றிய இப் பல்கலைக் கழகங்கள் பெருமளவு காரணமாயிருந்தன எனக் கூறின் மிகையாகாது.

# 14. நகரங்களின் வளர்ச்சி

ஒரு நாட்டின் நாகரிகம் மற்றும் பண்பாட்டின் வளர்ச்சி நகரங்களிலிருந்தே தொடங்குகின்றன என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. நகரங்களிலேதான் கண்ணைக்கவரும் கலைக் கூடங்களும், விண்ணை முட்டும் கட்டடங்களும், கலைகளை வளர்க்கும் பல்கலைக்கழகங்களும் அமைக்கப்படுகின்றன. வாணிக வளர்ச்சியினால் ஏற்படும் செல்வச் செழுமையும் மற்றும் செல்வந் தர்களின் உறைவிடங்களும் நகரங்களில் காணப்படுகின்றன. எனவே நகரங்களே ஒரு நாட்டின் நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றன.

ஐரோப்பாவில் பத்தாம் நூற்றாண்டிலிருந்தே நகரங்கள் தோன்றி வளரத் தொடங்கின. ஐரோப்பியச் சமுதாயம் குழப் பங்கள் மிகுந்த இருண்ட காலத்திலிருந்து ஒளியை நோக்கி வர ஆரம்பித்தது. நிலமானியத் திட்டத்தினால் பிரபுக்கள் மிகப் பெரிய கோட்டைகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தார்கள். அதனைச் சுற்றிப் பல பெரிய வீடுகள், பள்ளிகள் மற்றும் மடா லயங்கள் கட்டப்பட்டன. அவை அப்படியே பரந்த நகரங் களாக மாறின. வேறுபல நகரங்கள் வாணிகம் செய்வதற்கு வசதியான கடற்கரை ஓரங்களிலோ அல்லது பல சாலைகள் சந்திக்கும் இடங்களிலோ தோன்றலாயின. சில நகரங்களிலே பெரும்பாலும் வாணிகம் செய்யும் செல்வந்தர்கள் அதிகமாக வாழ்ந்தார்கள். அத்தகைய நகரங்களைச் சுற்றி எதிரிகளின் தாக்குதல்களைத் தடுக்கப் பெரிய சுவர்கள் எழுப்பப்பட்டன. காலப் போக்கில் மக்கள் தொகை பெருகப் பெருக அவர்களுக்கு வேண்டிய பொருள்கள் அந் நகரத்திலேயே உற்பத்தி செய்யப் பட்டன. பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட பிரபுவின் ஆட்சிக்கு உட்பட்டதாகவே ஒவ்வொரு நகரமும் இருந்தது. அத்தகைய நகரங்களில் வாழ்ந்த மக்களும் பலவகை வரிகளைப் பிரபுவுக்குச் செலுத்தினர். பொருள்களை ஒரு பண்ணையிலிருந்து மற்றொரு பண்ணைக்கு எடுத்துச் செல்லும் போது அதற்கான வரியும், சந்தை

களில் கடை வைத்துப் பொருள்களை விற்கும் போது அதற்கான வரியும், நதிகளின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் பாலங்களைக் கடக்கும் போது 'பாலவரி'யும் பிரபுக்களுக்குத் தரப்பட்ட வரிகளுள் சிலவாகும். இத்தகைய வரிகளைச் செலுத்தியும் கூட வாணிகம் செய்து பலர் பெரும் செல்வந்தர்களானார்கள்.

அரசர்களும் பிரபுக்களும் பெரும் கோட்டைகளைக் கட்டுவதற்கும் படையை வைத்துக்கொள்வதற்கும், போர்புரிவதற்கும் பணம் தேவைப்பட்டது. அத்தகைய நேரங்களில் ஒரு குறிப்பிட்ட நகரத்திற்குரிய பிரபுவோ, அரசரோ, அந் நகரத்திலிருக்கும் எல்லாச் செல்வந்தர்கள் அல்லது வாணிகர்களிடமிருந்து ஒரு பெரும் தொகையைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு எல்லா வரிகளினின்றும் விலக்குக் கொடுத்து எல்லா உரிமைகளையும் கொடுத்து விடுவார். பின்னர் அந் நகரத்தில் வாழும் வணிகர்கள் தங்கள் வாணிகத்துக்குப் போட்டியோ இடர்ப்பாடோ வராமலிருக்க, 'வணிகக் கழகங்களை' ஏற்படுத்திக் கொண்டனர். இத்தகைய கழகங்கள் பல நகரங்களிலே நிறுவப்பட்டன. ஒரு குறிப்பிட்ட நகரத்திலே எல்லாப் பொருள்களையும் வாங்குவதையும் விற்பதையும் இக் கழகங்களே ஒழுங்கு படுத்தி முறைப்படுத்தின. ஏறத்தாழ இன்றுள்ள கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் போல் அவை இயங்கின. வணிகர்களுக்கு இலாபம் சம்பாதித்துக் கொடுத்தாலும் ஒரு குறிப்பிட்ட நகரத்திலுள்ள எல்லா மக்களின் தேவைகளை நிறைவேற்றுதலும் இக் கழகங்களின் நோக்கங்களாகும். வாணிகம் பெருமளவில் வளர்ந்து வந்தது. தேவை ஏற்பட்டபோது தனித்தனித் தொழிற் கழகங்களும் ஏற்படுத்தப்பட்டன. ரொட்டி உற்பத்தியாளர்கள், துணி உற்பத்தியாளர்கள், மீன் பிடிப்பவர்கள், போர்க் கருவிகள் செய்பவர்களைப் போன்றவர்கள் தனித்தனிக் கழகங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். 'வணிகக் கழகங்கள்' பொதுவாக எல்லா வணிகர்களின் வாணிக வளர்ச்சியிலும் அக்கறை காட்டின. தொழிற் கழகங்கள் குறிப்பிட்ட பொருள்களின் வாணிக வளர்ச்சியில் கவனம் செலுத்தின. இரண்டும் பெரும்பாலும் வணிகர்களின் நலன்களுக்காகப் பாடுபட்டன. இவற்றின் இயக்கமும் வாணிகர்களின் நடவடிக்கைகளும் பல விதிமுறைகளால் கட்டுப் படுத்தப்பட்டன. ஐரோப்பாவில் நகரங்களின் வளர்ச்சிக்கு வணிகர்களே பெருமளவு பொறுப்பானவர்களெனக் கூறினால் மிகையாகாது.

**இத்தாலிய நகரங்கள்**

இத்தாலியில் பல நகரங்கள் இடைக் காலத்தில் பெரும் வளர்ச்சியைக் கண்டன. அவற்றுள் வெனிஸ் முக்கியமான

தாகும். ஏட்ரியாடிக் கடலின் வட கரையில் இனிமையான தட்ப வெப்பநிலை கொண்ட இடத்தில் நீரின்மேல் அமைக்கப்பட்ட நகரம் வெனிஸ் ஆகும். மேற்கத்திய வணிகர்களுக்கும் கிழக்கத்திய வணிகர்களுக்கும் தங்கள் பொருள்களை விற்பதற்குச் சிறந்த சந்தையாக இது விளங்கியது. கீழை நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் உயர்ந்தரகப் பட்டு, பருத்தி, விலையுயர்ந்த உலோகங்கள், நவரத்தினங்கள், தங்கம், தந்தம், மற்றும் நறுமணப் பொருள்கள் முதலானவை வெனிசில் விற்கப்பட்டன. அங்கிருந்து அவை நில வழியாக மேற்கு ஐரோப்பிய நகரங்களுக்கு எடுத்துச் செல்லப் பட்டன. பெருஞ் செல்வந்தர்கள் இங்கு வாழ்ந்தார்கள். பதினான்காம் நூற்றாண்டிலேயே மிகப் பெரிய துறைமுகமாக இது விளங்கியது. முன்னூற்றுக்கும் மேற்பட்ட வணிகக் கப்பல்களை அவ் வணிகச் செல்வந்தர்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள். வெனிஸ் ஒரு தனி அரசாகவே இயங்கியது. போர்க் காலங்களில் இவ் வணிகக் கப்பல்கள் போர்க் கப்பல்களாகவும் பயன் படுத்தப் பட்டன. வணிகத் துறையில் மட்டுமன்றி அரசியல் அரங்கிலும் ஈடுஇணையற்ற நகரமாக வெனிஸ் விளங்கியது.

வெனிசைப் போலவே ஜெனோவாவும் இத்தாலியின் வடக்கே மேற்குக் கரையிலுள்ள சிறந்த துறைமுகப் பட்டினமாகும். ஒரு காலத்தில் கருங்கடல் வழியாக ஆசிய நாடுகளுடன் ஜெனோவாவின் செல்வந்தர்கள் வாணிகம் செய்தார்கள். கீழ் நாடுகளுடன் வாணிகம் செய்வதில் வெனிசுக்கும் ஜெனோவா வுக்கும் கடும் போட்டியும் சில நேரங்களில் போர்களும் ஏற்பட்டன. இவ்விரண்டு நகரங்களின் வாணிகம் துருக்கியர்கள் கான்ஸ்டான்டி நோபிளைக் கைப்பற்றிய பின்னர் மிகவும் பாதிக்கப் பட்டது.

ஃபிளாரன்ஸ் இவ்விரண்டு நகரங்களைப் போலல்லாது உள் நாட்டில் அமைந்திருக்கும் புகழ்வாய்ந்த நகரமாகும். இடைக் காலத்தில் மிகப் பெரிய தொழில் நகரமாகவும் கல்வி, மற்றும் கலைத் துறைகளில் ஏனைய நகரங்களுக்கு வழி காட்டியாகவும் இது விளங்கியது. கலைச் சிறப்புகள் மிகுந்த பல உயரமான கட்டடங்கள் இந் நகரில் கட்டப்பட்டன. ஏழு அடுக்கு மாடிக் கட்டடங்கள் அக் காலத்திலேயே இங்கு கட்டப்பட்டன. தாந்தே, பெட்ரார்க், பொக்காஷியோ, மாக்கியவெல்லி, மைகேல் ஆஞ்சிலோ, லியானர்டோடா, வின்சி - கலீலியோ போன்ற கவிஞர்களும் கலைஞர்களும் ஃபிளாரன்சைத் சார்ந்தவர்களே என்பது குறிப்பிடத் தக்கது. கலைமகளும் செல்வமகளும் களித் திருந்த ஒரே நகரம் ஃபிளாரன்ஸ் ஆகும்.

இவற்றைப் போலவே மிலான், பீசா, நேபிள்ஸ் முதலான நகரங்களும் இடைக் காலத்தில் வளர்ந்து வந்த முக்கியமான நகரங்களாக இருந்தன.

**ஜெர்மானிய நகரங்கள்**

ஜெர்மனியில் இருந்த பல நகரங்கள் கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் சாதாரணக் கிராமங்களாகத் தொடங்கி கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்குள் பெரு நகரங்களாக மாறிவிட்டன. ஜெர்மனியின் வடக்கேயுள்ள ஆம்பர்க் (Hamburg), பிரெமென் (Bremen), லூயுபெக் (Lubeck) போன்ற துறைமுக நகரங்கள், பால்டிக்கடல் நாடுகளாகிய நார்வே, சுவீடன், டென்மார்க் போன்ற நாடுகளுடனும் மற்றும் இங்கிலாந்துடனும் வாணிகத்தில் ஈடுபட்டன. ஃபிளாண்டர்ஸ் பகுதியில் உள்ள புருஷ் (Bruges), கென்ட் (Ghent) போன்ற நகரங்கள் இங்கிலாந்திலிருந்து கம்பளியை இறக்குமதி செய்து கம்பளி ஆடைகளை உற்பத்தி செய்யும் பெரிய தொழில் நகரங்களாக விளங்கின, நூறாண்டுப் போர் நடை பெறும் போதும் இந் நகரங்களிலிருந்த பெரு வணிகர்கள் இங்கிலாந்துக்குச் சாதகமாகவே இருந்தார்கள். மற்றும் கலோன் (Cologne) பிரன்ஸ்விக் (Brunswick) போன்ற நகரங்கள் சிறந்த சந்தைகளாக விளங்கின. ஜெர்மனியின் தெற்கேயுள்ள ஆக்ஸ்பர்க் (Augsburg), நியூரெம்பர்க் (Nuremberg) போன்ற நகரங்கள் மேற்கு ஐரோப்பிய நகரங்களுக்கும் இத்தாலிய வாணிக நகரங்களுக்கும் இடையே இருந்ததால் அவை பொருள் களைப் பகிர்ந்து கொடுக்கும் மையங்களாக விளங்கின.

ஜெர்மானிய நகரங்களில் இருந்த வணிகர்கள் நிலவழியாகவும் கடல் வழியாகவும் வாணிகம் செய்தனர். இவ் வணிகர்கள் திருடர்களாலும், கடற் கொள்ளைக்காரர்களாலும் அடிக்கடித் தாக்கப்பட்டதால் அவர்களுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. குறிப்பாக வட கடலிலும் மத்தியத்தரைக் கடலிலும் இத்தகைய தாக்குதல்கள் அதிகமாக இருந்தன. எனவே அத்தகைய ஆபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஜெர்மானிய நகரங்கள் 'ஹன்சீடிக் லீக்' (Hanseatic League) என்ற ஒரு கழகத்தை ஏற்படுத்தின. இக் கழகத்தில் ஜெர்மனியிலிருந்த எண்பதுக்கும் மேற்பட்ட நகரங்கள் உறுப்பு நகரங்களாக இருந்தன. இது கடல்வழி, மற்றும் நிலவழி வாணிகப் போக்குவரத்துக்குப் பாதுகாப்பு அளித்தது. வணிகப் பொருள்களை முறைப்படுத்தி அனுப்ப வேண்டிய இடங்களுக்கு அனுப்பியது. இக் கழகம் கி.பி. 1350ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1450ஆம் ஆண்டு வரை மிகத் திறமையாகச் செயல்பட்டது.

இக் கழகத்திற்கென்று தனியாக வாணிகக் கப்பல்களும் இருந்தன. பொருள்களைச் சேமித்து வைக்க அயல் நாடுகளில் சேமிப்புக் கிடங்குகளையும் இக் கழகம் அமைத்திருந்தது. ஜெர் மனியின் அரசர்களைத் தேர்ந்தெடுப்பதில் இக் கழகம் பின்னணியி லிருந்து முக்கியமான பணியைச் செய்தது. ஒரு முறை இது டென்மார்க் அரசரையே தோற்கடித்துப் பணிய வைத்தது.

இங்கிலாந்தில் அந் நாட்டின் தலை நகரமாகிய இலண்டனும், மற்றும் வின்செஸ்டர், பிரிஸ்டல், செயிண்ட் ஐவ்ஸ் (St. Ives) ஸ்டவுர் பிரட்ஜ் (Stourbridge) போன்ற நகரங்கள் வேகமாக வளர்ந்து கொண்டு வந்தன.

ஃபிரான்சில் பார்சிலோனு(Barcelona) மார்செய்ல்ஸ்(Marseilles) போன்ற தென் துறைமுகங்கள் வட ஆப்பிரிக்கா நாடுகளுடனும் தென்மேற்கு ஆசியாவின் முகமதிய நாடுகளுடனும் வாணிகம் செய்தன. இவை தவிர பாரிஸ், ரூவன், ரீம்ஸ், ஆர்லியன்ஸ் போன்ற உள் நாட்டு நகரங்கள் பெரிய வாணிகச் சந்தைகளாக விளங்கின. போர்டோ (Bordeaux) மேற்கேயிருந்த முக்கியத் துறை முகமாகும்.

ஐபீரியத் தீபகற்பத்தில் லிஸ்பன், காடிஸ் போன்ற துறைமுகப் பட்டினங்களும், கிரானடா, செவைல் போன்ற உள் நாட்டு நகரங் களும் பெரும் வளர்ச்சி அடைந்து வந்தன.

இவை தவிர ஆப்பிரிக்காவின் டுனிஸ், திரிபோலி, அலெக்சான் டிரியா, டாமெய்டா, கைரோ போன்றவையும் மேற்கு ஆசியாவில் ஜெரூசலம், ஜாஃபா, பெய்ரூட், அங்கோரா போன்ற நகரங்களும், துறை முகங்களும் மற்றும் கிழக்கு உரோமானியப் பேரரசின் தலை நகரம் கான்ஸ்டான்டி நோபிளும் இடைக் காலத்தில் வளர்ந்து வந்த முக்கிய நகரங்களாக இருந்தன.

நகரங்கள் வளர வளர மக்களின் நாகரிகம் பண்பாடு மற்றும் கல்வி, கலைகள், போக்குவரத்துச் சாதனங்கள் முதலானவை வளர்ந்து விரிவடைகின்றன. குறிப்பாக கட்டடக் கலையில் வியத்தகு முன்னேற்றம் காணப்பட்டது. நகரங்களில் கட்டப்பட்ட தேவாலயங்களும் நகரப் பெருமன்றங்களும் கி.பி.12 ஆம் நூற்றூண் டுக்கு முன்னர் உரோமானியக் கட்டடக் கலையம்சங்களின் அடிப் படையில் கட்டப்பட்டன. அந் நூற்றூண்டுக்குப் பின்னர் 'கோதிக் கட்டடக்கலை'(Gothic Architecture) அடிப்படையில் கட்ட டங்கள் கட்டப்பட்டன. கி.பி.12 ஆம் நூற்றூண்டில் ஃபிரான்சு நாட்டுக் கலைஞர்கள் உருவாக்கிய ஒரு புதுவகைக் கட்டடக்கலைக்கு

கோதிக் கட்டடக்கலை என்று பெயர். உரோமானியக் கலையின் அடிப்படையில் கட்டப்பட்ட கட்டடங்களில்,கட்டடத்தின் கூறையைத் தாங்க மிக அகலமும் உயரமும் உடைய சுவர்கள் கட்டப்பட்டன. அதே போல பெரிய உயரமான தூண்கள் எழுப்பப்பட்டு அவைபாதி வட்டத்தைப் போன்ற வளைவுகளால் இணைக்கப்பட்டன. 'கோதிக் கட்டடக் கலை' அமைப்புக் கட்டடங்களில் சுவர்களுக்குப் பதிலாகச் சுவர் தாங்கிகள் பயன்படுத்தப்பட்டன. கட்டடத்திற்கு மேலே கூர்மையான வளைவுகள் மற்றும் அழகிய வண்ணக் கண்ணாடிகளால் மூடப்பட்ட பெரிய ஜன்னல்களும், கற்களில் சிற்ப வேலைப்பாடுகளும் நிறைந்து காணப்பட்டன. இத்தகைய அமைப்புக்களையுடைய கம்பீரமான கட்டடங்கள் மேலே குறிப்பிடப்பட்ட பல நகரங்களில் அமைக்கப்பட்டன.

இடைக்கால ஐரோப்பாவில் இந் நகரங்களின் தோற்றமும் வளர்ச்சியும் மக்கள் எங்ஙனம் சமூக, பொருளாதார வளர்ச்சியோடு கல்விக் கலைகளையும், நுண்கலைகளையும் வளர்த்தார்களென்பதையும் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன.

# 15. சிலுவைப் போர்கள்

(CRUSADES)

## 1. விளக்கம்

இயேசு கிறித்துவால் நிறுவப்பட்ட கிறித்தவ மதம் முன்னர் கண்டறிந்தது போல் ஐரோப்பாக் கண்டத்தில் அரசர்கள், பிரபுக்கள் மற்றும் பெரும்பாலான மக்களால், இடைக்காலத்தில், ஏற்றுக் கொள்ளப்பட்டது. உரோம் நகரில் இருந்த திருச்சபையும், உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இம் மதத்தைப் பரப்புவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டது. அந்த நேரத்தில் கி.பி. 7ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் அரேபியாவில் முகமது நபியினுல் நிறுவப்பட்ட இஸ்லாம் மதத்தை உலகத்தின் பல்வேறு பகுதிகளில் பரப்பக் கலிபாக்கள் (Caliphs) போர்க் கோலம் பூண்டனர். இம் முயற்சிகளின் பயனுகை கி.பி. 11, 12ஆம் நூற்றுண்டுகளில் கிறித்தவர்களுக்கும் முகமதியர்களுக்குமிடையே பல போர்கள் ஏற்பட்டன. இப் போர்கள் இஸ்லாம் மதத்திற்கும் கிறித்தவ மதத்திற்குமிடையேயும், ஆசியாவுக்கும் ஐரோப்பாவிற்குமிடையேயும், பிறைமதிக்கும் சிலுவைக்குமிடையேயும் நடைபெற்ற போர்களாகும். கிறித்தவ வீரர்கள் தங்கள் மார்பில் சிலுவையைச் சின்னமாக வைத்துக் கொண்டு போரில் ஈடுபட்டதால் இப் போர்கள் சிலுவைப் போர்கள் எனப்படுகின்றன. கி.பி. 11, 12, 13ஆம் நூற்றுண்டுகளில் மொத்தம் எட்டு சிலுவைப் போர்கள் நடைபெற்றதாகக் கருதப்படுகின்றது. அவற்றுள் முதல் மூன்று போர்களே முக்கியமானவையாகும்.

## 2. காரணங்கள்

கிறித்தவ மதத்தை ஏற்றுக் கொண்ட ஐரோப்பிய மக்கள் அம் மதத்தில் முழு நம்பிக்கை கொண்டனர். அவர்கள் இயேசு கிறித்து பிறந்த இடம், இறந்த இடம், மற்றும் அவர் தன் மதத்தைப் பிரச்சாரம் செய்யச் சென்ற இடங்கள் முதலியவற்றைப் புனிதத்

தலங்களாகக் கருதினார்கள். வாழ்நாளில் ஒரு முறையாவது ஜெருசலத்தையும், இயேசு கிறித்துவின் புனிதச் சமாதியையும் (Holy Sepulchre) தரிசித்தால், தங்கள் பிறவியின் பாவங்கள் நீங்குமென அவர்கள் நம்பினார்கள். எனவே ஐரோப்பாவில் வாழ்ந்த இடைக்காலக் கிறித்தவர்கள் புனித யாத்திரைகளை மேற்கொண்டனர். பாலஸ்தீனம், அரேபியர்களிடம் இருந்தவரை அப் பகுதியில் இருந்த ஜெருசலத்திற்குக் கிறித்தவர்கள் புனித யாத்திரை மேற்கொள்வதை அனுமதித்தனர். ஆனால் அப் பகுதி கி.பி. 1076ஆம் ஆண்டில் செல்ஜிக் துருக்கியர்களின் (Seljik Turks) ஆட்சிக்குட்பட்டபோது, அவர்கள் கிறித்தவர்கள் ஜெருசலத்திற்கு வருவதைத் தடை செய்தார்கள். துருக்கியர்கள் அராபியர்களை விடக் கொடுமைக்காரர்களாக இருந்தார்கள் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஆகையால் அவர்கள் புனித யாத்திரை மேற்கொண்ட கிறித்தவர்களைக் கொள்ளையடித்துப் பொருள்களைக் கவர்ந்தார்கள். சில நேரங்களில் கிறித்தவர்களைக் கொன்று குவித்தார்கள். இக் கொடுமைகள் நாளுக்கு நாள் வளர ஆரம்பித்தன.

இடைக்கால ஐரோப்பாவில் நிலமானியத் திட்டத்தின் வளர்ச்சியினால் பிரபுக்கள் பலம் பெற்றிருந்தனர். அவர்கள் தங்களிடம் நைட் வீரர்களையும், போர் வீரர்களையும் பெரும் எண்ணிக்கையில் வைத்திருந்தனர். அவர்கள் தங்கள் நாட்டையும், மதத்தையும் காப்பதைத் தலையாய கடமையாகக் கொண்டனர். மதத்தைக் காக்கப் போரிலே ஈடுபட்டு, வீர மரணம் அடைவதைப் புனிதத் தொண்டாகக் கருதினார்கள். இது போன்ற உணர்வு அரசர்கள், பிரபுக்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடையே இருந்தது.

ஜெருசலத்திற்குப் புனித யாத்திரை மேற்கொண்டு மீண்டும் ஐரோப்பாவிற்குச் சென்ற யாத்திரிகர்கள், ஜெருசலத்தில் துருக்கியர்கள் இழைத்த கொடுமைகளைப் பற்றியும், அட்டூழியங்கள் பற்றியும், மிகத் துயரமான கதைகளாக வருணித்துக் கூறினார்கள். ஒரு முறை ஜெருசலம் நகரத்தில் இருந்த தேவாலயத்தின் தலைமை மதகுருவைச் சில துருக்கியர்கள் தாக்கிக் காயப்படுத்தினர். அவருடைய தலைமுடியைப் பிடித்துக் கொண்டு நகரத்தின் பல தெருக்கள் வழியாக இழுத்துச் சென்றனர். இறுதியில் அவரைச் சிறையிலடைத்தனர். அவரை மீட்பதற்காக ஒரு பெரும் மீட்புத் தொகை கொடுக்கப்பட்ட பின்னரே அம் மதகுருவைத் துருக்கியர்கள் விடுவித்தார்கள். இது போன்ற நிகழ்ச்சிகள் பலவற்றைப் பற்றி ஐரோப்பியக் கிறித்தவர்கள் கேள்விப்பட்டபோது அச்சமும் ஆத்திரமும் கொண்டார்கள். குறிப்பாக ஃபிரான்சு நாட்டில்

ஆமியன்ஸ் (Amiens) நகரத்தைச் சேர்ந்த பீடர் என்ற கிறித்தவ முனிவர் ஐரோப்பாக் கண்டத்தின் பல்வேறு இடங்களுக்குச் சூருவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பாலஸ்தீனத்தில் நடை பெற்ற கொடுமைகளைப் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறினர். அவருடைய பேச்சாற்றலும், கேட்போரைக் கவருகின்ற முறையில் கருத்துகளை வழங்குகின்ற பாணியும் அலாதியானவை.[1] அவர் பேச்சைக் கேட்ட மக்கள் வீறுகொண்டெழுந்தனர்.

மேலும் கிழக்கு உரோமானியப் பேரரசு, அதன் எல்லைகள் குறைக்கப்பட்டுப் பெயரளவுக்கே ஒரு பேரரசாக விளங்கிவந்தது. அப் பேரரசைக் கைப்பற்றுவதற்காகத் துருக்கியர்கள் அடிக்கடிக் கான்ஸ்டான்டிநோபிளின் மீது தாக்குதல்களை நடத்தி வந்தனர். எனவே பேரரசர் அலெக்சியஸ் (Alexius) உரோம் திருச்சபையின் தலைமைப் போப் இரண்டாம் அர்பனுக்குத் (Urban II) தன் ஆபத் தான நிலைமையைப் பற்றித் தெரிவித்தார். உடனே போப் இரண்டாம் அர்பனும் ஃபிரான்சில் உள்ள கிளெர்மான்ட் (Clermont) என்ற நகரத்தில் கி.பி. 1095 ஆம் ஆண்டு கூட்டப்பட்ட மாபெரும் கூட்டமொன்றில் துருக்கியர்களை எதிர்த்துத், தங்கள் மதத்தையும் புனித இடங்களையும் காப்பாற்றப் புனிதப் போரிலே இறங்க வேண்டியதன் அவசியத்தைப்பற்றி மிகத் தெளிவாக விளக்கினர். ஆயிரக்கணக்கான மக்கள் உடனே போரிலே இறங்க முன் வந்தார்கள். மார்பிலே அணிந்துகொண்டு போர் புரிவதற்காக அவர்களுக்கெல்லாம் போப் தன் கைகளாலேயே சிலுவைச் சின்னங்களை வழங்கினர். எந்த நேரத்திலும் போரிலே ஈடுபட அவர்கள் ஆயத்தமாக இருந்தார்கள்.

இடைக் காலத்தில் ஐரோப்பிய வணிகர்கள் ஆசிய நாடு களுடன் வாணிகம் செய்து பெருஞ்செல்வத்தைக் குவித்து வந்தார்கள். கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் இவ் வணிகர்களுக்குத் துருக்கியர்கள் பெருந் தொல்லைகளைக் கொடுத்து வந்தனர். மத்தியதரைக் கடலில் செல்லும் ஐரோப்பிய வணிகக் கப்பல்கள் துருக்கியர்களால் கொள்ளையடிக்கப்பட்டன. இத்தகைய தாக்கு தல்களிலிருந்து விடுபட்டுச் சுதந்தரமாக வாணிகம் செய்ய ஐரோப்பிய வாணிகர்கள் விரும்பினர்கள்.

1 'The people were impetuously moved by his call to repentence and to arms. When he painted the sufferings of the natives and the pilgrims of Palastine, every heart was melted to compassion; every breast glowed with indignation.'—Gibbon (Decline and Fall of the Roman Empire.)

நிலமானிய அடிப்படையில் ஐரோப்பாவின் மக்கள் தொகையில் பெரும்பாலரர் ஏழைகளாகவும் கடன்காரர்களாகவும் இருந்தார்கள். அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிப்பளுவையும் அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இத்தகைய நிலையில் 'கிளெர்மான்ட் மாநாடு' அவர்களுக்குப் பல சலுகைகளை அளித்தது. சிலுவைப் போர்களில் ஈடுபடுபவர்கள் அரசுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை வரி செலுத்த வேண்டியதில்லையென்றும், அதேபோல கடன் வாங்கியவர்கள் கடன் கொடுத்தவர்களின் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்படுவார்கள் என்றும், கீழாள்கள் தங்கள் பிரபுக்களின் அனுமதியின்றியும் நிலத்தை விற்றுவிடலாம் என்றும் கிளெர்மான்ட் மாநாடு அறிவித்தது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு கடன்காரர்களும், வரிப்பளுவைத் தாங்கமுடியாதவர்களும், நிலத்திலே உழைக்க விரும்பாதவர்களும் சிலுவைப் போர்களிலே ஈடுபட ஆயத்தமானார்கள். இவர்களைத் தவிரப் பல அடிமை ஊழியர்களும் அடிமைத்தளையிலிருந்து விடுபட்டுச் சுதந்தரமாக வாழ விரும்பினார்கள். அவர்களும் போர்களில் ஈடுபடப் புறப்பட்டு விட்டார்கள். ஐரோப்பியச் சிறைச்சாலைகளின் உள்ளேயும் வெளியேயும் பல குற்றவாளிகள் இருந்தனர். அவர்களும் தங்கள் குற்றத்திற்கான தண்டனையிலிருந்து தப்பிக்க நினைத்தார்கள். அதனால் அவர்களும் சிலுவைப் போர்களில் பங்குகொள்ள முன்வந்தார்கள்.

பொதுவாக இடைக்கால ஐரோப்பிய மக்களிடம் போர்களிலே ஈடுபட்டுத் தங்கள் வலிமையை வெளிப்படுத்த வேண்டுமென்ற பெருவிருப்பம் இருந்தது. வீரச் செயல்களிலே ஈடுபட்டு உலகப் புகழ் பெற வேண்டுமென அவர்கள் விரும்பினார்கள். அதனால் சிலுவைப் போர்களில் பங்குபெறுவதை ஒரு சிறந்த நல்வாய்ப்பாகவும் கடமையாகவும் அவர்கள் கருதினார்கள். மேலும் ஐரோப்பிய அரசர்கள், வறுமையிலும் பஞ்சத்திலும் வாழ்ந்து வந்த ஐரோப்பிய மக்களின் எண்ணங்களையும் செயல்களையும் திசைதிருப்ப விரும்பினார்கள். அதன் விளைவாக அவர்கள் மக்களைச் சிலுவைப் போர்களிலே ஈடுபட ஊக்குவித்தார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் கிளெர்மான்ட் மாநாட்டின் விளக்கவுரைகள் உடனடியாக முதல் சிலுவைப் போர் துவங்குவதற்கு வழிவகுத்தன.

### 3. முதல் சிலுவைப் போர் (கி.பி. 1096 – 1099)

போப் இரண்டாம் அர்பனின் உணர்ச்சியூட்டும் பேச்சினைக் கேட்ட மக்கள் ஆவேசம் கொண்டு உடனே போர்புரியக்

காத்திருந்தனர். ஐரோப்பியப் பிரபுக்களும் மக்களும் உடனே புறப்பட்டனர். ஃபிரான்சு, ஜெர்மனி, இத்தாலி போன்ற எல்லா நாடுகளிலிருந்தும் மக்கள் கூட்டம் திரள் திரளாகக் கூடியது. அனைவரும் மார்பிலே சிலுவைச் சின்னத்தை அணிந்து கொண்டு புனித நகரமாகிய ஜெருசலத்தைக் கைப்பற்றப் புறப்பட்டனர். ஆவேசமும் ஆத்திரமும் கொண்ட மக்கள் படைதான் புறப் பட்டதே தவிர எந்த ஐரோப்பிய அரசரும் இப் போரில் பங்கு கொள்ளவில்லை. எனவே, ஒழுங்கும் கட்டுப்பாடும் இன்றிப் படைகள் பல்வேறு விதமாகச் சென்றன. அவர்களுக்கு ஜெரு சலத்திற்குச் செல்ல வேண்டிய வழியும், புவியியல் அமைப்பு களும் தெரியவில்லை. போதிய உணவுப் பொருள்களும், படைக் கருவிகளும் இல்லாமல் சென்றனர் ஹங்கேரி நாட்டு வழியாகச் சென்ற படைகள் அங்கு வாழ்ந்த மக்களோடு போரிட வேண்டி யிருந்தது. அங்கு நடைபெற்ற போர்களினுலும் மழை, புயல், பனி போன்ற இயற்கையின் கோரக் கொடுமைகளாலும் இலக்கக் கணக்கான கிறித்தவர்கள் இறந்து விட்டனர். பீடர் முனிவரால் (Peter the Hermit) அழைத்துச் செல்லப்பட்ட ஒரு படையின் பெரும்பாலான வீரர்கள் கான்ஸ்டாண்டி நோபிளுக்கு அருகில் துருக்கியர்களால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள்.

இருப்பினும் எஞ்சிய படைகள் மனந்தளரவில்லை. கி.பி. 1097ஆம் ஆண்டில் காட்ஃபிரே (Godfrey), பால்ட்வின் (Baldwin), பொய்மண்ட் (Boemund) முதலான பிரபுக்கள் தலைமையில் தொடர்ந்து கிறித்தவர்கள் போரிட்டார்கள். கிரேக்கர்கள் கிறித்தவப் படைகளுக்குப் பல்வேறு முறைகளில் உதவி செய் தனர். படைகள் முன்னேறி ஆண்டிக் (Antioch) நகரை முற்றுகை யிட்டன. விரைவில் அந் நகரைக் கைப்பற்றிக் கொண்டனர். கி.பி. 1099ஆம் ஆண்டில் கடுமையான எதிர்ப்புகளுக்கிடையே ஜெருசலம் நகரத்தைக் கைப்பற்றினர். இது ஐரோப்பியக் கிறித்த வர்களின் மிகப் பெரிய வெற்றியாகும். மத்தியத்தரைக் கடலின் கிழக்குக் கடற்கரை முழுவதையும் அவர்கள் கைப்பற்றினுர்கள். கைப்பற்றப்பட்ட பகுதிகள் நான்கு அரசுகளாகப் பிரிக்கப்பட்டு ஐரோப்பியக் கிறித்துவர்களாலேயே ஆட்சி செய்யப்பட்டன. அவை இடெஸ்ஸா (Edessa), ஆண்டியாக் (Antioch), டிரிபோலி (Tripoli), ஜெருசலம் (Jerusalem) ஆகியவை ஆகும். ஜெருசலம் காட்ஃபிரெ என்பவராலும், மற்றவை ஏனைய தலைவர்களாலும் ஆட்சி செய்யப்பட்டன. எனினும், இவ்வரசுகளின் கிழக்கு எல்லைகள் துருக்கியர்களால் அடிக்கடித் தாக்கப்பட்டு வந்தன.

முதல் சிலுவைப் போரில் பெரிய ஐரோப்பிய அரசர்கள் கலந்து கொள்ளவில்லையெனினும் ஓரளவு அப் போர் வெற்றியுடன்

முடிந்தது. நான்கு கிறித்தவ அரசுகள் நிறுவப்பட்டன. குறிப்பாக ஜெருசலம் அரசில் (Kingdom of Jerusalem) ஜெருசலம், பெத்லஹெம், நாசரத் போன்ற புனித இடங்கள் மட்டுமல்லாது, டையர் (Tyre), பெய்ரூட் (Beirut), ஏகர் (Acre), சிடோன் (Sidon) ஜாஃபா (Jaffa), அஸ்கலோன் (Ascalon) போன்ற புகழ்வாய்ந்த கடற்கரைப் பட்டினங்களும் துறைமுகங்களும் இருந்தன. இவை ஐரோப்பியக் கிறித்தவர்கள் பெரிதும் விரும்பிய வாணிக வளர்ச்சிக்கு உதவின. மேலும், இப் போரினால் கிறித்தவ மதத்தைக் காக்க வீரம் மிகுந்த நைட் வீரர்களுக்கான அமைப்புகள் நிறுவப்பட்டன. கி.பி. 1099ஆம் ஆண்டில் ஜெருசலம் நகரத்தைச் சேர்ந்த ஜான் முனிவர் (St. John) 'ஜான் முனிவரின் நைட் வீரர்கள்' (Knights of St. John) என்ற அமைப்பை ஏற்படுத்தினார். இதே போல 'கோயில் நைட் வீரர்கள்' (Knights of Temple or Templars) என்ற அமைப்பு தோன்றியது. இவர்கள் முதலில் சாலமனின் கோயிலில் (Temple of Solomon) தங்கியிருந்ததால் இவர்களுக்கு அப் பெயர் கொடுக்கப்பட்டது. இவர்களின் கடமைகள் பல வாகும். இவர்கள் வீரர்களாகவும் அதே நேரத்தில் கிறித்தவ மதத்தின் குருமார்களாகவும் கருதப்பட்டார்கள். புனிதக் கிறித்தவ இடங்களைக் காப்பதும், கிறித்தவர்கள் அல்லாதோர் மீது அவசியம் ஏற்படும்போது போர் தொடுத்தலும், புனித யாத்திரை மேற்கொண்டு வரும் பயணிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருதலும், ஏழை எளியவர்களுக்கு உதவுதலும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மருத்துவச்சிகிச்சை அளித்தலும் இவர்களுடைய கடமைகள் ஆகும். உண்மையில் இவர்களுடைய தொண்டு மக்களை வெகுவாகக் கவர்ந்தது. இம் முதல் போரினால் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் மதத்துறையில் ஒரு வகையான விழிப்புணர்ச்சி மக்களிடையே ஏற்பட்டது. எனவேதான் தொடர்ந்து சிலுவைப் போர்கள் நடத்தப்பட்டன.

### 4. இரண்டாம் சிலுவைப் போர் (1147 – 1187)

இரண்டாம் சிலுவைப் போர் இடெஸ்ஸா (Edessa) என்ற பகுதியை முகமதியர்கள் கைப்பற்றியதன் விளைவாக நடைபெற்றதாகும். அந் நேரத்தில் பெர்னார்ட் முனிவரின் (St. Bernard) தூண்டுதலால் ஐரோப்பிய அரசர்கள் இரண்டாவது புனிதப் போரிலே ஈடுபட ஆயத்தமாக இருந்தனர். ஃபிரான்சு நாட்டு அரசர் ஏழாம் லூயி (Louis VII) ஜெர்மன் நாட்டுப் பேரரசர் மூன்றாம் கான்ராட் (Conrad III) ஆகியவர்களின் தலைமையில் மிகப் பெரியதொரு படை நில வழியாகக் கான்ஸ்டான்டிநோபிளை நோக்கிப் புறப்பட்டது. அந் நகரைக் கடந்து டமாஸ்கஸ் (Damascus)

நகரத்தைச் சேர்வதற்குள்ளாக இவ் வரசர்களுக்கிடையேயும் படை வீரர்களிடையேயும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. எனவே, இப் போர் தோல்வியில் முடிவடையும் என்பதை ஐரோப்பிய மக்கள் போர் முடிவதற்கு முன்னரே அறிந்து கொண்டனர். கி.பி. 1147ஆம் ஆண்டில் கிறித்தவப் படைகள் டைபீரியஸ் (Tiberias), என்ற ஏரிக்கு அருகில் ஆட்டின் (Hattin) என்ற இடத்தில் முகமதியப் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. பின்னர் ஜெருசலம் நகரமும் கி.பி. 1187ஆம் ஆண்டில் முகமதியர்களின் ஒப்பற்ற தலைவன் சலாவுதீனால் (Saladin) கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. இது ஐரோப்பியர்களுக்கு மிகப் பெரிய இழப்பாகும். இவ்விழப்பை ஈடுசெய்யும் எண்ணத்தில்தான் ஐரோப்பிய அரசர்கள் மூன்றும் போரிலே ஈடுபட வேண்டியதாக இருந்தது.

5. மூன்றும் சிலுவைப் போர் (1189 – 1191)

கி.பி. 1171ஆம் ஆண்டில் முகமதியர்களின் ஒப்பற்ற படைத் தளபதி சலாவுதீன் எகிப்தின் சுல்தானுகப் பதவி ஏற்ருர். அஞ்சா நெஞ்சமும், போர் நுணுக்கங்கள் பற்றிய தெளிந்த அறிவும் உடையவர் அவர். சிரியா, எகிப்து, மெசபடோமியா ஆகிய பகுதிகளை இணைத்துப் பெரியதொரு பேரரசுக்கு அரசராளுர். அவர் கி.பி. 1187ஆம் ஆண்டில் ஜெருசலத்தைக் கைப்பற்றியதை அறிந்த ஐரோப்பியர் கலக்கமடைந்தனர். குறிப்பாக ஐரோப்பிய அரசர்கள் சலாவுதீனின் வளர்ந்து வந்த வலிமையைக் கண்டு அஞ்சினர். அவருடைய அதிகார வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி ஜெருசலத்தை எப்படியும் கைப்பற்ற வேண்டுமென ஐரோப்பிய அரசர்கள் எண்ணினர்கள். எனவே இம் மூன்றும் போரில் ஜெர்மனியின் பேரரசர் ஃபிரெடிரிக் பார்பரோசாவும் (Frederick Barbarossa), ஃபிரான்சு நாட்டு அரசர் ஃபிலிப் இரண்டாம் அகஸ்டசும் (Philip Augustus II) இங்கிலாந்து நாட்டரசர் இரண்டாம் ஹென்றியும் (Henry II) இணைந்து ஈடுபட்டனர். எனினும், இரண்டாம் ஹென்றியும் கி.பி. 1189ஆம் ஆண்டில் இறந்து விடவே முதலாம் ரிச்சர்ட் (Richard I) போரிலே தொடர்ந்து ஈடுபட்டார். படைகள் நிலவழியாகவும் நீர்வழியாகவும் புறப்பட்டன.

ஆனல், சூழ்நிலைகளும் இயற்கையும் சதி செய்தன. ஃபிரெடிரிக் பார்பரோசா தன் படைகளுடன் சிரியாவில் (Syriya) உள்ள ஒரு ஆற்றைக் கடக்கும் போது தற்செயலாக அதில் வீழ்ந்து உயிரிழந்தார். அரசனை இழந்த படைகள் துயரில் ஆழ்ந்தன. படைகளைக் கொண்டு போரைத் தொடர்ந்து நடத்த வேண்டிய முழுப் பொறுப்பை ஃபிரான்சு நாட்டுப் பிலிப்பும், இங்கி

லாந்து நாட்டு ரிச்சர்டும் ஏற்கவேண்டியதாக இருந்தது. ஆனால், அவர்கள் இருவரும் ஒத்துழைத்துப் போரைத் தொடருவதாக இல்லை. பிலிப், ரிச்சர்டின் படைபலத்தைக் கண்டு பொறாமை கொண்டார். மனமின்றி, வெறுப்புடன் இரு அரசர்களும் சிசிலித் தீவு வரை கடல் வழியாகச் சென்றனர். அத்தீவின் அரசர் டான் கிரெட்டுடன் (Tancred) போரிட்டு மெசினா (Messina) நகரை ரிச்சர்ட் கைப்பற்றினார். பின்னர் சைப்ரஸ் (Cyprus) தீவுக்குச் சென்றார். அத் தீவின் அரசரை வீழ்த்தி அத் தீவு முழுவதையும் தனதாக்கிக் கொண்டார். பின்னர் பாலஸ்தீனத்திற்குச் சென்று ஏகர் (Acre) என்ற துறைமுகத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றினார். ஃபிரான்சு நாட்டு பிலிப்புக்குப் பொறாமை அதிகரித்தது. எனவே, ரிச்சர்டுடன் ஒத்துழைக்காமல் பிலிப் தன் தாயகம் திரும்பினார். ரிச்சர்ட் தன்னந்தனியாக விடப்பட்டாரெனினும் தொடர்ந்து போரிட்டார். தன் படைகளுக்கு மதப் பற்றையும், நாட்டுப்பற்றையும் ஊட்டித் தொடர்ந்து போரிட ஊக்குவித்தார்.

அதுபோல சுல்தான் சலாவுதீனின் படைகளும் ரிச்சர்டின் படைகளை எதிர்த்துப் போரிட்டன. ரிச்சர்டின் படைகளால் ஜெருசலத்திற்கு மிக அருகில் செல்ல முடிந்ததே தவிர சலாவுதீனின் படைகளை எதிர்த்து முன்னேறிச் செல்ல முடியவில்லை. இப் போரில் ரிச்சர்டின் போர்த் திறமையும் சலாவுதீனின் வீரமும் பாராட்டுதலுக்குரியனவாகும். ரிச்சர்டின் படைகள் ஏகர் (Acre) நகரை நோக்கிப் பின் வாங்கின. ரிச்சர்டின் வீரர்கள் கடும் நோய்களால் பாதிக்கப்பட்டார்கள், ஃபிரெஞ்சுப் படைகளும் சரியான முறையில் ஒத்துழைக்கவில்லை. எனவே, வேறுவழியின்றி ரிச்சர்ட் சலாவுதீனுடன் ரமேலா (Ramela) என்ற இடத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி சலாவுதீன் வென்ற பகுதிகளையெல்லாம் அவரே வைத்துக்கொள்வதற்கு ரிச்சர்ட் இசைந்தார். இயேசு கிறித்துவின் புனிதச் சமாதிக்குச் சென்றுவரக் கிறித்தவர்கள் அனுமதிக்கப்படுவார்களென, சலாவுதீன் அறிவித்தார். இங்ஙனம் மூன்றும் போரில் மூன்று ஐரோப்பிய அரசர்கள் கலந்து கொண்டும் அப் போர் தோல்வியிலேயே முடிவடைந்தது.

### 6. நான்காம் சிலுவைப் போர் (1202–1204)

மூன்றும் சிலுவைப் போரினால் ஜெருசலேம் நகரத்தைக் கைப்பற்ற முடியாமல் போயிற்று. எனவே, போப் மூன்றும் இன்னொசன்டின் (Pope Innocent III) முயற்சியினால் எகிப்திலுள்ள முகமதிய அரசைத்தாக்குவதற்காக ஒரு பெரும்படை புறப்பட்டது. ஆனால், இப் படையினால் எகிப்தையோ ஜெருசலத்தையோ கைப்

பற்ற முடியவில்லை. மாறுகக் கிழக்கு உரோமானியப் பேரரசர் தங்களுக்கு உதவி செய்யவில்லையென்று அப் படைகள் கான்ஸ் டான்டி நோபிளைத் தாக்கிக் கொள்ளையடித்தன. போப், கிழக்கு உரோமானியப் பேரரசரைத் தன் அதிகாரத்திற்கு உட்படுத்தியதே நான்காம் சிலுவைப் போரின் முக்கிய விளைவாகும்.

**7. ஐந்தாம் சிலுவைப் போர் (1218-1221)**

இப் போர் **'குழந்தைகள் சிலுவைப் போர்'** (Children's Crusade) என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் இப் போரில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் குழந்தைகளேயாவர். ஃபிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குழந்தை கள் கிழக்கு நோக்கிப் புறப்பட்டு விட்டனர். ஆனால், இவர்களில் பெரும்பாலார் மத்தியத் தரைக்கடலில் ஏற்பட்ட புயலினால் கடலில் மூழ்கடிக்கப்பட்டனர். வேறு பலர் கொடும் நோய்களினால் பாதிக்கப்பட்டார்கள். இன்னும் பலர் முகம்மதியர்களால் கைப் பற்றப்பட்டு அடிமைச் சந்தைகளில் விற்கப்பட்டார்கள்.

அப்படி இருந்தும் மனந்தளராத சிலர் டாமெய்ட்டாவைக் (Damietta) கைப்பற்றும் முயற்சியில் வெற்றிபெற்றார்கள். ஆனால் அதுவும் பின்னர் கைவிடப்பட்டது. இறுதியில் அசிசி நகரத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் முனிவர் (St. Francis of Assisi) இக் குழந்தை களுக்கு அறிவுரைகள் வழங்கினர். ஒரு சில குழந்தைகளே தங்கள் தாயகத்துக்குத் திரும்பினர்.

**8. ஆறும் சிலுவைப் போர் (கி.பி. 1228–1229)**

இப்போர் பேரரசர் இரண்டாம் பிரெடிரிக்கினால் (Frederick II) நடத்தப்பட்டது. இவர் இத்தாலியின்மீது அடிக்கடிப் படையெடுத் ததால் போப் ஒன்பதாம் கிரிகரி (Pope Gregory IX) பேரரசரை மத விலக்கு செய்திருந்தார். அப்படியிருந்தும், பெரும்படையுடன் ஜெரூசலம் சென்று அந்நகரைக் கி.பி. 1229ஆம் ஆண்டில் கைப் பற்றித் தன்னை அப் பகுதியின் அரசராக முடிசூட்டிக் கொண்டார். ஆயினும், இந் நகரம் கி.பி. 1224ஆம் ஆண்டில் மீண்டும் துருக் கியர்களால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது.

**9. ஏழாம் சிலுவைப் போர் (1248–1250)**

பிரான்சுநாட்டு அரசர் ஒன்பதாம் லூயியினால் (Louis IX) இப் போர் நடத்தப்பட்டது. எகிப்தை முகம்மதியர்களிடமிருந்து கைப்பற்றிப் பின்னர் ஜெருசலத்தைப் பிடிக்கும் எண்ணத்துடன் இவர் கடல்வழியாகப் புறப்பட்டார். ஆனால், எகிப்தில் அவர் படைகள் தோற்கடிக்கப்பட்டன; எனவே தாயகம் திரும்பினர்.

**10. எட்டாம் சிலுவைப் போர் (1270)**

எகிப்தில் இருபது ஆண்டுகளுக்குமுன் தோல்விகண்ட ஃபிரான்சு நாட்டு அரசர் ஒன்பதாம் லூயி மீண்டும் கி.பி. 1270 ஆம் ஆண்டில் போரைத் துவக்கினுர். இம் முறை முகம்மதியர் களின் ஆட்சிக்குட்பட்டிருந்த டுனிஸ் (Tunis) நகரத்தைத் தாக்கினுர். ஆனுல் ஒரு சில நாட்களுக்குள் நோய் வாய்ப்பட்டு அங்கேயே இறந்து விட்டார். இங்ஙனம் எட்டாம் சிலுவைப் போரும் தோல்வியில் முடிவடைந்தது.

இறுதிவரை புனித இடங்களை ஐரோப்பியர்களால் துருக்கியர் களிடமிருந்து கைப்பற்ற முடியவில்லையென்பது தெளிவாகின்றது. முதல் உலகப் போரில்தான் ஜெரூசலத்தைப் பிரிட்டிஷ் படைத் தளபதி ஆல்லன்பி (Allenby) கைப்பற்றினுர்.

**11. சிலுவைப் போர்கள் தோல்வியடைந்ததற்கான காரணங்கள்**

திருச்சபையும், அரசர்களும், மக்களும் ஒன்றுபட்டு இப் போர் களில் ஈடுபடாமல் அவரவர்களாகவே தனித்தனியே போரிட்டனர். எடுத்துக்காட்டாக முதற்போர் மக்களாலும், பிரபுக்களாலும் நடத் தப்பட்டது. மூன்ரும் போர் அரசர்களாலும், நான்காம் போர் திருச்சபையினுலும், ஐந்தாம் போர் குழந்தைகளாலும் நடத்தப் பட்டன. இவர்கள் ஒன்றுபட்டுப் போரிட்டிருந்தால் ஓரளவு வெற்றி பெற்றிருப்பார்கள். ஆனுல் அங்ஙனம் செயல்படத் தவறி விட்டனர். போரில் கலந்துகொண்ட வீரர்களில் பலர் ஐரோப்பிய நிலமானியத் திட்டத்தின் கீழ் அடிமைகளாக இருந்த பலர் அடிமைத் தளையிலிருந்து விடுபட வேண்டுமென்ற நோக்கத்தோடு கலந்து கொண்டார்களேயன்றி உண்மையான மதப்பற்ருேடு கலந்து கொண்டு போரிடவில்லை. அதுபோலவே ஐரோப்பிய வணி கர்கள் தங்கள் சொந்த வணிக வளர்ச்சிக்கான வழி முறைகளைத் தேடுவதில் ஈடுபட்டார்களேயன்றி அவர்களிடம் பொது நோக்கு இல்லை. திட்டமிட்டுத் தனிப்பட்ட தலைவன் கீழ் எந்தப் போரும் நடத்தப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. மூன்ருவது போரில் மூன்று அரசர்கள் கலந்து கொண்டபோதிலும் அது வெற்றி பெருமைக்குக் காரணம் ஒற்றுமையின்மையே என்பது தெளிவா கின்றது. மேலும் ஐரோப்பாவில் கி.பி. 13,14ஆம் நூற்ருண்டு களில் தேசிய உணர்வும், பிராந்திய உணர்வும் அதிகரித்து மக்க ளிடையே உலகப் பொது நோக்கு குறைந்தது. ஐரோப்பாவில் இருந்து பாலஸ்தீனப் பகுதிக்கு வருவதற்கு நிலவழிப் போக்கு வரத்து வசதிகள் இல்லை. பெரும்பாலும் மலைகளால் சூழப்பட்ட பகுதிகளைப் பற்றிய புவியியல் அறிவு புனிதப் போர்களில் ஈடுபட்ட

வர்களுக்கு இல்லாமல் இருந்தது. கடல்வழியாக(மத்தியத்தரைக் கடல்) செல்வதற்கு வேண்டிய வசதிகளும் குறைவாகவே இருந்தன.

எல்லாவற்றையும்விட வீரமும் அஞ்சா நெஞ்சமும் கொண்ட துருக்கிய வீரர்களோடு போர் புரிவது அவ்வளவு எளிதான காரியமல்ல. சலாவுதீனைப் போன்ற பெருவீரனை ஐரோப்பியர்கள் பெற்றிலர். எனவேதான் சிலுவைப் போர்கள் தோல்வியடைந்தன.

## 12. சிலுவைப் போர்களினால் ஏற்பட்ட விளைவுகள்

சிலுவைப் போர்களினால் உடனடியாக, நேரடி விளைவுகள் ஏற்படவில்லையெனினும், அவை மறைமுகமாகக் காலப் போக்கில் ஏற்பட்டன. இதனால் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் ஆகிய துறைகளில் பல மாறுதல்கள் நிகழ்ந்தன.

பெரும்பாலான பிரபுக்கள் தங்கள் நிலங்களை மன்னருக்கு விற்றுவிட்டுச் சிலுவைப் போர்களில கலந்து கொண்டதால், பிரபுக்களின் வலிமையைப் போக்கி ஐரோப்பிய நாடுகளை இணைப்பது அரசர்களுக்கு எளிதாக இருந்தது. அவர்களிடம் இருந்த அடிமைகள் விடுதலைபெற சிலுவைப் போர்களில் பங்குகொண்டார்கள். பிரபுக்களுக்குப் பணம் செலுத்தி நிலமானியத் திட்டத்தின் கீழிருந்த நகரங்கள் விடுதலை பெற்றன. பிரபுக்கள் வைத்திருந்த நைட் வீரர்களும் செல்வாக்கு இழந்தனர். இங்ஙனம் நிலமானியத் திட்டம் வீழ்ச்சியுறச் சிலுவைப் போர்கள் காரணமாக அமைந்தன.

ஐரோப்பிய நாடுகளுக்கும் ஆசிய நாடுகளுக்குமிடையே வணிகத் தொடர்பு அதிகரித்தது. ஆசியநாடுகளின் சர்க்கரை, பருத்தி, பட்டு, நறுமணப்பொருள்கள் முதலியவைகளுக்கு மேல் நாடுகளில் அதிகத் தேவை இருந்தது. வாணிகம் வளர்ச்சியுற்றது. இத்தாலியில் உள்ள வெனிஸ், ஜெனோவா போன்ற நகரங்களில் செல்வந்தர்கள் குவிந்தார்கள். அந் நகரங்களும் விரிவடைந்தன. கடல்வழி வாணிகம் செய்வதில் ஐரோப்பிய வணிகர்கள் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டார்கள். எனவே, பிற்காலத்தில் பல புதிய நாடுகளுக்குப் புதிய கடல்வழிகளைக் காணும் முயற்சிகளில் வெற்றிபெற்றார்கள். அக் கடல் வழிகள் கண்டுபிடிக்கப்பட்டதன் பயனாக வேறு பல வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேலும் திருச்சபையின் அதிகாரங்கள் வளர்ந்தன. அதன் பயனாகப் புனித உரோமானியப் பேரரசருக்கும் போப்புக்கும்

அடிக்கடிக் கருத்து வேறுபாடுகளும் போர்களும் ஏற்பட்டன. அதே நேரத்தில் திருச்சபையைச் சார்ந்த குருமார்கள் ஆடம்பர வாழ்க்கை நடத்துவதைப் பலர் கண்டித்தனர். குறிப்பாக அசிசி நகரைச் சேர்ந்த ஃபிரான்சிஸ் (St. Francis of Assisi) என்ற முனிவர் கிறித்தவ மதத்தைச் சார்ந்த குருமார்கள் எளிமையானவர்களாகவும் தொண்டுள்ளம் கொண்டவர்களாகவும் வாழவேண்டுமென வற்புறுத்தினர். மற்றவர்களுக்கு முன்னோடியாக இருக்க அவர் குடும்ப வாழ்க்கையையும் சொத்துக்களையும் துறந்து கிறித்தவ மதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். இவரைப் போலவே டாமினிக் முனிவரும் (St. Dominic) தன் சீடர்களை மதப் பிரச்சாரத்திற்கு அனுப்பினர். இங்ஙனம் சில கிறித்தவப் பாதிரிகளுக்கிடையே மக்கள் தொண்டே சிறந்த தொண்டு என்ற கருத்து பரவியது.

# 16. பிரதிநிதித்துவச் சபைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

## இங்கிலாந்தில் பாராளுமன்றத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

இன்று உலக நாடுகளில் உள்ள பாராளுமன்றங்களுக்கெல்லாம் 'தாய்ப் பாராளுமன்றமாக' (Mother of Parliaments) இங்கிலாந்தின் பாராளுமன்றம் விளங்குகின்றது. அதன் தோற்றமும் வளர்ச்சியும் தானாக நிகழ்ந்த வரலாற்று நிகழ்ச்சிகளின் விளைவே யன்றி, அத்தகைய மன்றத்தைத் தோற்றுவிக்கத் திட்டமிட்டு எவராலும் எந்தக் குறிப்பிட்ட காலத்திலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. இம் மன்றம் அரசனின் அதிகாரத்தின் அடிப்படையில் தோன்றியதேயன்றிப் புரட்சியினால் ஏற்படுத்தப் பட்ட நிறுவனம் அன்று. [1] அதன் வளர்ச்சியும் வலிமையும் காலப்போக்கில் நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளின் விளைவாக ஏற்பட்டவையே ஆகும்.

## விடான் (Witan)

ஆங்கிலோ-சாக்சானியர்கள் (Anglo-Saxons) இங்கிலாந்தை ஆண்டுவந்த காலத்தில் 'விடான்' அரசருக்கு ஆலோசனை வழங்கும் சபையாக இருந்தது. அச் சபையில் பெருஞ்செல்வந்தர்களே உறுப்பினர்களாக இருந்தார்கள். அந் நாளில் செல்வம் படைத்தவர்களே அறிவிற் சிறந்தவர்களாகக் கருதப்பட்டனர். மன்னரைத் தேர்ந்தெடுக்கவும் பதவியிலிருந்து நீக்கவும் விடான் உரிமை பெற்றிருந்தது. எனினும் அச் சபையின் உண்மையான வலிமை மன்னரைப் பொறுத்தேஇருந்தது. மன்னர் திறம்படைத்தவராயின் விடான் அவருக்குக் கீழ்ப்படிந்திருந்து. அவர் திறமையற்றவராயின் அச் சபை வலிமைமிக்கதாகச் செயல்பட்டது.

1. 'Parliament is the child of authority, not of rebellion.'

**கியூரியா ரெஜிஸ் (Curia Regis)**

கி.பி. 11 ஆம் நூற்ருண்டிலிருந்து நார்மானியர்கள் இங்கிலாந்தில் ஆட்சி செலுத்தினர். இந்நார்மானியர்களே இங்கிலாந்தில் நிலமானியத் திட்டத்தைப் புகுத்தியவராவர். அந்நிலமானியத் திட்டத்தின் அடிப்படையில் அரசர் தனக்குப் பல்வேறுவித மான ஆட்சித்துறை அலுவல்களில் உதவிசெய்யக் 'கியூரியா ரெஜிஸ்' என்ற சபையை வைத்திருந்தார். இச்சபையில் பெரும் பாலும் பிரபுக்கள், மதகுருமார்கள் போன்ற நிலமானியப் பெருங் குடிகளே உறுப்பினர்களாக இருந்தனர். இவர்களைத் தவிர அர சாங்க உயர் அதிகாரிகள், நீதிபதிகள், அரசரின் செயலர், மற்றும் படைத்தளபதி போன்றவர்களும் இச் சபையில் உறுப்பினர்க ளாக இருந்தனர். அதன் உறுப்பினர்கள் அனைவரும் தேர்ந் தெடுக்கப்படாதவர்கள் என்பதும், அரசராலேயே நியமிக்கப்பட்ட, அரசனுக்கு வேண்டிய ஆள்களே என்பதும் குறிப்பிடத் தக்க தாகும். பொதுவாக அரசர் எல்லா உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுப்பதில்லை. ஆனல் முக்கியமான சில நேரங்களில் முழுச்சபையைக் கூட்டினுர். அச் சபை 'பெருஞ்சபை' (Great Council) என்றழைக்கப்பட்டது. நடைமுறையில் ஒருசில உறுப் பினர்களையே அரசர் நிரந்தரமாகக் கூட்டினுர். இவர்களைக் கொண்ட சிறுசபையே அரசருடைய ஆலோசனைச்சபையாக இயங்கியது.

**மூன்ரும் ஹென்றி காலத்தில் பாராளுமன்றத்தின் வளர்ச்சி**

ஜான் மன்னருக்குப்பின் மூன்ரும் ஹென்றி (கி.பி. 1216–1272) இங்கிலாந்தின் அரசராஞர். இவர் ஆட்சிக்காலத்தில்தான் அர சரின் 'பெருஞ்சபை' விரிவு படுத்தப்பட்டது. அச் சபைக்குப் பெருநிலக்கிழார்கள், பிரபுக்கள், திருச்சபையின் உயர் அதிகாரி கள், மடாலயத்தலைவர்கள் ஆகியோரைத் தவிர 'பரோக்கள்' (Boroughs) என்று சொல்லப்பட்ட நகரங்களிலிருந்தும், 'ஷையர் கள்' (Shires) என்று சொல்லப்பட்ட மாவட்டங்களிலிருந்தும் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டனர். ஏறக்குறைய எல்லாப்பிரிவின ரும் இதில் பிரதிநிதித்துவம் பெற்றனர். அச் சபையே பாராளு மன்றம் (Parliament) என்று அழைக்கப்பட்டது. பரோக்களி லிருந்தும் ஷையர்களிலிருந்தும் வந்த பிரதிநிதிகள் பல சமூகத் தினரை (Communities) பிரதிநிதித்துவம் செய்தனர். அவர்கள் 'பொதுமக்கள்' (Commons) என்றே அழைக்கப்பட்டனர். இந்தப் பெயரிலிருந்தே பின்னர் பொது மக்கள் சபை அல்லது 'காமன்ஸ் சபை' (House of Commons) என்று கீழ்ச்சபை வழங்கலாயிற்று.

இவ்வாறு விரிவு படுத்தப்பட்ட 'பெருஞ்சபை' அல்லது 'பாராளுமன்றம்' இரண்டு முக்கியமான பணிகளைச் செய்தது.

முதலாவதாக, அரசருக்கு, அவர் மக்கள் மீது விதிக்கும் வரிகளுக்கு அனுமதி தந்தது. இதுபோன்ற பணத்தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பாராளுமன்றம் கூட்டப்பட்டது. இரண்டாவதாக, பாராளுமன்றத்திற்கு வரும் உறுப்பினர்கள் தங்களுக்குள்ள பலவிதமான குறைகளைப் பற்றி அரசரிடம் முறையிட்டனர். அதற்கான தீர்வுகளைக்காண அரசர் உறுப்பினர்களைக் கலந்து ஆலோசனையும் அறிவுரையும் பெற்று நீதி வழங்கினர். அங்ஙனம் நீதி வழங்கவே பாராளுமன்றம், கூட்டப்பட்டது. இவ்விரண்டு வேலைகள் முடிவடைந்தவுடன் ஷையர்களிலிருந்தும், பரோக்களிலிருந்தும் வந்த உறுப்பினர்கள் கலைந்து சென்றனர். முன்னரே இருந்த அரசரின் ஆலோசனை சபைமட்டும் தொடர்ந்து செயல்பட்டது. இத்தகைய முறை முதலாம் எட்வர்ட்டின் (Edward) ஆட்சிக் காலம் வரை நீடித்தது.

**பாராளுமன்ற வளர்ச்சிக்குச் சைமன்-டி-மாண்ட்ஃபோர்ட்டின் பணி**

மூன்றும் ஹென்றியின் ஆட்சிக்காலத்திலேயே **சைமன்-டி-மாண்ட்ஃபோர்ட்டின்** (Simon-de-Montfort) தலைமையில் பிரபுக்களுக்கும் அரசருக்கும் உள் நாட்டுப் போர்கள் ஏற்பட்டன. அப் போர்களும் அதன் விளைவுகளும் பாராளுமன்றத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன.

சைமன், மூன்றும் ஹென்றியின் தங்கையையே திருமணம் செய்து கொண்டிருந்தார். இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்ட ஃபிரான்சிலிருந்த காஸ்கானி (Gascony) என்ற பகுதிக்குச் சைமன் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அப் பகுதியைச் சைமன் சிறந்த முறையில் ஆட்சி செய்து வந்தார். ஆயினும் சைமனுக்கும் மூன்றும் ஹென்றிக்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. எனவே, அரசர் சைமனைப் பதவியிலிருந்து நீக்கினர். சைமன் இங்கிலாந்துக்குச் சென்று அரசரின் எதிரிகளுடன் சேர்ந்துகொண்டு மக்களின் உரிமைகளுக்காகப் போரிட முனைந்தார்.

கி.பி. 1258 ஆம் ஆண்டில் மூன்றும் ஹென்றிக்கு நிதிப் பற்றுக்குறை ஏற்பட்டதால், அதனை ஈடு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப் பிரபுக்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஆக்ஸ்ஃபோர்ட்டில் (Oxford) பிரபுக்கள், திருச்சபையைச் சார்ந்தோர் மற்றும் பாரோக்களிலிருந்தும் ஷையர்களிலிருந்தும் வந்த அனைவரும் சைமனின் தலைமையில் மன்னரைச் சந்தித்தனர். வந்தவர்களுள் பெரும்பாலார் ஆத்திரத்தோடும், கணக்கிலடங்காக் குறைபாடுகளுடனும் ஆயுதங்கள் ஏந்தியும் வந்தி

ருந்தனர். எனவேதான் ஆக்ஸ்ஃபோர்ட்டில் கூடிய கூட்டம் 'பைத்தியக்காரப் பாராளுமன்றம்' (Mad Parliament of 1258) என்று அழைக்கப்படுகிறது, இக் கூட்டம் இருபத்து நான்கு பேர் கொண்ட குழுவை நியமித்து, அரசாங்கத்தில் பல சீர் திருத்தங்களைச் செய்யும்படிப் பணித்தது. அக் குழுவும் பல சீர் திருத்தங்களை அறிவித்தது. அது 'ஆக்ஸ்ஃபோர்டு ஒப்பந்தம்' (Mise of Oxford) என்று வழங்கப்படுகிறது. அதன்படிச் சைமன் தலைமையில் பதினைந்துபேர்கொண்ட குழுவொன்று நிறுவப்பட்டது. அக் குழு அரசு செயல்படுவதை மேற்பார்வை செய்தல், அரசர் தவறான முறைகளில் மக்களிடமிருந்து வரிகளை வசூலிப்பதைத் தடுத்தல், நீதியை நிலை நாட்டுதல் போன்ற வேலைகளைக் கவனிக்க வேண்டியிருந்தது. இது ஒழுங்காகச் செயல்படுவதற்குள் பிரபுக்களிடையே ஒற்றுமை குலைந்து சைமனுக்கு ஆதரவாளர்கள் குறைந்து விட்டனர்.

இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு பிரபுக்களின் அதிகாரங்களையும் வலிமையும் அடக்குவதற்காக அரசர் மூன்றும் ஹென்றியும் அவருடைய மகன் எட்வர்டும் முயன்றனர். மீண்டும் பிரபுக்கள் மற்றும் திருச்சபையைச் சார்ந்தோர் சைமனின் தலைமையில் போரில் ஈடுபட்டனர் (1263). இப் போர் பிரபுக்கள் போர்' (Baron's War) என்று சொல்லப்படுகின்றது. போரிலும் சைமனின் படைகளே இலண்டனைக்கைப்பற்றி வெற்றி பெற்றன. அரசருக்கும் பிரபுக்களுக்கும் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளைத் தீர்க்க இரு பிரிவினரும் ஃபிரான்சு நாட்டு மன்னன் ஒன்பதாம் லூயியின் உதவியை நாடினர். ஆனால் லூயி, ஹென்றிக்குச் சாதகமாகவே தன் தீர்ப்பை (Mise of Amiens) அறிவித்தார். ஆனால் சைமனைச்சார்ந்த பிரபுக்கள் அத்தீர்ப்பை ஏற்க மறுத்து மீண்டும் போர் தொடுத்தனர். லூயிஸ் (Battle of Lewes-1264) என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் அரசரின் படைகள் தோற்கடிக்கப்பட்டு, அரசரும் அரசருடைய மகன் எட்வர்ட்டும் கைது செய்யப்பட்டனர். சைமன் இங்கிலாந்தின் ஆட்சியாளராகவே மாறினார்.

**பிரதிநிதித்துவப் பாராளுமன்றம்**

சைமன் அடுத்த ஆண்டே பாராளுமன்றத்தைக் கூட்டினார். முன்னரே பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கத் தகுதியுடையவர்களைத் தவிர பாரோக்களிலிருந்தும், ஷையர்களிலிருந்தும், இரண்டு நைட்வீரர்களையும், இரண்டு பரோ வாசிகளையும் (Burgesses), இரண்டு சாதாரணக் குடிமக்களையும் அப் பாராளுமன்றத்திற்கு வரும்படி அழைத்திருந்தார். இது எல்லா இனத்

தவரையும் பிரதிநிதித்துவம் செய்தது. ஃபிரான்சு நாட்டு ஸ்டேட்ஸ் ஜெனரலைப் போல் அல்லாது எல்லாப் பிரிவினரும் ஒன்ருகவே கூடினர். எனவேதான் இது 'பிரதிநிதித்துவப் பாராளுமன்றம்' (Representative Parliament of 1265) என்று அழைக்கப்பட்டது. இன்று இங்கிலாந்தில் உள்ள காமன்ஸ் சபைக்கு முன்னேடியாக இருந்தது இப்பாராளுமன்றமேயாகும். அதனுல் சைமன்–டி–மாண்ட்ஃபோர்ட் இங்கிலாந்து 'காமன்ஸ் சபை'யின் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் காரணமாய் இருந்தவர்களுள் மிக முக்கியமானவராகக் கருதப்படுகின்ருர். வரலாற்ருசிரியர்கள் அவரை இன்றைய 'பாராளுமன்றத்தின் தந்தை' (Father of Modern Parliament) என்று கருதுகின்றனர். என்ருலும், அவர் கூட்டிய பாராளுமன்றத்தில் அவருக்குச் சாதகமான பகுதிகளிலிருந்தே உறுப்பினர்கள் அழைக்கப்பட்டனர் என்பதனைக் கருத்தில் கொள்வது அவசியமாகும்.

## முதலாம் எட்வர்டும் (கி.பி. 1272–1307) பாராளுமன்றமும்

எட்வர்ட் ஸ்காட்லாந்துடனும் வேல்சுடனும் போரிடவேண்டியிருந்தது. அதற்கு அவருக்குப் பெரும் பணம் தேவைப்பட்டது. எனவே, கி.பி. 1295ஆம் ஆண்டில் பெரியதொரு பாராளுமன்றத்தைக் கூட்டினுர். அப் பாராளுமன்றத்திற்குப் பிரபுக்கள், பெரு நிலக்கிழார்கள், தலைமை மதகுருக்கள், மடாலயத் தலைவர்கள், குருமார்கள், பரோக்களிலிருந்தும் ஷையர்களிலிருந்தும் நைட் வீரர்கள், நகரவாசிகள், சாதாரணக் குடிமக்கள் ஆகிய அனைவரையும் எட்வர்ட் அழைத்திருந்தார். எல்லாப் பிரிவினரும், வருக்கத்தினரும் இதில் பிரதிநிதித்துவம் பெற்றனர். எனவேதான் இது 'மாதிரிப் பாராளுமன்றம்' (Model Parliament) என்றழைக்கப்படுகின்றது. எனினும், சில வரலாற்ருசிரியர்கள் அது 'மாதிரிப் பாராளுமன்றம்' அல்ல என்று கருதுகின்றனர். ஏனெனில், முதலாவதாக அப் பாராளுமன்றம் இன்றுள்ள மன்றங்களைப் போல மேல் சபை, கீழ் சபை என இரண்டு அவைகளைப் பெற்றிருக்கவில்லை. இரண்டாவதாகப் பரோக்கள், ஷையர்கள் முதலானவற்றிலிருந்து வந்த பிரதிநிதிகள் பாராளுமன்றத்தின் நிரந்தர உறுப்பினர்களாகக் கருதப்படவில்லை. அவர்கள் அரசரின் வரித்திட்டத்திற்கு ஒப்புதலளித்த பின்னர், அரசர் நீதி வழங்கியபின் கலைந்து சென்றனர். மூன்ருவதாக, பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்ருகவே கூடினுலும் அவர்களுள் ஏற்றத்தாழ்வுகள் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளப்பட்டன. அரசர், அவருடைய உயர் அதிகாரிகள், பிரபுக்கள் மற்றும் மடாலயத் தலைவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்க, நகரங்களுலிருந்தும் மாவட்டங்களிலிருந்தும் வந்த பிரதிநிதிகள் கீழ்ப்படிதலுடன் கைகட்டி நின்று கொண்டிருந்தனர்.

சட்டம் இயற்றுவதிலோ, அயல்நாட்டு விவகாரங்களைப்பற்றி விவாதிப்பதிலோ முதலாம் எட்வர்ட் கூட்டிய பாராளுமன்றத்திற்கு முக்கியப் பங்கு எதுவும் இல்லை. ஆட்சிப்பொறுப்பு அனைத்திற்கும் மன்னரே மையமாக இருந்தார். தனித்தன்மை வாய்ந்த அமைப்பாகப் பாராளுமன்றம் இயங்கவில்லை.

எட்வர்டின் காலத்தில் பாராளுமன்ற வளர்ச்சிக்கான மற்ெறாரு முக்கிய நிகழ்ச்சி நடைபெற்றது. அவர் காலம்வரை நிதித் தொடர்புடைய முடிவுகளை எடுக்க ஒரு பாராளுமன்றக் கூட்டமும், நீதிவழங்க இன்னொரு கூட்டமும் கூட்டப்பட்டு வந்தன. இவ்விரு கூட்டங்களையும் எட்வர்ட் ஒன்றாக இணைத்தார். அதுமுதல், நிதித் தொடர்புடைய செயல்களும், நீதித் தொடர்புடைய விவகாரங்களும் ஒரே கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

கி.பி. 1297ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்துடனும் ஃபிரான்சுடனும் இங்கிலாந்து போர் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. நிதிப் பற்றாக்குறை கடுமையாக இருந்தது. கம்பளி வாணிகம் செய்யும் வணிகர்களிடம் முதலாம் எட்வர்ட் பணம் கேட்டார். அவர்கள் தர மறுத்துவிட்டனர். திருச்சபையைச் சார்ந்தோரும் அரசருக்குத் தரவேண்டிய பணத்தைத் தர மறுத்து விட்டனர். ஏனெனில் அப்பொழுதுதான் போப் எட்டாம் போனிஃபேஸ் (Pope Boniface VIII) குருமார்கள் எவரும் அரசருக்குப் பணம் செலுத்தக் கூடாதென ஆணையிட்டிருந்தார். எனவே, வணிகப் பிரபுக்கள் மீதும் மதகுருமார்கள் மீதும் முதலாம் எட்வர்ட் கடுமையான நடவடிக்கை எடுத்தார். ஃபிரான்சுடன் போர்தொடுக்கப் ஃபிளான்டர்சுக்குப் (Flanders) போகுமுன் எட்வர்ட் பெருவணிகர்களின் கம்பளிக் குவியல்களைப் பறிமுதல் செய்தார். வணிகர்கள் தங்கள் கம்பளிக் குவியல்களைத் திரும்பப் பெறுவதற்குப் பெருந்தொகையை அரசருக்குத் தரவேண்டியதாயிற்று. இங்ஙனம் வந்த பணத்துடன் எட்வர்ட் ஃபிளாண்டர்சுக்குச் சென்று விட்டார்.

முதலாம் எட்வர்ட் இங்கிலாந்தில் இல்லாத நேரத்தில் பிரபுக்களும் மதகுருமார்களும் ஹெர்போர்ட் (Hereford), நார்போக் (Norfolk) ஆகிய பிரபுக்களின் தலைமையில் அரசனின் வரம்பு மீறிய செயலை எதிர்த்து உரிமைப் போராட்டம் நடத்தினார்கள். அதன் விளைவாய் அரசர் ஃபிளாண்டர்சிலிருந்தே கி.பி. 1215ஆம் ஆண்டில் ஜான் மன்னர் வழங்கிய மகா சாசனத்தையும் (Magna Carta) அதன் மற்றொரு பகுதியாகிய காடுகள் பற்றிய சாசனத்தையும் (Charter of the Forests) மதித்து நடப்பதாக உறுதியளித்

தார். [1] இனி பாராளுமன்றத்தின் அனுமதியின்றி வரி விதிப்பதோ மக்களிடமிருந்து வேறுவிதமான பண உதவியைப் பெறுவதோ இல்லையென ஒப்புக் கொண்டார். இந் நிகழ்ச்சி முதலாம் எட்வர்ட் காலத்திலேயே பாராளுமன்றம் அரசனின் அதிகாரங்களையும் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் அளவுக்கு வலிமை பெற்று விட்டது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

### மூன்றும் எட்வர்ட் காலத்தில் பாராளுமன்றத்தின் வளர்ச்சி

மூன்றும் எட்வர்ட் (கி.பி. 1327–1377) ஃபிரான்சுடன் நூறுண்டுப் போரில் ஈடுபட்டுத் தன் முழு நேரத்தையும் பணத்தையும் அதற்காகச் செலவிட வேண்டியிருந்தது. அதனுல் அடிக்கடிப் பாராளுமன்றத்தையும் கூட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பாராளுமன்றத்தின் அனுமதியுடனே அவர் எந்த நடவடிக்கையையும் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேலும், எட்வர்டின் காலத்தில்தான் பாராளுமன்றம் இரு சபைகளாகப் பிரிந்தது. அத்தகைய பிரிவு தானுக ஏற்பட்டதேயன்றி திட்டமிட்டுச் செய்யப்பட்டதன்று. எட்வர்ட் சில நேரங்களில் பெரும் பிரபுக்களையும் திருச்சபையின் தலைமை மதகுருக்களையும் மற்றும் பெரும் பெருநிலக்கிழார்களையும் மட்டுமே தனிப்பட்ட முறையில் அழைத்து அவர்களின் அனுமதியைப் பெற்றுப் பல நடவடிக்கைகளை எடுத்தார். வேறு சில நேரங்களில் மாதிரிப் பாராளுமன்றத்தில் கூட்டப்பட்டதைப் போன்று அனைவரையும் அழைத்து நிதித் தொடர்புடைய நடவடிக்கைகளை எடுக்க அனுமதியைப் பெற்ருர். இது காலப் போக்கில் இரு சபைகளாக வளரலாயிற்று. பிரபுக்களையும் மதகுருமார்களையும் கொண்ட பிரிவு பிரபுக்கள் சபை (House of Lords) எனவும், மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பிரிவு காமன்ஸ் சபை (House of Commons) எனவும் வழங்கலாயின.

கி.பி. 1340ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மக்கள் மீது எந்தவிதமான வரியையும் விதிப்பதில்லையென ஒப்புக்கொண்டார். கி.பி. 1343ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி வணிக வரிகளிலும் எந்தவித மாறுதலும் செய்வதில்லையென உறுதியளித்தார்.

இவ்வரசர் காலத்திலேயே பாராளுமன்ற உறுப்பினர்களின் குறைகளைத் தீர்க்க அரசர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. 'குறைகளைத் தீர்த்தால்தான் பணம் வழங்கப்படும்' என்று உறுப்பினர்கள் வலியுறுத்தினர். [2] பாராளுமன்றம் அனு

1. Confirmation of Charters (Magna Carta)
2. Redress of grievances should precede supply

மதிக்கும் வரிகளின் மூலம் வரும் பணத்தைச் சரியானமுறையில் அரசர் செலவிடுகிருரா என்பதை அறியவும், மற்றும் கணக்குகளைத் தணிக்கை செய்யும் உரிமையையும் பாராளுமன்றம் பெற்றது. போர்க் காலங்களில் நாட்டைக் காக்க அரசரிடம் பெரும்படை இல்லை. அதற்கும் அரசர் பாராளுமன்றத்தின் அனுமதியையே நம்பியிருந்தார்.

தவறு செய்யும் அமைச்சர்கள் மற்றும் உயர் அலுவலர்களை துரோகக் குற்ற விசாரணை செய்து, அவர்களைப் பதவி விலக்கம் செய்யும் அதிகாரத்தையும் பாரர்ளுமன்றம் மூன்ரும் எட்வர்டின் காலத்திலேயே பெற்றது. லாடிமெர் பிரபு, மற்றும் லியோன்ஸ் (Lord Latimer and Lyons) ஆகிய அமைச்சர்களைக் கி.பி. 1376ஆம் ஆண்டில் பாராளுமன்றம் அத்தகைய குற்ற விசாரணை செய்து தண்டனை கொடுத்தது. இங்கிலாந்தின் வாலாற்றில் இதுவே முதல் 'துரோகக் குற்ற விசாரணை'யாகும். 1376ஆம் ஆண்டு இதனை நிறைவேற்றிய பாராளுமன்றம் நல்ல பாராளுமன்றம் (Good Parliament) என்றழைக்கப்படுகிறது.

இத்தகைய துரோகக் குற்ற விசாரணையைத் தவிர அரசர்களை அரியணையிலிருந்து நீக்கிப் புதிய அரசரை நியமிப்பதிலும் பாராளுமன்றம் பங்கு கொண்டிருந்தது. இரண்டாம் எட்வர்ட் (கி.பி. 1307–1327) அரசராக இருந்தபோது பிரபுக்கள், மார்டிமெர் (Lord Mortimer) என்பவர் தலைமையில் அரசரை எதிர்த்துப் பல உரிமைகளுக்காகப் போரிட்டனர். பிரபுக்களுக்குச் சாதகமாக அரசனின் மனைவி இசபெல்லா உதவி செய்தாள். பிரபுக்கள் அரசனின் உயர் அலுவலர்கள் ஹக் டிஸ்பென்சர்கள் (Hug Dispensers) என்றவர்களைத் தோற்கடித்து இரண்டாம் எட்வர்டைப் பதவி விலகும்படிச் செய்தனர். இதனை உறுதிசெய்யக் கி.பி. 1327ஆம் ஆண்டு பாராளுமன்றம் கூட்டப்பட்டது. அப் பாாாளுமன்றம் எட்வர்டைப் பதவி விலக்கம் செய்தது. இந் நிகழ்ச்சியே கி.பி. 1327ஆம் ஆண்டுப் புரட்சி என்று சொல்லப்படுகின்றது.

இதே போல இரண்டாம் ரிச்சர்டின் (Richard II 1377–1399 A.D.) ஆட்சிக் காலத்தின் இறுதியில் பாராளுமன்றம் அவரைப் பதவி விலக்கம் செய்து நான்காம் ஹென்றியை அரசராக்கியது. இது கி.பி. 1399ஆம் ஆண்டுப் புரட்சி என்று சொல்லப்படுகின்றது.

பாராளுமன்றம் படிப்படியாக புதிய அதிகாரங்களைப் பெற்றபோதிலும், உண்மையில் அது வலிமை பெற்ற மன்றமாக விளங்கியதெனக் கருதமுடியாது. ஏனெனில், எந்தக் குறிப்பிட்ட நேரத்

திலும் அரசரோ அல்லது பிரபுக்களோதான் வலிமை மிக்கவர்களாக இருந்தனர். பாராளுமன்றம் அவர்களின் கைப்பாவையாக இருந்த தென்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இரண்டாம் ரிச்சர்ட்டின் வீழ்ச்சிக்குப் பின் லங்காஸ்டிரிய வமிசத்தைச் சார்ந்த அரசர்கள் ஆட்சி செலுத்தினர். அவர்கள் காலத்தில் வரம்புடை முடியாட்சி ஏற்படுத்துவதன் பொருட்டு 'பெரும் அரசியல் அமைப்புப் பரிசோதனை' (Lancastrian Constitutional Experiment) நடந்ததென சில வரலாற்றுப் பேராசிரியர்கள் கருதுகின்றனர். ஆனால் அத்தகைய பரிசோதனை எதுவும் நடைபெறவில்லை என்பதே உண்மையாகும். லங்காஸ்டிரிய மன்னர்கள் வலிமையிழந்தவர்களாக, பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாக இருந்தனரென்பது உண்மைதான். அதற்குக் காரணம் அவர்கள் அரியணையேறுவதற்குரிய தகுந்த வாரிசுகள் அல்லர் என்பதேயாகும். அவர்கள் தொடர்ந்து ஆட்சி செலுத்த வேண்டுமாயின் பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பும் ஒப்புதலும் அவர்களுக்கு மிகவும் தேவைப்பட்டது. எனவேதான் அம் மன்னர்கள் பாராளுமன்றத்தின் விருப்பத்திற்கிணங்க ஆட்சி செலுத்தினார்கள்.

லங்காஸ்டிரிய மன்னர்களுக்குப் பின்னர் ஆட்சி செலுத்திய யார்கிஸ்ட் (Yorkist) மன்னர்கள் காலத்தில் அரசனுடைய அதிகாரத்தை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அவர்களுக்குப் பின்னர் ஆட்சி செய்த டியூடர் (Tudor) மன்னர்களின் காலத்திலேதான் வல்லாட்சி நிறுவப்பட்டது. அவ்வாட்சி மக்களால் வரவேற்கப்பட்ட வல்லாட்சியாக இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

**ஃபிரான்சில் ஸ்டேட்ஸ் ஜெனரல் (States General)**

இங்கிலாந்தைப் போலவே ஃபிரான்சிலும் நிலமானியத் திட்டத்தின் அடிப்படையில் பிரபுக்கள் வலிமை பெற்றிருந்தனர். போர்க் காலங்களில் படை உதவிக்கும், நிதி உதவிக்கும் அரசர் பிரபுக்களையே நம்பியிருந்தார்.

காபெட் வமிசத்து அரசர் மூன்றும் ஃபிலிப்பின் (Philip III : 1270–1285 A.D.) ஆட்சிக் காலத்திலேயே குருமார்கள் மற்றும் பிரபுக்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்களின் ஆலோசனையை அவர் பெற்றார். அவ்வாறு கூட்டப்படும்போது குருமார்களின் கூட்டமும் பிரபுக்களின் கூட்டமும் தனித்தனியாகத்தான் கூட்டப்பட்டன. எனினும், நான்காம் ஃபிலிப்பின் (Philip IV : 1285-1314 A.D.)

ஆட்சிக் காலத்தில்தான் குருமார்கள், பிரபுக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் (The Clergy, the Nobility and the Third Estate) அனைவரும் கூட்டப்பட்டனர். அங்ஙனம் கூட்டப்படுவதற்கு மிக முக்கியமான அவசியம் ஏற்படவேதான் ஃபிலிப் அச் சபைகளைக் கூட்டினார்.

நான்காம் பிலிப்புக்கும், போப் எட்டாம் போனிஃபேசுக்கும் (Boniface VIII : 1294-1303 A.D.) அதிகாரப் போராட்டம் ஏற்பட்டது. அப்பொழுது ஃபிரான்சில் உள்ள எல்லா இனத்தவரின் ஆதரவும் தனக்கு உள்ளது என்பதை நிரூபிக்கவும், அவர்களின் ஆதரவும் உதவியும் தனக்குப் பக்கபலமாக இருக்கவும் கி.பி. 1302ஆம் ஆண்டில் ஸ்டேட்ஸ் ஜெனரல் (States General) என்று சொல்லப்பட்ட குருமார்கள், பிரபுக்கள் மற்றும் பொதுமக்களின் பிரதிநிதிகள் அடங்கிய பேரவையை நான்காம் ஃபிலிப் கூட்டினார். மூன்று வருக்கத்தினரையும் கூட்டியது இதுவே முதன் முறையாகும். மேலும், இம் மூன்று அவைகளும் தனித்தனியே கூடி, விவாதித்து, கலைந்து சென்றன. ஸ்டேட்ஸ் ஜெனரல் என்பது ஒரே பேரவை என்றாலும் அதில் உண்மையில் மூன்று சபைகள் இருந்தன. அம் மூன்று சபைகளில் குருமார்கள் சபை, பிரபுக்கள் சபை ஆகிய இரண்டையும்விடப் பொது மக்கள் சபையே எண்ணிக்கையில் மிகப் பெரியது. அப்படியிருந்தும் முதலிரண்டு சபைகள் எடுக்கும் நடவடிக்கைகளையும், தீர்மானங்களையும் பொது மக்கள் சபை தடுத்து நிறுத்த முடியாத நிலையிலிருந்தது. மற்றும் வாக்குரிமை தனித்தனி நபருக்கு என்றில்லாமல் சபை அடிப்படையிலேயே இருந்தது.

கி.பி. 1302ஆம் ஆண்டுக்குப் பிறகு பணவுதவி பெறுவதற்காக ஸ்டேட்ஸ் ஜெனரலை நான்காம் பிலிப் பலமுறை கூட்டினார். அத்தனை முறையும் மூன்று சபைகளும் தனித்தனியேதான் கூட்டப்பட்டன. எல்லா இனத்தவரின் பிரதிநிதிகள் அடங்கிய இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றம் ஒன்றாகவே கூடி, விவாதித்து நடவடிக்கைகளை எடுத்தது என்பது இதனுடன் ஒப்புநோக்கற்பாலது. அதோடு இங்கிலாந்துப் பாராளுமன்றம் மன்னரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தியது. மாறாக ஃபிரான்சின் ஸ்டேட்ஸ் ஜெனரல் மன்னருக்கு வரம்பிலா அதிகாரங்களைக் கொடுத்தது. தன் வலிமையையும் அதிகாரங்களையும் இழந்து கொண்டு வந்தது. வலிமையில்லா இந்த ஸ்டேட்ஸ் ஜெனரலை ஃபிரெஞ்சு அரசர்கள் அதிகமாக நம்பியிருக்கவில்லை. அதனால்தான் பிற்காலத்தில் கி.பி. 1614ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1789ஆம் ஆண்டு வரை—நூற்று எழுபத்தைந்து ஆண்டுக்கால இடைவெளியில்—ஒருமுறை கூட ஸ்டேட்ஸ்

ஜெனரலைக் கூட்டாமலேயேப் ஃபிரெஞ்சு அரசர்கள் ஆட்சி செய்தனர்.

இங்ஙனம் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தினின்று பலவிதங்களில் மாறுபட்ட பிரதிநிதித்துவ மன்றமாக ஸ்டேட்ஸ் ஜெனரல் விளங்கியது.

**ஸ்பெயினில் கார்டெஸ் (Cortes)**

இங்கிலாந்து மற்றும் ஃபிரான்சு நாடுகளில் பிரதிநிதித்துவப் பேரவைகள் தோன்றுவதற்கு முன்னரே ஸ்பெயினில், **விசிகோத் அரசர்களின்** (Visigoth Kings) ஆட்சிக் காலத்திலேயே அரசர்களுக்கு ஆலோசனை வழங்கப் பிரபுக்களின் சபை ஒன்று ஏற்படுத்தப்பெற்று இருந்தது. இச் சபையே பின்னர் பிரபுக்கள் மற்றும் குருமார்களின் பிரதிநிதிகளின் சபையாக மாறியது. கி.பி. 12ஆம் நூற்றூண்டில் முக்கியமான நகரங்களிலிருந்து நகரப் பிரதிநிதிகளும் (Burghers) அழைக்கப் பெற்றனர். அதன் பின்னர் நைட்வீரர்களும் அழைக்கப் பட்டார்கள். இங்ஙனம் ஸ்பெயினில் இருந்த கார்டெஸ் என்ற பேரவையில் பிரபுக்கள், குருமார்கள், நைட்வீரர்கள் மற்றும் நகரங்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருந்தார்கள். இப் பேரவை இங்கிலாந்துப் பாராளுமன்றத்தைப் போல ஒன்ருகவே கூடியது என்ருலும் இதில் வருக்கப் பாகுபாடு இருந்தது. என்பது குறிப்பிடத் தக்கது. ஸ்பெயினுக்குக் கடல் கடந்த நாடுகளில் குடியேற்ற நாடுகள் இருந்ததால் கார்டெஸின் உதவியையே நம்பியிருக்க வேண்டிய அவசியம் அரசருக்கு ஏற்படவில்லை. எனவே, இப் பேரவையை அரசர்கள் அடிக்கடிக் கூட்டவில்லை.

ஐபீரியத் தீபகற்பத்தில் **காஸ்டீல்** (Castille), **ஆரகன்** (Aragon) போன்ற அரசுகளில் இத்தகைய அவைகள் இருந்தன. அவற்றுள் ஆரகன் அரசில் இருந்த கார்டெஸ் பலம் வாய்ந்ததாக இருந்தது. அரசாங்க ஆட்சித் துறையையும் நிருவகிக்க **'ஜஸ்டிசியா'** (Justicia) என்ற தலைமை நீதிபதி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரே கார்டெஸின் விவாதங்களையும், நடவடிக்கைகளையும் கவனித்தார். அரசருக்கும் குடிமக்களுக்கும் ஏற்படும் தகராறுகளையும் இவரே தீர்த்து வைத்தார். ஒருவகையில் அரசனின் அதிகாரங்களைக் கார்டெஸ் பெரிதும் கட்டுப்படுத்தியது. இருப்பினும் கி.பி. 15ஆம் நூற்றூண்டில் ஆரகனின் அரசன் **இரண்டாம் ஃபெர்டினன்டும்** (Ferdinand II. 1475 – 1516 A.D), காஸ்டீலின் அரசி முதலாம் இஸபெல்லாவும் (Isabella I : 1474 - 1504 A.D) கார்டெஸின் அதிகாரங்களுக்கு உட்படாமல் தங்கள் விருப்பப்படிச் செயல்படத்

துவங்கினுர்கள். காலப் போக்கில் குறிப்பாக கி.பி. 19ஆம் நூற்ருண்டுக்குள் அதிகாரங்களே இல்லாத சபையாக கார்டெஸ் மாறிவிட்டது. இந்த முறையில் ஃபிரான்சின் ஸ்டேட்ஸ் ஜெனரலேப் போல இது இயங்கியது.

**ஸ்வீடனில் ரிக்ஸ்டாக் (Riksdag)**

இங்கிலாந்து, ஃபிரான்சு, ஸ்பெயின் முதலிய நாடுகளில் இருந்தது போலவே அரசனுக்கு ஆலோசனையும் உதவியும் செய்ய, ஸ்வீடனில் ரிக்ஸ்டாக் என்ற பேரவை இருந்து வந்தது. இப்பேரவை, பிரபுக்கள் அவை, குருமார் அவை, நகரத்தில் வாழ்வோர் அவை, மற்றும் உழவர் அவை என்று நான்கு பிரிவுகளாக வருக்க அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தது. இவை நான்கும் தனித்தனியாகவே கூடி விவாதித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கலந்து சென்றன. இங்கிலாந்துப் பாராளுமன்றத்தைப் போல் அல்லாது, ஃபிரான்சு நாட்டு ஸ்டேட்ஸ் ஜெனரலேப் போலத் தனித்தனியே கூடின. எனினும், மக்களாட்சிக் கருத்துகள் இப் பேரவையின் விவாதங்களில் காணப்பட்டன. நான்கு பிரிவுகளைக் கொண்ட ரிக்ஸ்டாக்கின் ஒவ்வொரு பிரிவுக்கும் 'தால்மன்' (Talman) என்று அழைக்கப்பட்ட அவைத் தலைவர் சபையின் நடவடிக்கைகளைத் தலைமை தாங்கி நடத்தினுர். பிரபுக்கள் அவைக்கு மட்டும் உப்சலாவின் தலைமை மதகுரு (Archbishop of Upsala) நிரந்தரமான 'தால்மன்' ஆவார். மற்ற மூன்று அவைகளும் ஒவ்வொருமுறையும் கூடும்போது தால்மனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டன. இந் நான்கு பிரிவுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட தேர்வுக் குழு ஒன்றும் செயல்பட்டு வந்தது. இக் குழுவில் பிரபுக்கள் அவையிலிருந்து ஐம்பது பேரும், மற்ற மூன்று அவைகள் ஒவ்வொன்றிலிருந்தும் இருபத்தைந்து பேருமாக மொத்தம் நூற்று இருபத்தைந்து உறுப்பினர்கள் இருந்தனர்.

இங்ஙனம் இங்கிலாந்து, ஃபிரான்சு, ஸ்பெயின் மற்றும் ஸ்வீடன் போன்ற நாடுகளில் பிரதிநிதித்துவச் சபைகள் தோன்றி மக்களாட்சிக் கருத்துகள் பின்புற்றப்படலாயின,

# 17. இடைக்காலத்தின் பிற்பகுதியில் திருச்சபை

**அரசர் நான்காம் பிலிப்பும் போப் எட்டாம் போனிஃபேசும்**

ஃபிரான்சு நாட்டின் அரசர் நான்காம் பிலிப் (கி.பி. 1285 - 1314) காபெட் வமிசத்து அரசர்களுள் ஒருவராவார். அவர் ஃபிரான்சில் ஆட்சி செய்யும் போது கி.பி. 1294ஆம் ஆண்டில் உரோம் திருச்சபையின் தலைமைப் போப்பாக எட்டாம் போனிஃபேஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலில் அவர் பிலிப்புடன் நல்லுறவுகளை வைத்துக் கொண்டிருந்தார். ஆனால் போப்பின் வரம்பிலா அதிகாரங்களை அவர் நிலைநிறுத்த முயன்றபோது அரசருக்கும் போப்புக்குமிடையே மனக்கசப்பு வளர்ந்தது. 'நானே *சீசர்*; நானே உண்மையான பேரரசன்; எனவே நானே இப்புவி அரசர்களுக்கெல்லாம் உயர்ந்தவன்' [1] என்று போப் போனிஃபேஸ் மார்தட்டிப் பேசினார். 'போப்பே கடவுளின் பிரதிநிதி; அரசர் போப்பின் அதிகாரத்திற்கு உட்பட்டு நடக்கவேண்டும்; போப்புக்கு அரசியல் மற்றும் ஆன்மிகம் பற்றிய அதிகாரங்கள் உண்டு; இக் கருத்துகளை மன்னர், மக்கள், மதகுருமார்கள் ஆகியோர் அனைவரும் உணரவேண்டும்' என ஆணையிட்டார்.

அப்பொழுது புனித உரோமானியப் பேரரசரை விட ஃபிரான்சு நாட்டு மன்னர் நான்காம் பிலிப்பே வலிமையுடையவராகவும் புகழ் வாய்ந்தவராகவும் இருந்தார். போப்பின் அச்சுறுத்தல்களுக்கு அரசர் அஞ்சவில்லை. அவர் அடிக்கடிப் போர்களில் ஈடுபட்டதால் அரசுக்குப் பணப் பற்றுக்குறை ஏற்பட்டது. எனவே, ஃபிரான்சில் இருந்த மதகுருமார்களின் சொத்துக்களின் மீது வரி விதித்தார். அவர்கள், போப் போனிஃபேசிடம் முறையிட்டனர். போப், அரசருக்குத் திருச்சபையைச் சேர்ந்த சொத்துக்களுக்கு

1. 'I am Caesar, I am the true Emperor, and therefore superior over all Princes of the earth',

வரிவிதிக்கும் உரிமையில்லையென அறிவித்தார். மதகுருமார்களுக்கு வரியைச் செலுத்த வேண்டாமெனவும் ஆணையிட்டார். தன் ஆணையை மதித்து நடக்காதவர் அரசராயினும் மத குருமார்களாயினும் எவராயினும் மத விலக்கு செய்யப்படுவர் என அச்சுறுத்தினர். போப்பின் போக்கைக்கண்டு அரசர் ஆத்திரப்பட்டார். இந்த நேரத்தில் தான் மற்றொரு நிகழ்ச்சி நடைபெற்றது. ஃபிரான்சு நாட்டில் மதகுருமார் ஒருவர் அரசரைக் கொலை செய்யச்சதி செய்தாரென்று குற்றம் சாட்டப்பட்டு அரசரது நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட்டார். இத்தகைய முறைக்குப் போப் போனிஃபேஸ் எதிர்ப்புத் தெரிவித்தார். குற்றம் செய்யும் மதகுருமாரை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் உரிமை திருச்சபை நீதி மன்றத்தைத் தவிர வேறு நீதி மன்றங்களுக்கு இல்லையென அறிவித்தார். போப் விடுத்த எந்த ஆணையையும் அரசர் மதிக்கவில்லை; தொடர்ந்து தன் வழியிலேயே நடந்து வந்தார். அதுமட்டுமன்றி ஃபிரான்சிலிருந்து உரோமுக்கு வெள்ளியும் தங்கமும் பெருமளவில் அனுப்பப்பட்டுவருவதை அரசர் நிறுத்தினர். ஃபிரான்சிலிருந்து எந்த மத நிறுவனத்திலிருந்தும் உரோமுக்குப் பணமோ தங்கம் அல்லது வெள்ளியோ அனுப்பக் கூடாதென பிலிப் ஆணையிட்டார்.

உண்மையிலேயே உரோம் திருச்சபைக்குக் கடுமையான நிதிப்பற்றுக்குறை ஏற்பட்டிருந்தது. அதற்குப் போப் புதிய வழியொன்றைக் கண்டுபிடித்தார். கி.பி. 1300ஆம் ஆண்டு புதிய நூற்றாண்டு தொடங்குவதையொட்டி உரோமில் மிகப் பெரிய கிறித்தவத் திருவிழாவைப் போப் நடத்தினர். அத் திருவிழாவுக்கு உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிறித்தவச் செல்வந்தர்கள் வந்தார்கள். அவர்கள் தங்களின் காணிக்கையாகத் திருச்சபைக்குக் குவியல் குவியலாகத் தங்கம் மற்றும் வெள்ளிக் காசுகளைக் கொண்டுவந்து போப்பின் முன் கொட்டினார்கள். மேலும் அத் திருவிழாவில் போப் ஊர்வலம் வந்த போது அவருக்கு முன்னால் இரண்டு பெரிய வாள்கள் எடுத்துச் செல்லப்பட்டன. அவை போப்பினிடமே அரசியல் அதிகாரங்களும் ஆன்மிக அதிகாரங்களும் உள்ளன என்பதைக் காட்டுவதற்கே அங்ஙனம் எடுத்துச் செல்லப்பட்டன. இத் திருவிழாவினால் போப்பின் புகழ் ஐரோப்பா முழுவதும் பரவியது; நிதிப்பற்றுக்குறையும் நீங்கியது.

ஆனால், அரசர் பிலிப் தன் அதிகாரத்தைக் கைவிடுவதாக இல்லை. கி.பி. 1302ஆம் ஆண்டில் ஃபிரான்சின் குருமார்கள், பிரபுக்கள் மற்றும் பொது மக்களடங்கிய பொதுப் பேரவையை (States General) பிலிப் கூட்டினர். முதன் முறையாக இப்

பேரவை அரசரால் கூட்டப்பட்டது. அது தன் முழு ஆதரவை அரசருக்குக் கொடுத்தது. இதனைக் கண்ட போப் போனிஃபேஸ் பிலிப்பை மதவிலக்கு செய்தார்.

ஆனால், பிலிப் 'மதவிலக்கு' ஆணையைக் கண்டு மனந்தளர வில்லை. போப்பைத் தாக்குவதற்காகப்படைகளை அனுப்பினார். போப் உரோமுக்கு அருகில் அனக்னி (Anagni) என்ற நகரத்தி லுள்ள கோட்டையில் தங்கியிருந்தார். அரசரால் அனுப்பப் பட்ட படைகள் கோட்டையை முற்றுகையிட்டன. மூன்று நாட்கள் போப் வெளியே வரவில்லை. அரசரின் ஆட்கள் நொகரெட் (Nogaret) எனபவர் தலைமையில் உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் எண்பத்தாறு வயது நிரம்பிய போப்பைச் சுடுசொற்க ளால் சிறுமை படுத்திப்பேசியதுடன், அவரைத் தாக்கி அவருடைய புனிதமான உடையைக் கிழித்தெறிந்தார்கள். மேலும் அவரைக் கைது செய்து அவமதித்தார்கள். கி.பி.1303 ஆம் ஆண்டில் போப் இயற்கை எய்தினார்.

திருச்சபையின் வரலாற்றில் இந் நிகழ்ச்சி நீங்காத களங்க மாகி விட்டது. ஐரோப்பிய மக்களிடையே பல்வேறுவிதமான எண்ணங்களையும் உணர்வுகளையும் இது ஏற்படுத்தியது. இந் நிகழ்ச்சியே போப்பின் தலைநகரத்தை உரோமிலிருந்து ஆவினானுக்கு (Avignon) மாற்றுவதற்குக் காரணமாக இருந்தது.

### ஆவினானில் திருச்சபை (அல்லது) பாபிலோனியச் சிறையிருப்பு

போப் போனிஃபேஸ் இறந்து விட்டாலும், பிலிப் தான் திருச்சபையோடு தொடுத்த போராட்டத்தை விடுவதாக இல்லை. போனிஃபேசுக்குப் பிறகு பதவி ஏற்ற போப் சில மாதங்களில் இறந்து விட்டார். பிலிப் தன் நாட்டிலிருந்த ஒருவரைப் போப் பாக நியமிக்க வேண்டுமென எண்ணினார். எனவே போர்டோ வின் பிஷப்பை (Bishop of Bordeaux) ஐந்தாம் கிளெமெண்ட் (Clement V) என்ற பெயரோடு போப்பாக நியமித்தார். அது மட்டுமின்றிப் போப்பின் தலைநகரத்தை உரோமிலிருந்து ஃபிரான்சு நாட்டில் உரோன் (Rhone) நதியின் கிழக்குக் கரையி லுள்ள ஆவினான் என்ற நகரத்திற்கு மாற்றினார். போப் ஐந் தாம் கிளெமெண்ட் அரசரின் ஆணைப்படியே நடந்து கொண் டார். போனிஃபேஸ், பிலிப்பை மதவிலக்குச்செய்திருந்த ஆணையைத் திரும்பப்பெற்று, மன்னரை மன்னித்தார்.

கி.பி. 1309 ஆம் ஆண்டிலிருந்து 1377 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் போப்பின் இருப்பிடம் ஆவி

ஞனிலேயே இருந்தது. இந்த எழுபதாண்டுக் காலத்தைப் 'பாபி லோனியச் சிறையிருப்பு' ('Babylonish Captivity') என்று வரலாற் ருசிரியர்கள் அழைக்கின்றனர் போப் ஐந்தாம் கிளெமெண்டுக்குப் பின் வந்த போப்புகளெல்லாம் ஃபிரான்சு நாட்டைச் சேர்ந்தவர் களாகவே இருந்தார்கள். அவர்கள் ஃபிரான்சு நாட்டரசரின் கைப் பொம்மைகளாகவே இருந்தனர். போப் எதைச்சொன்னுலும் அது அரசனின் கருத்து என்றே ஐரோப்பியக் கிறித்தவர்கள் கருதினுர்கள்.

திருச்சபையின் வரலாற்றில் இந்தக்காலம் ஓர் இருண்ட காலமாகவே கருதப்படுகிறது. ஐரோப்பிய மன்னர்களும் மக்க ளும் திருச்சபை, ஃபிரான்சு அரசரின் அதிகாரத்திற்குட்பட் டிருப்பதை விரும்பவில்லை. போப்பின் இருப்பிடம் உரோமுக்கு மாற்றப்பட வேண்டுமென அவர்கள் விரும்பினர். கிறித்தவ மதத்தின் மீதும் திருச்சபையின் மீதும் அவர்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். இதே காலத்தில்தான் இங்கிலாந்தில் ஜான் விக்ஃளிப் (John Wycliffe – கி.பி. 1320–1384) போன்றவர்கள் திருச்சபையிலிருந்த குறைகளையும் திருச்சபையைச்சேர்ந்த போப் மற்றும் குருமார்களின் ஆடம்பர வாழ்க்கையைப் பற்றியும் கடுமையாகத் தாக்கிப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

மேலும் தன்னுடைய ஆட்சிக் காலத்தியே டெம்ப்ளர்கள் என்ற நைட்வீரர்களின் அமைப்பை (Knight-Templars) நான் காம் பிலிப் கலைத்து விட்டார். அவர்கள் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதாகவும், பெருஞ்செல்வத்தைக் குவித்து விட்டுச் சோம் பேறிகளாக வாழ்கின்ருர்களென்றும் குற்றம் சாட்டி அவ் வமைப்பைக் கலைத்துவிட்டு அவர்களின் சொத்துக்களை பிலிப் பறிமுதல் செய்தார். அது மட்டுமின்றிக் கலகம் செய்த நைட் டெம்ப்ளார் வீரர்கள் ஐம்பத்து நான்குபேர் பாரிஸ் நகரத்தில் கி.பி.1312 ஆம் ஆண்டு தீயிலிட்டுக்கொளுத்தப்பட்டார்கள். இத் தனைக்கும் போப் ஐந்தாம் கிளெமென்ட் உடந்தையாக இருந்தார்.

'பாபிலோனியச் சிறையிருப்பு'க் காலத்தில் ஐந்தாம் கிளெ மென்ட் முதல் பதினேரும் கிரிகரி வரை ஏழு போப்புகள் ஆவி ஞனில் இருந்து கொண்டே பணியாற்றினுர்கள். இதற்குக் கடும் எதிர்ப்பு வளர்ந்து கொண்டே வந்தது. எனவே பதினேரும் கிரிகரி தன் இருப்பிடத்தை உரோமுக்கு மாற்றத் திட்டமிட்டார். அவருடைய திட்டத்திற்கு ஐரோப்பிய மன்னர்கள் மற்றும் மக் களின் ஆதரவு இருந்தது. ஆகையால், கி.பி. 1377 ஆம் ஆண் டில் துணிவாக உரோமுக்குச்சென்ருர். 'பாபிலோனியச் சிறை

யிருப்பு' முடிந்தது. இருப்பினும் திருச்சபைக்கு இதைவிடப் பெரியதொரு களங்கம் வரக் காத்திருந்தது.

**திருச்சபையில் ஏற்பட்ட 'பெரும்சமயப்பிளவு' (The Great Schism in the Papacy)**

பதினோரும் கிரிகரி கி.பி. 1378 ஆம் ஆண்டில் இறந்து விட்டார். புதிய போப்பைத் தேர்ந்தெடுப்பதற்காகத் திருச் சபையைச் சார்ந்த கார்டினல்கள் எல்லாரும் உரோமில் கூடி னர். அப்பொழுது உரோம் நகரமக்கள் திரளாகக் கூடியிருந்து உரோமைச் சேர்ந்த ஒருவரையே போப்பாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஆர்பாட்டம் செய்தனர். கார்டினல்களும் இத் தாலியைச் சேர்ந்த ஆரும் அர்பனையே (Urban VI) போப்பாகத் தேர்ந்தெடுத்தனர். போப் ஆரும் அர்பன் திருச்சபையிலிருந்த பலகுறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க முற்பட்டார். அவ்வாறு செய்வதில் போப் சர்வாதிகாரப் போக்கைக் கடைப் பிடித்தார். இதனை அவரைத் தேர்ந்தெடுத்த கார்டினல்களே வெறுத்தனர். போப்புக்கும் கார்டினல்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் வளர்ந்தன. பெரும்பாலான கார்டினல்கள் ஃபிரான்சு நாட்டைச் சேர்ந்தவர்களாவர். போப் அவர்களை இன்னும் அதிகமாக வெறுத்தார். இவ்விருவருக்குமிடையே ஒற்றுமை ஏற்படும்போல் தெரியவில்லை. எனவே, எல்லாக் கார்டினல்களும் உரோமிலிருந்து நேபிள்சுக்குச் சென்றுவிட்ட னர். அங்கிருந்து, ஆரும் அர்பனின் தேர்வு செல்லாது என் றும், உரோம் மக்கள் தங்களை வற்புறுத்தி ஆர்பாட்டம் செய்த தாலேயே ஆரும் அர்பனைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவ சியம் தங்களுக்கு ஏற்பட்டதென்றும், அவர் போப்பாக இருக்கத் தகுதியுடையவர் அல்லர் என்றும் அறிக்கை விட்டனர். அது மட்டுமின்றி அங்கேயே அவர்கள் ஃபிரான்சு நாட்டுக் கார் டினல் ஒருவரைப் போட்டிப் போப்பாகத் தேர்ந்தெடுத்த னர். அவர் உடனே ஏழாம் கிளெமெண்ட் (Clement-VII) என்ற பெயரில் ஆவினோனில் தன் இருப்பிடத்தை வைத்துக்கொண்டு தானே உண்மையான போப்பென்று அறிவித்துப் பணிபுரியத் தொடங்கினர்.

கிறித்தவச் திருச்சபைக்கு ஒரே நேரத்தில் இரண்டு போப்புகள்-ஒருவர் உரோமிலும் மற்றொருவர் ஆவினோ னிலும்-இருந்து கொண்டு ஒருவர் மற்றவரைத் தூற்றிக்கொண்டும், ஒவ்வொருவரும் தானே உண்மையான போப்பென்று உரிமை கொண்டாடிக்கொண்டும், ஒருவரை மற்றவர் மதவிலக்கு செய்து கொண்டும் இருந்த இழிநிலை ஐரோப்பிய மக்களிடையே

ஆத்திரம், ஆவேசம், மற்றும் வேதனையையூட்டியது. எந்தப் போப்பைப் பின்பற்றுவது? யார் உண்மையான போப்? என்ற குழப்பத்தில் மக்கள் மட்டுமன்றி மன்னர்களும் இருந்தார்கள். திருச்சபையில் ஏற்பட்ட சமயப்பிளவு நாடுகளிலும் குடும்பங்களிலும் ஏற்பட்டது. ஒரே குடும்பத்தில் தந்தை ஒருவரையும், தாய் மற்ருெருவரையும் உண்மையான போப்பென ஏற்றனர். இதனுல் குடும்பங்களிலும் பூசல்கள் ஏற்பட்டன. ஐரோப்பிய அரசுகள், இச் சமயப் பிளவினுல் இருவேறு அணிகளாகப் பிரிந்தன. ஃபிரான்சு, மற்றும் அதன் ஆதரவு பெற்ற அரசுகளான, ஸ்பானிய அரசு, நேபிள்ஸ், சிசிலி, ஸ்காட்லாந்து போன்றவை ஆவினுனில் உள்ள போப்பை உண்மையான போப்பென ஏற்றுக் கொண்டன. இங்கிலாந்து, ஃபிளாண்டர்ஸ் மற்றும் ஸ்காண்டிநேவிய அரசுகள் உரோமிலுள்ள போப்பை ஏற்றுக்கொண்டன. ஜெர்மனி மற்றும் வட இத்தாலி அரசுகள் நடுநிலை வகித்தன. இந்த பயங்கரமான நிலை எவ்வளவு காலம் நீடிக்குமோவென ஐரோப்பியக் கிறித்தவர்கள் பயந்து கொண்டிருந்தனர்.

இந்தப்பிளவு ஆரும் அர்பனேடும், ஏழாம் கிளெமென்டோடும் நிற்கவில்லை. போப்பும், போட்டிப் போப்பும், தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். இப்படியே ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகள் கடந்து விட்டன. இந்நிலை நீடித்தால் கிறித்தவ மதம் அழியுமென்பதைப் பல நாடுகளைச் சேர்ந்த மதகுருமார்களும், கார்டினல்களும் மற்றும் அம் மதத்தில் நம்பிக்கை கொண்ட பெரியார்களும் கருதினுர்கள். எனவே அரசுக்கும் திருச்சபைக்கும் நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டார்கள்.

**கான்ஸ்டன்ஸ் மகாசபை (Council of Constance) கி.பி. 1414–1417**

இதற்கு முன்னர் திருச்சபையில் ஏற்பட்ட பிளவுகள் நிலையானதாக இல்லாமல் அவ்வக்காலங்களில் தோன்றி மறைந்து விடுவனவாக இருந்தன. ஆனுல் இப்பொழுது ஏற்பட்ட பெரும்பிளவு தொடர்ந்து பல ஆண்டுகள் நீடித்ததால் மத நம்பிக்கை இல்லாத பலர் திருச்சபையையும் போப்புகளையும் தாக்கிப் பேச ஆரம்பித்தனர். எனவே உடனடியாக இப் பிளவை நீக்கப் பல திருச்சபைக் கூட்டங்கள் கூட்டப்பட்டு இதுபற்றி விவாதிக்கப்பட்டன. கூட்டங்கள் பல நடத்தப்பட்டாலும் அவற்றின் விளைவுகள் பயனுள்ளவையாக இல்லை.

குறிப்பாகக் கி.பி. 1409ஆம் ஆண்டில் இத்தாலியில் உள்ள பீசா (Pisa) என்ற நகரத்தில் ஒரு பேரவை கூட்டப்பட்டது. அப்

பேரவையில் பல கார்டினல்களும், தலைமை மத குருக்களும் கலந்து கொண்டார்கள். அவர்கள் உரோமிலிருந்தும் ஆவிஞேனி லிருந்தும் வந்திருந்தார்கள். உரோமிலிருந்த போப்பும், ஆவிஞேனி லிருந்த போப்பும் இப் பேரவைக்கு வரும்படி அழைக்கப்பட்டிருந் தார்கள். ஆனால் அவர்கள் இருவரும் வரவில்லை. இருப்பினும் இப் பேரவையில் புதிய போப் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் இதனை உரோமிலிருந்த போப்பும், ஆவிஞேனிலிருந்த போப்பும் அனுமதிக்கவில்லை. எனவே பீசாவில் தேர்ந்தெடுக்கப் பட்ட போப் பீசாவிலேயே தங்கிவிட்டார். அவரும் தன்னை முறை யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போப் என்றும், அதனால் தானே உண்மையான போப் என்றும் கூறிக் கொண்டார். மக்கள் திருச் சபையின் விவகாரங்களைக் கண்டு எள்ளி நகையாட ஆரம்பித்த னர். கிறித்தவ மதத்தில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு திருச் சபையைத் தாக்கிப் பேச மற்றொரு நல்ல வாய்ப்பு கிடைத்தது.

இந்த அவல நிலை அதன் பின்னரும் ஐந்தாண்டுகள் நீடித் தது. கி.பி. 1414ஆம் ஆண்டில் புனித உரோமானியப் பேரரசர் சிகிஸ்மண்ட் (Sigismund), கான்ஸ்டன்ஸ் நகரத்தில் ஒரு பேரவை யைக் கூட்டினார். இது மற்ற பேரவைகளைப் போலல்லாது கிறித்தவமதத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவரும் கலந்து கொள்ளும் சிறப்புமிக்கப் பேரவையாக விளங்கியது. தலைமை மதகுருக்கள், மன்னர்கள் போன்ற அனைவரும் இப்பேர வையில் பங்கு கொண்டனர். இதுகண்டு பீசாவில் ஐந்தாண்டு களுக்கு முன் தேர்ந்தெடுக்கப்பட்ட போப் ஊரைவிட்டே ஓடி விட்டார். உரோமிலிருந்த போப் பன்னிரண்டாம் கிரிகரி தன்னை யும், கி.பி. 1378ஆம் ஆண்டிலிருந்து உரோமிலிருந்த போப்பு களையும் முறையான, உண்மையான போப்புகள் என்று அங்கீகரித் தால், இப் பேரவை எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் தான் கட்டுப் பட்டு நடப்பதாக இப் பேரவையில் பங்கு கொண்டோரிடம் கூறி னார். பேரவையும் அவருடைய கருத்துகளை ஏற்றுக் கொண்டது. இறுதியாக கி.பி. 1417ஆம் ஆண்டில் பேரவையின் சில பிரதிநிதி களின் முன்னிலையில் கார்டினல்கள் அனைவரும் ஐந்தாம் மார்டின் (Martin V) என்பவரைக் கிறித்தவ உலகம் முழுவதற்குமான திருச்சபையின் போப்பாகத் தேர்ந்தெடுத்தனர். அவர் இனி உரோமிலிருந்தே பணிபுரிய வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. மேலும் திருச்சபையில் இனி ஏற்படும் பிரச்சினைகளுக்குக் கான்ஸ் டன்ஸ் பேரவையைப் போலக் கூட்டப்படும் பேரவைகளுக்கு மட்டுமே தீர்வு காணும் உரிமை உண்டென்றும், இனிவரும் போப்புகள் அத்தகைய தீர்வுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இது தவிர திருச்சபையில்

பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. போப்பும் மற்ற மதகுருமார் களும் எளிய வாழ்க்கை வாழவேண்டுமெனவும் கருத்து தெரிவிக் கப்பட்டது.

கான்ஸ்டன்ஸ் பேரவை தெரிவித்திருந்த பரிந்துரைகள் ஓரளவே பின்பற்றப்பட்டன. எனினும், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜான்விக்ளிஃப், பொஹிமியாவில் வாழ்ந்த ஜான் ஹஸ், மற்றும் ஒரு நூற்ருண்டு கழித்து வந்த ஜெர்மானிய மதசீர்திருத்த வாதி மார்டின் லூதர் போன்றவர்கள் திருச்சபையிலிருந்த குறை பாடுகளை மக்கள் மத்தியிலே வைத்துத் திருச்சபையின் சீர்திருத் தத்திற்குப் பாடுபட்டார்கள்.

# 18. அறிவு இயக்கமும் மறுமலர்ச்சியும்

பதின்மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில், டாமினிக் முனிவரும், ஃபிரான்சிஸ் முனிவரும் கிறித்தவக் குருமார்களும் துறவிகளும் எங்ஙனம் மதத்தொண்டு செய்ய வேண்டுமென்பது பற்றி விளக்கியிருந்தனர். முன்னவர் கிறித்தவக் குருமார்கள் மதத்தைப் பரப்பவும், புறச்சமய வாதிகளை எதிர்த்துத் தீவிரமான பிரச்சாரம் செய்யவேண்டுமெனவும் வற்புறுத்தினர். பின்னவர், இயேசு கிறித்துவைப் போல ஏழையுள் ஏழையாக இருந்து எளியவர்களுக்கும் நோயாளிகளுக்கும் அன்புடனும் மகிழ்ச்சியுடனும் மக்கள்தொண்டு செய்யவேண்டுமென வற்புறுத்தினர். முதலில் இவர்களுடைய இயக்கம் மத குருமார்களிடையே செல்வாக்குப் பெற்றதெனினும் பதினான்காம் நூற்றுண்டுக்குள் மதகுருமார்களும் உரோமிலுள்ள போப் முதல் திருச்சபையின் எல்லா ஊழியர்களும் ஏழை எளியவர்களைப் புறக்கணித்து, பெருஞ்செல்வத்தைக் குவித்து, ஆடம்பரமான வாழ்க்கையை நடத்த முற்பட்டனர். அவர்கள் அரசுக்கு வரிகளைச் செலுத்தவும் மறுத்தனர். போப் எட்டாம் போனிஃபேஸ் (கி.பி. 1294–1303), இங்கிலாந்து அரசர் முதலாம் எட்வர்ட் (கி.பி. 1272-1307) விதித்த வரிகளைத் திருச்சபையைச் சார்ந்தோர் எவரும் செலுத்தக்கூடாதென ஆணையிட்டார்.

திருச்சபையின் 'பாபிலோனியச் சிறையிருப்பும்' (கி.பி. 1305–78), அதைத் தொடர்ந்து ஏற்பட்ட 'பெரும் சமயப் பிளவும்' (கி.பி. 1378-1417) அதன் பெருமையையும் வலிமையையும் பெரிதும் பாதித்தன. இந்த நிலையில் இப் பிறவியின் பாவங்களுக்குத் தேவனின் மன்னிப்புப் பெறவும், அடுத்த பிறவியின் நல்வாழ்வுக்குத் தங்களை ஆயத்தம் செய்து கொள்ளவும் திருச்சபைக்குப் பணமும் பொருளும் தரும்படிப் போப்புகள் மக்களை வேண்டினர். தவிர போப்புகள் திருச்சபையைச் சார்ந்த பதவிகளைப் பெரும் பணத்திற்கு விற்கத் தொடங்கினர். யார் அதிகமான பணம் கொடுத்தாரோ அவரே பதவியையும், பதவி உயர்வையும் பெற்ருர்.

கீழ் மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை திருச்சபையில் ஊழல்கள் மலிந்திருந்தன. ஆரும் கிளமெண்ட் (கி.பி. 1342-1352) என்ற போப் தவருன முறைகளில் பெரும் பணத்தைச் சேர்த்துக் குவித்தாராம். இவ்வூழல்களையும் குறைபாடுகளையும் எதிர்த்தே பல அறிவியக்க மேதைகள் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தனர். அவர்களுள் கீழே குறிப்பிடப்பட்டவர்கள் மிகமுக்கியமானவராவர்.

**ஜான்விக்ளி:ப் (John Wycliffe–1320–1384 A.D.)**

இவர் ஆக்ஸ்–ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் பேரராசிரியராக இருந்தார். திருச்சபையின் ஊழல்களைப்பற்றியும் குறைபாடுகளைப் பற்றியும் போப் முதல் எல்லா குருமார்கள் நடத்தும் ஆடம்பர வாழ்க்கையைக் கண்டித்தும் மக்களிடையே பிரச்சாரம் செய்தார். அதற்காக கி.பி. 1377ஆம் ஆண்டில் இலண்டனில் இருந்த தலைமை மதகுருவினுல் விசாரிக்கப்பட்டு அவர் 'புறச்சமயவாதி' எனக் குற்றம் சாட்டப்பட்டார். அப்பொழுது விக்ளிஃப்பின் ஆதரவாளர்களுக்கும் மதகுருவின் ஆதரவாளர்களுக்குமிடையே பூசல்கள் ஏற்பட்டன. விக்ளிஃப் அவர் உயிருக்கு ஆபத்து வருமென பயமுறுத்தப்பட்டார். ஆனுல் அவர் பின்வாங்கவில்லை. தன்னுடைய கருத்துகளை நாடு முழுவதும் பரப்ப 'ஏழைக் குருமார்கள்' என்ற இயக்கத்தையும் நிறுவி வெற்றி கண்டார். இதுவரை கிறித்தவர்களின் புனித நூலான விவிலிய நூல் இலத்தீன் மொழியிலேயே இருந்தது. அதனை விக்ளிஃப் ஆங்கிலத்தில் முதன் முறையாக மொழி பெயர்த்தார். புனித நூலின் கருத்துகளுக்குப் புறம்பாக மதகுருமார்கள் நடந்து கொள்கிருர்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டனர்.

தொடர்ந்து விக்ளிஃப் பிரச்சாரம் செய்தார். கிறித்தவ மதம் கூறிய 'பொருண்மை மாற்றக்கோட்பாட்டை' (Transubstantiation) தவருனது எனக் கண்டித்தார். மதவாதிகளிடமிருந்து எதிர்ப்பு அதிகமாகி விட்டது. ஆக்ஸ்-போர்டு பல்கலைக்கழகம் அவரைப் பதவி விலக்கம் செய்தது. அவர் பின்னர் கி.பி. 1384 ஆம் ஆண்டில் அமைதியாகவே இறந்தார். ஆனுல் அவர் விட்டுச் சென்ற கருத்துகள் மறையவில்லை.

விக்ளிஃப்பின் தொண்டர்கள் 'லொவ்லார்ட்கள்' (Lollards) எனப்பட்டனர். அவர்கள் தொடர்ந்து திருச்சபைக்கு எதிராக விக்ளிஃப்பின் கொள்கைகளைப் பரப்பி வந்தனர். அவர்களைத் திருச்சபையின் ஆணைக்கேற்ப இரண்டாம் ரிச்சர்ட் (கி.பி. 1377–1399), நாம்காம் ஹென்றி (கி.பி. 1399-1413) போன்ற அரசர்கள், கொடுமைப் படுத்தினர். பலர் நடுத்தெருவில் தூக்கிலிடப் பட்டார்கள்; உயிருடன் தீக்கிரையாக்கப் பட்டார்கள்.

அங்ஙனம் கொளுத்தப்பட்டவர்களுள் வில்லியம் சாட்டர் (William Sawtre), சர்ஜான் ஓல்ட்காசல் (Sir John Oldcastle) போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்களாவர்.

**ஜான் ஹஸ் (John Huss) (கி.பி. 1373 – 1415)**

பொஹிமியாவில் பிறந்த ஜான்ஹஸ் பிராக் பல்கலைக்கழகத்தில் (University of Prague) பயின்று கி.பி. 1396ஆம் ஆண்டில் எம்.ஏ. பட்டம் பெற்றார். கி.பி. 1398ஆம் ஆண்டிலிருந்தே கிறித்தவ மதத்திலுள்ள சில மூடப் பழக்க வழக்கங்களை எதிர்த்தும் திருச்சபையிலுள்ள குறைகளைச் சுட்டிக் காட்டியும் பிரச்சாரம் செய்தார். இங்கிலாந்தின் அறிவியக்கச் செம்மல் ஜான் விக்ளிஃபின் நூல்களைத் தெளிவாகப் படித்ததன் பயனாக அவருடைய கொள்கைகளால் கவரப்பட்டார். விவிலய நூலை நன்கு பயின்று அந்நூலிலுள்ள கொள்கைகளுக்கு மாறாக எங்ஙனம் திருச்சபையைச் சார்ந்தோர் நடக்கின்றனரென்பதை மக்களுக்கு எடுத்துக் கூறினார். அதே நேரத்தில் அவர் ஓர் உண்மையான கிறித்தவராக நடந்து கொண்டார். கி.பி. 1402ஆம் ஆண்டில் பிராக் நகரிலுள்ள பெத்லஹேம் திருக்கோயிலின் (Bethlehem Chapel) சமய போதகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கும் மற்ற இடங்களிலும் அவர் செய்த சொற்பொழிவுகளும் கருத்துரைகளும் பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தன. கி.பி. 1403ஆம் ஆண்டில் பிராக் பல்கலைக் கழகத்தின் தத்துவம் மற்றும் மதத்துறையின் தலைவராக நியமிக்கப் பட்டார். அங்கும் மாணவர்களிடையே அறிவுப் பிரச்சாரம் செய்தார். மேடைகளிலும் அவர் எழுதிய புத்தகங்களிலும் வெளியிடப் பட்ட கருத்துகள் அவருடைய புகழ் திக்கெட்டும் பரவ உதவின. கி.பி. 1409ஆம் ஆண்டில் பிராக் பல்கலைக் கழகத்தின் முகவராக நியமிக்கப்பட்டார். அதற்கடுத்த ஆண்டு ஹஸ்ஸின் முன்னோடியாகிய ஜான் விக்ளிஃப்பின் பல புத்தகங்கள் கொளுத்தப்பட்டன. அதே நேரத்தில் ஹஸ் 'மதவிலக்கம்' செய்யப்பட்டார். ஆனால் இதற்குப் பொது மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்; பிராக் பல்கலைக்கழகமும் இதனை வன்மையாகக் கண்டித்தது.

போப் இருபத்து மூன்றாம் ஜான், நேபிள்சின் அரசரை எதிர்த்துச் செய்யும் போர்ச் செலவுக்காகப் பாவமன்னிப்புச் சீட்டுகளை (Sale of Indulgences) விற்கும் வேலையை விரைவு படுத்தினார். ஹஸ் இதைக் கடுமையாக எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். ஹஸ் பிராக் நகரில் வாழக்கூடாதெனப் போப் தடை விதித்தார். எனவே அவர் கி.பி. 1412ஆம் ஆண்டில் அந் நகரை விட்டுச் சென்றார்.

ஹஸ் தன் நண்பர்களின் வீடுகளில் வாழ்ந்து வரும்போது பல புத்தகங்களை எழுதினர். அவற்றுள் 'பதவிகள் விற்பது பற்றி' (On Simory), திருச்சபையைப் பற்றி (On the Church) என்ற புத்தகங்கள் புகழ் வாய்ந்தவையாகும். இவை திருச்சபையிலுள்ள குறைகள் எல்லாவற்றையும் மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறின. டி - இக்ளிசியா (De - Ecclesia) என்ற புத்தகம் அவருடைய தத்துவத்தை விளக்கும் அரிய நூலாகும்.

கி.பி. 1414ஆம் ஆண்டில் கான்ஸ்டன்ஸ் நகரில் கிறித்தவ மாநாடு கூட்டப்பட்டது. அங்கு ஹஸ் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அங்கு அவர் சென்ற போது உடனே கைது செய்யப்பட்டார். அவர் மீது முப்பத்தொன்பது குற்றங்கள் சாட்டப்பட்டன. அவற்றுள் சிலவற்றை அவர் ஒப்புக் கொண்டாலும் பலவற்றை மறுத்தார். ஆனால் அவருடைய விளக்கத்தை நீதி மன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. கி.பி. 1415ஆம் ஆண்டு ஹஸ் மரண தண்டனை விதிக்கப்பட்டுக் கொளுத்தப்பட்டார். அவருடைய சாம்பல் ரைன் நதியில் வீசியெறியப்பட்டது. இவை அனைத்தும் புனித உரோமானியப் பேரரசர் சிகிஸ்மண்டின் எதிரிலேயே செய்யப்பட்டன.

இவர்களைத் தவிர ராஜர் பேக்கன் (Roger Bacon) என்ற ஆங்கிலக் கிறித்தவ மதப் பெரியார் கிறித்தவ மதத்தில் குறிப்பாக கிறித்தவ மதக் கல்வியில் செய்ய வேண்டிய மாறுதல்களைப் பற்றி உரோமிலுள்ள தலைமைப் போப்புக்கே பல ஆலோசனைகளை வழங்கினர். அவர், ஆக்ஸ்போர்டு, பாரிஸ் போன்ற பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். சிறந்த கிறித்தவமதக் கல்வியாளராகவும், சிந்தனையாளராகவும், தத்துவமேதையாகவும், அறிவியல் அறிஞராகவும் விளங்கினர். அறிவியல் அடிப்படையிலான கிறித்தவக் கல்வியை மக்களுக்குப் புகட்டவேண்டுமென்பது அவருடைய கொள்கையாகும். இவர் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராவார்.

ஆல்பெர்டஸ் மாக்னஸ் (Albertus Magnus) என்பவர் மற்றொரு சிறந்த கிறித்தவ மதக் கல்வியாளராவார். இவரும் பாரிஸ் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்தார். அனைவரும் கிரேக்க அறிஞர் அரிஸ்டாடிலின் நூல்களைக் கற்று தெளியவேண்டுமெனப் பிரச்சாரம் செய்தார். அரிஸ்டாடிலின் சில கொள்கைகளுக்குத் திருச்சபை எதிர்ப்பு தெரிவித்தாலும் அவ்வெதிர்ப்பு பின்னர் மறைந்தது. மேக்னசுக்குப் பல புகழ்வாய்ந்த மாணவர்கள் இருந்தார்கள். அவர்கள் அவருடைய கருத்துகளை ஐரோப்பா முழுவதும் பரப்பி

ஞர்கள். இவரும் கி. பி. 13ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலேயே வாழ்ந்தவராவார்.

மேக்னசின் மாணவர்களுள் தாமஸ் அக்வினஸ் (St. Thomas Aquinas) குறிப்பிடத் தகுந்தவர். இவர் வெளியிட்ட சும்மா தியாலாஜிகா (Summa theologica) என்ற புத்தகத்தில் கிறித்தவ மதக் கருத்துகள், உயர்ந்த தத்துவங்கள், உளவியல் கருத்துகள், உயர்ந்த நீதிகள் மற்றும் அறிவியல் விளக்கங்கள் போன்ற பல்வேறு விதமான நுண்ணிய கருத்துகளை விளக்கியுள்ளார். இந்நூல் மிகச் சிறந்த கல்விக் கருவூலமாகக் கருதப்படுகின்றது.

**இத்தாலியில் மறுமலர்ச்சி இயக்கம்**

இடைக்காலத்தின் இறுதியில் ஐரோப்பிய மக்களின் எண்ணங்கள், கருத்துகள், செயல்கள் மற்றும் அவர்களால் உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், கலைப் பொருள்கள் முதலிய வற்றில் மாறுதலும் புதியதோற்றமும் ஏற்பட்டன. இத்தகைய புத்துயிர் அளிக்கும் புதியதோர் இயக்கத்திற்கு மறுமலர்ச்சி (Renaissance) என்று பெயர். முதலில் கிரேக்க மொழியிலும் இலத்தீன் மொழியிலும் ஏற்பட்ட புதிய இலக்கியப் படைப்பு களுக்கும், கருத்துகளின் வளர்ச்சிக்குமே மறுமலர்ச்சி ஏற்பட்ட தென்றாலும் பின்னர் அது ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் கி.பி. 15, 16ஆம் நூற்றுண்டுகளில் தொடர்ந்து பல மாறுதல்களை ஏற்படுத்தியது. இடைக்காலத்தில் கிறித்தவ மதத்தின் தெய்விக நெறிமுறைகளுக்கும், திருச்சபையின் கடுமையான சில கட்டுப் பாடுகளுக்கும் மக்கள் கட்டுப்பட்டு ஒரு வகையான அடிமை வாழ்க்கையையே நடத்தி வந்தனர். ஆனால் ஜான்விக்ளிஃபின் கருத்துகள் ஐரோப்பாவில் பரவப்பரவ, ஜான் ஹஸின் பகுத்தறிவுப் பிரச்சாரம் வலுப்பெற்றதோடு, திருச்சபையில் ஏற்பட்ட 'பெரும் சமயப்பிளவு' மக்களுடைய வாழ்க்கைப் பாதையிலும் எண்ணங் களிலும் கருத்துகளிலும் குறிப்பிடத் தகுந்த திருப்பம் ஏற்பட்டது. அதன் விளைவாகத்தான் ஐரோப்பிய மக்கள், குறிப்பாக இத்தாலியக் கவிஞர்களும் கலைஞர்களும் தாங்கள் எண்ணியவற்றையும் பார்த்த வற்றையும் அப்படியே கலைக் கருவூலங்களாக உருவாக்கினர்கள். அவர்கள் எந்தெந்தத் துறையில் எத்தகைய புத்துயிரை அளித் தார்கள் என்பதை நாம் அறிதல் வேண்டும்.

**இலக்கியத் துறையில் மறுமலர்ச்சி**

இத்தாலியில் வாழ்ந்த தர்ந்தே, பெட்ரார்க், பொக்காஷியோ முதலானோர் இலத்தீன், மற்றும் கிரேக்க மொழிகளின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டனர். மேலும் கிழக்கு உரோமானியப் பேரரசுக்கு

கி.பி. 15ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் துருக்கியர்களால் பேராபத்து ஏற்பட்ட போது பல கிரேக்க அறிஞர்கள் இத்தாலியில் குடியேறிக் கிரேக்க மொழியும் இலக்கியங்களும் அந் நாட்டில் பரவுவதற்கு உதவினுர்கள். அத்தகைய உதவியுடன் தான் கீழ்க்கண்ட அறிஞர்கள் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வழி வகுத்தார்கள்.

**தாந்தே (Dante)**

ஃபிளாரன்ஸ் (Florence) நகரத்தைச் சேர்ந்த தாந்தே இத்தாலியக் கவிஞர்களுள் தலைசிறந்தவராவார். மறுமலர்ச்சி இயக்கம் தோன்றுவதற்கு முன்னரே இவர் வாழ்ந்தாரென்றுலும் (கி.பி. 1265 – 1321) இத்தாலிய இலக்கிய மறுமலர்ச்சிக்குத் தாந்தேயே தொடக்கவிழா நடத்தியவராவார். ஏழைக் குடும் பத்தில் தாந்தே பிறந்தாலும், பொலொஞு, பாத்வா ஆகிய பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி கற்று இலத்தீன் மொழியில் தேர்ச்சியும், கிறித்தவ மதத்துறைப் படிப்பில் ஆழ்ந்த அறிவும் பெற்றுர். அவர் முதலில் எழுதிய இரண்டு சிறப்புமிக்க நூல்களில் (De Monarchia, De Vulgari Eloquentia) புனித உரோமானியப் பேரரசு போன்ற அரசியல் அமைப்பின் மேன்மைகளையும், தாய் மொழியையே எல்லா நிலைகளிலும் பயன்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் விளக்கியுள்ளார்.

தாந்தே எழுதிய நூல்கள் எல்லாவற்றையும் விடத் தெய்விக இன்பியல் (Divine Comedy) என்ற நூலே அவருடைய பெருமை யையும் புகழையும் பார்முழுவதும் பரப்பியது. செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட இந் நூலில் கற்பனை மெருகோடு, நரகம், பாவம் களையுமிடம், சுவர்க்கம் (Hell, Purgatory and Paradise) ஆகிய இடங்களுக்குத் தாந்தேயே யாத்திரை செய்வது போலவும், நரகத்தில் பாவம் செய்த பாவிகள் அனுபவிக்கும் பயங்கரமான துன்பங்கள் பற்றியும், பாவம் களையுமிடத்தில் இறந்தவரின் ஆன் மாக்கள் பாவங்களிலிருந்து விடுதலை பெறுவது பற்றியும், சொர்க் கத்தில் புண்ணியவான்களும் இறைவனும் எங்ஙனம் இனிய உலகில் வாழ்கிறுர்களென்பது பற்றியும் படிப்போர் உள்ளத்தைக் கவருகின்ற முறையில் எழுதியுள்ளார். இந் நூலில் அவர் விளக்கி யுள்ள உயர்ந்த கருத்துகள், தத்துவம் மற்றும் மதத் துறைகளுக்கு இலக்கணமாக அமைந்திருக்கின்றன. இந் நூல் இத்தாலியர் களிடையே புதிய எண்ணங்களையும் உணர்வுகளையும் ஏற்படுத்தியது.

**பெட்ராரக் (கி.பி. 1304 – 1374)**

இத்தாலியில் வாழ்ந்த மனித நலப் பற்றுளர்களுக்கெல்லாம் தந்தையாக (Father of Humanists) விளங்கிய பெட்ரார்க் தாந் தேவைப் போலவே பொலொனு, பாத்வா ஆகிய இத்தாலியப் பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி கற்றார். இவரும் ஃபிளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்தவரேயாவார். இலத்தீன் மொழியின் வளர்ச்சியில் பேரார்வம் காட்டினார். அவர் ஐரோப்பாக் கண்டத்தின் பல மடாலய நூலகங்களில் கேட்பாரற்றுக் கிடந்த இலத்தீன் எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகளைத் தேடி யெடுத்துப் பாதுகாத்து வெளியிட்டார். உரோமானியக் கவிஞர் சிசரோவின் (Cicero) இலக்கியப் படைப்புகளை ஒன்று திரட்டி வெளியிட்டு இத்தாலியர்கள் இலத்தீன் மொழியின் பழம் பெருமை யையும் கருத்துக் கருவூலங்களையும் உணரச் செய்தார். உரோ முக்கும் கார்த்தேஜுக்கும் நடைபெற்ற இரண்டாவது பியுனிக் போரில், கி.மு. 202ஆம் ஆண்டில் நடந்த சாமா (Zama) போர்க் களத்தில் ஹான்னிபாலைத் தோற்கடித்த உரோமானியப் படைத் தளபதி சிபியோ ஆஃப்ரிகானஸ் (Scipio Africanus) என்பவரின் வாழ்க்கை வரலாற்றையும் வெற்றிகளையும் ‘ஆப்பிரிக்கா’ (Africa) என்ற நூலில் பெட்ரார்க் விவரிக்கின்றார். இது இத்தாலியரின் பழம் பெருமையை மக்களுக்கு உணர்த்தியது. இது செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட சிறந்த காவியமாகும். பெட்ரார்க், தான் பெரிதும் போற்றிப் புகழ்ந்த சில நாத்திக எழுத்தாளர் களுக்கு எழுதிய கடிதங்களைத் தொகுத்து ‘அறிமுகமான கடிதங்கள்’ (Familiar Letters) என்ற தலைப்பில் வெளியிட்டார். இவை அவருடைய கொள்கைகளை அறிந்து கொள்வதற்குப் பயன் பட்டன. கிரேக்க மொழியையும் அவர் நன்கு கற்க முடியவில்லை யாயினும் அம் மொழியையும் கற்க வேண்டியதன் அவசியத்தை அவர் தன் நாட்டு மக்களுக்கு உணர்த்தினார்.

பெட்ரார்க் கிறித்தவ மதப்பற்று மிகுந்தவரோ அல்லது அம் மதத்தை வெறுத்தவரோ அல்லர். எனினும், ஆவிஞனில் செயல் பட்டுவந்த திருச்சபை உடனடியாக உரோமுக்கு மாற்றப்பட வேண்டுமெனப் பிரச்சாரம் செய்தார். பெட்ரார்க் அகஸ்டைன் முனிவருடன் நடத்திய கற்பனை உரையாடலை ‘இரகசியம்’ (Secret) என்ற நூல்வடிவில் வெளியிட்டார். இது அவர் மனத்தி னுள் ஏற்பட்ட ஆன்மிகப் போராட்டத்தின் விளைவாக உருவாகிய நூலாகும். மனித வாழ்க்கையில் மனிதன் எல்லா உலக இன்பங் களையும் துய்க்கவேண்டுமா அல்லது உடலை வருத்தித் துறவு வாழ்க்கை வாழ வேண்டுமா என அவர் ஐயுற்றார். இவருடைய பகுத்தறிவுக் கருத்துகளும், தெள்ளிய இத்தாலிய மொழியில் அவர்

தந்த விளக்கங்களும் நூற்றுக்கணக்கான மாணவர்களை அவர்பால் இழுத்தன. அவர்கள் நாடு முழுவதும் பின்னர் அறிவுப் பிரச்சாரம் செய்தனர்.

### பொக்காஷியோ (கி.பி. 1313–1375)

பெட்ரார்க்கின் மாணவர்களுள் தலையாயவர் பொக்காஷியோ ((Boccaccio) ஆவார். இவர் எழுதிய 'டெக்கமெரான்'(Decameron) என்ற நூலில், பல சுவையான கதைகள் உள்ளன. ஃபிளாரன்ஸ் நகரில் ஒருமுறை பிளேக்நோய் பரவியபோது, அந்நகரை விட்டுச் சென்று, நகரத்துக்குச் சில மைல்களுக்கப்பால் சீமான்களும் சீமாட்டிகளும் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்ட கதைகளின் தொகுப்பே இந்நூலாகும். இக் கதைகளின் பாணியிலேதான் ஆங்கிலக் கவிஞர் சாசர் (Chaucer) 'காண்டர்பரிக் கதைகள்' (Canterbury Tales) என்ற நூலை எழுதினர். பொக்காஷியோ கிரேக்க மொழியைக் கற்று அம் மொழியிலுள்ள இலக்கியங்களைப் படித்தறிந்தார். இவரைப் பின்பற்றி மற்ற இத்தாலிய அறிஞர்களும் கிரேக்க மொழியைக் கற்றுப் பயன் பெற்றனர்.

### அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படுதல்

கி.பி. 15ஆம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் ஜெர்மனியிலுள்ள மெய்ன்ஸ் (Mainz) நகரத்தைச் சேர்ந்த கூடன்பெர்க் (Gutenberg) என்பவரால் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப் பட்டது. கி.பி. 1455ஆம் ஆண்டில் முதன் முறையாகக் கிறித்தவர்களின் விவிலிய நூல் இலத்தீன் மொழியில் அச்சிடப்பட்டது. கி.பி. 1465ஆம் ஆண்டில் இத்தாலியில் அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது. பின்னர் ஒரு சில ஆண்டுகளுக்குள் மேலே குறிப்பிடப்பட்ட இத்தாலிய இலக்கிய மேதைகளின் நூல்கள் பெரும் எண்ணிக்கையில் அச்சிடப்பட்டு ஐரோப்பா முழுவதும் விநியோகிக்கப்பட்டன. அதே வேகத்தில் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் மறுமலர்ச்சி இயக்கம் பரவியது.

### கலைகளில் மறுமலர்ச்சி

இத்தாலியில் இலக்கியத் துறையில் மட்டுமேயன்றிக் கட்டடக் கலை, சிற்பம், ஓவியம், இசை போன்ற நுண்கலைகளிலும் புதிய பாணிகளும் தோற்றங்களும் பின்பற்றப்பட்டன. இத் துறைகளுக்குப் புத்துயிரும் மெருகும் ஊட்டியவர்களுள் லியனர்டோ-டா வின்சி (Leonardo-da-Vinci–1452–1519A.D), மைக்கேல் ஆஞ்சிலோ (Michelangelo 1475–1564 A.D), ராஃபெல் (Raphael–1483–1520 A.D), மற்றும் பொட்டிச் செல்லி (Botticelli), டிடியன்

(Titian), பிராமென்டி (Bramante), பெர்னினி (Bernini) போன்றவர்கள் முக்கியமானவர்களாவர்.

**லியனுர்டோ–டா–வின்சி**

இவர் பல கலைகளிலும் வல்லுநர் ஆவார். சிறந்த ஓவியராகவும், சிற்பியாகவும், பொறியியல் நிபுணராகவும், மருத்துவராகவும் விஞ்ஞானியாகவும், சிந்தனையாளராகவும் லியனுர்டோ விளங்கினுர். அவர் வரைந்த வண்ண ஓவியங்கள் ஃபிளாரன்ஸை அழகு படுத்துகின்றன. லியனுர்டோ வரைந்த ஓவியங்களுள் சாகா வரம் பெற்றது, 'இயேசுவின் இறுதி உணவு' என்ற ஓவியமாகும். நம் உடம்பிலுள்ள இரத்தம் உடல் முழுவதும் சுற்றி வருகின்றது என்ற உண்மையை முதல் முதல் கண்டுபிடித்தவர் லியனுர்டோ ஆவார். இன்று விண்ணில் பறக்கும் விமானங்கள் எந்தத் தத்துவத்தின் அடிப்படையில் பறக்கின்றன என்பதையும் அன்றே அவர் அறிந்திருந்தார். அவர் அறியாத கலையில்லை; அவர் கரம் படாத இடம் இல்லை. அவர் பிறப்பால் இத்தாலி பெருமை பெற்றது.

**மைக்கேல் ஆஞ்சிலோ**

இவர் சிறந்த ஓவியராகவும், சிற்பியாகவும், கட்டடக்கலைஞராகவும் விளங்கினுர். இவர் வரைந்த சுவரோவியங்கள் இன்றும் வாடிகனில் உள்ள 'சிஸ்டைன் தேவாலயத்தை' (Sistine Chapel) அழகுபடுத்துகின்றன. அவற்றுள் 'இறுதித் தீர்ப்பு' (Last Judgement) என்ற ஓவியம் மிகவும் புகழ்வாய்ந்ததாகும். மேலும், உரோமிலுள்ள கம்பீரமான பீடர் முனிவரின் தேவாலயம் (St. Peters' Cathedral) மைக்கேல் ஆஞ்சிலோவின் திட்டப்படி கட்டப்பட்டதாகும். தூய்மையான சலவைக் கற்களில் சிற்பங்களை வடிப்பதிலும் இவர் வல்லவராக விளங்கினுர்.

**இராஃபெல்**

இவரும் சிறந்த ஓவியராகவும் கட்டடக்கலைஞராகவும் விளங்கினுர். பீடர் முனிவர் தேவாலயம் உருவாவதற்கு மைக்கேலுடன் பணியாற்றியவர்களுள் இவரும் ஒருவராவார். வாடிகன் அரண்மனையினுள் பல அறைகளில் தீட்டப்பட்ட ஓவியங்கள் இராஃபெல்லின் கை வண்ணமேயாகும். எல்லாவற்றையும் விட இவர் தீட்டிய மேரி அன்னையின் ஓவியங்களே மிகவும் புகழ்வாய்ந்தவையாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட கவிஞர்களும் கலைஞர்களும் ஃபிளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்தவர்களாவர். எனவேதான்

இத்தாலியில் ஃபிளாரன்ஸ் நகரமே மறுமலர்ச்சி இயக்கத்தின் பிறப்பிடமாகக் கருதப்படுகின்றது. இத்தாலியின் பல்வேறு நகரங்களில் ஓவியம், சிற்பம் முதலான நுண்கலைப் பள்ளிகளும் நடத்தப் பட்டன.

### மற்ற நாடுகளில் மறுமலர்ச்சி இயக்கம்

இத்தாலியைத் தவிர வேறு பல ஐரோப்பிய நாடுகளிலும் கி. பி. 15, 16ஆம் நூற்றுண்டுகளில் இலக்கியம், விஞ்ஞானம் மற்றும் கலைத்துறைகளில் புதிய படைப்புகளும், பாணிகளும் பின் பற்றப்பட்டு மறுமலர்ச்சி இயக்கம் வேகமாகப் பரவியது. அவைகளைப் பற்றியும் இங்கு விவரிப்பதாயின் நவீன கால வரலாற்றில் ஊடுருவுவதாகிவிடும். எனவே, அவை பற்றிய விளக்கங்களை நவீன கால வரலாற்றைப் பற்றிய நூல்களில் காண வேண்டும்.

# 19. கொள்ளை நோய்

கி.பி. 14ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கொள்ளை நோய் என்று சொல்லப்பட்ட கொடுமையான வியாதி ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் பரவி பெரும் இழப்பை உண்டாக்கியது. இது ஒருவகையான பயங்கர பிளேக் (Plague) என்று கருதப்படு கிறது. இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், இரண்டு அல்லது மூன்று நாள்களுக்குள் இறந்துவிடுவர். கொள்ளை நோயினால் தாக்கப்பட்டவரின் உடல் உடனடியாகக் கருமை நிறமாக மாறி விடும்; உடல், முழுவதும் கருமையான, பார்ப்பதற்கு அருவெறுப் பான, கொப்புளங்கள் தோன்றும்; தீயினால் சுடுவது போன்ற எரிச் சலும், தணியாத தாகமும், நாக்கில் வரட்சியும் ஏற்படும். இவற்றைத் தொடர்ந்து கடுமையான காய்ச்சலும், நுரையீரல்களில் கட்டிகளும் வந்து பெருமளவு இரத்தம் வெளியேற்றப்படும். அடுத்த சிலமணி நேரத்திற்குள் இந் நோயினால் தாக்கப்பட்டவர் இறப்பது உறுதி. இவ்வளவு கொடுமையான இக் கொள்ளை நோய் ஐரோப்பிய நாடுகளில் கி.பி. 1348ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1351ஆம் ஆண்டுவரை பரவி மக்களிடையே பெரும் அச்சத்தை உண்டாக்கியது.

முதலில் இக் கொடு நோய் கி.பி. 1333 – 1348ஆம் ஆண்டு களுக்கிடையே சீனாவில்தான் தோன்றியது. அவ்வாண்டுகளில் அந் நாட்டில் வரட்சியும், பஞ்சமும், நில அதிர்ச்சிகளும் பின்னர் வெள்ளப் பெருக்கங்களும் ஏற்பட்டுச் சொல்லிமுடியாத இழப்புகளை உண்டாக்கின. அதன் பின்னரே கொள்ளைநோய் ஐரோப்பா விற்குப் பரவியதாகக் கருதப்படுகிறது.

இவ்வளவு கொடுமையான நோய் தோன்றக் காரணம் என்ன என்பதை அறிவியல் மற்றும் மருத்துவத்துறை அறிஞர்களாலும் திட்டவட்டமாகச் சொல்ல இயலவில்லை. எனினும், நில அதிர்ச்சி களினால் வெளியேற்றப்பட்ட பயங்கரமான நச்சுக்காற்று

மக்களுடைய சுவாச உறுப்புகளைத் தாக்கி உடனடி விளைவுகளைத் தோற்றுவித்ததென அவர்கள் கருதுகின்றனர். அதுபோலவே அந் நில அதிர்ச்சிகளின் விளைவாகக் குடிக்கும் தண்ணீரில் நச்சுக் கிருமிகள் பரவிக் கொள்ளைநோய் பரவுவதற்குக் காரணமாய் இருந் திருக்கக் கூடுமென அவர்கள் நம்புகின்றனர். கொள்ளைநோய் வருவதற்குக் காரணம் எதுவாயினும் அதன் விளைவுகள்தாம் பயங்கரமானவையாக இருந்தன.

பதினான்காம் நூற்றாண்டில் சீனாவுக்கும் ஐரோப்பிய நாடு களுக்குமிடையே நிலவழி வாணிகம் பெருமளவு நடைபெற்று வந்தது. நூற்றுக்கணக்கான ஐரோப்பிய வணிகர்கள் சீனாவுக்கு வந்து சென்றார்கள். இவர்கள் மீண்டும் தாயகம் திரும்பும் போது அவர்கள் மூலமாகச் சீனாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு இக் கொள்ளை நோய் பரவியதாகவும் வேறுபல வரலாற்றாசியர்கள் கருதுகின்றனர். இக் கூற்றை உறுதி செய்யும் வண்ணம் ஐரோப் பாவில் முதன் முதலில் கருங்கடலின் வட பகுதியில் இந் நோய் தோன்றியது; அங்கிருந்து கான்ஸ்டான்டி நோபிளிலிலும் பின்னர் இத்தாலியிலும் பரவியது; அதைத் தொடர்ந்து ஜெர்மனி, ஃபிரான்சு, இங்கிலாந்து, சுவீடன் முதலிய நாடுகளில் பரவிப் பின்னர் ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றையும் இக் கொள்ளை நோய் தாக்கியது. அதனால் இலக்கக் கணக்கான மக்கள் உயிரிழந்தனர். சீனாவில் ஒருகோடியே முப்பது இலக்கம் மக்களும், மற்ற ஆசிய நாடுகளில் இரண்டு கோடியே நாற்பது இலக்கம் மக்களும் கொள்ளை நோய்க்குப் பலியாயினர். ஐரோப் பாவில் இருந்த பதினைந்து முக்கிய நகரங்களில் மூன்று இலக்கம் மக்களும், ஜெர்மனியில் மட்டும் பன்னிரண்டு இலக்கம் மக்களும் மாண்டனர், இத்தாலியில் அதன் மக்கள் தொகையில் பாதிப்பேர் உயிரிழந்தனர்; கி.பி. 14ஆம் நூற்றாண்டில் இந் நோயினால் இறந்தவரின் எண்ணிக்கை ஐரோப்பாவில் மட்டும் சுமார் இரண் டரைக் கோடி இருக்குமெனக் கணக்கிடப்பட்டது.

ஐரோப்பாவில் எங்கு பார்த்தாலும் பிணக்குவியல்கள் காணப் பட்டன; காற்று துர்நாற்றமடைந்து நச்சுக் கிருமிகள் பரவின. மருத்துவ வசதிகள் அதிகமில்லாத அக் காலத்தில் இந் நோய் பல இடங்களில் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. பிணங்கள் எறிக்கப்படாமல் நதிகளில் வீசப் பட்டன. ஐரோப்பிய ஆறுகள் இலக்கக் கணக்கான பிணங்களை அடித்துச் சென்று மத்தியதரைக்கடல், கருங்கடல், மற்றும் வட கடல் போன்ற கடல்களில் நிரப்பின; இக் கடல்களில் பிணங்கள் மிதந்து கொண்டிருந்த காட்சி கோரக்காட்சியாக இருந்தது.

மக்கள் செய்கின்ற பாவங்களினாலேயே இத்தகைய கொடுமை இவ்வுலகில் நடக்கின்றது எனச் சில சமயவாதிகள் நம்பினர். அதனால் அங்கேரி, ஜெர்மனி போன்ற நாடுகளில் பிறருடைய பாவங்களைக் களைவதற்காகத் தங்கள் உடலை வருத்தி இறைவனின் மன்னிப்பைக் கோரிய ஃபிளாஜிலெண்ட்கள் (Flagellants) என்னும் இயக்கத்தினர் தோன்றினர். இவர்கள் பின்னர் போலந்து, பொஹிமியா, சைலீஷியா, ஃபிளாண்டர்ஸ் போன்ற பகுதிகளிலும் பரவித் தங்கள் தொண்டில் தொடர்ந்து ஈடுபட்டனர்.

இக் கொள்ளை நோய்க்குக் காரணம் யூதர்களே எனப் பல கிறித்தவர்கள் கருதினார்கள். குடி தண்ணீருக்காகப் பயன் படுத்தப்பட்ட பொதுக் கிணறுகளிலும், குளங்களிலும் நதிகளிலும் யூதர்கள் நஞ்சைக் கலந்து விட்டார்கள் எனக் கிறித்தவர்கள் நம்பினார்கள். அதனால் ஐரோப்பா முழுவதும் கிறித்தவர்கள் யூதர்களைத் துன்புறுத்தினார்கள்; அந்த இனத்தையே அழித்துவிட வேண்டும் என அவர்கள் தீர்மானித்தார்கள். எனவே ஆயிரக் கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டார்கள்; மெய்ன்ஸ் (Mayence) நகரத்தில் மட்டும் பன்னிரண்டாயிரம் யூதர்கள் கொலை செய்யப் பட்டார்கள். கிறித்தவர்கள் யூதர்களைத் தீயிலிட்டும் சித்தரவதை செய்தும் கொலை செய்தனர். இத்தகைய கொடுமையிலிருந்து தப்புவதற்கு ஆயிரக்கணக்கான யூதர்கள் கூட்டம் கூட்டமாகத் தங்களைத் தாங்களே தீயிலிட்டுக் கொண்டு உயிரிழந்தனர்.

ஐரோப்பாவில் ஏற்பட்ட இழப்புகளையும் விளைவுகளையும் விட இங்கிலாந்தில்தான் இக் கொள்ளை நோய் பெரும் இழப்பையும் பல விளைவுகளையும் உண்டாக்கியது.

**இங்கிலாந்தில் கொள்ளை நோய்**

இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் நூறாண்டுப்போர் நடை பெறும்போது கி பி. 1347ஆம் ஆண்டிலிருந்து 1350ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தில் இக் கொள்ளைநோய் பரவியதால் அந் நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் அந் நோய்க்கு இரையாயினர். அதனால் இங்கிலாந்தின் வரலாற்றில் மிக முக்கிய மான விளைவுகளும் ஏற்பட்டன.

மூன்றாம் எட்வர்ட் (ஆட்சி : கி.பி. 1327-1377) இங்கிலாந்தின் அரசராக இருந்த பொழுது இக் கொள்ளை நோய் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து இங்கிலாந்துக்குப் பரவியது. தோன்றிய இடத்தில் அதிக இழப்பு ஏற்படவில்லையாயினும் பரவிய இடத்தில் பெரும் இழப்பு ஏற்பட்டது. இது இங்கிலாந்தின்

எல்லாப் பகுதிகளிலும் பரவியது. ஏறக்குறைய நான்காண்டுகள் அத் தீவு சொல்லொணுத் துயரில் ஆழ்ந்தது. நார்விச் என்ற கிறித்தவ மாவட்டத்தில் (Diocese of Norwich) மட்டும், அங்கிருந்த குருமார்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் இறந்து விட்டனர். ஆல்பன்ஸ் முனிவரின் (St. Albans) மடாலயத்திலிருந்த அறுபது துறவிகளில், நாற்பத்தேழு துறவிகளும் இந் நோய்க்குப் பலியாயினர். கற்றறிந்த, தூய்மையாக இருக்கும் கிறித்தவத் துறவிகளுக்கே இக் கதியென்ருல், கல்வியறிவு இல்லாத, சுத்தமில்லாத ஏழைகள் வாழும் கிராமப்புறங்களிலும், மக்கள் தொகை மிகுந்த நகரங்களிலும் இந் நோயின் கொடுமை எங்ஙனம் இருந்திருக்குமென்பதை விளக்க வேண்டியதில்லை. தொண்டு செய்யும் கிறித்தவத் துறவிகள் பெரும்பாலும் இறந்துவிட்டனர். மருத்துவச் சிகிச்சை அளிக்கக் கூடத் தகுதியும் பயிற்சியும் பெற்ற ஆள்கள் இல்லை. இறந்தவர்களைப் புதைக்கவோ எரிக்கவோகூட இடமும் தேவையான எரிபொருளும் கிடைக்கவில்லை. இந் நோயினுல் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்கேட்டைச் செம்மைப்படுத்த அடுத்த ஐம்பது ஆண்டுகள் பிடித்தன. இதனுல் ஏற்பட்ட விளைவுகள் இங்கிலாந்தின் வரலாற்றை மாற்றியமைத்தன.

நூருண்டுப் போரில் ஈடுபட்ட மூன்ரும் எட்வர்ட் கிரெசி வெற்றிக்குப் (1346) பின்னர் உடனடியாகத் தொடர்ந்து போரை நடத்த முடியவில்லை. அதற்கடுத்த ஆண்டே கொள்ளை நோய் இங்கிலாந்தைத் தாக்க ஆரம்பித்தது. அவ்வெற்றிக்குப் பிறகு பத்து ஆண்டுகள் அவரால் போரிலே ஈடுபட முடியவில்லை. ஒரு வேளை இக் கொடிய நோய் இங்கிலாந்தைப் பீடிக்காமல் இருந்திருந்தால் ஃபிரான்சு முழுவதையும் மூன்ரும் எட்வர்ட் வென்றிருக்கக் கூடும். இங்கிலாந்து கி.பி. 14ஆம் நூற்ருண்டிலேயே மிகப்பெரிய வல்லரசாக மாறியிருந்திருக்கும். இதைவிட அடுத்த சில ஆண்டுகளுக்குள் நிகழ்ந்த உழவர் கலகமே இந் நோயின் மிக முக்கியமான விளைவாகும்.

**உழவர் கலகம் (Peasants' Revolt) கி.பி. 1381**

இங்கிலாந்தை வென்ற நார்மானியர்கள் அந் நாட்டில் நில மானிய முறையைப் புகுத்தினர். அம் முறை அந்நாட்டில் நிலச் சார்பு அடிமை ஊழியரை உருவாக்கியது. காலப் போக்கில் அவ் வடிமை ஊழியரின் நிலை இரக்கத்துக்குரியதாக இருந்தது. 'அடிமைகள்' இனம் என்று ஒரு பெரும் வருக்கமே உருவாகி விட்டது. அவர்கள் நிரந்தரமாகப் பிரபுக்களிடம் அடிமை வேலை செய்து அப் பிரபுக்களின் நிலத்திலேயே தங்கவேண்டியிருந்தது. ஒரு வாரத்தில் குறைந்தது ஐந்து அல்லது ஆறு நாள்கள் நிலத்

தில் உழைக்க வேண்டியிருந்தது. சில நேரங்களில் அடிமைகளின் வேலையில் குறைபாடுகள் இருந்தாலோ, பிரபுவின் விருப்பு வெறுப்புகளுக்குத் தகுந்தமுறையில் அடிமைகள் நடந்துகொள்ளா விட்டாலோ அவர்களைப் பிரபு வேலையிலிருந்து நீக்கிவிடுவார். எனவே, பிரபுவின் நல்லெண்ணத்தைப் பெற அடிக்கடி அடிமைகள் பிரபுக்களுக்குச் சில பரிசுப் பொருள்களையும் தருவார்கள். கொள்ளை நோய் வருவதற்கு முன்னால் மக்கள் தொகை மிகுந்திருந்ததால் பிரபுக்களுக்கு வேலையாள்கள் வேண்டிய அளவு கிடைத்தார்கள். நிரந்தரமாகப் பிரபுக்களிடமே இருக்கின்ற அடிமைகளும் வேலையில்லாத நாள்களுக்கான பணத்தைப் பிரபுவுக்குக் கட்டித் தரவேண்டும்; அல்லது வேலை இருக்கும் போது ஓர் அடிமை வேலைசெய்ய விரும்பவில்லையென்றால் உழைப்புக்குப் பதில் பணத்தைப் பிரபுவுக்குக் கொடுத்து விடலாம். 'உழைப்பு ஈட்டுமுறை' என்று இது வழங்கப்பட்டது. இது ஒரு விதத்தில் இருதரத்தாருக்கும் பயனுள்ளதாகவே இருந்தது.

ஆனால், இக் கொடும் கொள்ளை நோய் இங்கிலாந்தின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கை, அதுவும் குறிப்பாக உழைப்பாளர் சமுதாயத்தில் மூன்றில் இரண்டு பங்கு மக்களை விழுங்கி விட்டது. அதன் விளைவாகப் பிரபுக்களின் நிலங்களில் உழைக்கவும் அறுவடை செய்யவும் தொழிலாளர்கள் கிடைக்காமல் போயினர். புதிதாகப் பயிர் செய்யவும் முடியவில்லை; விளைந்த பயிரை அறுவடை செய்யவும் ஆள்கள் கிடைக்கவில்லை. நகரங்களிலும் நாட்டுப் புறங்களிலும் தானியங்கள் கிடைக்கவில்லை. விலைகள் உயர்ந்து கொண்டே சென்றன. தொழிலாளர்களின் கூலியும் உயர்ந்து கொண்டே சென்றது.

நகரங்களைவிட நாட்டுப்புறங்களில் தொழிலாளர் கிடைக்காத பிரச்சினை பெரிதாகிவிட்டது. பிரபுக்களிடம் நிரந்தரமாக இருந்தவர்களுள் பெரும்பாலார் இறந்து விட்டனர். மற்றத்தொழிலாளர்களும் மிக அதிகமான ஊதியத்தைக் கேட்டார்கள்.

இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் பெரும் நிலப்பிரபுக்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். அவர்கள் சட்டத்தின் மூலம் விலை உயர்வையும், ஊதிய உயர்வையும் தடுத்து விடலாம் என்று எண்ணினார்கள். அவர்கள் கி.பி.1349, 1351, 1357, 1360 ஆம் ஆண்டுகளில் பல்வேறுவிதமான 'தொழிலாளர் சட்டங்களை' (Statutes of Labourers) இயற்றினார்கள். அவற்றின்படித் தொழிலாளர்கள் கி.பி. 1347 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைமுறையில் இருந்த ஊதியத்தையே பெறவேண்டுமென்றும்,

அதற்கு அதிகமாகக் கேட்கும் தொழிலாளர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்றும் அச்சுறுத்தப்பட்டார்கள். அதேபோல பிரபுக்களும் எக் காரணத்தைக் கொண்டும் கொள்ளை நோய்க்கு முன்னர் வழங்கப்பட்ட ஊதியத்தை விட அதிகமாகத் தரக்கூடா தெனவும், இவ் விதியை மீறினுல் பிரபுக்களும் சட்டப்படிக் குற்ற வாளிகள் ஆவார்களென்றும் ஆணையிடப்பட்டார்கள்.

ஆனுல், இவையெல்லாம் சட்டத்தின் மூலம் சீர்படுத்தக் கூடிய பிரச்சினைகள் அல்ல. எந்தப் பிரபுக்கள் சட்டங்களை இயற் றினுர்களோ, அதே பிரபுக்கள் அச் சட்டங்களை மீறி நடக்க ஆரம் பித்தார்கள். இரகசியமாகத் தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் கொடுத்துத் தங்கள் நிலங்களில் அறுவடை போன்ற உடனடி வேலைகளைச் செய்து கொண்டார்கள். இதைத் தடுக்க இன்னும் கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இச் சட்டங் கள் இருதரத்தாருக்கும் சாதகமாக இல்லாமல் போய்விட்டன. வேலையாள்கள் கிடைக்காததால் பிரபுக்கள் தானியங்களை விளை விப்பதை விடுத்துத் தங்கள் நிலங்களைப் புல் தரைகளாக மாற்றி ஆடுமாடுகளை வளர்க்க ஆரம்பித்தார்கள். இறந்தவர் போக இருக்கின்ற உழவர் பெருமக்கள் வேலையுமின்றிப் பட்டினிச் சாவு சாகவேண்டியிருந்தது. அவர்கள் பிரபுக்களிடம் அடிமைகளாக இருக்கவும் விரும்பவில்லை. பிரபுக்களுக்கும் உழவர்களுக்கு மிடையே மனக்கசப்பும் வெறுப்பும் வளர்ந்து கொண்டே சென்றன.

இந்தநேரத்தில் கென்ட் (Kent) நகரத்தைச் சேர்ந்த மதகுரு **ஜான்பால் (John Bal)** என்பவர் பிரபுக்களும் அடிமைகளும் என்ற இருவேறு வருக்கங்கள் இருப்பதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். அடிமைகள் எல்லா உரிமைகளையும் பெற்ருல்தான் இங்கிலாந்து முன்னேறமுடியுமென அறிவுப் பிரச்சாரம் செய்தார். அவருடைய கருத்துகள் இங்கிலாந்து முழுவதும் பரவின.

எரியும் கொள்ளியில் எண்ணெய் ஊற்றுவது போல இத் தகைய இக்கட்டான நிலையில் கி.பி. 1377 ஆம் ஆண்டில் இங் கிலாந்து அரசர், மக்கள் மீது தலைவரி (Poll Tax) விதித்தார். அதை மக்கள் எப்படியோ தாங்கிக் கொண்டனர். மீண்டும் கி.பி. 1380 ஆம் ஆண்டில் அரசர் இரண்டாம் ரிச்சர்ட் தலைவரியை விதித்தார். ஏழை எளியவர்களால் இதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வாரம் முழுவதும் பொருளீட்டி வரியாகத் தான் செலுத்த வேண்டியிருந்தது. வயிற்றைக்காயவைத்து, வரியைக் கட்டிவிட்டு அவர்களால் வாழ இருக்கமுடியவில்லை. கி.பி. 1381 ஆம் ஆண்டு உழவரின் கலகம் ஆரம்பமாகிவிட்டது.

தலைநகர் இலண்டனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் (Counties) கலகம் பயங்கரமாக நடைபெற்றது. குறிப்பாகக் கெண்ட் (Kent) மக்களாலும், கிழக்கு ஆங்கிலியா (East Anglia) பகுதியினராலும் மிகப்பயங்கரமாக கலகம் செய்யப்பட்டது. கெண்ட் கலகக்காரர்கள் வாட் டைலர் (Wat Tyler) தலைமையில் தலைநகரை நோக்கிப் புறப்பட்டார்கள். வழியில் பிரபுக்களின் பண்ணை வீடுகளையும், அடிமைகளின் பட்டியல்களையும் தீக்கிரையாக்கினர். பல வழக்கறிஞர்களைப் பிடித்துத் தூக்கிலிட்டார்கள். ஏனெனில், அவர்கள் உழவர்களின் எதிரிகளாகக் கருதப் பட்டார்கள்.

இங்கிலாந்தின் அரசர் இரண்டாம் ரிச்சர்ட் அப்பொழுது பதினாறு வயது நிரம்பிய இளைஞர். அரசாங்க அலுவல்கள் அனைத்தும் அவருடைய சிற்றப்பா ஜான் காண்ட்ஞலேயே (John Gaunt) செய்யப்பட்டு வந்தன. இந்த நேரத்தில் அவர் தலைநகரில் இல்லாமல் வடக்கே சென்று விட்டிருந்தார். அவருடைய அரண்மனையைக் கலகக்காரர்கள் தகர்த்தெரிந்தார்கள். தலைவரியைப் போடும்படி ஆலோசனை வழங்கிய கருவூலக் காப்பாளரைக் கொலைசெய்துவிட்டு, காண்டர்பரியின் தலைமை மதகுருவையும் கொலைசெய்தனர். அடிமைத்தளையிலிருந்து தங்களை விடுதலை செய்யும்படி அவர்கள் ஆர்பாட்டம் செய்தனர். எனவே, அரசர் காலம் கடத்தாது அடிமைகளை விடுதலை செய்து, இனி இங்கிலாந்தில் அடிமைத்தனம் இருக்காது என்று பிரகடனப் படுத்தினர். அரசர் எந்தச்சூழ்நிலையிலும் உழவர் குடிமக்களின் நலனுக்கே பாடுபடுவதாக உறுதியளித்தார். கலகக்காரர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர். அதன்பின்னரும் கிழக்கு மாவட்டங்களில் கலகங்கள் தொடர்ந்தன; ஆனால், அவை அடக்கப்பட்டன.

அரசர் அடிமைகளை விடுதலை செய்து ஆணையிட்டார் என்றாலும், அங்ஙனம் அவர் செய்வதற்கு உரிமையில்லையெனச் சில பிரபுக்கள் வாதிட்டனர். ஏனெனில் 'அடிமைகளும்' ஒரு வகையான சொத்து (Property) போலவே கருதப்பட்டார்கள். அந்தச் சொத்தை அவர்களிடமிருந்து பறிப்பதற்குச் சட்டப்படி அரசருக்கு அதிகாரமில்லை என்று அவர்கள் வாதிட்டார்கள். ஆனாலும் காலப்போக்கில் இங்கிலாந்தில் அடிமைத்தனம் (Serfdom) ஒழிந்தது.

பெருநிலப் பிரபுக்கள் தங்கள் நிலங்களை மேய்ச்சல் புல் தரைகளாக மாற்றி, ஆடுகளை அதிக அளவில் வளர்க்க ஆரம்

பித்தார்கள். அதனுல் இங்கிலாந்தின் கம்பளி உற்பத்திப் பெருகி உலக நாடுகளில் ஒரு முக்கியமான கம்பளி உற்பத்தி நாடாக அது உருவாயிற்று.

மேலும், பண்ணை முறை மறைந்து, எல்லாரும் சுதந்தர மக்களாக வாழத்தலைப் பட்டார்கள். இவை கொள்ளை நோயினுல் ஏற்பட்ட விளைவுகள் ஆகும்.

# 20. நூருண்டுப் போர்

## (கி.பி. 1338-1453)

**விளக்கம்**

நூருண்டுப் போர் என்ற சொற்ருெடர் சரியான பொருள் தருவதாக இல்லை. ஏனெனில், கி.பி. 14, 15ஆம் நூற்ருண்டுகளில்—அதாவது கி.பி. 1338ஆம் ஆண்டுக்கும் கி.பி. 1453ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில்—இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்குமிடையே நடைபெற்ற போர்கள் தொடர்ந்து நூருண்டுகள் நடைபெறவுமில்லை; அல்லது சரியாக ஒரு நூருண்டு காலத்தின் இடையில் மட்டுமே நடைபெறவுமில்லை. எனினும் ஏறத்தாழ நூருண்டுக் காலம் இங்கிலாந்தும் ஃபிரான்சும் பகைமை நாடுகளாக இருந்து, அடிக்கடிப் போர்களில் ஈடுபட்டனர். எனவே, இப் போர்களை எல்லாம் ஒருமுகப்படுத்தி 'நூருண்டுப்போர்' என்று வரலாற்ருசிரியர்கள் கூறுகின்றனர்.

கி.பி. 1338 ஆம் ஆண்டுக்கும் கி.பி. 1453ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட நூற்றுப்பதினுறு ஆண்டுக்காலத்தில் இங்கிலாந்தில் ஐம்பது அரசர்களும், ஃபிரான்சில் ஐந்து அரசர்களும் ஆட்சி செய்தனர். இங்கிலாந்தின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு இந்நூற்ருண்டுப் போரை இருபெரும் தோல்விக் காலங்களாகவும், இருபெரும் வெற்றிக்காலங்களாகவும் பாகுபடுத்தி வரலாற்ருசிரியர்கள் விவரிக்கின்றனர்.

**காரணங்கள்**

இங்கிலாந்து அரசர் இரண்டாம் ஹென்றி காலத்தில் ஃபிரான்சு நாட்டின் பலபகுதிகள் அவருடைய ஆட்சிக்குட்பட்டிருந்தன. ஆனல், அப் பகுதிகள் பலவற்றை ஃபிரான்சு அரசர் இரண்டாம் பிலிப் கைப்பற்றிக் கொண்டார். இங்கிலாந்தில் மூன்ரும் எட்வர்ட் ஆட்சிக்கு வந்தவுடன் அப் பகுதிகளைக்

கைப்பற்ற முனைந்தார். அதற்காகப் பல காரணங்களைக் காட்டி ஃபிரான்சு நாடு முழுவதும் தனக்கே உரித்தானதெனக் கூறினர்.

ஃபிரான்சின் தென்மேற்குப் பகுதியில் காஸ்கானி (Goscony) என்ற பகுதி இங்கிலாந்துக்குப் பரம்பரைச் சொத்தாக இருந்துவந்தது. அப் பகுதி செல்வவளம் மிக்கதாகவும், பழ வகைகள் அதிகம் உற்பத்தியாகும் நிலப்பகுதியாகவும் இருந்தது. அங்கு பெருமளவில் மது உற்பத்தி செய்யப்பட்டது. அதனுல் இங்கிலாந்துக்கு அளவிலா வாணிக வளர்ச்சியும், அதன்பயனுகப் பெருத்த இலாபமும் கிடைத்தது. அத்தகைய பகுதியை ஃபிரான்சு கைப்பற்ற விரும்பியது.

ஃபிரான்சின் வடபகுதியிலிருந்த ஃபிளாண்டர்ஸ் (Flanders) என்ற கோமகனுட்சியைச்சார்ந்த நகரங்கள் கம்பளி வாணிகத் திற்குப் புகழ் பெற்றவை. அவை இங்கிலாந்திலிருந்து கம்பளியை பெருமளவு இறக்குமதி செய்தன. இதனுல் இங்கிலாந்துக்கு நல்ல வருவாய் கிடைத்தது. நிலமானியத்திட்டத்தின் அடிப் படையில் ஃபிரான்சு அரசருக்குக் கீழாளாக இருந்த ஃபிளாண் டர்சின் கோமகன், அரசரின் ஆணைக்கேற்ப, இவ் வாணிகத்தைத் தடுக்க முயன்ருர். அப்பொழுது ஃபிளாண்டர்சில் இருந்த கம்பளி வணிகர்கள் குழப்பங்கள் விளைவித்தனர். அவர்களுக்கு இங்கிலாந்து உதவி செய்ய முன்வந்தது.

இங்கிலாந்துக்கும் ஸ்காட்லாந்துக்கும் அடிக்கடிப் போர்கள் நடைபெற்று வந்தன. முதலாம் எட்வர்ட் காலத்திலிருந்தே ஸ்காட்லாந்தை வெல்லுவதற்கு இங்கிலாந்து அரசர்கள் முயன்று வந்தனர். அக் காலத்திலெல்லாம் ஃபிரான்சு ஸ்காட்லாந்துக்கு நட்பு நாடாக இருந்து எல்லா உதவிகளையும் செய்துவந்தது. ஃபிரான்சின் இத்தகைய விரோதப் போக்கை இங்கிலாந்து அரசர்கள் வெறுத்தனர்; ஃபிரான்சின் வலிமையை ஒடுக்கி அந்த நாட்டை வெல்லத் திட்டமிட்டு வந்தனர்.

குறிப்பாக மூன்ரும் எட்வர்ட், ஃபிரான்சின் அரியணைமீது உரிமை கொண்டாடி உடனடியாகப் போரைத் துவக்கினுர்.

(அ) முதல் வெற்றிக் காலம் (கி.பி. 1338–1360).

இங்கிலாந்து அரசர் மூன்ரும் எட்வர்ட் கி.பி.1327 ஆம் ஆண் டில் அவருடைய பதினைந்தாம் வயதில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ருர். அவர் ஃபிரான்சு அரசர் நான்காம் பிலிப்பின் மகள்

**கி.பி. 1338 முதல் கி.பி. 1453 வரை இங்கிலாந்துக்கு ஏற்பட்ட இருபெரும் வெற்றிக் காலங்களையும், இரண்டு தோல்விக் காலங்களையும் காட்டும் வரைகோடு**




குறிப்பு: நூற்றாண்டுப் போர் நிகழ்ச்சிகள் அனைத்தும் ∴பிரான்சு நாட்டு நகரங்களிலேயே நடைபெற்றன.

இசபெல்லாவின் மகளுவார். ஃபிரான்சு அரசர் நான்காம் பிலிப் கி.பி 1314 ஆம் ஆண்டில் இறந்துவிட்ட பின்னர் அவருடைய மகன்கள் பத்தாம்லூயி, ஐந்தாம் பிலிப், நான்காம் சார்லஸ் ஆகியோர் அடுத்தடுத்து மாண்டனர். கி.பி.1328 ஆம் ஆண்டில் நான்காம் சார்லஸ் இறந்துவிட்டபொழுது, ஃபிரான்சு நாட்டு அரியணை ஏறுவதற்கு ஆண்வாரிசு எவரும் இல்லாமல் போயினர். ஏனெனில் அந்த மூன்று சகோதரர்களுக்கும் பெண்குழந்தைகளே பிறந்திருந்தனர். எனவே, நான்காம் ஃபிலிப்பினுடைய சகோதரனின் மகன் ஆரும் பிலிப் ஃபிரான்சு நாட்டின் அரசரானுர். ஃபிரான்சு நாட்டுப்பிரபுக்களும் மக்களும், அந் நாட்டு வழக்கத்திலிருந்த 'பிராங்குகளின் சாலியன்' சட்டப்படியே (The law of the Salian franks) இந்த ஏற்பாட்டைச் செய்தனர். அதாவது இச் சட்டப்படிப் பெண் வாரிசுக்கு ஃபிரான்சு நாட்டு அரியணை உரிமையுடையது அல்ல என்பதாகும். எனவேதான் ஆரும் பிலிப் அரசராக்கப்பட்டார். ஆனுல், இங்கிலாந்து அரசர் மூன்ரும் எட்வர்ட் இந்தச் சட்டத்தை அறிந்திருந்தும் ஃபிரான்சு அரசர் நான்காம் ஃபிலிப்பின் பெண்வழிப் பேரன்.[1] என்ற முறையில் தனக்கு ஃபிரான்சு நாட்டு அரியணை உரித்தானதென வாதிட்டார். எனவே இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்குமிடையே பகைமை வளர்ந்தது.

ஃபிரான்சு அரசர் மூன்ரும் பிலிப்பின் குடிவழிப் படம்
(Geneological Table)




1. குடிவழிப்படத்தைப் பார்க்கவும்,

**ஸ்லொய்ஸ் (Sluys) கடற்போர்–கி.பி. 1340**

மூன்றும் எட்வர்டுக்கு பவேரியாவின் அரசர் லூயி ஹைநாட்டின் (Hainault) அரசர் வில்லியம், மற்றும் ஃபிளாண்டர் சின் தலைவர் ஆர்டிவெல்டியின் (Artevelde) உதவி கிடைத்தது. கி.பி. 1338 ஆம் ஆண்டில் ஃபிரான்சின் வடக்கே உள்ள ஃபிளாண்டர்ஸ் பகுதியிலும், ஃபிரான்சின் தென்மேற்கேயுள்ள காஸ்கானியிலும் மூன்றும் எட்வர்ட் படைகளைக் குவித்தார். ஃபிரான்சு அரசர் ஆறும் பிலிப்பும் தன் படைகளை அவ்விடங் களுக்கு அனுப்பினர். நூறுண்டுப் போர் கி.பி. 1338 ஆம் ஆண் டில் தொடங்கி விட்டது. இருப்பினும், முதல் இரண்டாண்டுகளில் முக்கிய நிகழ்ச்சிகள் எவையும் நடைபெறவில்லை. இறுதியில் மூன்றும் எட்வர்ட் தன் பெரும் கடற்படைகளை ஃபிளாண்டர்சின் துறைமுகம் ஸ்லொய்சுக்கு அனுப்பினர். அங்குக் கடலிலேயே பல நாள்கள் போர் நடைபெற்றது(1340). இறுதியில் ஆங்கி லேயருக்கு வெற்றிமேல் வெற்றி கிட்டியது. ஃபிரெஞ்சுப் படை கள் முறியடிக்கப்பட்டன.

**கிரெசிபோர் (Battle of Crecy)-கி.பி.1346**

இங்கிலாந்து அரசர் மூன்றும் எட்வர்ட் தன் படை பலத்தை இன்னும் அதிகமாக்கிக் கொண்டார். இங்கிலாந்தில் எல்லாவித மான மக்களிடமிருந்தும் அரசருக்கு ஆதரவு இருந்தது. குறிப் பாக வணிகப் பெருமக்கள் இப் போரில் அதிக அக்கறை செலுத்தி ஞர்கள். எட்வர்ட் ஃபிரான்சின் வடமேற்குப் பகுதிகளில் பெரும்படைகளைக் கொண்டு வந்து இறக்கினர். ஃபிரான்சு அரசர் ஆறும் பிலிப்பும் உடனடியாகப் படைகளை அனுப்பி னர். எட்வர்டின் படைகள் நார்மண்டியிலிருந்து வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தன. இறுதியில் ‘கிரெசி’ என்ற நகரத்திற்கு அருகில் இருந்த காடுகளில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட ஆங்கிலப் படைகள் போருக்கு ஆயத்தமாயின. அப் படைகளின் ஒரு பகுதியை எட்வர்டின் முதல் மகன் கருத்த இளவரசரின் (Black Prince)[1] தலைமையிலும், மற்றொரு பகுதியை நாந்தாம்டன் கோமகன் (Eare of Northampton) தலைமையிலும் அணிவகுத்து முன்னர் அனுப்பிவிட்டு, மற்றொரு பெரும் படையை எட்வர்ட் தன் தலைமையிலேயே ஆயத்தமாக வைத் திருந்தார். ஆங்கிலப்படையில் ஆயிரக்கணக்கான வில் வீரர் களும் மற்றும் ஆயுதம் கொண்டு போரிடும் குதிரை வீரர்களும் இருந்தனர். மேலும் அந்தக் கிரெசிக் காடுகள் மறைந்திருந்து தாக்குவதற்கு மிகவும் வசதியாக இருந்தன.

1. கருமையான போர்க்கவசம் அணிந்திருந்ததால் அவர் அங்ஙனம் அழைக்கப்பட்டார்.

இதற்கு மாருக ஃபிரான்சு நாட்டரசன் ஆரும் பிலிப் அனுப்பிய படைகள் பெரும்பாலும் பிரபுக்களால் திரட்டப்பட்ட கட்டுப்பாடில்லாத படைகளாகும். கிரெசியில் நடைபெற்ற போரில் ஃபிரெஞ்சுப் படைகள் கடுமையாகத் தாக்கப்பட்டன. எட்வர்டின் மகன் கருத்த இளவரசர் மிகத்திறமையுடன் தன் படைகளைச் செலுத்திப் போரிட்டார். இரவும் பகலும் நடந்த இப் போரில் ஃபிரெஞ்சுப் படைகளுக்குப் பெருத்த இழப்பு ஏற்பட்டது. 1500 க்கும் மேற்பட்ட நைட் வீரர்களையும் 15,000க்கும் மேற்பட்ட போர் வீரர்களையும் இப் போரில் ஃபிரான்சு இழந்தது. அதே நேரத்தில் இங்கிலாந்து இரண்டு நைட் வீரர்களையும், நூற்றுக்கும் குறைவான போரவீரர்களையுமே இழந்தது. கிரெசிப் போர் ஆங்கிலேய வில் வீரர்களின் புகழை ஐரோப்பா முழுவதும் பரப்பியது.

பின்னர், ஆங்கிலப் படைகள் இன்னும் வடக்கே சென்று ஃபிளாண்டர்சிலிருந்த காலே (Calais) என்ற துறைமுகத்தைக் கைப்பற்றிக் கொண்டன. இத் துறைமுகத்தைக் கைப்பற்றியதால் ஆங்கில வணிகர்கள் ஃபிளாண்டர்சோடு வாணிகம் செய்வதற்கு மிகவும் பயன்பட்டது. மூன்றும் எட்வர்டின் பெருமையும் அவருடைய முதல் மகன் கருத்த இளவரசரின் திறமையும் ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளுக்குக் கருக்களாக அமைந்தன. இதை விடப் பெரிய போர் இன்னும் சில ஆண்டுகளில் நடைபெறப்போகிறதென்பது அனைவரும் எதிர் பார்த்ததேயாகும்.

### புவாடியெப் போர் (Battle of Poitiers)-கி.பி. 1356

ஃபிரான்சு நாட்டில் ஆரும் பிலிப்புக்குப் பிறகு ஜான் அரசர் அரியணை ஏறியிருந்தார். இங்கிலாந்தில் மூன்றும் எட்வர்டே தொடர்ந்து அரசராக இருந்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில் கிரெசி வெற்றிக்குப் பிறகு கி.பி. 1347 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நான்காண்டுகள் இங்கிலாந்தில் ஏற்பட்ட கொள்ளை நோயினுல் (Black Deaths) இங்கிலாந்தின் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் இறந்துவிட்டனர்.[1] இருப்பினும் அடுத்த நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளிலேயே அவர் தன் நாட்டை வலிமைப்படுத்தி ஃபிரான்சுடன் போரைத் தொடர்ந்தார்.

இம் முறை எட்வர்ட் தன் படைகளை ஃபிரான்சின் தென் மேற்குப் பகுதிக்கு அனுப்பினுர். கி.பி. 1355ஆம் ஆண்டு கருத்த இளவரசனின் தலைமையில் அனுப்பப்பட்ட படைகள் போர்டோ (Bordeaux) என்ற நகரத்தில் இறங்கின. அங்கிருந்து

1 இதுபற்றிய விவரங்களைக் 'கொள்ளை நோய்' என்ற அத்தியாயத்தின் கீழ்க் காண்க.

அப் படைகள் கிழக்கு நோக்கிச் சென்று பல நகரங்களைக் கொள்ளையடித்தன. அடுத்த ஆண்டு அவருடைய தலைமையி லேயே லொயர் (Loire) நதிப் பகுதியில் ஆங்கிலப் படைகள் வந்து இறங்கிப் பல நகரங்களைக் கொள்ளையடித்தன. அதற்குள்ளாக ஃபிரான்சு அரசர் ஜான் ஒரு பெரும் படையோடு ஆங்கிலப் படையைத் தாக்க வந்தார். இரு படைகளும் புவாடியெ என்ற நகரத்திற்கு அருகில் சந்தித்தன.

ஆங்கிலப் படையில் இரண்டாயிரத்து ஐந்நூற்றுக்கும் மேற் பட்ட வில் வீரர்களும், ஏறத்தாழ ஐயாயிரம் ஆயுதம் தாங்கிய மற்றும் குதிரை வீரர்களும் இருந்தனர். ஃபிரெஞ்சுப் படையில் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் இருந்தனர். இதைக் கண்ட கருத்த இளவரசன் ஃபிரான்சு அரசரோடு அமைதி உடன் படிக்கை செய்து கொள்ளலாமெனக் கருதி அதற்கான முயற்சி களில் ஈடுபட்டார். ஆனால், ஃபிரெஞ்சு அரசர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆங்கிலப் படைகளைச் சுலபமாக முறியடித்து விடலாம். என்று அவர் எண்ணினார். எனவே இருபடை களுக்குமிடையே போர் மிகக் கடுமையாக நடைபெற்றது.

ஆங்கிலப் படைகள் கருத்த இளவரசன், சாலிஸ்பரி, மற்றும் அரசர் மூன்றாம் எட்வர்டின் தலைமையில் போரிட்டன. ஃபிரெஞ்சுப் படைகள் டாஃபின் (Dauphin), ஆர்லியன்ஸ் (Orleans) மற்றும் அரசர் ஜானின் தலைமையில் போரிட்டன. இறுதியில் ஆங்கிலப் படைகள் ஃபிரெஞ்சுப் படைகளைத் தாக்கிப் பெருஞ்சேதத்தை விளைவித்தன. எல்லாவற்றிற்கும் மேலாக ஃபிரெஞ்சு அரசர் ஜான் போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார். இங்ஙனம் ஃபிரெஞ்சுப் படைகள் பெரும் தோல்வியைக் கண்டன. ஆங்கிலப் படைகள் வெற்றிப் பெருமிதத்துடன் தாயகம் திரும்பின.

### பிரெடிக்னி உடன் படிக்கை – கி.பி. 1350

கைது செய்யப்பட்ட அரசர் ஜான் இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் ஃபிரெஞ்சு அரசர் ஜானும் அருடைய மகன் சார்லஸ் டாஃபினும் (Charles the Dauphin) இங்கி லாந்து அரசர் மூன்றாம் எட்வர்டோடு ஓர் உடன் படிக்கை செய்து கொண்டனர். அதுவே பிரெடிக்னி உடன் படிக்கை (Treaty of Bretigni) என்பதாகும். அதன்படி ஃபிரான்சின் தென்மேற்கே யுள்ள அக்விடெய்ன் கோமகனாட்சிப் பகுதி முழுவதும், வடக்கேயுள்ள பாந்தி மாவட்டமும் மற்றும் காலே நகரமும் (Duchy of Aguitaine County of Ponthieu, and Calais) இங்கிலாந்துக்கு அளிக்கப் பட்டன. மேலும் ஜான் அரசரை விடுவிக்க ‘பெரும் மீட்புப்பணம்’

தரவேண்டும்; இங்கிலாந்து அரசர் இனி ஃபிரெஞ்சு அரசருக்கு நிலமானிய அடிப்படையில் வணங்கிச் செல்ல மாட்டார்; இது தவிர இங்கிலாந்து அரசர் இனி ஃபிரான்சு நாட்டு அரியணைக்கு உரிமை கொண்டாடக் கூடாது; மற்றும் நார்மண்டி, மெய்ன், ஆஞ்சோ (Normandy, Maine and Anjou) ஆகிய பகுதிகளையும் ஃபிரெஞ்சு அரசரின் ஆட்சிக்கே விட்டுவிடவேண்டுமென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கையினுல் இங்கிலாந்தின் பெருமை உச்ச நிலையை அடைந்தது.

புவாடியெப் போரினுலும், இவ்வுடன்படிக்கையினுலும் இங்கிலாந்தில் பல விளைவுகள் ஏற்பட்டன. இங்கிலாந்து, அக்விடெய்ன் போன்ற பெரும் நிலப்பகுதிகளைப் பெற்றது. ஃபிளாண்டர்சிலிருந்து பல நகரங்களோடு தடையில்லாத வாணிகம் செய்வதற்கு நல்ல வாய்ப்புகள் ஏற்பட்டன. ஆங்கிலக் கால்வாயில் (English Channal) எதிரியின் பயமின்றி வணிகக் கப்பல்கள் வாணிகத்தில் ஈடுபட்டன. ஃபிளாண்டர்சோடு நடைபெற்று வந்த கம்பளி வாணிகமும், காஸ்கனியோடு செய்யப்பட்ட மது வாணிகமும், இங்கிலாந்துக்கு அளவிலாச் செல்வத்தை ஈட்டித்தந்தன. மற்றும் ஆங்கில அரசர் ஃபிரெஞ்சு அரசருக்கு நிலமானிய அடிப்படையில் கீழாள் அல்ல என்பது நிரந்தரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆங்கிலேய வில் வீரர்களும் ஆயுதம் தாங்கிய குதிரைப் படை வீரர்களும் ஃபிரெஞ்சுப் படை வீரர்களைவிட வீரத்திலும் திறமையிலும் சிறந்தவர்களென்பது நிரூபிக்கப்பட்டது.

**ஆ. முதல் தோல்விக் காலம் – (கி பி. 1369 – 1399)**

இக் காலத்தில் தொடர்ந்து மூன்றும் எட்வர்டும் அவருக்குப் பிறகு இரண்டாம் ரிச்சர்டும் இங்கிலாந்தில் அரசர்களாக இருந்தனர். ஃபிரான்சில் ஐந்தாம் சார்லசும் ஆரும் சார்லசும் அரசர்களாகஇருந்தனர்.

பிரிடெக்னி உடன்படிக்கையினை ஃபிரெஞ்சு நாட்டவர் பெரும் அவமானச் சின்னமாகக் கருதினர். குறிப்பாக, அக்விடெய்ன் பகுதியிலிருந்த பிரபுக்கள் ஆங்கில அரசரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதாக இருந்ததால், அவர்கள் அத்தகைய கட்டுப்பாட்டிலிருந்து விடுபடத் தகுந்த வாய்ப்பை எதிர் நோக்கி இருந்தனர். ஃபிரெஞ்சு அரசர் ஐந்தாம் சார்லசும் அவர்களுக்கு உதவி செய்து அப் பகுதியை மீண்டும் கைப்பற்ற ஆயத்தமாக இருந்தார். எனவே, மீண்டும் கி.பி. 1369ஆம் ஆண்டில் போர் துவக்கப்பட்டது.

இம் முறை ஃபிரெஞ்சு அரசர் தன் திறமை மிகுந்த தளபதி டியு கியுஸ்கிளின் (Du Guesclin) என்பவரை ஆங்கிலப் படைகளை எதிர்த்துப் போரிடும் பணிக்காக நியமித்திருந்தார். ஆங்கிலப் படைகளும் பல போர்களின் வெற்றி வீரனுன கருத்த இளவரசன் தலைமையிலும், ஜான் காண்ட் (John of Gaunt) தலைமையிலும், அனுப்பப்பட்டன. ஆனுல் இதற்குமுன் நடைபெற்ற போர்களில் ஏற்பட்ட அனுபவத்தால், ஆங்கிலப் படைகளை நேராகச் சந்தித்து ஃபிரெஞ்சுப் படைகள் போரிடவில்லை. அவர்கள் ஒருவகையான கொரில்லாப் போர் முறையைக் கையாண்டனர். அக்விடெய்னில் பல நகரங்களை ஆங்கிலப் படைகள் கைப்பற்ற முயன்றன; ஆனுல் முடியவில்லை. லிமொஜ் நகரம் ஒன்றைத்தான் ஆங்கிலப் படைகளால் கைப்பற்ற முடிந்தது (1370). ஆங்கிலப் படைவீரர்கள் பலர் உயிரிழந்தனர். இங்கிலாந்து அரசுக்குக் கருவூலத்தில் நிதிப் பற்றுக்குறை ஏற்பட்டது. இந்த நிலையில் கருத்த இளவரசனின் உடல் நிலை மிக மோசமாகி விட்டதால் அவர் தாயகம் திரும்பினுர்.

அக்விடெய்ன் ஆங்கில ஆதிக்கத்தினின்று ஏறக்குறைய விடு பட்டதாகவே கருதப்பட்டது. அக்விடெய்னின் மேற்குக் கரையிலுள்ள ரோஷெல்லி (Rochelle) என்ற துறைமுகப் பகுதியில் கி.பி. 1372ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடற்போரில் ஃபிரான்சு பெரும் வெற்றி பெற்றது. அதுமட்டுமன்றி ஆங்கிலக் கால்வாயைக் கடந்து இங்கிலாந்து நாட்டின் பல கடற்கரை நகரங்களை ஃபிரெஞ்சுப் படைகள் தாக்கின. இதனுல் இங்கிலாந்துக்குப் பெருத்த இழப்பு ஏற்பட்டது. இறுதியாக 'டிரூஸ் போர் நிறுத்த ஒப்பந்தம்' (Truce of Bruges) கி.பி. 1375ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்டு, அதன்படி ஒருசில கடற்கரை நகரங்களைத் தவிர மற்ற எந்த ஃபிரெஞ்சுப் பகுதிக்கும் இங்கிலாந்து உரிமை கொண்டாடுவதில்லையென வாக்குறுதியளித்தது.

கி.பி. 1376ஆம் ஆண்டில் கருத்த இளவரசரும், அடுத்த ஆண்டே மூன்றும் எட்வர்டும் இறந்தனர். கி.பி. 1377ஆம் ஆண்டில் கருத்த இளவரசனின் மகன் இரண்டாம் ரிச்சர்ட் அரசரானுர். அவர் கி.பி. 1377ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1399ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தார்.

### இரண்டாம் ரிச்சர்டின் ஆட்சிக் காலம்

ஏற்கனவே ஏற்பட்டிருந்த கொள்ளை நோயினுலும் (1347-50) அதன் விளைவாக ஏற்பட்ட 'உழவர் கலகத்தினுலும் (1381) (The Peasants' Revolt) இங்கிலாந்தின் பொருளாதார நிலையும், நிதி

நிலையும், சீர்கேடுற்றிருந்தன. மேலும் அவருக்கும் அவருடைய சிற்றப்பா ஜான் காண்டுக்கும் கருத்து வேறுபாடுகளும் மனக்கசப்பு களும் வளர்ந்து வந்தன. எனவே இரண்டாம் ரிச்சர்டின் தாத்தா மூன்ரும் எட்வர்டைப் போல ஃபிரெஞ்சுப் போர்களில் ஈடுபட்டு இங்கிலாந்தின் பெருமையை உயர்த்த அவரால் முடியவில்லை. அதேபோல இந்த உள் நாட்டுக் கொந்தளிக்கும் நிலைகளைப் பயன் படுத்திக் கொண்டு ஃபிரான்சு நாடு இங்கிலாந்தின் மீது போர் தொடுத்திருக்கலாம்; ஆனல் அங்ஙனம் செய்யவில்லை. ஏனெனில் அப்பொழுது ஃபிரான்சு நாட்டின் அரசராக இருந்த ஆரும் சார்லஸ் பைத்தியக்காரராக இருந்தார். ஆகவே இரண் டாம் ரிச்சர்டின் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்துக்கும் ஃபிரான் சுக்கும் பெரும் போர் எதுவும் நடைபெறவில்லை.

## இ. இரண்டாவது வெற்றிக் காலம் (கி.பி. 1413 – 22)

இரண்டாம் ரிச்சர்ட் கி.பி. 1399ஆம் ஆண்டில் இறந்து விட்ட பொழுது அவருடைய சிற்றப்பா ஜான் காண்டின் மகன் நான்காம் ஹென்றி இங்கிலாந்தின் அரசரானுர். அவருடைய ஆட்சிக் காலத்திலும் (கி.பி 1399 – 1413) இங்கிலாந்தில் பல குழப்பங்கள் நிகழ்ந்தன. அவரை அரியணையிலிருந்து இறக்கு வதற்காகப் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. ஃபிரெஞ்சு விவகாரங்களில் தன் முழு நேரத்தை அவரால் செலவிட முடிய வில்லை. எனினும், அப்பொழுது ஃபிரான்சு நாட்டின் அரசராக இருந்த ஆரும் சார்லசுக்கு அடிக்கடி மூளைக் கோளாறு ஏற்பட்ட தால் ஃபிரான்சில் பிரபுக்களின் வலிமை வளர்ந்தது. குறிப்பாக பர்கண்டியின் கோமகனும் (Duke of Burgandy) அவரைச் சார்ந்த மற்றவர்களும் சார்லசுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர். ஆட்சி பீடத்தைக் கைப்பற்ற முனைந்தனர். ஆனல், அரசருக்கு ஆர்லியன்ஸ் கோமகனும் (Duke of Orleans) அவரைச் சார்ந்தவர் களும் இருந்தனர். இவர்கள் 'ஆர்மக்னுக்குகள்' (Armagnacs) என்றும் அழைக்கப்பட்டனர். கி.பி. 1407ஆம் ஆண்டில் ஆர்லியன்ஸின் கோமகனைப் பர்கண்டியைச் சேர்ந்தவர்கள் கொலை செய்து விட்டனர். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் உள் நாட்டுக் கலகங்கள் மலிந்தன. இந்த நிலையில் ஃபிரான்சின் பல பகுதிகளை மீட்பதற்காக இரண்டு கட்சிகளோடும் இரகசியத் தொடர்பு வைத்துக் கொண்டு, நான்காம் ஹென்றி ஒரு படையை பிரான்சில் கொண்டுபோய் இறக்கினுர். அதற்குள்ளாக அவர் கி.பி. 1413ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். அவருக்குப் பின் அவர் மகன் ஐந்தாம் ஹென்றி ஃபிரான்சுடன் போரைத் தொடர்ந்தார்.

**ஐந்தாம் ஹென்றி போரைத் தொடர்தல்**

இவர் இங்கிலாந்தின் அரசராகப் பொறுப்பை ஏற்றபோது ஃபிரான்சில் பைத்தியக்கார ஆறும் சார்லஸ் தொடர்ந்து அரசராக இருந்தார். அவருக்கு ஆதரவாக இருந்த ஆர்லியனிஸ்ட்கள் அல்லது ஆர்மக்னுக்குகள் இங்கிலாந்துடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ள எண்ணினர். எனவே, அவர்கள் இங்கிலாந்து அரசர் ஐந்தாம் ஹென்றிக்கு, ஃபிரான்சு அரசரின் மகள் காதரின் என்பவளைக் கொடுத்து, அவளுக்குச் சீதனமாக அக்விடெய்ன் கோமகனுட்சிப் பகுதி முழுவதையும், மற்றும் ஆறு லட்சம் தங்கக் காசுகளையும் தருவதாக முன்வந்தனர். ஆனால் பேராசை மிக்க ஐந்தாம் ஹென்றி ஃபிரான்சு நாடு முழுவதையும் கேட்டார். அதற்கு ஆர்மக்னுக்குகள் ஒப்புக் கொள்ளாததால் ஹென்றி கி.பி. 1415ஆம் ஆண்டில் போரைத் துவக்கினார்.

**ஆஜின் கோட் போர் (Battle of Agincourt)-கி.பி. 1415**

ஹென்றி உடனடியாகப் பெரும்படையை ஃபிரான்சின் மேற்கேயுள்ள நார்மண்டி (Normandy) என்ற பகுதியில் கொண்டு போய் இறக்கினார். அவருக்கு இங்கிலாந்திலுள்ள பொதுமக்கள், பிரபுக்கள் மற்றும் குருமார்களின் ஆதரவு இருந்தது. ஆகையால் எந்தவித அச்சமுமின்றிப் படைகள் முன்னேறிச் செல்லும்படி ஆணையிட்டார். அப் படைகள் மிகச் சுலபமாக ஆரஃபினூர் (Harfleur) என்ற துறைமுகப் பட்டினத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றின. பின்னர் படைகள் வடக்கு நோக்கிப் புறப்பட்டன. கடற்கரையோரமாகவே காகலேயே நோக்கிச் சென்று கொண்டிருந்தன. அதற்குள்ளாகக் கான்ஸ்டபிள்-டி-ஹல்பிரெட் (Constable-de-Alpred) என்பவரின் தலைமையில் பெரியதொரு ஃபிரெஞ்சுப்படை ஆங்கிலப் படைகளைத் தடுத்து நிறுத்தப் பறந்தோடிச் சென்றது. இருபடைகளும் ஆஜின்கோட் என்ற இடத்தில் சந்தித்தன.

ஆஜின் கோட் போர் இதற்குமுன் நடைபெற்ற கிரெசி புவாடியப் போர்களைவிடக் கொடுமையானது. ஃபிரெஞ்சுப் படையில் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட போர்வீரர்களும், நைட்வீரர்களும் இருந்தும் பத்தாயிரம் வீரர்களை மட்டுமே கொண்ட ஆங்கிலப் படை ஃபிரெஞ்சுப் படையைத் தோற்கடித்தது. ஆயிரக்கணக்கான ஃபிரெஞ்சு வீரர்களும் மற்றும் பல பிரபுக்களும் போர்க்களத்தில் கொல்லப்பட்டனர். மற்றும் பல ஆயிரக்கணக்கானவர் கைதிகளாக்கப் பட்டனர். பின்னர் ஆங்கிலப்படை தொடர்ந்து மூன்றாண்டுகள் ஃபிரான்சிலேயே போரிட்டுப் பல நகரங்களைக் கைப்பற்றிக்

கொண்டது. அவற்றுள் செய்ன் (Seine) நதியின் வடகரையிலுள்ள ரூவன் (Rouen) என்ற நகரம் முக்கியமானதாகும். இனி பாரிஸ் நகரத்திற்குச் சென்று அதைக் கைப்பற்றிக் கொள்வதற்கு எந்தத் தடையும் ஹென்றிக்கு இல்லை. இந்த நேரத்தில் வேறொரு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

### பர்கண்டியின் கோமகன் கொலை செய்யப்படுதல்

ஆங்கிலப் படைகளுக்குப் பர்கண்டியின் கோமகன் உதவி செய்கிறார், என்ற ஐயம் ஆர்மக்னுக்குகளுக்கிடையே ஏற்பட்டது. எனவே, ஒரு நாள் திடீரென்று அவர்களைச் சார்ந்த ஒரு பிரபு பர்கண்டியின் கோமகனைக் கொலை செய்து விட்டார். (இது 1407 ஆம் ஆண்டு நடைபெற்ற கொலையின் எதிரொலியேயன்றி வேறொன்றுமல்ல). இதன் விளைவாகப் புதிதாகப் பதவி ஏற்ற பர்கண்டியின் கோமகனைச் சார்ந்த ஆள்களுக்கும் ஆர்மக்னுக்குகளுக்கும் பெரும் பிளவு ஏற்பட்டது. இப்பொழுது வெளிப்படையாகவே பர்கண்டியின் கோமகன் ஆங்கிலப் படைகளுக்கு உதவி செய்ய ஆரம்பித்து விட்டார்.

### டிராய்ஸ் உடன்படிக்கை—கி.பி. 1420

இனி ஹென்றி பாரிசைக் கைப்பற்றி விடுவார் என்பதில் ஐயமில்லை. அந்த நேரத்தில் இந்த டிராய்ஸ் உடன்படிக்கை (Treaty of Troyes) செய்து கொள்ளப்பட்டது. அதன்படி ஆறும் சார்லஸ் தன் மகள் காதரினை ஹென்றிக்குத் திருமணம் செய்து கொடுப்பதாகவும், தனக்குப் பிறகு ஹென்றியே ஃபிரான்சின் அரசரென ஏற்றுக் கொள்வதாகவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

அந்த ஆண்டின் இறுதியில் வெற்றிப் பெருமிதத்துடன் ஹென்றி, பாரிஸ் மாநகரில் காதரினை மணந்து திருமண விழாவைக் கொண்டாடினார். இங்கிலாந்தின் பெருமை இனி என்றும் அடைய முடியாத உச்ச நிலைக்குச் சென்று விட்டது.

### ஈ. இரண்டாவது தோல்விக் காலமும் போரின் முடிவும்

ஐந்தாம் ஹென்றி தன்னுடைய தம்பி கிளாரன்சின் கோமகன் தாமஸ் (Thomas, duke of Clarence) என்பவரை ஃபிரான்சில் தன் பிரதிநிதியாக நியமித்து விட்டு வந்தார். ஆனால் அடுத்த ஆண்டே (1421) பியுஜ் (Beauge) என்ற இடத்தில் சில ஃபிரெஞ்சுப் படைகளால் அவர் கொல்லப்பட்டார். அதன் விளைவாக மீண்டும் ஐந்தாம் ஹென்றி ஃபிரான்சுக்குச் செல்ல வேண்டியிருந்தது. அதற்குள்ளாகக் கி.பி. 1422ஆம் ஆண்டில் அவர் இறந்துவிட்டார். அவருக்கு அப்பொழுது வயது முப்பத்து ஐந்து.

**ஆரும் ஹென்றி அரசராதல்**

ஐந்தாம் ஹென்றி இறந்தபோது அவருடைய ஒன்பது மாதக் குழந்தை ஆரும் ஹென்றி இங்கிலாந்தின் அரசராகப் பிரகடனப் படுத்தப் பட்டார். அதே நேரத்தில் அவருக்கு வயது வரும் வரை அவருடைய சிற்றப்பா கிளஸ்டரின் கோமகன் ஹம்ஃப்ரி (Humphrey, duke of Gloucester) இங்கிலாந்தில் அவருக்குப் பிரதிநிதியாகவும், அதேபோல அவருடைய மற்றொரு சிற்றப்பா பெட்ஃபோர்டின் கோமகன் ஜான் (John, duke of Bedford) என் பவர் ஃபிரான்சில் பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

இதற்கிடையில் ஐந்தாம் ஹென்றி இறந்த அதே ஆண்டின் இறுதியில் (கி.பி. 1422) ஃபிரான்சு நாட்டின் அரசர் ஆரும் சார் லசும் இறந்து விட்டார். அவர் இங்கிலாந்தோடு செய்துகொண்ட டிராய்ஸ் உடன்படிக்கைப்படி அவருடைய மகன் டாஃபின் என்ற ஏழாம் சார்லஸ் அரசராக முடியவில்லை.[1] எனவே ஏழாம் சார்லஸ் அந்த உடன்படிக்கை தன்னைக் கட்டுப் படுத்தாதென்றும், தானே ஃபிரான்சின் அரசரென்றும் கூறிக் கொண்டு, பாரிஸ் நகருக்குச் சில மைல்கள் தெற்கே அமைந்துள்ள போர்ஜெஸ் (Bourges) என்ற நகரத்தைத் தன் தலை நகராக அமைத்துக் கொண்டு தொடர்ந்து ஆங்கிலப் படைகளை எதிர்த்துப் போரிட்டார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் கிரிவண்ட் (Crevent) என்ற இடத்தில் நடைபெற்ற போரிலும் (1423), வெர்நியுல் (Verneuil) என்ற இடத்தில் நடைபெற்ற போரிலும் (1424) ஆங்கிலப் படை களே வெற்றி பெற்றன. இவ்வெற்றிகள் சிறியவையாயினும் ஃபிரான்சு நாட்டிற்கு இனி வெற்றிக் காலமே வராதா என்ற ஐயமும் அச்சமும் ஏற்பட்டன. அத்தகைய இருண்ட எதிர் காலத்தை எதிர் நோக்கியிருந்த ஃபிரான்சு மக்களுக்கு, வெற்றி வாகை சூட்டித்தர, இறைவனின் அருள் பெற்ற ஜோன் ஆஃப் ஆர்க் என்ற எளிய மங்கை ஃபிரான்சின் படைத் தலைமையை ஏற்க முன் வந்தாள்.

**ஜோன் ஆஃப் ஆர்க்கின் சாதனை**

ஜோன் ஆஃப் ஆர்க் ஜாகியுஸ்–டி–ஆர்க் (Jaques-d-Arc) என்ற சாதாரண ஒரு விவசாயினுடைய மகளாகப் பாரிசுக்குக் கிழக்கேயுள்ள டோம்ரெமி (Domremy) என்ற ஊரில் பிறந்தாள்.

1. Dauphin the son of Charles VI, assumed the tittle of Charles VII

இளமையில் அவள் கல்வி கற்கவில்லையாயினும் கூர்மையான நுண்ணறிவும் ஆழ்ந்த மதப்பற்றும் உடையவளாக இருந்தாள். அவள் வளர வளர தெய்விக அம்சங்கள் அவளிடம் அதிகமாகக் காணப்பட்டன. அவளுக்குப் பதினேழு வயதாக இருக்கும்பொழுது அரசனுக்கு உதவி செய்து, போர்க்களம் சென்று, ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்து, ஃபிரான்சின் பெருமையை நிலைநாட்டும்படித் தேவ தூதர்கள் அவளுக்கு ஆணையிடுவதுபோல் கனவு கண்டாள். தெய்வ நம்பிக்கையும், நாட்டுப் பற்றும் மிக்க ஜோன் அரசனைச் சந்தித்து ஆவன செய்யத் துடித்தாள். அவள் உடலிலே வலிமை மிக்க விந்தையான உணர்வு வேகமாக இயங்கியது. முன்னூறு மைல்கள் நடந்தே சென்று அரசர் ஏழாம் சார்லசைச் சந்தித்தாள். அவள் ஒரு சாதாரணப் பெண்ணே என்றாலும், அவளிடம் காணப்பட்ட தெய்வ நம்பிக்கை, நாட்டுப்பற்று, வீரம், அறிவு ஆகியவற்றால் கவரப்பட்ட அரசன் அவளால் தவறாமல் எதையாவதொன்றைச் சாதிக்க முடியுமென்பதை உணர்ந்தான். எனவே அவளுக்கு ஒரு கவசமும், குதிரையும், ஆயுதங்களும் கொடுத்து ஒரு சிறு படையையும் அவளுடன் அனுப்பினான்.

அப்பொழுது மிக முக்கியமான ஆர்லியன்ஸ் (Orleans) நகரை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டிருந்தனர். ஜோன் தன் சிறு படையைக் கொண்டு ஆங்கிலேயர்களை விரட்டியடித்து அந்நகரைக் கைப்பற்றினாள் (1429). மீண்டும் அப் படைகளைப் பாடே (Patay) என்ற இடத்தில் தோற்கடித்தாள். ஜோனின் திறமையும் வெற்றியும் இரு நாட்டவரையும் வியப்பில் ஆழ்த்தியது. ஆங்கிலேயர்கள் அவளை மாய மங்கை என்றும் சூனியக்காரி என்றும் கருதினார்கள்.

அதுமட்டுமன்றி ஏழாம் சார்லசை ரீம்ஸ் (Reims) நகருக்கு அவள் பெரும்படையுடன் அழைத்துச் சென்றாள். அங்கு அவள் வேண்டுகோளின்படி அரசன் தன்னை ஃபிரான்சின் மன்னன் என முடிசூட்டிக்கொண்டார். அதைக்கண்ட ஜோன் அளவிலா மகிழ்ச்சி கொண்டாள். மீண்டும் போர்முனைக்கு அவள் செல்ல முயன்றபோது பர்கண்டியைச் சேர்ந்த ஆள்கள் அவளைப் பிடித்து ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்து விட்டனர். அவர்கள் அவளைக் கைது செய்து ஒன்பது மாதம் சிறையிலடைத்தார்கள். பின்னர் ஒரு நீதி மன்றத்தால் விசாரிக்கப்பட்டு அவள் புறச்சமயவாதி என்றும், சூனியக்காரி என்றும் குற்றம் சாட்டப்பட்டு, இறுதியில் கி.பி. 1431 ஆம் ஆண்டில் ரூவன் (Rouen) நகரத்தில் தீக்கிரையாக்கப் பட்டாள்.

ஜோன் இறந்தாலும் அவள் ஃபிரான்சு மக்களிடையே ஊட்டிய வீர உணர்ச்சியும், நம்பிக்கையும் நாட்டுப்பற்றும் மறைய வில்லை. அவர்கள் தொடர்ந்து போராடி வந்தார்கள்.

### அராஸ் மாநாடு (Congress of Arros)–1435

பர்கண்டியின் கோமகன் இங்கிலாந்துக்கு ஆதரவாகவே இருந்தார். ஆனால், ஆரும் ஹென்றியின் சிற்றப்பாக்கள் இருவரும், பர்கண்டி கோமகனின் எதிரிகளுடன் திருமண உறவு வைத்துக் கொண்டனர். இது பர்கண்டி கோமகனுக்கு வெறுப்பையூட்டியது. இந்த நிலையில் இங்கிலாந்துக்கும்ஃபிரான்சுக்குமிடையே ஒரு உடன்பாடு காண அராஸ் என்ற இடத்தில் ஒரு மாநாடு கூட்டப் பட்டது. (1435) அதில் இங்கிலாந்து, ஃபிரான்சின் அரியணைக்கு உரிமை கொண்டாடுவதை விட்டு விட்டால், அதற்கீடாக நார் மண்டியையும் அக்விடெய்னையும் இங்கிலாந்து நிரந்தரமாகக் கொடுத்து விடுவதாக ஃபிரான்சு கூறியது. ஆனால் அதை ஆங்கிலேயர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே பர்கண்டி கோமகன் தன் ஆதரவை இங்கிலாந்துக்குக் கொடுப்பதை விடுத்து ஃபிரான்சுக்கே உதவி செய்யத் துணிந்தார். மேலும் அதே ஆண்டு இங்கிலாந்து அரசரின் பிரதிநியாக ஃபிரான்சில் இருந்த அவருடைய சிற்றப்பா பெட்ஃபோர்ட் கோமகன் (Duke of Bed ford) இறந்து விட்டார். இனி ஃபிரான்சில், இங்கிலாந்தின் நிலை இரண்டு தூண்களை இழந்த கட்டடத்தைப்போல் ஆகிவிட்டது.

### ஷேடிலோன் போர்–கி.பி. 1453

கி.பி. 1435ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1453ஆம் ஆண்டு வரை இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் பல போர்கள் நடை பெற்றன. ஆனால் ஒரே ஒரு போரில் கூட இங்கிலாந்து வெற்றி பெறவில்லை. கி.பி. 1436ஆம் ஆண்டிலேயே ஃபிரான்சு அரசர் ஏழாம் சார்லஸ் பாரிசைக் கைப்பற்றிக் கொண்டார். இறுதியாகக் கி.பி. 1453ஆம் ஆண்டில் நடைபெற்ற ஷேடிலோன் போரில் (Battle of Chatillon) தாய்பொட்டின் (Taibot) தலைமையில் வந்த ஆங்கிலப் படைகள் ஃபிரெஞ்சுப் படைகளால் முறியடிக்கப்பட்டுப் பெரும் இழப்புக்கு உள்ளாக்கப்பட்டன. தாய்பொட்டும் போர்க் களத்தில் பிடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். ஃபிரான்சு, கிரெசியிலும், புவாடியேயிலும், ஆஜின் கோட்டிலும் ஏற்பட்ட தோல்விகட்கு, ஷேடிலோன் போரில் ஆங்கிலேயர்களைப் பழிக்குப் பழிவாங்கிப் பெருமை தேடிக் கொண்டது. வடக்கேயுள்ள காலே துறைமுகத்தைத் தவிர மற்ற எல்லாப் பகுதிகளையும் ஃபிரான்சு கைப்பற்றிக் கொண்டது. ஏழாம் சார்லசின் வெற்றிக் கொடி ஃபிரான்சு முழுவதும் கம்பீரமாகப் பரந்தது.

**இறுதியில் இங்கிலாந்து தோல்வி அடைந்ததற்கான காரணங்கள்**

நூற்றாண்டுப் போரில் இருபெரும் வெற்றிகளைக் கண்ட இங்கிலாந்து இறுதியில் பெருந்தோல்வியுற்றது. அதற்குக் காரணங்கள் பலவாகும். இறைவனருள் பெற்ற மங்கை ஜோன் ஆஃப் ஆர்க் ஃபிரான்சு நாட்டு மக்களிடையே வீரத்தையும் நாட்டுப் பற்றையும் உண்டாக்கினாள். ஃபிரான்சு நாட்டு மக்கள் 'செய் அல்லது செத்துமடி' என்ற உணர்வோடு போர்க்களங்களில் போரிட்டுத் தங்கள் நாட்டின் பெருமையை நிலை நாட்டினார்கள். அவர்கள் போரிடும் போது பல புதிய போர் நுணுக்கங்களைக் கையாண்டனர். குறிப்பாக ஃபிரெஞ்சு வீரர்கள் கொரில்லாப் போர் முறையைக் கையாண்டதால் ஆங்கில வில் வீரர்கள் அவர்களை எளிதில் தோற்கடிக்க முடியவில்லை. முதலில் பீரங்கிப் படையைப் பயன்படுத்தாத ஃபிரான்சு, இறுதிக் காலத்தில் அப் படையைப் பெருமளவில் பயன்படுத்த முற்பட்டது. வலிமைமிக்க ஃபிரெஞ்சு பீரங்கிப் படையை எதிர்த்து ஆங்கில வில் வீரர்களும் குதிரை வீரர்களும் புறமுதுகு காட்டிச் சிதறியோடினர். கி.பி. 1415 – 22 ஆம் ஆண்டுகளுக்கிடையே ஃபிரான்சில் இங்கிலாந்து கைப்பற்றியிருந்த கோட்டைகளையெல்லாம் ஃபிரான்சு மீண்டும் கைப்பற்றிக் கொண்டது. இதனால் ஃபிரான்சின் படைபலம் வலிமை பெற்றதுடன் எதிரியின் படைபலமும் ஒடுக்கப்பட்டது.

பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இங்கிலாந்தில் பரவிய கொடுமையான கொள்ளை நோயினால் பெருத்த ஆள்சேதமும் தாங்கமுடியாத பொருளாதாரச் சீர்குலைவும் ஏற்பட்டன. அதனை அடுத்து நடைபெற்ற உழவர் கலகத்தினாலும் இங்கிலாந்தின் படைபலமும் பணபலமும் பெருமளவு பாதிக்கப்பட்டன. இத்தகைய நிலையில் பல ஆண்டுகளாக ஃபிரான்சோடு போராடி வந்த இங்கிலாந்து போர் செய்வதில் வெறுப்புக் கொண்டது. உண்மையில் இங்கிலாந்தின் அரசர் ஆறும் ஹென்றி ஃபிரான்சைத் தோற்கடிக்க வேண்டுமென்ற முயற்சியில் அதிகமான அக்கறை காட்டவில்லை. ஏனெனில் அவர் ஃபிரான்சு நாட்டு இளவரசி மார்கரெட்டை (Margaret of Anjou) திருமணம் செய்து கொண்டிருந்தார். அவ்வம்மையாரின் பரிவும் பாசமும் ஃபிரான்சு நாட்டின் மீதுதான் இருந்தன. அவருக்கெதிராக அரசரும் அமைச்சர்களும் செயல்பட விரும்பவில்லை. அதன், விளைவாக இங்கிலாந்து தோல்விகண்டது. இது தவிர ஆறும் ஹென்றியின் பிரதிநிதியாக ஃபிரான்சு நாட்டிலிருந்த பர்கண்டி கோமகன் கி.பி. 1485ஆம் ஆண்டில் இறந்துவிடவே, அவரைப்போலத் திறமையும் தெள்ளிய அறிவுமுடைய தலைவர் எவரும் ஆங்கிலப்படையில் இல்லாமல் போயினர். பிரான்சு நாடு முழுவதும் தேசிய உணர்வு

மக்களிடையே பரவியது. அவர்கள் அயலவரை எதிர்த்துக் கிளர்ச்சிகள் செய்தனர். மக்களின் இத்தகைய ஆதரவோடு ஃபிரெஞ்சுப் படை ஆங்கிலப் படைகளை விரட்டியடிப்பது எளிதாயிற்று.

## நூறுண்டுப் போரினுல் ஏற்பட்ட விளைவுகள்

இங்கிலாந்தும் ஃபிரான்சும் பகைமை நாடுகளாக இருந்து நூறுண்டுப் போரில் தொடர்ந்து தங்களை ஈடுபடுத்திக் கொண்டதால் பல துறைகளில் கடுமையான விளைவுகள் ஏற்பட்டன. ஃபிரான்சு நாட்டின் மண்ணிலேயே பல பயங்கரமான போர்கள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதனுல் அந் நாட்டின் பல நகரங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டன. ஆங்கில வீரர்கள் நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் வாழ்ந்த மக்களிடம் கொள்ளையடித்துப் பெருஞ்செல்வத்தைக் கவர்ந்து சென்றனர். பொதுமக்கள் விவரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்தார்கள். குறிப்பாக ஃபிரான்சு நாட்டின் மேற்கு, வடமேற்குப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தொழிற் கூடங்களிலும் பண்ணைகளிலும் நிம்மதியாக உழைத்து உற்பத்தியைப் பெருக்கமுடியவில்லை. ஃபிரான்சின் உற்பத்தி பாதிக்கப்பட்டு உணவுப் பற்றுக் குறையும் பொருளாதாரச் சீர்குலைவும் ஏற்பட்டன. இதனுல், ஃபிரான்சின் பெருமை மங்கத் தொடங்கியது. இங்கிலாந்து இரு பெரும் வெற்றிகளைக் கண்டதால் அதன் பெருமையும் புகழும் ஐரோப்பா முழுவதும் பரவியது. இங்கிலாந்து பெரிய வல்லரசாக மாறுவதற்கான நிலை உருவாகியது.

இந்த நிலையில் நூறுண்டுப் போரின் இறுதியில் இங்கிலாந்து பெருந்தோல்வி கண்டது. அதனுல் அது தன் அயல் நாட்டுக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதுவரை ஃபிரான்சு நாட்டைப் பலமுறை தோற்கடித்து இங்கிலாந்து பெரும்புகழ் பெற்றிருந்தது. ஃபிரான்சு முழுவதையும் வென்று அதைத் தன் அதிகாரத்திற்கு உட்படுத்தி மிகப் பெரிய வல்லரசாக மாறவேண்டும் என்பதே இங்கிலாந்தின் நோக்கமாகும். அம் முயற்சியில் அந் நாடு வெற்றி பெற்றிருந்தால் ஐரோப்பாவைச் சார்ந்த பல பகுதிகளைக் கைப்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அதனுல், ஐரோப்பிய விவகாரங்களில் தலையிட்டு வீணுகப் பல போர்களில் ஈடுபட வேண்டியிருந்திருக்கும். நல்ல வேளையாக நூறுண்டுப் போரின் இறுதியில் இங்கிலாந்து தோல்வியுற்றது அந் நாட்டுக்குச் சாதகமாகவே அமைந்தது. அதனுல் அயல் நாட்டுக் கொள்கையை இங்கிலாந்து மாற்றியமைத்துக் கொண்டது. இனி கடல் கடந்த நாடுகளில் குடியேற்

றங்களை அமைப்பதிலும், அங்கெல்லாம் தன் வாணிக ஆதிக்கத்தை நிலை நாட்டுவதிலும், கடற்படையைப் பெருக்குவதிலும் முழுக் கவனத்தைச் செலுத்தியது. ஃபிரான்சிலிருந்த எல்லாப் பகுதிகளையும் இங்கிலாந்து நிரந்தரமாக இழந்துவிட்டது. காலே துறை முகம் மட்டுமே இங்கிலாந்தின் கைவசம் இருந்தது. அது பருத்தியாடைகள் உற்பத்தி செய்யும் முக்கிய நகரமாக விளங்கியதால் அதை இழக்க இங்கிலாந்து விரும்பவில்லை. எனினும் மிக விரைவில் அத் தொழில் இங்கிலாந்திலேயே வளர்ச்சியடையத் தொடங்கியதால் காலே தன் சிறப்பினை இழந்தது. இந்த நிலையில் அந்த நகரத்தை ஃபிரான்சு கைப்பற்றிக் கொண்டது. ஃபிரான்சு முழுவதும் அந் நாட்டு மன்னரின் ஆட்சிக்குட்பட்டது.

இங்கிலாந்தில் பாராளுமன்றத்தின் அதிகார வளர்ச்சியிலும், மன்னரின் ஆட்சித்துறை அதிகாரங்களிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இப் போர்களினுல் ஏற்பட்ட கருவூலத்தின் பணப்பற்ருக்குறை மன்னர் தன் விருப்பப்படிச் செயல்பட இயலாமல் செய்தது. அதனுல் மன்னர் அடிக்கடிப் பாராளுமன்றத்தைக் கூட்டிப் புதிய வரிகளைப் போடவும், போர் சம்பந்தமான மேல் நடவடிக்கைகளை எடுக்கவும் அதன் ஒப்புதலைப் பெற வேண்டியதாயிற்று. அதே நேரத்தில் மக்கள் மீது பலமுனை வரிகள் விதிக்கப்பட்டதால், மக்களும் மன்னரை வெறுக்கத் தொடங்கினர். ஃபிரான்சில் தனக்குச் சொந்தமான எல்லா இடங்களையும், இங்கிலாந்து இழந்து விட்டதால், மன்னர் மீது மக்கள் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் குறைந்தன.

இங்கிலாந்தின் மன்னர் ஆரும் ஹென்றி ஃபிரான்சு நாட்டு இளவரசி மார்கரெட்டைத் திருமணம் செய்து கொண்டது மிகப் பெரிய தவருகும். இதனுல் உள்நாட்டிலும் அயல் நாட்டிலும் ஹென்றிக்குப் பகைவர்களே அதிகமானுர்கள். இந்தத் திருமண உறவினுல்தான் ஃபிரான்சு நாட்டரசர் ஆரும் சார்லசுக்கிருந்த பைத்தியக்காரத்தனம், இங்கிலாந்து அரசர் ஆரும் ஹென்றிக்கும் வந்து விட்டதெனச் சில வரலாற்ருசிரியர்கள் கருதுகின்றனர்.

பாராளுமன்றம் அதிகமான அதிகாரங்களைப் பெற்று மன்னரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தியது. குறிப்பாகப் பண சம்பந்தமான நடவடிக்கைகள் எடுப்பதில் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அரசன் எதையும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டது. ஆகையால் பிற்காலத்தில் பாராளுமன்றம் வலிமை மிகுந்த மன்றமாக மாறுவதற்கு உறுதியான அடித்தளம் அமைக்கப்பட்டது.

பாராளுமன்றம் வலிமைபெற்ற அதேநேரத்தில் பிரபுக்களும் வலிமை பெற்றனர். பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்களுள் பெரும்பாலார் பிரபுக்களே என்பது குறிப்பிடத் தக்கது. இந்தப் பிரபுக்களே அரசரின் அதிகாரங்களைக் கட்டுப் படுத்தி அவரைத் தங்களின் கைப்பொம்மையாகப் பயன்படுத்தத் தொடங்கினர். இங்ஙனம் பிரபுக்கள் வலிமை பெற்றதால்தான் அடுத்த சில ஆண்டுகளுக்குள் இங்கிலாந்தில் ரோசாப்பூப் போர்கள் [1] (Wars of the Roses) நடைபெற்று உள்நாட்டுக் கல கங்கள் ஏற்பட்டன.

ஆங்கில சமுதாயத்திலும் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டது. நார்மானியர்கள் இங்கிலாந்தை வென்ற காலத்தி லிருந்து அந் நாட்டில் ஃபிரெஞ்சு நாகரிகமும் பண்பாடுமே பரவி யிருந்தன. நூருண்டுப் போருக்குப் பின்னர் இந் நிலைமாறி முற்றிலும் ஆங்கில நாகரிகமும் பண்பாடும் உருவாகத் தொடங்கின. குறிப்பாக ஆங்கில மொழி மாறுதல் அடைந்தது. இதுவரை இங்கிலாந்தில் ஒருவகையான ஆங்கிலோ சாக்சானிய கலப்பு மொழியே பேசப்பட்டு வந்தது. அது பெருமளவு மாறி ஆங்கிலம் என்ற எளிய இனிய மொழி உருவாயிற்று. சாசர் (Chaucer) போன்ற கவிஞர்களாலும் விக்ளிஃப் (Wycliffe) போன்ற உரை நடை எழுத்தாளர்களாலும் அம் மொழிக்குப் புத்துயிரும் மெருகும் ஊட்டப்பட்டன. அவர்களைத் தொடர்ந்து எழுதிய எழுத்தாளர் களால் புதிய ஆங்கில இலக்கியம் உருவாயிற்று.

நூருண்டுப் போரில் பங்கு கொண்ட வீரர்கள் இங்கிலாந்து திரும்பியபொழுது அவர்களால் அமைதியான வாழ்க்கை நடத்த முடியவில்லை. ஏனெனில் ஃபிரான்சில் அவர்கள் இருந்தபோது போர்புரிவதிலும் கொள்ளையடிப்பதிலுமே தங்கள் காலத்தைக் கழித்துப் பழக்கப்பட்டவர்கள். எனவே, அவர்கள் தாயகம் திரும்பிய பின்னர் திருடர்களாகவும், கொள்ளைக் காரர்களாகவும் மாறினர்கள். அதன் விளைவாக இங்கிலாந்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து அராஜகம் வளர்ந்து உள்நாட்டுக் குழப்பங்கள் மலிந்தன. இந்த நேரத்தில்தான் ரோசாப்பூப் போர்களும் நடை பெற்றன என்பதை முன்னர்க் கண்டோம்.

1. இப் போர்கள் கி.பி. 1455-1485ஆம் ஆண்டுகளுக்கிடையே இங்கி லாந்தில் நடைபெற்றன. இதில் யார்கிஸ்டுகள் (Yorkists) சிவப்பு ரோசா வையும், லங்காஸ்டிரியன்கள் (Lankastrians) வெள்ளை ரோசாப்பூவையும் தங்கள் சின்னமாக அணிந்துகொண்டு இப் போர்களில் ஈடுபட்டனர். இதுவே ரோசாப்பூப் போர்கள் என வழங்கப்படுவதற்குக் காரணமாகும்.

ஃபிரான்சு நாடு தனக்குரிமையான எல்லா நிலப் பகுதிகளையும் பெற்றது. நாட்டினுள் தேசிய உணர்வு ஏற்பட்டு நாடு ஒன்றாக இணைக்கப்பட்டது. நிலமானிய அடிப்படையில் வலிமை பெற்றிருந்த பிரபுக்களின் ஆதிக்கம் பெருமளவு ஒடுக்கப்பட்டது. ஃபிரான்சின் அரசர், இங்கிலாந்தின் அரசரைப்போல் அல்லாது, வரம்பிலா அதிகாரங்களைப் பெற்றார். பிற்காலத்தில் ஃபிரான்சு ஒரு பெரிய வல்லரசாக மாறுவதற்கான வழி வகுக்கப்பட்டது.

# 21. கி.பி. 14, 15ஆம் நூற்ருண்டுகளில் ஜெர்மனியும் இத்தாலியும்

நிலமானிய முறை நிலவியிருந்த இடைக்கால நூற்ருண்டுகளில் இங்கிலாந்தும் ஃபிரான்சும் பல கோமகளுட்சிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. பிரபுக்களே வலிமை பெற்றிருந்தனர். அதிகாரங்களும் அவர்களாலேயே நிருணயிக்கப்பட்டன. அந் நாடுகளில் பதினுன்கு பதினைந்தாம் நூற்ருண்டுகளில் மக்களிடையே தேசிய உணர்வு ஏற்பட்டது. அரசனே எல்லா அதிகாரங்களையும் பெற்றுத் தனி நாடுகளாக அவை உருவாகிக் கொண்டு வந்தன. அதன் காரணமாக அங்கெல்லாம் அரசியல் ஒருமைப்பாடு ஏற்பட்டது. இதற்கு மாருக ஜெர்மனியும், இத்தாலியும் ஒரு பெரும் பேரரசாக ஒரே அரசனின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலமும் உண்டு. எடுத்துக் காட்டுக்குப் புனித உரோமானியப் பேரரசர் மூன்ரும் ஆட்டோ (Otto III) காலத்தில் ஜெர்மனி முழுவதும் இத்தாலியின் பெரும்பகுதியும் ஒருங்கிணைந்து ஒரே பேரரசரின் கீழ் இருந்தன. பதினுன்கு பதினைந்தாம் நூற்ருண்டுகளில் இந் நிலை மாறி இந் நாடுகளில் தனி நாடுகளைப் போன்ற தனியரசுகள் தோன்றி அரசியல் பிளவுகள் ஏற்பட்டன. அவைகளுக்குள்ளே சில நேரங்களில் உள் நாட்டுப் போர்களும் பூசல்களும் ஏற்பட்டன.

### 1. ஜெர்மனி

ஜெர்மனி ஒரு நாடாக இருந்தும் ஒன்று படாததற்குக் காரணம் அங்கு ஒவ்வொரு முறையும் அரசர் பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட முறையேயாகும். அவ்வரசர்கள் தங்களை அகஸ்டஸ், சீசர், கான்ஸ்டன்டைன், மற்றும் ஷார்லமெய்னின் வழி வந்தவர்களாகக் கருதினர்களே தவிர ஜெர்மனியின் அரசரென்ற முறையில் அதன் ஒருமைப்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் பாடுபடவில்லை. அவர் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புனித உரோமானியப் பேரரசில் ஜெர்மனியும் பொஷிமியாவும் இத்தாலியும் அடங்கியிருந்தன. இவற்றைக் கட்டிக்காப்பது அவ்வளவு எளிதாக இல்லை.

புனித உரோமானியப் பேரரசருக்கும் உரோம் போப்புக்கும் அடிக்கடிப் பதவிச் சின்னப் போராட்டம் நடந்து வந்தது. இதனல் பிரபுக்கள் மற்றும் மக்கள் ஒருங்கிணையும் வாய்ப்பினை இழந்தார்கள். அத்தகைய முயற்சியில் அரசரும் ஈடுபடவில்லை. ஹோயன்ஸ்டாஃபென் (Hohenstaufen) வமிசத்துப் பேரரசர் இரண்டாம் ஃபிரெடிரிக் (1220-1250) இறந்த பின்னர் ஜெர்மனியையும், இத்தாலியையும் இணைத்து ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்யும் திறமை பெற்ற அரசர் எவரும் இல்லாமற் போயினர். அவருக்குப் பின் வந்த அரசர்கள் அத்தகைய முயற்சியில் ஈடுபட்டார்களெனினும் அதில் தோல்வியே கண்டனர். இங்கிலாந்திலும் ஃபிரான்சிலும் மக்களிடையே தேசிய உணர்வை அரசர்கள் ஊட்டினர். அதனை ஜெர்மானிய அரசர்கள் செய்யத் தவறிவிட்டனர்.

கி.பி. 14, 15ஆம் நூற்ருண்டுகளில் ஜெர்மனியில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறு நிலப்பகுதிகளிருந்தன. அவற்றைக் கோமகன்களும் (Dukes), கவுண்ட்களும் (Counts), மார்க்கிரேவ்களும் (Margraves), நைட் வீரர்களும் (Knigh'ts) ஏறத்தாழ முழு உரிமை பெற்ற சுதந்தர ஆட்சியாளர்களாகவே அவர்களுடைய நிலப் பகுதிகளை ஆண்டு வந்தனர். அவர்கள் இன்னும் அதிகமான உரிமைகளையும் சுதந்தரத்தையும் பெற விரும்பினர்களேயன்றி மத்திய அரசு வலுப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. சில நேரங்களில் முழு உரிமை பெற்ற சமயச்சார்புடைய சில நாடுகள் (Ecclesiastical States) தோன்றியிருந்தன. கொலோன் (Cologne), மெயின்ஸ் (Mains), டிரையர் (Trier) முதலானவை அவ் வகையைச் சார்ந்தவையாகும். இதே போலச் சமயச் சார்பு இல்லாத, மற்றும் முழு உரிமை பெற்ற பல தனியரசுகளும் இருந்தன.

மேலும் ஹோயன்ஸ்டாஃபென் வமிசத்துக் கடைசி அரசர் நான்காம் கான்ராட் இறந்த பின்னர் கி.பி. 1256ஆம் ஆண்டிலிருந்து 1273ஆம் ஆண்டு வரை பதினெட்டு ஆண்டுகள் ஜெர்மனிக்கு அரசர் என்பவர் எவருமே இல்லை. ஜெர்மானியப் பிரபுக்கள் அல்லது சிற்றரசர்கள் அவ்வளவு பொறுப்பின்றி நடந்து கொண்டார்கள். இக் காலத்தைப் 'பெரும் இடைவெளிக்காலம்' (Great Interregnum) என்று வரலாற்ருசிரியர்கள் கூறுகின்றனர்.

கி.பி. 1273ஆம் ஆண்டில் சுவாபியாவைச் (Swabia) சேர்ந்த ஹாப்ஸ்பர்க் வமிசத்து இளவரசர் ருடால்ஃப் (Rudolf) என்பவரைப் புதிய பேரரசராக ஜெர்மானியச் சிற்றரசர்கள் தேர்ந்தெடுத்தனர். அவர் சுவாபியாவின் வளர்ச்சிக்குப் பாடுபட்டாரேயன்றிப் பொதுவாக ஜெர்மனியின் இணைப்புக்கு உழைக்கவில்லை. மேலும் அவர்

தன் வழிவரும் வாரிசுகளையே ஜெர்மனியின் அரசர்களாக்க முயன்றார். ஆனால் சிற்றரசர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கும் முறையே இருக்க வேண்டுமென வற்புறுத்தினர். எனவே, அவர் வழிவந்த இளவரசர்களுக்கும், பவேரியாவைச் சேர்ந்த விட்டல்ஸ் பாக் (Wittels Bach) என்ற குடும்பத்துச் சிற்றரசர்களுக்கும் மற்றும் லக்சம்பர்கைச் சேர்ந்த கோமகன்களுக்கும் (Dukes of Luxemburg) அடிக்கடிச் சண்டைகள் நடைபெற்றன. இவை ஜெர்மனியின் இணைப்பைத் தடுத்தன. கி.பி. 1308ஆம் ஆண்டில் லக்சம் பர்கைச் சேர்ந்த ஏழாம் ஹென்றி என்பவரைப் பேரரசராகத் தேர்ந் தெடுத்தனர். அவர் புனித உரோமானியப் பேரரசின் பழம் பெருமையை நிலைநாட்ட, இத்தாலியை வெல்ல முயன்றார். ஆனால் அம் முயற்சியில் பெருந் தோல்வி கண்டார். ருடால்ஃபைப் போலவே இவரும் தன்வழி வாரிசுகளை ஜெர்மனியின் அரசர்களாக்க முயன்றார். மற்றும், தன்னுடைய மகனுக்குப் பொஹிமியாவின் இளவரசியை மணம் செய்வித்துப் பொஹிமியாவை லக்சம்பர்க்கின் ஆட்சிக்குட்படுத்தினார்.

ஜெர்மானியச் சிற்றரசர்கள் தங்கள் ஆணைப்படி இயங்கும் அரசனையே விரும்பினர். ஏழாம் ஹென்றி இறந்தவுடன் கி.பி. 1314ஆம் ஆண்டில் பவேரியாவைச் சேர்ந்த நான்காம் லூயியை (Louis IV of Bavaria) ஜெர்மனியின் பேரரசராகத் தேர்ந்தெடுத் தனர். அவருடைய காலத்திலும் (கி.பி. 1314 – 1347) அவருக்கும் போப்புக்கும் கசப்பான உறவுகள் வளர்ந்தன. இதைத் தான் ஜெர்மானியச் சிற்றரசர்களும் விரும்பினர் போலும். அவர் இறந்தவுடன் லக்சம்பர்க் – பொஹிமியக் குடும்பத்தைச் சேர்ந்த நான்காம் சார்லஸ் என்பவர் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவரும் இத்தாலியை வெல்ல முற்பட்டு அதில் தோல்வி கண்டார். அவருடைய ஆட்சிக் காலத்தில் முக்கியமான தொரு ஆணையை வெளியிட்டார். அது 'தங்க ஆணை' (Golden Bull - 1356) என அழைக்கப்படுகின்றது. அதன்படி ஜெர் மானியப் பேரரசரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஏழு ஆட்சியாளர் களுக்கு அளிக்கப்பட்டது. அவ்வெழுவருள் மூவர் கொலோன், மெய்ன்ஸ், டிரையர், ஆகிய மதச் சார்புடைய நிலப்பகுதிகளின் ஆட்சியாளர் ஆவர். மற்ற நால்வர் ரைன் நிலப்பகுதி (Palatine of the Rhine), சாக்சனி (Saxony), பிராண்டன்பர்க் (Brandenburg), மற்றும் பொஹிமியா (Bohemia) ஆகிய மதச் சார்பில்லாத பகுதி களின் ஆட்சியாளர்களாவார்கள். இவர்கள் ஜெர்மனியின் பேரரசர் இறந்த ஒருமாதத்திற்குள் ஓரிடத்தில் கூடி விவாதித்து அதன் பின்னர் ஒரு மாதத்திற்குள் அடுத்த பேரரசரைத் தேர்ந் தெடுத்துவிட வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும்

அரசர் போப்பின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமா இல்லையா என்பது பற்றி அவ்வாணையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

இத் 'தங்க ஆணையில்' பேரரசரைத் தேர்ந்தெடுக்கும் நிலப் பகுதிகள் எக் காரணம் கொண்டும் பல பிரிவுகளாகப் பிரிக்கப் படக் கூடாதென்றும், மதச்சார்பில்லாத நிலப்பகுதிகளில் தலை மகன் அரசுரிமை பெறும் சட்டம் நடைமுறையில் இருக்க வேண் டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த எழுவர் அடங்கிய 'தேர்வுக்குழு' வைத் (College of Electors) தவிர 'டையட்' (Diet) என்ற பாராளுமன்றம் அரசனின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தச் செயல்பட்டது. இந்த 'டையட்' பதின்மூன்றும் நூற்றாண்டி லேயே உருவாகத் தொடங்கியது. இந்த டையட்டில் முதலில் பிரபுக்களும் மதகுருமார்களுமே உறுப்பினர்களாக இருந்தனர். ஆனால் நான்காம் சார்லசின் ஆட்சிக் காலத்திற்குப் பின்னர் பொதுமக்களும் அதில் உறுப்பினர்கள் ஆவதற்கு அனுமதிக்கப் பட்டார்கள்.

நான்காம் சார்லஸ் ஜெர்மனியின் வளர்ச்சிக்கு இவற்றை யெல்லாம் செய்தாரென்றாலும் அவரிடமிருந்த பிராந்திய உணர்வு அவரை விட்டு அகலவில்லை. தன்னுடைய சொந்த நிலப்பகுதி யாகிய பொஹிமியாவின் அரசியல் ஆதிக்கத்துக்கே அவர் பாடு பட்டார். அப் பகுதியில் பிராக் பல்கலைக்கழகத்தை நிறுவினார். இப் பல்கலைக் கழகத்தில்தான் புகழ்வாய்ந்த புறச்சமயவாதி ஜான் ஹஸ் (John Huss) என்பவர் பணிபுரிந்து வந்தார். அவருடைய பிரச்சாரத்தினால் ஜெர்மனியர்களுக்கும் 'செக்' நிலப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் (Zechs) ஏற்பட்ட போர்கள், நான்காம் சார்லசுக்குப் பின்னர் பேரரசராக இருந்த சிகிஸ்மண்ட்டின் (கி.பி.1410-1437) ஆட்சிக் காலத்தில் பெரும் குழப்பங்களையும் கலகங்களையும் நாட்டில் ஏற்படுத்தின. அவருடைய மறைவுக்குப் பின் ஆப்ஸ்பர்க் வமிசத்து அரசர் இரண்டாம் ஆல்பர்ட்டை 'தேர்வுக்குழு' தேர்ந்தெடுத்தது. அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த அதே வமிசத்து அரசர் மூன்றாம் ஃபிரெடிரிக்கே (Frederick III) முக்கியமானவர்.

மூன்றாம் பிரெடிரிக் (கி.பி. 1440-1493) உரோமில் உள்ள போப்பிடமிருந்து முடிசூட்டிக்கொண்ட கடைசி அரச ராவார். 'தேர்வுக்குழு'வும் இவ்வரசருக்குப் பிறகு, கி.பி.1806 ஆம் ஆண்டு புனித உரோமானியப் பேரரசு நெப்போலியனால் வீழ்த் தப்படும் வரை, ஆப்ஸ்பர்க் வமிசத்து அரசர்களையே ஜெர்மனி யின் பேரரசர்களாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டு வந்தது. அவர்

கள் பெயரளவுக்குத்தான் பேரரசர்களாக இருந்தார்களே தவிர ஜெர்மனி நூற்றுக்கும் மேற்பட்ட பல பிரிவுகளாகவே அடுத்த நான்கு நூற்றுண்டுகளிலும் பிரிந்திருந்தது.

### 2. இத்தாலி

கல்வி, மற்றும் கலைத்துறைகளில் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு வழிகாட்டியாகவும் முன்னேடியாகவும் இருந்த இத்தாலி கி.பி. 14, 15 ஆம் நூற்றுண்டுகளில் அதன் அரசியல் அமைப்பு சிதறுண்டு இருந்தது. ஜெர்மனியைப் போலவே இத்தாலியிலும் பல தனி அரசுகள் இயங்கி வந்தன. பிற்காலத்தில் மெட்டர்னிக் (Metternich) குறிப்பிட்டது போல இத்தாலி என்பது புவிஇயலடிப்படையில் சொல்லும் ஒரு சொல்லே தவிர அப்படி ஒரு நாடே இல்லையெனக் கூறலாம். ஏனெனில், இத்தாலி என்று சொல்லப்படும் அந்தத் தீபக்கற்பத்தில் கி.பி.14, 15 ஆம் நூற்றுண்டுகளில் பல சிற்றரசுகள் தனி நாடுகளைப் போலவே இயங்கி வந்தன.

ஒரு காலத்தில் இத்தாலியின் வடக்கேயுள்ள பெரும்பகுதி புனித உரோமானியப் பேரரசரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. ஆனல் அப் புனித உரோமானியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர் இத்தாலியிலிருந்து அயலவர் ஆட்சி ஒழிந்ததே தவிர அரசியல் ஒருமைப்பாடு ஏற்படவில்லை. கி.பி. 15 ஆம் நூற்றுண்டில் மூன்று வகையான தனி அரசுகள் இத்தாலியில் இயங்கிவந்தன. அவை 1. கிரேக்க நகர அரசுகளைப் போல இயங்கிவந்த தனி அரசுகள், இத்தாலியின் வடபகுதியில் இருந்தன. அவை **சாலுஸ்ஸோ** (Saluzzo), **சவாய்** (Savoy), **மான்ட் பெர்ரட்** (Mont ferrat), **மிலான்** (Milan), ஜெனேவா (Genoa) மொடினு (Modena), **மாண்ட்வா** (Mortua), **லுக்கா** (Lucco), வெனிஸ் (Venice), **ஃபெர்ரார** (Ferrara), ஃபிளாரன்ஸ் (Florence), **சியன்னு** (Siena) போன்ற தனி அரசுகளாகும். 2. இத்தாலியின் மத்தியில் உள்ள போப்பின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதி (Papal State). 3. தெற்கேயுள்ள இரு சிசிலிகளின் அரசு (Kingdome of two Sicilies).

### தனி அரசுகளின் சில சிறப்புக் கூறுகள்

இவற்றுள் முதல் வகையைச் சேர்ந்த நகர அரசுகளைப் போன்ற தனி அரசுகளிடையே ஏறக்குறைய ஒரே வகையான அரசியல் அமைப்புகளும் சிறப்புக் கூறுகளும் காணப்பட்டன. ஒரு சில அமைப்புகளில் மாறுதல்கள் இருப்பினும் பெரும்பாலும்

அவை ஒரே மாதிரி இயங்கின. எடுத்துக்காட்டாக மிலானில் முடியரசு போன்ற அரசியல் அமைப்பு இருந்தது; வெனிசிலும், ஜெனோவாவிலும் பிரபுக்களால் ஆட்சிசெய்யப்பட்ட குடியரசுகள் இருந்தன; ஃபிளாரன்ஸ் மக்களாட்சிக் குடியரசாக இருந்தது: இருப்பினும், அவை ஒவ்வொன்றும் தன்னரசின் எல்லைகளை விரிவுபடுத்தும் ஏகாதிபத்திய மனப்பான்மை கொண்டிருந்தன. பெயரளவில்தான் மக்களாட்சிக் குடியரசு, பிரபுக்களாட்சிக்குடியரசு என்று இயங்கினவே தவிர உண்மையில் ஆட்சி, வல்லாட்சியாகவே இருந்தது. எனவேதான் கி.பி.14, 15 ஆம் நூற்றுண்டுகளில் இத்தாலியில் ஆட்சி செய்த எல்லா ஆட்சியாளர்களும் வல்லாட்சியாளர்கள் என்றே கருதப்படுகிருர்கள். அதே நேரத்தில் அந்த ஆட்சியாளர்கள் வமிசவழியோ அல்லது பரம்பரை வழியோ வரும் ஆட்சியாளர்கள் அல்லர். ஒரு நகர அரசின் ஆட்சியாளர் இறந்து விட்டால் அதற்கடுத்த ஆட்சியாளர் மக்கள் அல்லது பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனுல் சில நேரங்களில் உள் நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டன. ஒரு தனிஅரசு மற்றொரு தனிஅரசைத் தன்னோடு இணைத்துக் கொண்டதுமுண்டு. இத்தாலிக்குள்ளேயே இருந்த இத் தனிஅரசுகள், இன்று உலக நாடுகளுக்கிடையே அரசியல் தூதர்களை வைத்துக் கொள்வதுபோல, அரசியல் தொடர்புகளை வைத்துக்கொண்டிருந்தன.

இத் தனிஅரசுகளில் வாழ்ந்த மக்களும் தங்கள் அரசுக்கும் ஆட்சியாளருக்கும் மட்டுமே உண்மையானவர்களாகவும் பற்றுள்ளவர்களாகவும் இருந்தார்கள்; தேசிய உணர்வு அவர்களிடம் தோன்றவில்லை. மக்களுக்கிடையே பல கட்சிகளும் இருந்தன. அவற்றுள் முக்கியமானவை கூயல்ஃப் கட்சியும், கிப்பிலைன் கட்சியுமாகும் (Guelf and Ghibelline Parties). அவை கி.பி.13 ஆம் நூற்றுண்டில் போப்புக்கும், அரசருக்கும் அதிகாரப் போட்டி ஏற்பட்டபோது நிறுவப்பட்ட கட்சிகளாகும். கூயல்ஃப்புகள் போப்பை ஆதரிப்பவர்களாகவும், கிப்பிலைன்கள் அரசரை ஆதரிப்பவர்களாகவும் இருந்தார்கள். அவை தொடர்ந்து கி.பி.14. 15ஆம் நூற்றுண்டுகளிலும் அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டன.

ஆட்சியாளர்கள் தனித்தனியாகப் பெரும்படையையும் வைத்துக்கொண்டிருந்தார்கள். அப் படைகளில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மட்டுமன்றி ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து இத்தாலியில் வந்து குடியேறியவர்களும், படைவீரர்களாகப் பணி புரிந்தனர். இங்ஙனம் இயங்கிய தனிஅரசுகளில் மிலான், ஃபிளாரன்ஸ், வெனிஸ் ஆகியவையே மிக

முக்கியமானவை. அவற்றின் அரசியல் அமைப்பைப் பற்றி நாம் அறிந்து கொண்டால் மற்ற எல்லா அரசுகளைப் பற்றியும் அறிந்து கொண்டதாகவே கொள்ளலாம்.

**மிலான்**

இவ்வரசில் முழுமையாக வல்லாட்சியே நடைபெற்றது. பொருளாதாரத்துறையிலோ அல்லது தொழில்துறையிலோ முன்னேறிய அரசாக இல்லை. ஜெனேவாவைப் போலவும் வெனிஸைப் போலவும் கடல்களைக் கடந்து குடியேற்ற நாடுகளை அமைத்துக் கொள்ளவுமில்லை. ஆனாலும் 'போ' சமவெளியில் (Po Valley) தனக்கு வேண்டியவற்றை அது உற்பத்தி செய்து கொண்டது. இவ்வரசில் இருந்த பிரபுக்கள் ஆட்சியாளர்களாவதற்கு அடிக்கடித் தங்களுக்குள் போர்களில் ஈடுபட்டார்கள் அவர்களுள் இரண்டு பிரபுக்களின் குடும்பங்கள் முக்கியமானவை. அவை டெல்லா டெர்ரே (Della Terre) என்ற குடும்பமும், வைகாண்டி (Visconti) என்ற குடும்பமும் ஆகும். இவ்விரு குடும்பங்களுக்கிடையே ஏற்பட்ட கடும் அதிகாரப் போட்டியின் இறுதியில் வைகாண்டி குடும்பமே வெற்றி பெற்றது. கி.பி.1262 ஆம் ஆண்டில் ஆட்டோ வைகாண்டி (Otto Visconti) என்பவர் மிலானின் ஆட்சியாளரானார். இவர் வழிவந்த அனைவரும் வரம்பிலா வல்லாட்சியே நடத்தினர். ஜியோவன்னி வைகாண்டி (Giovanni Visconti–1349–54) என்பவர் உரோம் தலைமைப் போப்பைத் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தித் தாக்க முயன்றார். அவருக்குப்பின் ஆட்சி செய்த பெர்னபோ வைகாண்டி (Bernabo Visconti) என்பவர் தன் எதிரிகளையும் குற்றவாளிகளையும் தண்டிக்கப் பல கொடுமையான வெறி நாய்களை வைத்துக் கொண்டிருந்தாராம்.

ஜியான் கேலிஸோ வைகாண்டி என்பவர் (Gian Galeazzo Visconti—1378 – 1402) தன் சிற்றப்பா பெர்னபோவையும் அவருடைய நான்கு மகன்களையும் கைது செய்து, கொடுமைப் படுத்திக் கொலை செய்தாராம். பின்னர் கலைஞர்களையும் அறிஞர்களையும் ஆதரித்துக் கல்வி மற்றும் பல கலைகளையும் வளர்த்தார். புனித உரோமானியப் பேரரசர், 'கோமகன்' என்ற பட்டத்தையும் அவருக்குக் கொடுத்துச் சிறப்பித்தார். அவருடைய ஆட்சியில் மிலான் இதற்குமுன் காணாத வல்லாட்சியைக் கண்டது. ஆனாலும் மக்கள் அதனைத் தாங்கிக் கொண்டிருந்தனர்.

மிலானை ஆட்சி செய்த முக்கியமான அடுத்த ஆட்சியாளர் லூடோவிகோ ஸ்ஃபார்சா (Ludovico Sforza – 1479 – 1500) என்பவராவார். அவர் சிறந்த பொருளாதார நிபுணர்.

அவருடைய ஆட்சிக் காலத்தில் மிலான் வேளாண்மைத் துறையில் வளர்ச்சி பெற்றது. அவரே ஒரு சிறந்த கலைஞராக இருந்ததால் மிலான் நகரை அழகு படுத்தினார். லியனார்டோ டா வின்சி (Leanardo da Vinci) போன்ற தலைசிறந்த கலைஞர்களை அவர் ஆதரித்தார்.

**வெனிஸ்**

வெனிஸின் அமைவிடமே அதன் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் காரணமாகும். இது ஆட்ரியாடிக் கடலின் வடக்கே மிதக்கும் நகரமாக அமைந்துள்ளது. இது 'ஆட்ரியாடிக்கடலின் அரசி' (Queen of the Adriatic) என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றது. இது முற்றிலும் வாணிகத்தால் வளம் பெற்ற நகரமும் அரசும் ஆகும். ஐரோப்பிய வணிகர்களும் ஆசியாவின் வணிகர்களும் சந்திக்கும் சந்தை வெனிஸ் ஆகும். இவ்வரசு எக் காலத்திலும் புனித உரோமானியப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததில்லை. அதனுடைய எல்லாத் தொடர்புகளும் கிழக்கு உரோமானியப் பேரரசுடனே இருந்தன. இவ்வரசில் மற்ற இத்தாலியத் தனி அரசுகளில் இருந்தது போல் கட்சிகளோ, வருக்கப் போராட்டங் களோ இருந்ததில்லை. மேலும் இங்கு வணிகர் ஆதிக்க ஆட்சி என்ற அரசியல் அமைப்பு நடைமுறையில் இருந்தது. வெனிஸில் பெரும்பாலார் வணிகர்களாக இருந்ததால் இத்தகைய அமைப்பு கி.பி. 697ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்தது.

இவ்வரசின் ஆட்சியாளர் 'டோஜ்' (Doge) என்றழைக்கப் பட்டார். அவர் எல்லா அதிகாரங்களையும் பெற்றிருந்தாலும் அவருடைய அதிகாரங்கள் வணிகப் பெரு மக்களின் 'பெருஞ்சபை யினால்' (Great – Council) கட்டுப்படுத்தப்பட்டன. இச் சபை கி.பி. 1171ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வந்தது. பின்னர் இச் சபை 'நாற்பதின்மர் குழுவாக' (Coucil of Forty) மாற்றப் பட்டது. இதனுடைய எண்ணிக்கை மீண்டும் கி.பி. 1297ஆம் ஆண்டில் பத்தாகக் குறைக்கப்பட்டுப் 'பதின்மர் குழு (Council of Ten) என்றழைக்கப்பட்டது.

ஜெனோவாவுக்கும் வெனிசுக்கும் இடையே அடிக்கடிப் போர்கள் ஏற்பட்டன. கி.பி. 1378ஆம் ஆண்டுக்கும் 1380ஆம் ஆண்டுக்கும் இடையே ஏற்பட்ட போர்களில் வெனிஸ் ஜெனோ வாவைக் கடலிலும் நிலத்திலும் தோற்கடித்துத் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டியது. பின்னர் மிலானுடன் போர் தொடுத்துப் பெரும் பகுதியைப் பெற்றது. கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வெனிஸ் ஒரு பெரிய ஏகாதிபத்திய வல்லரசாகவே மாறியது. அந் நூற்றாண்டின்

இறுதியில் கிரீசின் தெற்குப்பகுதி, கிரீட்தீவு, சைப்ரஸ் தீவு மற்றும் ஈஜியன் கடலில் (Aegean Sea) உள்ள பல தீவுகளைத் தன்னரசில் இணைத்துக் கொண்டிருந்தது. சுருங்கக் கூறின், இத்தாலியில் இருந்த எல்லா அரசுகளைக் காட்டிலும் அமைதியான, வளமான வாழ்க்கையை மக்களுக்கு வெனிஸ் அரசு ஒன்றுதான் ஏற்படுத்திக் கொடுத்தது.

**ஃபிளாரன்ஸ்**

இக் குடியரசு தொழில் துறையில் சிறந்த வளர்ச்சி பெற்றிருந்தது. பெருஞ் செல்வந்தர்கள் இங்கு வாழ்ந்தார்கள். இது கம்பளி உற்பத்திக்குப் பெயர்பெற்ற பகுதியாகும். ஃபிளாண்டர்ஸோடு வாணிக உறவை வைத்துக் கொண்டு வணிகர்கள் கொழுத்த இலாபத்தைச் சம்பாதித்தனர். அரசர்களுக்கும் பேர்ப்புகளுக்கும் கடன் தருகின்ற அளவுக்குப் பெரும் செல்வந்தர்கள் இங்கு இருந்தார்கள். மிலானைப் போலவே இங்கும் கூயல்ஃபுகள், கிப்பிலேன்கள் ஆகியோர் இருந்தனர். இவர்களுக்கிடையே அடிக்கடிக் கலகங்கள் ஏற்பட்டன. எனினும் வெகுநாள் அவை நீடிக்கவில்லை.

இங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சித் தலைவரே ஆட்சி செய்தார். அவரிடமும் வரம்பிலா அதிகாரங்கள் இருந்தன. மற்ற தனியரசுகளைப் போலவே இதுவும் ஏகாதிபத்திய வெறி கொண்டு அண்மையில் உள்ள நிலப் பகுதிகளைத் தன்னரசோடு இணைத்துக் கொண்டது. டஸ்கனி, பீசா (Tuscany, Pisa) போன்றவற்றைக் கி.பி. 1406ஆம் ஆண்டில் ஃபிளாரன்ஸ் கைப்பற்றியது. மிலானில் நடைபெற்றது போலவே இங்கும் குற்றங்கள் செய்வோர் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். வருக்கப் போராட்டங்கள் அடிக்கடி இங்கு நிகழ்ந்தன.

கி.பி. 1434ஆம் ஆண்டில் மெடிசி (Medici) என்ற குடும்பத்தைச் சேர்ந்த கொசிமோ - டி - மெடிசி (Cosimo - de - Medici) என்ற செல்வந்தர் ஆட்சிக்கு வர முயன்றார். ஆனால் அவருடைய எதிரிகள் அவரை நாடு கடத்தினர். நாட்டில் உடனே பெருங் கலகம் ஏற்பட்டது. அவர் மீண்டும் நாடு திரும்பிப் பின்னர் ஃபிளாரன்சைத் திறம்பட ஆட்சி செய்தார். இவர் வழிவந்தவரே ஃபிளாரன்சைப் பல ஆண்டுகள் ஆட்சி செய்தனர். அவர் கி.பி. 1464ஆம் ஆண்டில் இறந்து விட்டார்.

அவரை அடுத்து அவருடைய மகன் லோரென்சோ - டி – மெடிசி (Lorenso-de-Medici) ஆட்சியாளரானார். அவருடைய காலத்தில்

தான் ஃபிளாரன்சின் அரசியல் சட்டம் மாற்றியமைக்கப்பட்டது. கலைத் துறைகளில் பல புதிய அம்சங்கள் உருவாக்கப்பட்டன.

இங்கு சாவொனரோலா (Savonarola) போன்ற மதகுருக்கள் சிலமூட நம்பிக்கைகளை எதிர்த்து மக்களிடையே பிரச்சாரம் செய்து அறிவொளி ஊட்டினார்கள். கவிஞர் டான்டேவின் கருத்துகள் புதிய உணர்வுடன் பிரச்சாரம் செய்யப்பட்டன.

### போப்பின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதி (Papal State)

இத்தாலியத் தீபகற்பத்தின் இடையில் இருந்த பெரு நிலப் பகுதி உரோம் நகரத்திலிருந்த போப்பின் நேர் ஆட்சிக்குட் பட்டிருந்தது. அப் பகுதியை அவர் மதத்தலைவராகவும் அரசியல் தலைவராகவும் இருந்து ஆட்சி செய்து வந்தார். இத்தாலியின் மத்தியில் அப் பகுதி இருந்ததால் மற்ற தனியரசுகளிலும் இரு சிசிலி களின் அரசிலும் ஏற்பட்ட அரசியல் நிகழ்ச்சிகள் அப் பகுதி யையும் பாதித்தன. எனவே கி.பி. 15ஆம் நூற்றாண்டில் உரோமில் போப்புகளாக இருந்தவர்கள் தங்கள் நேரத்தின் பெரும் பகுதியைத் திருச்சபை விவகாரங்களுக்குச் செலவிடுவதை விடத், தங்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த நிலப்பகுதியின் அரசியல் விவகாரங்களுக்கே செலவிட்டார்கள்.

அதே நேரத்தில் கி.பி. 14ஆம் நூற்றாண்டில், திருச்சபையில் ஏற்பட்ட கொந்தளிப்புகள் அதன் பெருமையைப் பெரிதும் பாதித்தன. அதாவது கி.பி. 14ஆம் நூற்றாண்டின் தொடக் கத்தில் புனித உரோமானியப் பேரரசர்கள் வலுவிழந்து, ஃபிரான்சு நாட்டு அரசர்கள் வலிமைபெற்ற போது, கிறித்தவத் திருச் சபையின் தலைநகரம் உரோமிலிருந்து, ஆவிஞனுக்கு மாற்றப்பட்ட தென்பதையும், இந்த 'பாபிலோனியச் சிறையிருப்பு' ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் நீடித்ததென்பதையும், அதன் பிறகும் ஏறத் தாழ நாற்பதாண்டுகள் திருச்சபையில் 'பெரும் சமயப்பிளவு' ஏற்பட்டு நீடித்திருந்ததென்பதையும் நாம் முன்னரே கண்டோம். எனவே, கி.பி. 14ஆம் நூற்றாண்டில் போப்பின் ஆட்சிக்குட் பட்டிருந்த நிலப் பகுதியின் பெரும் பகுதியை ஃபிளாரன்ஸ் போன்ற குடியரசும், இரு சிசிலிகளின் அரசும் கைப்பற்றிக் கொண்டன. இவை தவிர பேராசை கொண்ட பிரபுக்கள் மற்றும் கொள்ளைக்காரர்களின் தாக்குதல்களுக்கு உரோம் அடிக்கடி இலக்காகியது.

இத்தகைய குழப்பமான நிலையைப் பயன்படுத்திக் கொண்டு தான் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் இடையில் கோலா – டி –

ரியன்ஸோ (Cola - di - Rienso) என்பவர், தான் போப்பின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள மக்களைக் காப்பதாகவும், உரோம் திருச்சபையின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் பாடுபடுவதாகவும் கூறிக் கொண்டு தன்னை அப் பகுதியின் ஆட்சியாளராக அமர்த்திக் கொண்டு ஆட்சி செய்ய ஆரம்பித்தார். ஓரளவு அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டினார். பின்னர் இத்தாலியத்தீபகற்பத்தில் உள்ள எல்லா அரசுகளையும் ஒன்றாக இணைத்து உரோமைத் தலைநகராகக் கொண்டு இத்தாலியக் கூட்டாட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு திட்டம் கொண்டு வந்தார். இத் திட்டத்திற்கு உரோம் மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதுமட்டுமன்றிக் கலகமும் ஆர்ப்பாட்டமும் செய்து நாட்டை விட்டே அவரைத் துரத்தி விட்டனர்.

அதன் பின்னர் கார்டினல் ஆல்பொர்னேஸ் (Cardinal Albornoz) என்பவரே போப்பாட்சிப் பகுதியில் நிலையான ஆட்சி முறையை ஏற்படுத்தினார். (இறப்பு : 1367). உண்மையில் அவர் உரோமில் ஆட்சி முறையைச் சீர்படுத்துவதற்காகவே ஆவிஞனிலிருந்த கார்டினல்களினால் அனுப்பப்பட்டார். அவர் அரசியல் மற்றும் இராணுவத் துறைகளில் நன்கு பயிற்சி பெற்றவர். ஆ க வே போப்புக்கென்று ஒரு படையையும் உருவாக்கினார். அவர் காலத்திற்குப் பிறகு உரோமில் போப்புகளாக இருந்தவர்கள் படைபலம் கொண்டே போப்பாட்சிப் பகுதியை ஆண்டு வந்தனர்.

குறிப்பாகப் போப் ஆறும் அலெக்சாண்டர் (கி.பி. 1492 - 1503) ஒரு சிறந்த அரசரைப் போலவே தன் பகுதியை இராணுவ பலம் கொண்டு அடக்கு முறையுடன் ஆட்சி செய்தார். இவரைப் போலவே இவருடைய மகன் சீசர் போர்ஜியா (Caesar Borgia) வல்லாட்சியாளராக இருந்து அப் பகுதியை ஆட்சி செய்தார். இத்தாலிய அரசியல் மேதை 'மாக்கியவல்லி'யும் (Machiavelli) தன்னுடைய 'இளவரசன்' (The Prince) என்ற நூலில் இவருடைய ஆட்சியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இங்ஙனம் போப்பாட்சிப் பகுதியும் கி.பி. 14, 15ஆம் நூற்றாண்டுகளில் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருந்தது.

### இரு சிசிலிகளின் அரசு

இவ்வரசு நேபிள்சையும் சிசிலித் தீவையும் தன்னகத்தே கொண்டிருந்தது. இது ஒரு காலத்தில் நார்மானியர்களின்

ஆட்சிக்கும், பின்னர் ஜெர்மானிய அரசர்களின் ஆட்சிக்கும் உட்பட்டிருந்தது. ஃபிரெஞ்சு அரசர்களின் ஆட்சிக்கும் இப் பகுதி உட்பட்டிருந்தது. கி.பி. 1282ஆம் ஆண்டில் ஐபீரியத் திபகற்பத்திலிருந்த ஆரகன் (Aragon) பகுதியின் அரசர் மூன்றும் பீடரினுல் (Peter III) சிசிலித்தீவு கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. நேபிள்ஸ் கி.பி. 1443ஆம் ஆண்டு வரை ஃபிரான்சின் ஆதிக்கத்தில் இருந்தது. அதே ஆண்டு அப் பகுதியை ஆரகன் அரசர் ஐந்தாம் அல்ஃபான்சோ (Alphonso V) கைப்பற்றிக் கொண்டார்.

இங்ஙனம் இத்தாலியின் தெற்கிலிருந்த இவ்வரசு அயலவரின் ஆட்சிக்குட்பட வேண்டியதாக இருந்தது. வடக்கே இருந்த தனி அரசுகளைப் போல அரசியல் அமைப்பிலும் செல்வ வளத்திலும் உறுதிப்பாடான நிலையை இது அடையவில்லை. இதற்கு மாருக உள் நாட்டுக் குழப்பங்களும் மிகவும் பின் தங்கிய பொருளாதார நிலைகளுமே இங்கு காணப்பட்டன.

பல்வேறு துண்டுகளாகப் பிளவுபட்டிருந்த இத்தாலியை, கி.பி. 14, 15ஆம் நூற்றுண்டுகளில், எவராலும் ஒருங்கிணைத்து ஒரு தனி நாடாக உருவாக்க முடியாதென்ற கூற்று உண்மையான கூற்றேயாகும்.

# 22. சுவிட்சர்லாந்துக் குடியரசின் தோற்றம்

பதின்மூன்ரும் நூற்ருண்டில் சுவிட்சர்லாந்து ஒரு நாடாக இல்லை. புனித உரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய சுவாபியா (Swabia) என்ற கோமகனுட்சிப் பகுதியின் ஒரு பகுதியே இன்று சுவிட்சர்லாந்து என்று அழைக்கப்படுகின்றது. அப் பகுதியில் அப்பொழுது பல நிலமானியப் பிரபுக்களும் இருந்தனர்; பெரிய மடாலயங்களும் இருந்தன சுவாபியாவின் பெரும்பகுதி மடாலயங்களுக்கே சொந்தமாக இருந்தது. அவற்றுள் ஐன்சிடெல்ன் (Einsiedeln) மடாலயமும், கால் முனிவர் (St. Gall) மடாலயமும் புகழ்வாய்ந்தவையாக இருந்தன. இவை போன்ற மடாலயங்கள் பேரரசில் பல சலுகைகளைப் பெற்றிருந்தன. அவை பல்வேறு விதமான வரிகளைப் பேரரசுக்குச் செலுத்துவதினின்றும் விலக்குரிமை பெற்றிருந்தன; எனினும் அப் பகுதிகளில் நீதி, மற்றும் ஆட்சி முறை ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதை அறியப் பேரரசரின் பிரதிநிதி அல்லது அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தார். இம் மடாலயங்களைப் போலவே லூயுசெர்ன் (Lucerne) ஏரியைச் சுற்றிலும், மற்றும் ரைன் (Rhine), உரோன் (Rhone) ஆகிய நதிகளின் பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் பல பிரபுக்கள் சிறு நிலப்பகுதிகளை ஆட்சிசெய்து வந்தனர். அவர்களுள் சவாய் (Savoy), ஜெனிவா (Geneva), கிபர்க் (Kiburg), ராப்பெர்ஸ்வெல் (Rappersweil) மற்றும் ஆப்ஸ்பர்க் (Hapsburg) ஆகியவற்றின் பிரபுக்கள் முக்கியமானவர்களாவர். குறிப்பாக ஆப்ஸ்பர்க்கின் கோமகன் மிகமுக்கியமானவராவர்.

சுவாபியாவின் பெரும்பகுதியில் விண்ணைமுட்டும் மலைகளும் ஆழ்ந்து விரிந்த பள்ளத்தாக்குகளும் பரந்த ஏரிகளும் உள்ளன. எனவே, அப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நீரிலும் நிலப்பரப்பிலும் மலைகளிலும் கடுமையாகப் போர்செய்யும் வலிமையையும் ஆற்

றலையும் பெற்றிருந்தனர். அவர்கள் எவருக்கும் அடிமைப்பட்டிருக்க விரும்பவில்லை. அத்தகைய பகுதிகளில் வாழும் மக்களை அடக்கி ஆளுவதிலும் பல தொல்லைகள் அரசுக்கு இருந்தன. எனவே, இப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் பேரரசிலிருந்து பல சலுகைகளையும் பின்னர் பல உரிமைகளையும் பெற்றனர். சுவாபியாவில் நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் கம்யூன்கள் (Communes) என்றழைக்கப்பட்ட சமுதாய மன்றங்கள் தோன்றி அவ்வப்பகுதிகளின் ஆட்சிமுறையை அக் கம்யூன்களே கவனித்து வந்தன. சுவர்பியாவில் இருந்த பல நகரங்கள் தனியரசுகளைப் போலவே இயங்கின. அவை பேரரசின் சட்டமன்றத்திற்குப் (Dite) பிரதிநிதிகளையும் அனுப்பின. அத்தகைய நகரங்களுள் சூரிக் (Zurich), லுயிசெர்ன் (Luberne), பெர்ன் (Bern) போன்றவை முக்கியமானவையாகும்.

நகரங்களின் பாதுகாப்புக்கு அவற்றைச் சுற்றிலும் பெரும் சுவர்கள் கட்டப்பட்டன. பள்ளத்தாக்குகளில் வாழ்ந்த மக்களுக்கு அவைகளைச் சூழ்ந்திருந்த மலைகளும் காடுகளும் பாதுகாப்பாக இருந்தன. இன்னும் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள ஊரி (Uri), ஸ்கிவிட்ஸ் (Schwitz), அண்டர்வால்டென் (Unterwalden), கிளாரஸ் (Glarus) போன்ற மாவட்டங்கள் ஒன்றாக இணைந்து செயல்பட்டன. அவை பல உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று ஏறக்குறைய தனி அரசுகளைப் போலவே இயங்கி வந்தன. இவை காடுகள் சூழ்ந்த பகுதிகளில் இருந்ததால் 'காட்டுக் கான்டன்கள்' (Forest cantons) என்றழைக்கப்பட்டன. இவையும் வேறு பல கான்டன்களும் நகரங்களும் சுவாபியாவின் கோமகனின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தன. அவருடைய அடக்கு முறையை எதிர்த்துப் போராடி ஊரி (Uri) கி.பி. 1231 ஆம் ஆண்டில் உரிமை பெற்ற தனி அரசாக இயங்க ஆரம்பித்தது. அதே நேரத்தில் அதன் பாதுகாப்புக்குப் பேரரசு உறுதியளித்தது. ஸ்கிவிட்ஸ் கி.பி. 1240ஆம் ஆண்டில் உரிமை பெற்றது. இவைகளைப் பின்பற்றி வேறு பல நகரங்களும் மாவட்டங்களும் ஒன்றோடொன்று இணைந்து தங்களை வலிமைப்படுத்திக் கொண்டன. பெர்னும் (Berne) லுயுசெர்னும் (Lucerne) ஒன்றாக இணைந்தன. ஸ்கிவிட்ஸ், அண்டர்வால்டென் (Unterwalden) ஊரி ஆகியவை ஒன்றாக இணைந்தன. இவை பின்னர் லுயுசெர்னுடனும் சுரிக்குடனும் (Zurich) சேர்ந்து கொண்டன. இத்தகைய இணைப்பு முறையே பிற்காலச் சுவிட்சர்லாந்துக் குடியரசு தோன்றுவதற்கு முன்னோடியாக இருந்தது.

### நிரந்தரச் சங்கம் அமைக்கப்படுதல்

கி.பி. 1254ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1273ஆம் ஆண்டு வரை இருந்த இடைவெளிக் காலத்தைப் புனித உரோமானியப் பேரரசின் வரலாற்றில் 'பெரும் இடைவெளி' (The Great Interregnum) என்று வழங்கப்படுகின்றது. இவ்விடைவெளிக் காலத்தில் அரசுக்குப் பேரரசர் எவரும் இல்லே. இக் காலத்தில் பிராந்திய உணர்வு வலுப்பட்டுப் பல நகரங்களும் மாவட்டங்களும் முழு உரிமை பெற முயன்றன. இந்த நேரத்தில் கி.பி. 1273ஆம் ஆண்டில் ஆப்ஸ்பர்க் (Habsburg) வமிசத்தைச் சேர்ந்த ருடால்ஃப் (Rudolb) என்பவர் உரோமானியப் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவர் சுவாபியாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றிக் கொள்வாரோ என்ற அச்சம் நகரங்களுக்கும் மாவட்டங்களுக்கும் ஏற்பட்டது. அவ்வச்சத்தை நிரூபிக்கும் வண்ணம் ருடால்ஃப், ஃபிரிபர்க் (Friburg), நியுஃப்ஷாடெல் (Neubchatel), கிளார்ஸ் (Glarus) மற்றும் வேறு பல பகுதிகளேயும் கைப்பற்றிக் கொண்டார். பின்னர் 'காட்டுக் கான்டன்கள்' என்று சொல்லப்புட்ட ஊரி, ஸ்கிவிட்ஸ், அண்டர்வால்டென் ஆகியவற்றையும் ருடால்ஃப் முற்றுகையிட்டார். அதற்குள் அவர் கி.பி. 1291 ஆம் ஆண்டில் இறந்து விட்டார். அதே ஆண்டு இம் மூன்று கான்டன்களும் தங்கள் உரிமைகளேக் காத்துக் கொள்ளவும் தங்கள் பாதுகாப்புக் காகவும் 'நிரந்தரச் சங்கம்' (Prepetual League) என்ற அமைப்பை ஏற்படுத்தின. இவ்விணைப்பே சுவிட்சர்லாந்துக் குடியரசு தோன்றுவதற்கு முதல் அடித்தளம் ஆகும். இந் 'நிரந்தரச் சங்கத்தின்' அமைப்பு மற்றும் நோக்கங்களேப் பற்றிய சாசனம் இன்றும் ஸ்கிவிட்சின் தொல்பொருள் காட்சியில் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

### மார்கார்டன் போர் (Battle of Morgarten-1315)

ருடால்ஃபுக்குப் பின்னர் அவருடைய மகன் ஆல்பர்ட் பேரரசராக இருந்த காலத்தில் அவரும் தன் தந்தையைப்போலவே சுவாபியாவின் நிலப்பகுதிகளேக் கைப்பற்ற முனேந்தார். ஆனால் அவர் கி.பி. 1308 ஆம் ஆண்டில் அவருடைய உறவினர் ஒருவ ராலேயே கொலே செய்யப்பட்டார். இவரை அடுத்து லக்சம் பர்கைச் (Luxemburg) சேர்ந்தவர்கள் பேரரசராகத் தேர்ந்தெடுக் கப் பட்டனர். அக் காலத்தில் பேரரசரோடு அல்லாமல் ஆஸ்திரி யாவின் ஆப்ஸ்பர்க் வமிசத்துக் கோமகன் ஃபிரெடிரிக்கின் ஆக்கிரமிப்பை எதிர்த்தே 'காட்டுக்'கான்டன்கள் போரிட வேண்டி யிருந்தது. வலிமை மிகுந்த இக் கான்டன்களின்–மலேவாழ் மக்க ளின் உரிமை எழுச்சியை அடக்கக் கி.பி. 1315ஆம் ஆண்டில்

ஃபிரெடிரிக் தன் இளவல் லியோபால்டின் தலைமையில் பெரிய தொரு படையை அனுப்பினர். 'காட்டுக் கான்டன்களின்' படைகளுக்கும் லியோபால்டின் படைகளுக்கும் மார்கார்டென் என்ற இடத்தில் கடுமையான போர் நடைபெற்றது. மலைகளும் ஏரிகளும் மிகுந்த அப் பகுதியில் லியோபால்டின் படைகள் செய்வதறியாது திகைத்தன. காட்டுக் கான்டன்களின் படைகள் திடீர்த்தாக்குதலும், மறைந்திருந்து தாக்குதலும் செய்து எதிரியின் படைகளுக்குப் பெரும் சேதத்தை உண்டாக்கின. கான்டன்கள் பெருவெற்றி பெற்றன. இவ் வெற்றியின் விளைவாக மீண்டும் 'நிரந்தரச் சங்கத்தை' வலுப்படுத்தித் தொடர்ந்து இணைந்து செயல்பட இம் மூன்று கான்டன்களும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டன.

மார்கார்டென் போருக்குப் பின்னர் காட்டுக் கான்டன்களின் கூட்டமைப்பில் மற்ற கான்டன்களும் ஒன்றன் பின் ஒன்ருகச் சேர ஆரம்பித்தன. கி.பி. 1330ஆம் ஆண்டில் லுயுசெர்ன் இக் கூட்டமைப்பில் சேர்ந்தது. கூட்டமைப்பின் வலிமை இன்னும் வளர்ந்தது.

அடுத்து சூரிக் (Zurich) என்ற கான்டன் இக் கூட்டமைப்பில் சேர்ந்தது. எனினும், இக் கான்டனின் ஆட்சியில் உட்பூசல்களும் நேர்மையற்ற ஆட்சியும் 'கூட்டமைப்பில்' வலுவான உறுப்பினராக இருக்க முடியாமல் தடுத்தன. ஆட்சி உயர்குடி மக்களாலேயே நடத்தப்பட்டது. அவர்களே பல்வேறு விதமான உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவித்தார்கள். தாழ்குடி மக்கள் வரம்பிலா வல்லாட்சியின் கொடுமைகளால் துன்பப்பட்டனர். இத்தகைய நேரத்தில்தான் ருடால்ஃப் பிரன் (Rudolf Brun) என்பவரை அக் கான்டனின் ஆட்சியாளராகத் (Burgomaster) தேர்ந்தெடுத்தனர். அவர் ஏழை எளியவர்களுக்குப் பல சலுகைகளையும் உரிமைகளையும் தந்தார். உயர்குடி, தாழ்குடி மக்கள் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் வாக்குரிமையைத் தந்தார். இக் கான்டனில் வேறுபல குழப்பங்கள் பின்னர் நிகழ்ந்தனவென்ருலும் கி.பி. 1351ஆம் ஆண்டு முதல் காட்டுக் கான்டன்களின் கூட்டமைப்பில் நிரந்தர உறுப்பினராகச் சேர்ந்து அவற்றின் வலிமைக்கும் வளர்ச்சிக்கும் உதவியது.

கி.பி. 1352 ஆம் ஆண்டில் கிளாரஸ் (Glarus), மற்றும் சூக் (Zug) என்ற கான்டன்கள் முறையே ஆருவது ஏழாவது உறுப்பு நாடுகளாகக் கூட்டமைப்பில் சேர்ந்தன. கி.பி. 1353ஆம் ஆண்டில் பெர்னும் (Bern) இக் கூட்டமைப்பில் சேர்ந்தது.

இந்த எட்டுக் கான்டன்களின் கூட்டமைப்பு இடைக்கால ஐரோப்பாவில் புதியதொரு அரசியல் முறையாக அமைந்து செயல் பட்டது.

**செம்பக் (Sempach) போர் வெற்றி–கி.பி. 1386**

இந்த எட்டுக் கான்டன்களின் கூட்டமைப்பு மிக வலிமை மிகுந்ததாக வளர்ந்து வந்தது. மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் போர் செய்து பயிற்சி பெற்ற மக்கள் பலம் வாய்ந்த படையையும் வைத்திருந்தனர். கி.பி. 1375ஆம் ஆண்டில் பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயப் படைகளை இக் கூட்டமைப்பு தோற்கடித்துத் தன் வலிமையை ஐரோப்பிய நாடுகளுக்கு உணர்த்தியது. அப்படி யிருந்தும் கி.பி. 1386ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவின் ஆப்ஸ்பர்க் வமிசத்துக் கோமகன் லியோபால்ட், ஜெர்மனி, இத்தாலி, ஃபிரான்சு ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆற்றல் மிகுந்த வீரர்களின் பெரும் படையைத் திரட்டி இந்த எட்டுக் கான்டன் களின் கூட்டமைப்பை நசுக்குவதற்காகப் படையெடுத்தார். கூட்டமைப்பின் படைகளும் லியோபால்டின் படைகளும் செம்பக் (Sempach) என்ற பெரிய ஏரியின் அருகே சந்தித்தன. லியோ பால்டின் படையில் குதிரை வீரர்கள் அதிகமாக இருந்தும் பதுங்கி யிருந்து தாக்கும் கூட்டமைப்புப் படைகளின் தாக்குதல்களை எதிர்த்து அவர்களால் போரிடமுடியவில்லை. லியோபால்டின் படைகளுக்குப் பெரும்சேதம் ஏற்பட்டது. இறுதியில் கூட்டமைப் பின் படைகளே வென்றன. செம்பக் வெற்றியின் புகழ் திக்கெட்டும் பரவியது.

இதையடுத்து கி.பி. 1388ஆம் ஆண்டில் நாஃபெல்ஸ் (Nafels) என்ற இடத்தில் கூட்டமைப்பின் உழவர் பெருங்குடிகளே ஆஸ்திரியாவின் குதிரைப் படைகளைத் தோற்கடித்தனர். கூட்ட மைப்பின் படைகளையோ குடிமக்களையோ எவராலும் வெல்ல முடியாது என்ற நிலை ஏற்பட்டது. எனவே, ஆஸ்திரியாவின் கோமகன் கூட்டமைப்புடன் கி.பி. 1389 ஆம் ஆண்டில் அமைதி உடன்பாடு செய்துகொண்டார். அதன்படி இனி லுயுசெர்ன், கிளாரஸ், சூக் ஆகிய கான்டன்களின்மீது உரிமை கொண்டாடுவ தில்லையென ஆஸ்திரியாவின் கோமகன் ஒப்புக் கொண்டார்.

கி.பி. 1393ஆம் ஆண்டில் இந்த எட்டுக் கான்டன்களும் தங்கள் கூட்டமைப்பின் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் தொடர்ந்து இணைந்து செயல்படுவதென செம்பக் ஒப்பந்தத்தின்படி முடி வெடுத்தன. ஆஸ்திரியாவின் ஆப்ஸ்பர்க் வமிசத்துக் கோமகனும்

இக் கூட்டமைப்பின் செயல்முறையையும் வளர்ச்சியையும் கி.பி. 1412ஆம் ஆண்டில் அங்கீகரித்தார். இது ஏறத்தாழ 'சுவிட்சர் லாந்துக் குடியரசை' அங்கீகரித்ததாகவே கொள்ளப்பட்டது.

**கூட்டமைப்பின் செயல்முறை**

இங்ஙனம், குறிப்பிட்ட அரசியல் அமைப்போ விதிமுறைகளோ இல்லாமல் இந்த எட்டுக் கான்டன்களும் தொடர்ந்து ஒரே கூட்ட மைப்பில் இயங்கி வருவது ஐரோப்பாவில் ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கியது. இந்த எட்டுக் கான்டன்களும் மொழி, இனம், நாகரிகம் அல்லது வேறு எந்தத் துறையிலும் ஒரே சீரான சிறப்புக் கூறுகளைப் பெற்றவை அல்ல. ஊரி, ஸ்விட்ஸ், அண்டர் வால்டன், கிளாரஸ் ஆகிய நான்கும் முற்றிலும் நாட்டுப்புற வாழ்க் கையை அடிப்படியாகக் கொண்ட கான்டன்களாகும். இவற்றின் ஆட்சி பெரும்பாலும் பொது மக்களின் பிரதிநிதிகளாலேயே நடத்தப்பட்டது. சில நேரங்களில் கான்டனில் உள்ள எல்லாரும் ஒன்று கூடி முக்கியமான பிரச்சனைகளைப் பற்றி விவாதித்து, முடி வெடுப்பர். ஆனால், மற்றக் கான்டன்களில் வேறு விதமான அரசியல் முறைகள் பின்பற்றப்பட்டன. சூரிக்கில் (Zurich) மக்க ளாட்சிக் கருத்துகள் வேரூன்றியிருந்தன. நகரத்தின் ஆட்சித் தலைவர் ஆறுமாதத்திற்கு ஒரு முறை மக்களாலேயே தேர்ந்தெடுக் கப்பட்டார். பெர்னில் உயர் குடிமக்களே ஆட்சி செய்தனர். அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'பன்னிருவர் குழு'வே ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டது. லூயு செர்னிலும் சூக்கிலும் (Zug) முற்றிலும் வேறுபட்ட அரசியல் அமைப்புகள் இருந்தன. இந்த எட்டுக் கான்டன்களை இணைப்பதற்கு ஒரு பொதுவான பிரதிநிதித் துவ மன்றமோ குழுவோ அமைக்கப்படவில்லை. அப்படி இருந்தும் இந்தக் கான்டன்களின் கூட்டமைப்பு வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்தது. ஆப்ஸ்பர்க் ஆட்சியாளர்களின் வரம்பிலா வல்லாட்சி யையும் ஆக்கிரமிப்பையும் எதிர்த்துப் போரிடுவதையே தங்கள் தலையாய நோக்கமாகக் கொண்ட இக் கான்டன்கள் பிற்காலத் தில் புதியதொரு நாடு தோன்றுவதற்கு வழிவகுத்தன.

'குருமார் சாசனம்' (Priests' Charter) 'செம்பக் ஒப்பந்தம்' (Convention of Sempach) ஆகிய இரண்டும் இந்த எட்டுக் கான்டன்களும் இணைந்து செயல்படுவதற்கு உதவின. 'குருமார் சாசனம்' இக் கான்டன்களில் இருந்த கிறித்தவக் குருமார் அனைவரும் ஒரே நோக்கத்துடன் செயல்படுவதற்கான விதிமுறை களை வரையறுத்துக் கூறியது. 'செம்பக் ஒப்பந்தம்' கூட்டமைப்பின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் கான்டன்கள் பின்பற்ற வேண்டிய

விதிமுறைகளைப் பற்றி விளக்கிக் கூறியது. இவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டு எட்டுக் கான்டன்களின் 'கூட்டமைப்பு' கி.பி.15 ஆம் நூற்றாண்டில் பதின்மூன்று கான்டன்களாக வளர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் புதியதொரு அரசியலமைப்பையும் வழி முறைகளையும் வகுத்துத் தந்தது.


கி.பி.526 இல் ஐரோப்பா
வ
வடகடல்
பால்டிக்கடல்
எல்ப்
விஸ்டுலா
அட்லாண்டிக்
பெருங்கடல்
பிராங்குகள்
டான்யூப்
பர்கண்டி
யன்கள்
மிலான்
லியோன்
ஆஸ்டரோ காதுகள்
வெனிஸ்
ராவென்னு
பிளாரன்ஸ்
உரோம்
நேபிள்ஸ்
பொலைனஷியா
விசிகோதுகள்
டோலெடோ
கார்டோவா
கார்சிகா
பேலியரிக்
தீவுகள்
சார்டீனியா
வாண்டல்கள்
ஹிப்போ
சிசிலி
கார்த்தேஜ்
டான்யூப்
கருங்கடல்
கிழக்கு ரோமானியப் பேரரசு
கான்ஸ்டாண்டிநோபுள்
ஏதென்ஸ்
இசஸ்
அண்டியோக்
கிரீட்
சைப்ரஸ்
மத்திய தரைக் கடல்
டையர்
அலெக்சாண்டிரியா


ஜஸ்டீனியனின் பேரரசு - கி.பி.565
வடகடல்
அட்லாண்டிக் பெருங்கடல்
மத்திய தரைக் கடல்
கருங்கடல்
காஸ்பியன் கடல்
டைக்ரீஸ்
யூப்ரடீஸ்
சைப்ரஸ்
கிரீட்
சிசிலி
ரோம்
மிலான்
டான்யூப்
ரைன்


ஷார்லமெய்னின் பேரரசு
கி.பி. 814
வ
வட கடல்
பால்டிக் கடல்
ஆங்கிலோ-சாக்சானிய அரசுகள்
பிரெமன்
எல்ப் நதி
உட்ரெக்ட்
சாக்சனி
விஸ்டுலா நதி
ஓடர் நதி
ஆஸ்ட்ரேசியா
புலைவ்ஸ்
ரைன் நதி
சென் நதி
பிரிட்டனி
நியுஸ்ட்ரியா
ஓம்ஸ்
மெட்ஸ்
வெர்டன்
துரிஞ்சியா
பொஹிமியா
மொரேவியா
அலமேனியா
அட்லாண்டிக் கடல்
லொயர் நதி
டூரஸ்
புவாடியர்ஸ்
ரோன் நதி
பர்கண்டி
பவேரியா
லுக்ஸியுல்
கான்ஸ்டன்ஸ்
காரிந்தியா
பன்னோனியா
ஆவர்கள்
அக்விடெய்ன்
மிலான்
போநதி
வெனிஸ்
கிரோஷியா
டான்யூப் நதி
காஸ்கொனி
ஆர்லெஸ்
ராவென்னா
லுக்கா
அட்ரியாடிக் கடல்
கார்டோவா
முகம்மதிய அரசு
கார்சிகா
ரோம்
செர்ப்கள்
மத்திய தரைக் கடல்


நூற்றாண்டுப் போரின்போது
ஃபிரான்சு
[கி.பி.1338-1453]
ஹாலந்து
வ
இங்கிலாந்து
சுலுயிஸ்
ஃபிளாண்டெர்ஸ்
காலே
ஆங்கிலக் கால்வாய்
மியூஸ் நதி
ரைன் நதி
ஆஜின்கோர்ட்
கிரேசி
லக்சம்பெர்க்
ரூவன்
ரீம்ஸ்
நார்மண்டி
பாரிஸ்
லொரெய்ன்
செயின் நதி
மெய்ன்
பிரிட்டனி
ஆர்லியன்ஸ்
லொய்ர் நதி
ஆஞ்சோ
புவாடியே
பர்கண்டி
அக்விடெய்ன்
வியன்னி நதி
டோர்டோன் நதி
லியான்ஸ்
அட்லாண்டிக் கடல்
போர்டோ
ரோன் நதி
டாபின்
காஸ்கொனி
ஆர்மக்நாக்
மத்தியதரைக் கடல்

# உரோமானியப் பேரரசர்கள்

அகஸ்டஸ் (கி.மு. 27–கி.பி. 14)
டைபீரியஸ் (கி.பி. 14–37)
கிளாடியஸ் (41–54)
நிரோ (54–68)
வெஸ்பாசியன் (69–79)
டைடஸ் (79–81)

டிராஜன் (98–117)
ஹட்ரியன் (117–138)
அன்டோனியஸ் பையஸ் (138–161)
மார்கஸ் அரீலியஸ் (161–180)
கம்மோடஸ் (180–193)
செப்டிமியஸ் செவிரஸ் (193–211)
கரகல்லர் (211–217)
டெசியஸ் (249–251)
அரீலியன் (270–275)
டைக்ளீஷியன் (284–305)
கான்ஸ்டன்டைன் (311–337)
ஜூலியன் (361–363)
வாலென்ஸ் (364–379)
தியோடோசியஸ் (379–395)
ஹொனோரியஸ் (395–423)
உரோமுலஸ் (475–476)

# புனித உரோமானியப் பேரரசர்கள்

**சாக்சன் இனம்**

முதலாம் ஹென்றி (919–936)
முதலாம் மகா ஆட்டோ (936–973)
இரண்டாம் ஆட்டோ (973–983)
மூன்றும் ஆட்டோ (983–1002)
இரண்டாம் ஹென்றி (1002–1024)

**ஃபிரான்கோனியர் இனம்**

இரண்டாம் கான்ராட் (1024–1039)
மூன்றும் ஹென்றி (1039–1056)
நான்காம் ஹென்றி (1056–1106)
ஐந்தாம் ஹென்றி (1106–1125)
இரண்டாம் லொதைர் (1125–1137)

**ஹோயென்ஸ்டாஃபென் இனம்**

மூன்றும் கான்ராட் (1138-1152)
முதலாம் ஃபிரெடிரிக் பார்பரோசா (1152–1190)
ஆரும் ஹென்றி (1190-1197)
நான்காம் ஆட்டோ (1197–1212)
இரண்டாம் ஃபிரெடிரிக் (1220–1250)
நான்காம் கான்ராட் (1250–1254)

| பெயர் | இனம் |
|---|---|
| முதலாம் ருடால்ஃப் (1273–1291) | ஆப்ஸ்பர்க் |
| அடால்ஃப் (1292–1298) | நாசோ |
| முதலாம் ஆல்பர்ட் (1298–1308) | ஆப்ஸ்பர்க் |
| ஏழாம் ஹென்றி (1308–1313) | லக்ஸம்பர்க் |
| நான்காம் லூயி (1314–1347) | பவேரியன் |

| | |
|---|---|
| நான்காம் சார்லஸ் (1347–1378) | லக்சம்பர்க்–பொஹிமியா |
| வென்செஸ்லாஸ் (1378–1400) | ,, |
| சிகிஸ்மண்ட் (1410–1437) | ,, |
| இரண்டாம் ஆல்பர்ட் (1438–1439) | ஆப்ஸ்பர்க் |
| மூன்றும் ஃபிரெடிரிக் (1440–1493) | ,, |

# கிழக்கு உரோமானியப் (பைசான்டைன்) பேரரசர்கள்

அர்காடியஸ் (395-408)

இரண்டாம் தியோடோசியஸ் (408–450)

முதலாம் லியோ (457–474)

சிஞே (474-491)

ஜஸ்டினியன் (527–565)

ஹெராக்ளியஸ் (610–641)

இரண்டாம் ஜஸ்டினியன் (685–711)

மூன்றும் லியோ (717–741)

ஐரீன் (780–802)

நைசிபோரஸ் (802–811)

மூன்றும் மைகேல் (842–867)

முதலாம் பாசில் (867–886)

ஏழாம் கான்ஸ்டன்டைன் (913–959)

மூன்றும் நைசிபோரஸ் (963–969)

இரண்டாம் பாசில் (976–1025)

ஒன்பதாம் கான்ஸ்டன்டைன் (1042-1054)

நான்காம் உரோமனஸ் (1067–1071)

முதலாம் அலெக்சியஸ் (1081–1118)

இரண்டாம் ஜான் (1118–1143)

முதலாம் மான்யுவெல் (1143–1180)

முதலாம் அட்ரேர்னிகஸ் (1183–1185)

இரண்டாம் ஐசக் (1185–1195)

மூன்றும் அலெக்சியஸ் (1195–1203)

எட்டாம் மைகேல் (1259–1282)

இரண்டாம் அட்ரோனிகஸ் (1282–1328)

மூன்றும் அட்ரோனிகஸ் (1328–1341)

இரண்டாம் மான்யுவெல் (1391–1425)

எட்டாம் ஜான் (1425–1448)

பதினொன்றும் கான்ஸ்டன்டைன் (1448–1453)

# ஃபிராங்குப் பேரரசர்கள்

ஷார்லமெய்ன் (800–814)

லூயி (814–840)

லொதைர் (840–855)

இரண்டாம் லூயி (855–875)

இரண்டாம் சார்லஸ் (877–881)

மூன்றும் சார்லஸ் (881–887)

# இங்கிலாந்து நாட்டு அரசர்கள்

### நார்மன் இனம்

முதலாம் வில்லியம் (1066–1087)
இரண்டாம் வில்லியம் (1087–1100)
முதலாம் ஹென்றி (1100-1135)
ஸ்டீபன் (1135–1154)

### அஞ்சீவியன் இனம் (பிளான்டஜெனெட்)

இரண்டாம் ஹென்றி (1154–1189)
முதலாம் ரிச்சர்ட் (1189–1199)
ஜான் (1199–1216)
ன்றும் ஹென்றி (1216–1272)
முதலாம் எட்வர்ட் (1272–1307)
மூரண்டாம் எட்வர்ட் (1307–1327)
மூன்றும் எட்வர்ட் (1327–1377)
இரண்டாம் ரிச்சர்ட் (1377-1399)

### லங்காஸ்டர் இனம்

இான்காம் ஹென்றி (1399–1413)
ஐந்தாம் ஹென்றி (1413–1422)
ஆறும் ஹென்றி (1422–1461)

## ஃபிரான்சு நாட்டு அரசர்கள்

### காபிடியன் இனம்

யுக் காபெட் (987–996)
ராபெர்ட் (996–1031)
முதலாம் ஹென்றி (1031–1060)
முதலாம் பிலிப் (1060–1108)
ஆரும் லூயி (1108–1137)
ஏழாம் லூயி (1137–1180)
இரண்டாம் பிலிப் அகஸ்டஸ் (1180–1223)
எட்டாம் லூயி (1223–1226)
ஒன்பதாம் லூயி (1224–1270)
மூன்ரும் பிலிப் (1270–1285)
நான்காம் பிலிப் 1285–1314)
பத்தாம் லூயி (1314–1316)
ஐந்தாம் பிலிப் (1316–1322)
நான்காம் சார்லஸ் (1322–1328)

### வாலொய் இனம்

ஆரும் பிலிப் (1328–1350)
ஜான் (1350–1364)
ஐந்தாம் சார்லஸ் (1364–1380)
ஆரும் சார்லஸ் (1380–1422)
ஏழாம் சார்லஸ் (1422–1461)
பதினென்ரும் லூயி (1461–1483)

# போப்புகள்

பீடர் (இறப்பு கி.பி. 67)

முதலாம் கிளமெண்ட் (88–97)

முதலாம் அலெக்சாண்டர் (105–115)

முதலாம் சிக்ஸ்டெஸ் (115–125)

முதலாம் பையஸ் (140–154)

சோடெர் (166–175)

முதலாம் விக்டர் (189–199)

முதலாம் காலிக்ஸடஸ் (217–222)

முதலாம் அர்பன் (222–230)

முதலாம் ஸ்டீபன் (254–257)

முதலாம் ஃபிலிக்ஸ் (269–275)

முதலாம் மார்செல்லஸ் (308–309)

முதலாம் சில்வெஸ்டெர் (314–336)

முதலாம் ஜூலியஸ் (337–352)

லிபீரியஸ் (352–366)

முதலாம் டமாஸ்கஸ் (366–384)

முதலாம் இன்னெசண்ட் (401–417)

முதலாம் லியோ (440–461)

சிம்மாக்ஸ் (498–514)

விஜிலஸ் (537–556)

முதலாம் கிரிகரி (590–604)

நான்காம் போனிஃபேஸ் (608–615)

முதலாம் ஹெனேரியஸ் (625–640)

முதலாம் மார்டின் (649–654)

முதலாம் யூகின் (654–657)

அகாதோ (678–682)

இரண்டாம் லியோ (682–683)

முதலாம் செர்ஜியஸ் (687–701)

இரண்டாம் கிரிகரி (715–731)

மூன்றும் கிரிகரி (731–741)

ஜக்காரியஸ் (741–752)

மூன்றும் ஸ்டீஃபென் (752–757)

முதலாம் பால் (757–768)

முதலாம் ஹட்ரியன் (772–795)

மூன்றும் லியோ (795–816)

நான்காம் கிரிகரி (827–844)

நான்காம் லியோ (847–855)

முதலாம் நிகொலஸ் (858–867)

எட்டாம் ஜான் (872–882)

போர்மோசஸ் (891–896)

பத்தாம் ஜான்( 914–928)

பன்னிரண்டாம் ஜான் (955–963)

இரண்டாம் சில்வெஸ்டர் (999-1003)
பத்தொன்பதாம் ஜான் (1024-1032)
ஒன்பதாம் பெனடிக்ட் (1032-1045)
ஒன்பதாம் லியோ (1049-1054)
ஏழாம் கிரிகரி (1073-1085)
இரண்டாம் அர்பன் (1088-1099)
இரண்டாம் பாஸ்கல் (1099-1118)
இரண்டாம் ஹொனோரியஸ் (1124-1130)
இரண்டாம் இன்னொசண்ட் (1130-1143)
மூன்றாம் யூகின் (1145-1153)
நான்காம் ஹட்ரியன் (1154-1159)
மூன்றாம் அலெக்சாண்டர் (1159-1181)
மூன்றாம் லுசியஸ் (1181-1185)
மூன்றாம் செலஸ்டைன் (1191-1198)
மூன்றாம் இன்னொசண்ட் (1198-1216)
மூன்றாம் ஹொனோரியஸ் (1216-1227)
ஒன்பதாம் கிரிகரி (1227-1241)
நான்காம் செலஸ்டைன் (1241)
நான்காம் இன்னொசண்ட் (1243-1254)
நான்காம் அலெக்சாண்டர் (1254-1261)
நான்காம் அர்பன் (1261-1265)
நான்காம் கிளெமென்ட் (1265-1271)
பத்தாம் கிரிகரி (1271-1276)
இருபத்து ஒன்றாம் ஜான் (1276-1277)
மூன்றாம் நிகலஸ் (1277-1281)
நான்காம் மார்டின் (1281-1285)
நான்காம் ஹொனோரியஸ் (1285-1288)
நான்காம் நிகலஸ் (1288-1292)
ஐந்தாம் செலஸ்டைன் (1294)
எட்டாம் போனிஃபேஸ் (1294-1303)
பதினொன்றாம் பெனிடிக்ட் (1303-1304)
ஐந்தாம் கிளெமென்ட் (1305-1314)
இருபத்திரண்டாம் ஜான் (1316-1334)
பன்னிரண்டாம் பெனிடிக்ட் (1334-1342)
ஆறாம் கிளெமென்ட் (1342-1352)
ஆறாம் இன்னொசன்ட் (1352-1362)
ஐந்தாம் அர்பன் (1362-1370)
பதினொன்றாம் கிரிகரி (1370-1378)
ஆறாம் அர்பன் (1378-1389)
ஒன்பதாம் போனிஃபேஸ் (1389-1404)
ஏழாம் இன்னொசண்ட் (1404-1406)
பன்னிரண்டாம் கிரிகரி (1406-1417)
ஐந்தாம் மார்டின் (1417-1431)
நான்காம் யூகின் (1431-1447)
ஐந்தாம் நிகலெஸ் (1447-1455)
மூன்றாம் காலிக்ஸ்டஸ் (1455-1458)

# ஐரோப்பிய வரலாற்றில் சில முக்கிய ஆண்டுகள்

கி.பி.

14. அகஸ்டசின் மறைவு.

313. பேரரசர் கான்ஸ்டன்டைன் கிறித்தவ மதத்தை உரோமானியப் பேரரசில் அங்கீகரித்தார்.

395. பேரரசர் தியோடோசியஸ் உரோமானியப் பேரரசைத் தன் இரு புதல்வர்களுக்கிடையே பகிர்ந்து தந்தார்.

410. விசிகோத்களின் தலைவன் அலரிக் உரோம் நகரைச் சூறையாடினன்.

445–53. ஹூணர்களின் தலைவன் அட்டிலா உரோமை முற்றுகையிட்டான்.

455. உரோம் வாண்டல்களால் சூறையாடப்பட்டது.

476. உரோமானியப் பேரரசு இறுதியாக வீழ்ந்தது.

527–65. பேரரசர் ஜஸ்டினியனின் ஆட்சிக் காலம்.

771-814. ஷார்லமெய்னின் ஆட்சிக் காலம்.

800. ஷார்லமெய்ன் உரோமில் புனித உரோமானியப் பேரரசராக போப்பினுல் முடி சூட்டப்பட்டார்.

962. மகா ஆட்டோவின் கீழ் உரோமானியப் பேரரசு ‘ புனித உரோமானியப் பேரரசு ’ ஆகியது.

1076. செருசலம் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்டது.

1095. முதல் சிலுவைப்போர்.

1122. வோம்ஸ் ஒற்றுமைப் பத்திரம்.

1215. மகா சாசனம் இங்கிலாந்து அரசர் ஜானினுல் வழங்கப்பட்டது.

**கி.பி.**

1254-73. புனித உரோமானியப் பேரரசில் 'பெரும் இடைவெளிக் காலம்'.

1295. 'மாதிரிப் பாராளுமன்றம்' இங்கிலாந்தில் முதலாம் எட்வர்ட் மன்னரால் கூட்டப்பட்டது.

1305. 'பாபிலோனியச் சிறையிருப்பு' தொடங்கியது.

1339. நூறுண்டுப் போர் தொடங்கப்பட்டது.

1348. இங்கிலாந்தில் கொள்ளை நோய்.

1378–1417. 'பெரும் சமயப் பிளவு'

1384. ஜான் விக்ளிஃப்பின் மறைவு.

1415. ஜான் ஹஸ் கான்ஸ்டன்ஸ் நகரில் உயிருடன் எரிக்கப்பட்டார்.

1431. ஜோன் அஃப் ஆர்க்கின் மறைவு.

1453. கான்ஸ்டான்டிநோபிளைத் துருக்கியர்கள் கைப்பற்றினர். நூறுண்டுப் போர் முடிவடைந்தது.

# Bibliography


1. Artz, F.B., The Mind of the Middle Ages
2. Cantor, N.D., Mediaeval History ; the life and Death of Civilization.
3. Davis, R.H.C., Mediaeval Europe.
4. Davies, H.A., An Outline History of the World.
5. Dixon, F.N., Main Landmarks of European History.
6. Fisher, H.A.L., A History of Europe.
7. Grant, A.J., History of Europe Vol I to III.
8. Grant, A.J., Outlines of European History.
9. Hay, Dennis, The Mediaeral Centuries.
10. Hayes, J.H. and Baldwin History of Europe Vol I.
11. Jawaharlal Nehru, Glimpses of World History.
12. Katz, S., The Decline of Rome and the Rise of Mediaeval Europe.
13. Keen, M., The Pelican History of Mediaeval Europe.
14. Lodge, E.C., The End of the Middle Age.
15. Mark Bloch, Feudal Society.
16. Previteorton, C.W., Shorter Cambridge Mediaeval History 2 volumes.

17. Painter, S., A History of the Middle Ages.

18. Prienna, H., Mediaeval Cities.

19. Petrie, C. The History of Governments.

20. Strayer and Munroe The Middle Ages.

21. Scott, M., Mediaeval Europe.

22. Southern, R.W. The Making of the Middle Ages.

23. The Encyclopedia Americana Vols 1 to 30.

24. The Encyclopaedia Britannica Vols 1 to 29.

25. Chambers Encyclopaedia Vols 1 to 10.

26. Cassel's Concise Encyclopaedia

27. கலைக்களஞ்சியம் Vols 1 to 10.

# கலைச் சொற்கள்

**A**

| | | |
|---|---|---|
| Algebra | — | எழுத்தியல் |
| Anotomy | — | உடலுறுப்புகளை அறுத்தறியும் கலை |
| Apostles | — | சீடர்கள் |
| Aristocratic Republic | — | பிரபுக்கள் ஆட்சி செலுத்தும் குடியரசு |
| Astronomy | — | வானியல் |

**B**

| | | |
|---|---|---|
| Barn | — | தானியச்சேமிப்புக் கிடங்கு |
| Benifice | — | நிலமானியம் |
| Black Death | — | கொள்ளை நோய் |

**C**

| | | |
|---|---|---|
| Canon Law | — | திருச்சபைச் சட்டம் |
| Cathedral | — | தேவாலயம் |
| Celibacy | — | மதகுருமார்கள் திருமணம் செய்து கொள்ளாதிருத்தல் |
| Checks and Balances | — | தடைகளும் சமநிலைகளும் |
| Church | — | திருச்சபை |
| Civil Law | — | பொதுச் சட்டம் |
| Clergy | — | குருமார்கள் |
| Craft Guilds | — | தொழிற் கழகங்கள் |
| Crozier | — | புனிதச் செங்கோல் |
| Crusades | — | சிலுவைப் போர்கள் |

**D**

| | | |
|---|---|---|
| Democratic Republis | — | மக்களாட்சிக் குடியரசு |
| Despotism | — | வல்லாட்சி, சர்வாதிகாரம் |
| Dictator | — | வல்லாட்சியாளர், சர்வாதிகாரி |
| Diocese | — | சமயவட்டம் |

| | | |
|---|---|---|
| Divine Right Theory | — | இறைவழி அரசுரிமைக் கோட்பாடு |
| Divorce | — | மணவிலக்கு |
| Duchy | — | கோமகன் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதி |
| Duke | — | கோமகன் |
| Dynastics | — | வமிசங்கள் |

**E**

| | | |
|---|---|---|
| Earthquake | — | நில அதிர்ச்சி, நில நடுக்கம் |
| Enlightenment | — | அறிவு ஒளி |
| Exarch | — | ஆளுநர் |
| Excommunication | — | மத விலக்கு |
| Executive | — | நிருவாகத் துறை |

**F**

| | | |
|---|---|---|
| Federation | — | கூட்டரசு |
| Feudalism | — | நிலமானியத் திட்டம் |
| Feudal aids | — | நிலமானிய உதவிகள் |
| Fief | — | நிலமானியம் |

**H**

| | | |
|---|---|---|
| Heresy | — | புறமதப் பிரச்சாரம் |
| Heretic | — | புறச்சமயவாதி |
| Holy Roman Empire | — | புனித உரோமானியப் பேரரசு |
| Hymns | — | இறைவழிப் பாடல்கள் |

**I**

| | | |
|---|---|---|
| Imperialistic Outlook | — | ஏகாதிபத்திய மனப்பான்மை |
| Investiture Struggle | — | பதவிச்சின்னப் போராட்டம் |

**K**

| | | |
|---|---|---|
| Knights | — | பெருவீரர்கள், நைட்வீரர்கள் |

**L**

| | | |
|---|---|---|
| Lagoon | — | கடற்கழி |
| Land-tenure | — | நிலவுடைமை |
| Law of Primogeniture | — | தலைமகன் அரசுரிமை பெறும் சட்டம் |
| Law of succession | — | வாரிசுரிமைச் சட்டம் |
| Lay States | — | மதச்சார்பில்லாத நாடுகள் |
| Legislature | — | சட்டமன்றம், சட்டமியற்றும் துறை |
| Logic | — | தருக்கம் |

**M**

| | | |
|---|---|---|
| Manor | — | பண்ணை |
| Manor House | — | பண்ணை வீடு |

Manorial System — பண்ணை முறை
Merchant Guild — வணிகச் சங்கங்கள்
Mercantile Oligarchy — வணிகர் ஆதிக்க ஆட்சி
Miracles — அற்புதச் செயல்கள்
Monarchy — முடியாட்சி
Monotheistic Principle — ஒரே கடவுள் கொள்கை
Mosque — பள்ளிவாசல்

N

Nationalism — நாட்டுணர்வு, தேசியவுணர்வு

O

Oral examination — வாய் மூலத்தேர்வு

P

Papacy — போப்பின் ஆட்சி
Papat Bull — போப்பின் ஆணை
Philosophy — தத்துவம்

R

Ransom — ஈட்டுத் தொகை
Rhetoric — சொல்லாற்றல்
Ring — கணையாழி

S

Separation of Powers — அகாரதிப் பிரிவினை முறை
Serfs — உட் குடிகள்
Simony — மதத்துறையில் பணம் கொடுத்துப் பதவியைப் பெறுதல்
Spiritual Powers — ஆன்மிக அதிகாரங்கள்

T

Temporal Powers — அரசியல் அதிகாரங்கள்
Tenaut-in-Chief — பெரு நிலப்பிரபு
Theology — சமயப் படிப்பு
Trignometry — கோணவியல்
Tyrant — கொடுங்கோலன்

V

Vassals — கீழாள்கள்
Vicegerent — தேவதூதன்
Villeins — உட்குடிகள்

W

Warehouses — சேமிப்புக் கிடங்கு